



+2.103
சிவப்
L IPR

உ

# விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு

**History Of Vihsnuputthera Vediarasan**




ஆக்கம்:

**காரையூர் திரு. மு. சு. சிவப்பிரகாசம்**

**தொல்புரம் (மணிபுரம்)**

**சுழிபுரம்.**


★


வெளியீடு:

**அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம்**

**தொல்புரம்**

**இலங்கை.**

**1988**

முதற்பதிப்பு: விபவ ஹு (1988) ஆவணி மீ

# விஷ்ணுபுத்திரர் வெடியரசன் வரலாறு

ஆக்கம்: காரையூர் திரு. மு. சு. சிவப்பிரகாசம்
வெளியீடு: அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம்,
இலங்கை,
விநியோகம்: மத்திய சனசமூக நிலையம்,
தொல்புரம்,
சுழிபுரம்.
பதிப்பு: கற்பகவிநாயகர் அச்சகம்
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

விலை: ரூபா 27-50 சதம்

பதிப்புரிமை ஆசிரியருக்கே.

COPYRIGHT:-
**Mr. M. S. Sivapragasam**

FIRST EDITION: August 1988
HISTORY OF VISHNUPUTTHERA VEDIARASAN
AUTHOR: Kariur. Mr. M. S Sivapragasam (Jailor)
DISTRIBUTERS: All Ceylen Vediarasan Kalamanram,
Ceylon.
PUBLISHERS: Central Community Centre
Tholpuram,
Chulipuram.
PRINTERS: Katpaha Vinayagar Printers
Vaddu - West, Vaddukoddai.
PRICE: Rs 27 - 50 Cts

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| **1 மதிப்புரை** | |
| கலாநிதி திரு. இ. பாலசுந்தரம் | |
| கலாநிதி திரு. சி. பத்மநாதன் | |
| திரு. கந்தையா குணராசா | |
| **2 ஆசியுரை** | |
| திரு. து. வைத்திலிங்கம் | |
| **3 அணிந்துரை** | |
| பண்டிதர் திரு. இ. வடிவேலு (திருகோணமலை) | |
| **4 முகவுரை** | |
| **5 நூன்முகம்** | 1 |
| நில நிலையில்:- எமது நிலம் | 2 |
| நில நிலையில்:- மாந்தன் நிலத்த வளர்வு | 5 |
| மூலமனிதர் | 11 |
| தொன்மை முதல் மக்கள் தமிழர் | 13 |
| திராவிடமும் பூர்வீகமும் | 14 |
| ஆரியர் | 15 |
| சிந்துவெளி | 17 |
| **6 இந்திய நாடும் ஈழமும்** | 19 |
| இராமர் அருளிய முதற் சேதுபதி குகன் | 24 |
| மென்னிலமக்கள் | 30 |
| கங்கைக் குகன் | 32 |
| **7 ஈழநாடு** | 35 |
| நாகர் | 37 |
| இயக்கர் | 41 |
| **8 வட ஈழம்** | 42 |
| யாழ்ப்பாணம் | 44 |
| **9 பழமைச் செய்திகள்** | 50 |
| குளக்கோட்டு மகாராசன் | 56 |
| **10 விஷ்ணுபுத்திரர் தோற்றம்** | 60 |
| **11 விஷ்ணுபுத்திர வெடியரசன்** | 71 |
| **12 கண்ணகி அம்மன் பிறந்த கதை** | 78 |
| **13 நீலகேசிகளும் வெடியரசன் போரும்** | 83 |
| **14 வீரநாராயணன் வரலாறு** | 103 |
| **15 விளங்குதேவன் வரலாறு** | 120 |

**16 போர்வீரகண்டன் வரலாறு** — 122
**17 ஏரிளங்குருவன் வரலாறு** — 123
**18 வெடியரசனும் குடிமக்களும்** — 128
நெடுந்தீவு — 128
நயினாதீவு — 129
ஊர்காவற்றுறை — 130
காரைநகர் — 130
தொல்புரம் — 139
பூநகரி — 14
மன்னார் — 150
**19 அம்மனும் வெடியரசனும்** — 152
**20 வெடியரசனின் பின் வடஈழ நிலம்** — 156
**21 மட்டக்களப்பிற் குகன்** — 166
முற்குகர் சட்டம் ( Ordinance No 15 of 1876 ) — 176
**22 திருகோணமலையிற் குகன்** — 181
இலங்கைத்துறை — 184
திருமலைநகர் — 185
கந்தளை — 186
திருமலை வன்னிமைகள் — 186
**23 புத்தளத்திற் குகன்** — 189
முற்குக வன்னிமைகள் — 193
கல்கமுவைக் காட்டினிலே — 196
சிலாபம் — 197
**24 நிறைவுரை** — 200


# மதிப்புரை

## கலாநிதி இ. பாலசுந்தரம்

### சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

"தமிழையும் எம்மண்ணையும் காத்துத் தாய் நாட்டுப்பற்றுடன் ஆண்ட வீரமிகு வெடியரசனையும் தேசிய வீரராகக் கணிப்போமாக" (பக் 164-165) என்ற உணர்வு மேம்பாட்டினால் ஒரு வரலாற்று நோக்குடன் எழுதப்பட்டதே இந்நூல். புராணக் கதைகளும் நாட்டார் கதைகளும் வரலாறாக முடியாது. ஆனால், வரலாற்றை எழுதுவதற்கு அவை பயன்படும் தன்மை வாய்ந்தவை. இந்த உண்மையை இந் நூலாசிரியர் எந்தளவிற்குக் கடைப்பிடித்துள்ளார் என்பதை அறிய வேண்டும். பல்கலைக்கழக உயர்கல்வி நெறியோ ஆராய்ச்சிப் பயிற்சியோ இல்லாத திரு மு. சு. சிவப்பிரகாசம் அவர்கள் தமிழ்த் தேசிய உணர்வு நிரம்பியவர். தன்னினம், தான் வாழும் சூழல் என்பன பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம் மிக்கவர். "ஆண்ட இனம் இன்னொருமுறை ஆள நினைப்பது தவறு" என்ற சிந்தனை ஓட்டம்மிக்க இக்கால கட்டத்தில் தன் இனக் குழுவினரின் பழைய ஆட்சி நிர்வாகத் திறமை, அவர்கள் பெற்றிருந்த வரலாற்று முக்கியத்துவம் ஆகியன பற்றி கிடைக்கக் கூடிய சான்றுகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

வெளி என்பது வெடி என மருவிற்று. வெளி நிலப் பிரதேச மன்னன் வெளியரசன் > வெடியரசன் எனப் பெயர் பெற்றான். வெடியரசன் விஷ்ணு குலத்தோன் என்பதை விளக்கும் பொருட்டு முதலில் விஷ்ணு பற்றிய குறிப்புக்கள் தரப்படுகின்றன.

இந்நூலின் ஆரம்பத்தில் இந்தியா, இலங்கை மற்றும் கடல் கடந்த நாடுகளிலும் பண்டை நாள் முதலாக விஷ்ணு வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்தமை கூறப்படுகின்றது. திருமாலின் தசா அவதாரங்களை முறையே மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், கண்ணன், பலராமன், கல்கி என்ற அடிப்படையிற் கூறி, உயிரினத்தின் பரிணாமக் கோட்பாட்டு ரீதியான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆதித்திராவிடர் தமிழரே என்பதை ஆசிரியர் நிறுவ முயன்றுள்ளார். இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே பூர்விக காலம் முதலாக உள்ள பல்வேறுபட்ட தொடர்புகள்பற்றிய செய்திகள் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் "யாழ்ப்பாணக் குடியேற்றம்" என்ற நூலினைத் தழுவி இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம், இராமேஸ்வரம் பற்றிக் குறிப்பிடும் போது "குகன் வம்சம்" பற்றிய செய்திகள் வருமாறு கூறப்பட்டுள்ளன.

"சேதுபதி குகன் குலத்தவர் சின்னம், கருடன் கொடியும் அனுமன் சின்னமும் போல், ஈழத்து வெடியரசனும் தான் புகுந்த நாட்டுக் கொடியாம் கருடனும், விஷ்ணுவின் சின்னம் அனுமன்போல், சங்கு, சக்கரத்தையும் சின்னமாகக் கொண்டு ஆட்சி செய்தமையால், இரு நாட்டு உறவும் உளங் கொண்டு, இந்நூலிற்கு "விஷ்ணுபுத்திரர்" என்ற தலைப்பைத் தாங்கினோம்" (பக்-30)

ஆசிரியர், இந்நூலிலே சேதுபதி மன்னனுக்கும் வெடியரசனுக்கும் தொடர்பு காட்டுகிறார். இராமாயணக் கங்கைக் கரைக் குகனுக்கும் சேதுபதி மன்னர் பரம்பரைக்கும் தொடர்பு கூறப்படுகின்றது. வெடியரசனின் முதற் பெயராகிய உகன்>குகன் என்ற பெயரைக் கங்கைக் குகனின் பெயருடன் ஒப்பிடுகிறார். வெடியரசனும் குகனின் வழிவந்தோர் முற்குகர் ஆதலினாலும், முற்குகர் வரலாறு கூறும் இந்நூலுக்கு "விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாறு" என்று அடை கொடுத்து இருப்பதையும் மேற்காட்டிய ஆசிரியர் கூற்று விளக்குகின்றது.

முன்+உகன்=முதலிற்றோன்றிய உகன் என்பது பொருள். இத்தொடர், காலப்போக்கில் முன்+குகன் என மருவிற்றென்றும் அது முன்+குகன்=முற்குகன் எனப் புணர்ந்து சாதிப்பெயராயிற்றென்றும் அறியப்படுகிறது. எனவே, உகன்>குகன்= வெடியரசனின் வழிவந்தோரே முற்குகர் என்ற வம்சா வழியினராவர் என்பது நூலாசிரியர் கருத்து.

பல்வேறுபட்ட வரலாற்று நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி "ஈழ நாடு" என்ற விடயம் எழுதப்பட்டுள்ளது. (பக்-35-41). ஈழத்துப் பூர்விசக் குடிகளில் நாகர்களை சங்க நாகர் என்றும் முகுளி நாகர் என்றும் இருவகையினராகப் பிரித்து, சங்க நாகர் சங்கு குளிப்போர் என்றும் முகுளி நாகர் முத்துக் குளிப்போர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முகுளி நாகரே முற்குகர்களின் முன்னோர் என்பதை ஆசிரியர் நிறுவியுள்ளார். மூன்றும் கடல் கோளின் போது ஒரு லட்சம் மீனவரது சிற்றூர்களும், தொளாயிரம் முத்துக்குளிப்போரின் ஊர்களும், நாநூறு சிற்றூர்களும் அழிவுற்றன என்று கூறும் டாக்டர் இராசமாணிக்கனாரின் கூற்றினைச் சான்றாகக் கொண்டு, ஈழத்தின் ஆதிக் குடிகள், முத்துக் குளிப்போராகவும் மீன்பிடிப்போராகவும் வாழ்ந்தனர் என்றும். அவர்கள் விஷ்ணு வழிபாட்டினர் என்றும் ஆசிரியர் கருதுகின்றார்.

ஈழத்து பூர்விகக் குடிகளாகிய நாகர் இனத்தவரில் ஒரு பிரிவினராகிய முகுளி நாகரின் தலைவன் "குகன்" என்றும், இக்குகன் விஷ்ணுவின் தொடையில் இருந்து பிறந்தான் என்றும், இந்தக்குகன் எனப்பட்ட வெடியரசனதும், அவனது தம்பிமாரதும் செய்திகள் நூலிற் பரந்து காணப்படுகின்றன. வெடியரசனது ஆட்சிப்பரப்பு, கோட்டை வீரதீரப் பிரதாபங்கள், படை வலிமை முதலிய விடயங்களை, கண்ணகி வழக்குரைப் பாடல்களைத் தந்து விளக்கியுள்ளார். வெடியரசன், அவனது தம்பி வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் ஆகியோர் கண்ணகியின் பொருட்டு மாணிக்கம் பெறவந்த மீகாமனுடன் நடாத்திய கடற்போர்கள் பற்றிய முழுவிபரங்களையும் கண்ணகி வழக்குரையைச் சான்றாகக் காட்டி ஆசிரியர் எழுதியுள்ளார் (பக்.71-127)"யாழ்ப்பாணச் சரித்திரம்","யாழ்ப்பாணக்குடியேற்றம்" "கந்தபுராண மறைபொருள்" முதலிய நூல்களையும் ஆசிரியர் நன்கு பயன்படுத்தியுள்ளார்.

இராமபிரானால் குகனுக்கு "சேதுபதி மகாராசா" என்று நாமம் சூட்டப்பட்டதாகவும், சேதுபதி நாட்டு அரசனின் மகள் நீலகேசியை வெடியரசன்மணந்தான் என்ற செய்திகளும் நூலிலே தரப்பட்டுள்ளன.

வெடியரசனதும் அவனது சகோதரர்களதும் நிர்வாகக் கோட்டைகளும் அரண்களும், நெடுந்தீவு, நயினாதீவு, காரைதீவு, தொல்புரம், ஆனைக்கோட்டை, திருவடிநிலை, கீரிமலை, மயிலிட்டி, முதலான இடங்களில் இருந்தமை இடப்பெயர் விளக்க அடிப்படையில் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. "யாழ்ப்பாண மாவட்ட இடப்பெயராய்வு" என்ற தலைப்பில் நாம் 1986இல், எழுதியுள்ள நூலில் தொல்புரத்தை மையமாகக் கொண்டு பண்டைநாளில் ஓர் இராஜதானி அமைந்திருந்தமை பற்றி விளக்கியிருந்தோம். அக்கருத்தை மேலும் அரண் செய்வதாக இந்நூல் அமைதல் சிறப்பு அம்சமாகும். இந்நூலின் 129 முதல் 151 வரையான பக்கங்களில் வெடியரசனுடன் தொடர்புடைய இடப்பெயர்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளமை இந் நூலுக்கு இன்னுமொரு சிறப்பாகும்.

வெடியரசனின் பிரசைகளாகிய முற்குகமக்கள், சிலாபம், புத்தளம், யாழ்ப்பாணக் குடாநாடு, கிழக்கிலங்கை உள்ளிட்ட பிரதேசங்களிற் பரந்து வாழ்ந்திருந்தனர் என்ற கருத்தை நூலாசிரியர் வற்புறுத்துகின்றார். குளக்கோட்டனின் ஆட்சி கி.பி ஆறும் நூற்றாண்டில் நிலவிற்று என்பதைக் கூறி (பக்.56-59), முனீஸ்வரப் பகுதியில் குளக்கோட்டனால் ஆட்சியதிகாரியாக நியமிக்கப்பட்டவரின் பெயரினிறுதியில் "பட்டங்கட்டி" எனவருந் தொடரைக் குறிப்பிட்டு, "இன்றும் விஷ்ணு புத்திரர்களைப் "பட்டங்கட்டிகள்" என்று அழைக்கப்படுதல் இங்கு ஆராய்ச்சியாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது (பக்-59) எனக் கூறுவதன் அர்த்தம் நிறுவப்பட வேண்டியதாகும். "குளக்கோட்டன் யாழ்ப்பாணப் பகுதிக்கு வரவில்லை; ஆதியில் விஷ்ணுபுத்திரர்களால் கட்டப்பட்ட எமது கோயில்களை எங்கிருந்தோ வந்த குளக்கோட்டன் கட்டினான் என்று திரிபு படுத்தும் எழுத்தாளர்களை வாசகர்கள் இனம் காண்பதுடன், காலம் பதில் சொல்லும்" (பக்-59) என்ற ஆசிரியரின் கூற்றுக்களும் ஆதாரங்களுடன் நிறுவப்பட வேண்டியனவாகும்.

முற்குகச் சட்டம் பற்றியும் ஆசிரியர் குறிப்பிட்டிருத்தல் நோக்கற்பாலது. முற்குகர் என்பது முக்கியன் என்பதன் திரிபாகலாம். முக்கியன் = முதன்மையானவன்; முக்கியர்=முக்கியமானவர்; முக்குளித்தல்= நீரில் அமிழ்தல்-மூழ்குதல்; முக்குளித்தல் என்பதிலிருந்தே முற்குவர் என்ற காரணப் பெயர் ஏற்படுவதாயிற்று. முக்குவர்=கடலிற் சுழியோடி முத்துக் குளிப்போர் என்பது பொருளாம். கடலில் முத்துக்குளித்து, பொருள் வளத்தால் முதன்மை நிலை பெற்றிருந்தோரே முக்கியர் அல்லது முக்குவர் என்க. பின்னாளில் நிலை திரிந்த சமூகக் கோட்பாடுகள் மக்கள் செய்தொழில்களைத் தரப்படுத்தி - தாழ்வுபடுத்தி தொழில் அடிப்படையில் மக்களை இனங்காண முற்பட்டமை சமூகத்தின் இழிநிலையையே காட்டுகிறது.

சிங்கள மொழியில் அமைந்த "உடறட்டவிடி" என்ற நூலிலே, தென்னிலங்கை மன்னன் "பாதிக்கவாய" என்பவருக்கு எதிராக, வட இலங்கையின் பொன்னகர்ப் பகுதியிலிருந்து ஆட்சிபுரிந்த வெடியரசனின் மூதாதையர், படையெடுத்து வந்து போரிட்டனர் என்றும், அவர்களது படைவலிமை, போர் வலிமை என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் கூறும் ஆசிரியர் (பக்-81) அந்நூல் வெடியரசன் பற்றிக் கூறும் முழுவிபரங்களையும் கூறியிருந்தால் வெடியரசன் பற்றிய கால ஆய்வுக்கு உதவியாக இருந்திருக்கும்.

கண்ணகி பொருட்டு மாணிக்கப்பரல் எடுக்கவந்த மீகாமனுடன்
போரிட்டுப் படைப்பலமும் ஆட்சிப்பலமும் இழந்த வெடியரசன் வழிவந்
தோர்; தமக்குக் கண்ணகியின் சாபம் ஏற்படலாம் என்ற பயத்தின் கார
ணமாகத் தாம்வழிபட்ட நாகதம்பிரான் ஆலயங்கள் தோறும் கண்
ணகிக்கு "நாகமங்கலையம்மன்" என்றபெயரில் சிலையெடுத்து வழிபட்ட
தோடு, கண்ணகி அம்மன் முடியிலும் ஐந்துதலைநாகக் கிரீடம் வைத்து
அழகு செய்த முறையையும் ஆசிரியர் குறிப்பிடுதல் சாலப்பொருத்த
மானதாகும்.

"மீகாமனது படையெடுப்பால் செல்வமும் செல்வாக்குமிழந்த
வெடியரசன் வழிவந்த முற்குகர் குலத்தோர் கிழக்கிலங்கை நோக்கிக்
குடிபெயர்ந்து அங்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்ட
னர்" என்ற கருத்து நூலின் 167 - 199 ஆம் பக்கங்களில் வலியுறுத்தப்
படுகின்றது. இதற்கு ஆதாரமாக "மட்டக்களப்பு மான்மியம்" நன்கு
பயன்படுத்தப்பட்டுள்ளது.

வெடியரசன் காலத்தில் ஈழத்தில், பொன்னும் மணியும் மலிந்து
காணப்பட்டதோடு, கடற்படை வலிமைமிக்கவனுகவும் வெடியரசன்
விளங்கியிருக்கிறுன். மணிவளம் சிறந்த ஈழநாட்டின் பொருள்வளத்
தைக் கொள்ளையடிக்கவே சோழமன்னன் கரிகாலன் மீகாமனைப் படையு
டன் அனுப்பினுன் என்ற கருத்தும் இந்நூலிலே பெறப்படுகின்றது

கண்ணகி கதையும் அதனேடு தொடர்புடைய சோழமன்னனின்
கதையும் உண்மை நிகழ்வுகளாக நிறுவப்படும் வேளையில், அச் சோழ
மன்னனின் படைத்தலைவனுகிய மீகாமனை எதிர் கொண்டு போராடிய
ஈழத் தமிழ் அரசனும் வெடியரசனின் ஆட்சியும், ஆட்சிக்காலமும் நிச்
சயம் சான்றுகளுடன் மேலும் நிரூபிக்கப்படும்.

இந்நூலிலே சிற்சில இடங்களிலே அச்சுப்பிழைகள் ஏற்பட்டுள்ளன.
அத்துடன் சிலஇடங்களில் பிழையான வசன அமைப்புக்களும் காணப்படு
கின்றன. இந்நூல் உருப் பெற்றகாலம் நம் தமிழ் மண்ணில் நம்மக்கள்
அகதிகளாக ஆக்கப்பட்ட காலம். இச் சூழலில் அமைதியின்மை இயல்
பானதே. எனவே, வாசகர் இப்பிழைகளைப்பெரிதெனப் போற்றுது, நூற்
பொருள் கண்டு அமைதலே சான்ருண்மையாகும். இந்நூல் நிச்சயமாக
இரண்டாம் பதிப்புப் பெறவுள்ளதால், இந்நூலை கால ஆராய்ச்சி
சம்பந்தமான பகுதியை மீளாய்வுசெய்து, திருத்தங்களுடன் வெளியிட
வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனவே, வரலாற்ருசிரியர்கள் இதில்
கவனஞ்செலுத்துதல் ஈழத் தமிழரின் வரலாற்றை நெறிப்படுத்தி எழுத
வாய்ப்பாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

நூலாசிரியர் திரு. சிவப்பிரகாசம் அவர்கள் தன் சமூகத்தின் மீது
கொண்டுள்ள பற்றின் காரணமாக அதன்வரலாறுபற்றி அறிந்து கொள்
வதில் நீண்டகாலமாக முயன்று வந்திருக்கிறுர். இதன் பொருட்டு, சிலா
பம், புத்தளம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு அடிக்கடி சென்று
செய்திகளை முதியோர் வாயிலாகப் பதிவு செய்திருக்கிறுர். இவர்களைப்
பற்றிய நூல்வழிச் செய்திகளைத் திரட்டியிருக்கிறுர். விஷ்ணுபுத்திரர்
வழிவந்த முற்குகர் பற்றித் தாம் அறிந்த செய்திகளையெல்லாம் இந்
நூலிலே திரட்டித்தந்திருக்கிறுர். எதிர்காலத்தில் இவ்விடயம்பற்றி
ஆராயமுற்படுவோருக்கு இந்நூல் அரியபல செய்திகளைத்தரும் களஞ்சிய
மாகத் திகழும் என்பது எனது நம்பிக்கை. இந்நூலைத் தமிழர் சமூகத்
திற்கு அளித்திருக்கும் திரு. சிவப்பிரகாசம், ஈழத் தமிழர் வரலாற்றில்
போற்றப்படவேண்டிய தமிழ் உணர்வு கொண்ட பெருமகனுவார்.


## கலாநிதி சி. பத்மநாதன்
## B. A. (Hons), PL. D (London)
### பேராசிரியர், வரலாற்றுத்துறை
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


இலங்கைத் தமிழர் வரலாறு முழுமையாகவும், செம்மை
யாகவும் எழுதப்படாதமை ஒரு பெருங்குறையாகும். இக்குறை
யின் காரணமாக இலங்கை வரலாறு பற்றிய நூல்களிலே தமிழ
ருக்குரிய பங்கு வழங்கப்படுவதில்லை. இக்குறையினைப் போக்கு
வது தமிழறிஞரின் தலையாய கடமையாகும், வரலாற்று
ஆராய்ச்சி நெறியிலே பயிற்சி பெற்றுள்ளவர்கள் தமிழறிஞரி
டையே மிகஅரிதாகவே உள்ளனர். தமிழரின் வரலாற்றை நிதா
னமான முறையிலே ஆராய்ச்சி நெறிகளுக்கமைய எழுதவேண்
டும் என்ற ஆர்வம் அவர்களுக்குண்டோ என்பதுவும் ஐயத்திற்
குரியவொன்ருகும். மேலும்; வரலாற்று ஆராய்ச்சிகளை நடாத்து
வதற்கான வசதிகளும் வாய்ப்புக்களும் மிகக் குறைவாகவே
உள்ளன. இக்குறைபாடுகளிற் சில, நாம் வாழும் சூழ்நிலையின்
காரணமாக எழுந்தவை. மற்றையவை எமது மனப்பாங்கிலும்
பாரம்பரியத்திலுமுள்ள பலவீனங்களைப் பிரதிபலிப்பவை.

சமூகவியற் கல்வி நெறிகளுக்கெல்லாம் ஆதாரமாய் அமை
வது வரலாருகும். வரலாற்றுச் செய்திகளே அரசறிவியலுக்கும்
அடிப்படையாக வருகின்றன. ஆயினும் இந்நாட்களிலே தமிழ்
மாணவர்கள் வரலாற்றினைப் படிக்க விரும்புவதில்லை. அதனைக்
கற்க விரும்பும் மாணவர்களுக்குப் பெற்ருேர்களும் பிற பலரும்
தடையாகஅமைகின்ருர்கள். வரலாற்று அறிவின்றிச் சமூகவியற்
பாடங்களைப் படித்து பட்டம் பெற முனைவது எண்ணெய் இல்
லாது பணிகாரங்களைத் தயாரிக்கும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

இலங்கைத் தமிழரின் வரலாறு முழுமையான வடிவத்தைப்
பெற வேண்டுமாயின் அதற்கான சில அடிப்படை வேலைகளை
நிறைவேற்றுதல் வேண்டும். இவற்றில் அரசாங்க நிறுவனங்க
ளும், கல்வி நிலையங்களும், நூல் நிலையங்களும், பொதுமக்களும்
மனப்பூர்வமாகப் பங்கு கொள்ளுதல் வேண்டும். பழங்காசுகள்,
படிமங்கள், கட்டிடப்பொருட்கள், மட்பாண்டங்கள், உலோகப்
பொருட்கள் முதலிய தொல்பொருட்களையும் கலைப்பொருட்க
ளைத் தேடிப்பெற்று அவற்றைப் பொது நிலையங்களிலே பேணி

வைத்தல் வேண்டும். ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து எல்லோருக்கும் பயன்படும் வகையில் ஆவணச் சுவடி நிலையமொன்றிலே பேணிவைத்தல் வேண்டும். கச்சேரி போன்ற நிர்வாக நிலையங்களிலுள்ள தோம்புகள், நிர்வாக அறிக்கைகள், ஆட்சி ஆவணங்கள், கட்டளைப் பிரகடனங்கள் முதலியவற்றையெல்லாம் ஒன்று திரட்டி வைத்தல் ஓர் இன்றியமையாத தேவையாகும். அதேபோன்று பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடப்பட்ட நூல்கள் ஆகியனவற்றையெல்லாம் நூலகங்களிலே வைத்துப் பேணுதல் வேண்டும்.

ஒரு தேசத்தினதோ ஒரு தேசிய இனத்தினதோ வரலாறு விருத்தி பெறுவதற்கு அதன் அமிசங்களான பிராந்தியங்கள், சமூகப் பிரிவுகள் என்பவற்றின் வரலாறுகளும ஆழமாக ஆராயப்படுதல் வேண்டும். இலங்கைத் தமிழரிடையே காணப்படும் ஒரு சமுதாயப் பிரிவினரான முற்குகரிடையே வழங்கிவரும் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அமைவதே 'விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு' என்னும் இந்நூலாகும். ஆர்வம் என்பது ஆராய்ச்சிக்குதேவையான பண்பாகும். இந்நூல் ஆசிரியர் திரு. மு.சு. சிவப்பிரகாசம் கொண்டிருந்த ஆர்வத்திற்கு இந்நூல்சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் பல்கலைக்கழகத்திற் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. ஆராய்ச்சி நெறியிற் பயிற்சி பெறும் வாய்ப்பும் அவருக்குக் கிடைக்கவில்லை. எனவே ஆராய்ச்சி நெறி சார்ந்த கடினமான விமர்சனங்களுக்கு அவரின் நூல் அப்பாற்பட்டவொன்றாகும். ஆர்வம், ஊக்கம், அபிமானம் என்பனவே நூலாசிரியரின் பிரதான இலட்சணங்களாகும். இந்நூலின் கண்ணே காணப்படும் கருத்துக்கள் வாதப் பிரதிவாதங்கள் பலவற்றிற்கு இடமளிக்கக் கூடியன. அவற்றின் பயனாக வெடியரசனைப் பற்றிய நாட்டார் இலக்கியத்தை ஆராய்வதற்குரிய நெறிமுறை ஒன்று ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கலாம்.

வடஇலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் கரையோரப் பகுதிகளிலே வாழ்ந்த தமிழ் மக்களிடையே வெடியரசன் கதை நெடுங்காலமாகச் செல்வாக்குப் பெற்றிருந்தது. நாடகம், கூத்து, கல்வெட்டு முதலிய நாட்டார் வழக்கிலுள்ள இலக்கியங்களிலே வெடியரசன் ஒரு பிரதான பாத்திரமாகக் காணப்படுகின்றான். அவனைப்பற்றிய கதைகள் வரும் ஏட்டுச்சுவடிகளையும் கர்ணபரம்பரைக் கதைகளையும் தேடிப்பெற்று நூல் வடிவிலே தொகுத்துப் பதிப்பித்தல வேண்டும். பின்னர் அவற்றை அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்ற பொழுது அவற்றிலுள்ள வரலாற்றமிசங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

யாழ் பல்கலைக்கழகம்.
கலாநிதி சி. பத்மநாதன்.

## கந்தையா குணராசா
## [செங்கை ஆழியான்]
### உதவி அரசாங்க அதிபர்
கரைச்சி, கிளிநொச்சி.

திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்களின் 'விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு' என்னும் இந்நூலினைப் படித்தபோது, ஈழத்துஇலக்கியத்துறையொன்றிற்குபுதியதொரு ஆக்கம்கிடைத்துள்ளதென்ற மன நிறைவு ஏற்படுகின்றது. தான் அறிந்தவற்றையும் ஆராய்ந்துகண்டவற்றையும் தான்புரிந்தவாறு மக்களுக்குத் தந்துவிடவேண்டுமென்ற வேணவாவின் விளைவாக இந்நூல் ஆக்கப்பட்டிருப்பதை இதனைப் படிப்போர் தெரிந்து கொள்வர்.

இலங்கையில் தமிழரின் பூர்வீக வரலாற்றைச் சரிவர விபரிக்கும் வரலாற்று ஆவணங்கள் போதியளவில்லை. புதைபொருள் ஆதாரங்களும், கல்வெட்டாதாரங்களும் தமிழரின் பூர்வீக வரலாற்றின் மெய்ம்மையைத் திடமாக நிலைநாட்டும் வகையில் கிட்டாதபோது, கிடைத்த அவ்வகை ஆதாரங்களையும், இலக்கிய ஆதாரங்களையும், கர்ண பரம்பரைப் பாடல்களையும் தமது கருத்துக்களை நிலைநாட்டும் ஆவணங்களாகக் கொண்டு வரலாற்று ஆசிரியர்கள் இலங்கைத் தமிழரின் வரலாற்றை வரைய முயன்று வருகின்றனர். அவ்வகையில் அன்பர் மு. சு. சிவப்பிரகாசம் வரலாற்றாசிரியராகவும் அதேவேளை இலக்கியஆசிரியராகவும் நின்று வெடியரசன் வரலாற்றை ஆக்கித்தந்துள்ளார்.

கி.மு முதலாம் நூற்றாண்டிலிருந்தே இலங்கையானது தமிழரின் தாயகமாக இருந்து வருகிறது என்ற கருத்தினை வலியுறுத்துவதற்கு இவர் வெடியரசன் வரலாற்றைத் துணைக்கு எடுத்துள்ளார் போலப்படுகின்றது. புத்தளத்திலிருந்து மட்டக்களப்பு வரையிலான பரந்ததொரு வடபிரதேச ஆள்புலத்தில் தமிழரின் குடியேற்றங்கள் பரவி நிலை கொண்டிருந்ததை இந்நூலில் அவர் சுட்டிக்காட்டி நிறுவியுள்ளார். விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாற்றை ஓர் ஊடகமாக வைத்துக்கொண்டு, பரந்ததொரு ஆய்வுப் பரப்பை இந்நூலினைச்சுற்றி அவர் விரித்துள்ளார. பிரபஞ்சத்தின் பிறப்பிலிருந்து மனுக்குலத்தின் வாழ்வுவரை நோக்குவது போன்ற பரந்த விடயப்பரப்பினை இந்நூல் அடக்கியுள்ளது. சமயத்திற்கும் அறிவியலுக்குமிடையிலான இணைப்பு விளக்கம், திராவிட பூர்வீகம், இந்தியநாடும் ஈழமும், பின்னர் வடஈழம் அதன்பின் யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு-புத்தளம என, அவரது ஆய்வு ஒழுங்கு வெடியரசனின் வரலாற்றில் நிலைக்கிறது. அதற்குள் அவர் ஓராயிரம் தகவல்களை நமக்குத் தந்து விடுகிறார்

அவைதான் இந்நூலில் ஆசிரியரின் பலம் என நான் கருதுகின்றேன், அதேவேளை பரந்ததோர் ஆய்வுப்பரப்பை எடுத்துக் கொண்ட ஆசிரியர் நவீன ஆய்வு ஒழுங்கில் விடயத்தைப் பகுத்திருப்பாராயின் இந்நூலின் சிறப்பு மேலும் கூடியிருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

இன்று, நமக்குத்தேவையான புதிய தகவல்களை இந்நூலில் ஆசிரியர் தந்துள்ளார். அதற்காக அவருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். இலக்கியம் என்பது, புதிய புதிய செய்திகளைத் தரும்போதுதான் சமூகப்பயன் நல்கும் ஆக்கமாக மாறுகிறது. அன்பர் மு.சு. சிவப்பிரகாசத்தின் விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு அவ்வகையில் சமூகப்பயன் தரும் ஆக்கமே. இலைமறைகாயாக இதுவரை இருந்த ஒரு சிருஷ்டி கர்த்தா இன்று கனியாக நமக்குக் கிடைத்திருக்கிறார்.

வாழ்த்துவோம்.

உதவி அரசாங்க அதிபர்,
கரைச்சி, கிளிநொச்சி,

கந்தையா குணராசா
(செங்கை ஆழியான்)

---

**அகில இலங்கை வெடியரசன் கலாமன்ற நன்றி**

வல்லரசுகளின் கண்நெறிக்குட்பட்ட நமது கேந்திர ஈழத்தின் உரிமைப்பிரச்சனைக்கிடையில் இம் மண்வாசனையுடைய பூர்வீகக்குடிகள் யார்என்ற இருள்சூழ்ந்த காலகட்டத்தில், எமது பல உண்மைச் செய்திகள் மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வரும் இன்றைய உலகில் முதலாம் நூற்றாண்டில் திராவிடத் தமிழ் வீரமிகு வெடியரசன் ஆண்டான் என்ற உண்மைச் சரித்திரத்தினைக் கலாமன்றத்தலைவரும் நூலாசிரியருமான திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்களின் நீண்டநாள் ஆய்வின் திறனால் எம்மினம் செய்த தவப்பயன் என்றால் அதுமிகையாகாது இதனால் இவ் ஆய்வுநூல் வெளிவருவது தமிழினத்துக்கு ஒரு விடிவாகும். எமது கலாமன்றம் கலை, கலாச்சாரம், பண்பாடுகளை வளர்க்கும் பெருநோக்குடன் 1954 ஆம் ஆண்டிலிருந்து சமூக நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் மூலம் கிராமிய மட்டத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்திவந்தோம். இன்றைய நிலையில் வேதாகமவிதிமுறைகள் சரிவரப் பேணாது வித்தியாலயம். மடாலயம் போன்றவற்றிற்கு மேலான தேவாலயம் அழிவுறுவதனை உணர்ந்து சைவத்தைஅரணாக்கும் பொருட்டு "இறை இல்லமும் இறைவிழாவும் அமைப்பு விளக்கம்" எனும் கன்னிநூலை வெளியிட்டுள்ளோம். இதனைத் தொடர்ந்து ஈழத்திருநாட்டில் தொன்மைத் தமிழர் அரசாண்டனர் என்பதனை விளக்கி இந்நூல் வெளியிடுகின்றோம். மேலும் பலசமூக சேவைகளைத் தொடரப் பணம், பொருள், ஆக்கம், ஊக்கங்களைத் தந்துதவியோர்க்கும் எமது கழகத்தின் சார்பில் நன்றியைத்தெரிவிக்கின்றோம்.

இ. லட்சணகுமார் [காரியதரசி]
வெளிநாட்டுத் தொடர்பு
Siyanco - RIYADH.

ஆ. கந்தசாமி [காரியதரிசி]
உள்நாட்டுத் தொடர்பு,
MANIPURAM.

# ஆசியுரை

எமது பூமியானது தன்னகத்தே பல்வேறு பழைய வரலாறுகளையும், மறைந்துபோன, மறந்துபோன வீரக்காவியங்களையும் அதனோடு கூடிய பல உண்மைகளையும் கொண்டதாகும்.

நீறுபூத்த நெருப்புப் போன்ற அன்னியப் படையெடுப்பு, அதனால் ஏற்பட்ட அனர்த்தங்கள், தெளிவு இல்லாமல் படைக்கப்பட்ட புனைகதைகள் போன்றவற்றால் எமது மண்ணின் வீர காவியங்கள் இன்றும் நிலையாக உள்ளன.

நாம் பெரிதும் வியக்கத்தக்க வகையில் எமது வீர வரலாறு உண்டு. நூல்வழிகளில் இல்லாவிடினும், பரம்பரையாகப் பரவி வந்த மறக்கப்படாத வரலாற்று உண்மைகள் எதிர்காலச் சந்ததியும் அறிய இன்நூல் வழிவகுக்கின்றது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற வேதவாக்கில் தான் எத்தனை அர்த்தங்கள்!

இந்த நூலைப் படிக்கும்போது, பல்வேறு உணர்வுகளுக்கும் நாம் ஆளாகின்றோம்.

சமயம் சரித்திரம் இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இழை ஓடுகின்றன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நூல் உருவில் கொண்டுவந்த திரு. எம். எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்.

இந்நூல் நிச்சயம் வாசகர்கள் மனதில் ஒருநல்ல இடத்தைப் பிடிக்கும் என நம்புகின்றேன்.

இந்நூலுக்கு எனது உள்ளம் நிறைந்த ஆசியினை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

**து. வைத்திலிங்கம்**
உதவி அரசாங்க அதிபர்
அ. இ. வெடியரசன் கலாமன்றக் காப்பாளர்

உதவி அரசாங்க அதிபர் பணிமனை
சங்கானை
19-08-1987

# அணிந்துரை

## சைவப்புலவர், சைவசித்தாந்தசிகாமணி, பண்டிதர்:- இ. வடிவேலு திருகோணமலை

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனி சிறந்தனவே''

என்பது உலக மக்களுள் ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள ஒவ்வொரு பிரசைக்குமுரிய உயிரோட்டமான இலட்சியமாக அமைவது சாலச்சிறப்புடையது. கலப்புச் சமுதாய அமைப்பில் இதனை அலட்சியப்படுத்துபவர்களை நினைக்க வேதனையாயிருக்கிறது. சோதனைகளுக்கு மத்தியில் வேற்றுச் சமுதாயத்துள் முப்பத்துமூன்றுவருடங்கள் வாழ்ந்த திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்களின் அனுபவங்கள் அவர்தம் உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. அதனால் பிறந்த பொன்னாட்டைத் தேவலோகத்திலும் மேலாக மதிக்கிறார். பெற்ற தந்தை தாயாரைத் தெய்வமாக மதித்துத் தனது சிந்தனையைத் திசை திருப்பிய போது பிறந்தது ''வெடியரசன் வரலாறு''

திருவளர் துளவ சீர்கரன் மார்பினில்
மருவார் புவியில் மனுவெனத் துதித்து
குகன் எனக் குலமும் குவலயந்தமைத்து
(மு·சு கல்வெட்டு)

என்று தொடங்கும் முதுபழம் கல்வெட்டுப் பாடல் திரு. சிவப்பிரகாசம் அவர்களுக்கு அவருடைய தந்தையாரிடமிருந்தும் தந்தைவழி முன்னோரிடமிருந்துங் கிடைக்கப்பெற்றது செவி வழிச் செய்தியாகக் கிடைத்தாலும் எழுதியவர் ஏட்டைக் கொடுத்தாரென என்ன இடமளிப்பதாலும் இக்கல்வெட்டுப் பாடல்களில் பிரதி பேதங்களேற்பட்டிருக்கலாம். சீர் செய்து நோக்கும் போது சிறந்த வரலாறொன்று அதனுள் புதைந்து கிடப்பதாகத் தெரிகிறது, இவ்வரலாற்றை ஆராய்வதற்குதவியாகக் கடலோடு காதை என்ற பாடற்றொகுதியையும் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார்.

'பிறந்து முன்னே தொழுதுநிற்கப் பெருமாளும் என்சொலுவார்
மறந்து வந்தோம் வலம் புரியை வாரியிலே நீர் போகி
அறிந்தபடி முக்குளித்து அதனையிங்கே தருவதென்ன
சிறந்தவன் போயெடுத்து வந்து திருமுன்னே வைத்து நின்றான்.'
(க-கா 4)

விஷ்ணுபுத்திரவெடியரசனின்தோற்றமும் வீரமும்பேசப்படுகிறது

ஓடம தேறி நீடியே சென்று
இலங்கையின் மட்டுமா நன் நகரில்
மனம் நிறைவாக வன்னிமைப் பட்டம்
வழமை போல் தரித்து
திட்டமாய் அரசும் செலுத்தினரே (மு. சு. க)

இக்கல்வெட்டுப் பாடலில் தேவையான சில அடிகளை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். இவைகளை வைத்துக் கொண்டு இந்நூலாசிரியர் வெடியரசனும் அவனது சகோதரர்களும் காரை நகரிலிருந்து கிழக்குக் கரையோரமாக முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டுநகர் முதலிய இடங்களுக்குச் சென்று ஆட்சிபுரிந்த குகன் வம்சத்தவர்கள் என்பதனையும் நிறுவ நூலாசிரியர் பல ஏதுக்களை எடுத்துள்ளார். புராண இதிகாச வரலாறுகளையும் கண்ணகி கதையையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு ''விஷ்ணுபுத்திரன் வெடியரசன் வரலாற்றை''எழுத எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. இதன் மூலம் தமிழரின் ஈழப் பரம்பலையும் விளக்க விளைகிறார். பிறந்த பொன்னாட்டையும் இனத்தையும் போற்றும் நூலாசிரியர் வாழ்க.

இன்றைய காலகட்டத்தில் தமிழர் வரலாறுகள் மறைக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் தெளிவற்ற நிலையிலும் இலை மறை காய் போல் இருந்த நம் முன்னோரின் கலை ,கலாசாரம், சமயம். வீரம் போன்ற செய்திப் பணிகளை இன்று நாமும் எமது வருங்கால சந்ததியினரும் அறிந்து கொள்வதற்கு மாமன்னன் விஷ்ணு புத்திர வெடியரசன் வரலாற்று நூல் வகைப் படுத்துகின்றது. அத்தோடு யாழ்ப்பாணம் தொடர்ந்து மட்டக்களப்பு ஈறாகவும் மேற்பகுதி சிலாபம் ஈறாகவும் ஆதிக்குடிக் குகன்குலத்தோர்இறுதி வரை அன்னியருடன் தன்நாட்டு மண்ணிற்காகச் சண்டையிட்ட வீரநிகழ்வையும் தமிழ் மண் வாசனை அற்ற தாய் நாட்டுப் பற்று அற்ற அன்னியரின் ஆட்சி ஆக்கிரமிப்பால் பிராந்தியக் குலப் பிரிவுகளை அவர்கள் ஏற்படுத்தி ஐக்கியத்தைக் குறைத்ததனை உணர்வித்துப் பிராந்திய ஒருமைப்பாட்டு உணர்வை நூலாசிரியர் இந்நூலில் உணர்த்தியுள்ளார். இப்படியான சிறந்த நூலைத் தனது விடாமுயற்சியினால் புராணங்கள், சரித்திரங்கள் புதைபொருள்களுடன்சேர்த்து ஆராய்ந்துஉருவாக்கிய ''செயற் செல்வர்' திரு. சுப்பிரமணியம் சிவப்பிரகாசத்திற்கு நன்றி கூறி அவர் உள்ளம் உவகை கொள்ள இந்நூற் கருத்துக்களை நாம் தவறாது கற்றுக் கொள்ளலே சிறப்பான கைமாறாகும். சி. சி. வரதராசா

(செயலாளர் இந்து இளைஞர் பேரவையும்
யாழ் மாவட்டச்சனசமூக நிலையங்களின் சமாசமும்)

பொன். பூலோகசிங்கம்
B. Dev. S. (Hons) Cey.
LL. B. (Cey.)
இலங்கை
உயர்நீதிமன்ற சட்டத்தரணி
புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்.

பணிமனை
67, புகையிரத நிலையவீதி
யாழ்ப்பாணம்.

இந்நூல் ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்கள் தமிழ்த்தேசியவாத உணர்வில் வளர்த்தெடுக்கப்பட்டவராகையால் இன்று அவர் நல்ல தமிழ் அபிமானியாகத் திகழ்கிறார். இதனால் இவர் எமது உ.த.பண்பாட்டு இயக்கஆட்சிக்குழு உறுப்பினரானார். இவரது ஆராய்ச்சிகளின் பின்தளம் தமிழ்த்தேசியவாதக் கண்ணோட்டத்தின் ஊற்றாகவுள்ளது. இந்நூலும் அத்தன்மையதே. வரலாற்றுத் திரிபுகளுக்கு இடம் கொடுக்காது தாம் எடுத்துக்கொண்ட விடயப்பொருளை சமயக்கருத்துக்களுடன் இணைத்துச்சுவைஞர்களுக்கு எடுத்துவிளக்கியுள்ளமை கருத்துரீதியாக அவர் ஒருபாற்கோடாமைக்குத்தக்க சான்றாகும். இந்நூலில் அண்மைக்கால நிகழ்வுகள் சிலவற்றையும் நூலாசிரியர் உதாரணங்களுடன் எடுத்தாண்டுள்ளார்.

இலங்கைத் தமிழ்மக்களது பாரம்பரிய விழுமியங்களும் பண்பாட்டுக் கருவூலங்களும் இந்தியாவினது குறிப்பாகத்தமிழக மக்களதுவாழ்வியலினின்றும் அந்நியப்பட்டவையல்ல. தமிழகம் எப்போதும் ஈழத்துத் தமிழர்களது பண்பாட்டுப் பரிமாணங்களுக்கு ஒருகால்வாயாக இருந்து வந்துள்ளது. தமிழக-ஈழமக்களது நல்லுறவு நிலையில் உதயமாகும் உணர்வுப்பரிமாற்றம் இன்றைய காலகட்டத்தின் தேவையுமாகவுள்ளது. இரு நிலத்து மக்களது பண்பாட்டுத் தொடர்புகளை இந்நூல் விளக்கி நிற்பதால் தென்னகமக்களும் இந்நூலைப்படித்துப்பயன்பெறக் கூடியதாகவுள்ளது

திரு. சு. சிவப்பிரகாசம் அவர்களின் அயராதமுயற்சியால்தான் நெருக்கடிகள் மிகுந்த இன்றைய காலகட்டத்திலும் இந்நூல் சிறப்பானமுறையில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. இந்நூலை எழுதி வெளிக்கொணர்ந்த அவருக்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் (இலங்கைக் கிளை) ஆட்சிக்குழு சார்பாக எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
International Movement
for TAMIL CULTURE

# முன்னுரை

அனற்பிழம்பாக உலகம் உருண்டோடி ஆறிய பின்பு ஓரணு அமீபா (மச்சம்) தோன்றி, விஷ்ணுவின் பத்து அவதாரங்களின் மூலமும், இயற்கை நிலையின் இறுதியில் மனிதன் ஆறு அறிவுள்ள மனித சீவ இனமாகப் பரிணமமானன். (Homo Sapiens) இம்மாந்தர் இடை இடையே ஏற்பட்ட கடல் கோள்களால் சிதறுண்டு பூவெளியின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப நிற வேறுபாட்டுச் சிறு, சிறு குழுக்களாயினர். பண்டைய குமரிக் கண்டம் பிரிந்த போது ஏற்பட்ட மேற்குக் கிழக்கு இந்தியத் தீவுகளில் இலங்கையும் தென் இந்தியப் பேராற்றின் ஆற்றிடைக் குறை நிலமாக நின்று தேன் சுவைத் தமிழ் மணமும், சிவ மணமும் கமழ்ந்த ஈழ நாடாயிற்று. இந்தப் பேராற்றுப் பழந் தமிழரே சிந்துவெளி, சுமேரிய, எகிப்திய ஆதி நாகரிகங்களை மிளிர வைத்தனர் இக்காலங்களில் கைபர்கணை வழியாக வட நில சிந்து வெளி நிலப்பரப்பில் ஆரியரும் குடியேறினர் என்பர். ஆனால் அறிஞர் அஸ்கோபாபோலா மின் மூளைக் கொம்பியூட்டர் ஆய்வில் ஆதித் திராவிடர் என்போர் சிவ வழிபாட்டுக்காரர் என்று கருதினர். பழந் தமிழகத்தின் நாநிலப்பரப்பில் வாழ்ந்த மக்களில் மென்னிலமாம் மருதம், நெய்தல், முல்லை நிலம் நோக்கி நகர்வுற்றனர். ஆற்றங்கரை மக்களால் பட்டணம் தோன்றிற்று. கடல் வளம் செறிந்த மக்களால் பட்டினம் தோன்றிற்று, இதில் பட்டின மக்களே உலகியல் ஆதிக்க மக்களாக வளர்ச்சி அடைந்தனர். இவர்கள் கடலோடு ஒட்டிய நிலப்பரப்பில் பட்டினத்தை முதன்மையாக்கி ஆண்டனர். இதனை [மருவிய நிலப்பரப்பு] மருஆர்ப் பக்கம் என்றனர். அதிலே நெல்லும், உப்பும் விளை நிலமாக்கினர். பட்டின மக்கள் பாரிய நீர்ப்பரப்பை விரைந்து கடக்கும் நீர்க்கலன்களைக் காலத்துக்குக் காலம் புது ஆய்வுத் தொழில் நுட்பத்தினால் ஆக்கிக் கடல்படு, நிலம்படு திரவியங்களைப் பண்டமாற்று வணிகமாகத் திரைகடலோடித் திரவியம் சேர்க்கும் வணிகராயினர். இவர்களில் கோல், நாகர், வங்கர், பாணர், பட்டினத்தார், குகன் குலத்தோர் வலிமை கொண்ட கடல் வணிகராயினர். இவர்கள் மேற்கிந்திய தீவுகளில் வாழ்ந்தனர் என்பதற்குக் கோலாலம்பூர், கொல்லம, கோவளம், நாகதீபம், நாகநாடு, பாண்டிநாடு யாழ்ப்பாணர், நாகபட்டணம், வங்காள விரிகுடா, குகன்கிரி குக இராமநாதபுரம் ஸ்ரீ நாகபூசணி சான்றாக உள்ளன. நாகர் நாகபாம்பினை வணங்கியதுடன் ஐயப்பன் முடிகளிலும் நாகத்தை வைத்து முதலில் வரைந்து வணங்கினர் என்பர்.

கிழக்குலகில் கினர்மணியென இலங்கி இலங்காபுரி, மணி பல்லவம், கயிலை, சுவர்க்கம் என நடுநின்று நிலைக்கும் நாடு எமது ஈழத் திருநாடேயாம். இது நாலா பக்கமும் கடல் சூழ்ந்த சிறு தீவாகையாலும், வட நிலம் மூன்று பக்கக் கடல் சூழ்ந்ததினாலும் ஆதிமக்கள் கூட்டம் கடல்படுதிரவியம் பெறுவோர் வாழந்தனர் என்பதற்கு ஐயம் இல்லை. இதனைச் சரித்திரச் சான்றுகள் இராமாயண காலத்தில் இங்கு தோன்றும் போதுகுகன் இராமபிரானின் நண்பராகி ஓடம் செலுத்தி ஐவராகச் சேர்ந்து சேதுபதி மகாராசாவாக இராமரால் நியமிக்கப்பட்டமை புலனாகும். கரையோரத் திவுகளில் கோல் (Kolls) என்ற கடல் வணிகரிடம் நாகர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதன் மூலம் இலங்கையிலும் இயக்கருடன் நாகரிகம் உள்ள நாகரும் வாழ்ந்தனர். இவர்களில் ஒளி நாகர், முகுளிநாகர், சங்குளிநாகர் நாகன் நாராயணன் முடி நாகர் போன்றோர் அடங்குவர் இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டிற்கு முன்பே முடிநாக ஆரயர் உட்பட ஈழத்து இருபதுக்குமேற்பட்ட ஆதிநாகப்புலவர்கள் தலைச்சங்கத். தென்மதுரைச் சங்கப் புலவர்களாக அமர்ந்ததும் நாக கடலோடிகளானதும், நாகர் ஆதி நாகரிகம் படைத்தோராகையினாலும் [37] ஈழம் பெருமையுற்றதுடன் நாகர் பெருமையும் பொருந்தினர். அடிக்கடி ஏற்பட்ட கடல் கோல்களாலும் சேர சோழ பாண்டிய யுத்தங்களாலும் அருகாமையில் அமைந்த இலங்கை இந்திய மக்கள் மாறி மாறிக் குடியேறியதுடன் ஒரே கலாசார அமைப்புடையோராயினர்.

விஜயனும் நண்பர்களும் பாய்மரம், சுக்கான் இன்றி நடுக்கடலில் அலையுடன் தத்தளித்து இலங்கையில் வந்து கரைஅடைந்தவர்களைக் கரையில் நின்ற திராவிடத் தமிழ் நாகர்கள் வருக வருக என வந்தாரை வரவேற்றுக் கனிகொடுத்து நீண்ட நாள் பசியை ஆற்றி உபசரித்துத் தம் தலைவனிடம் முள்ளுத்தீவில் விருந்தினராக்கினர். இத்தகு வலிமை நாகர்களின் முகுளி நாகர்களான முத்துக் குளிக்கும் குடும்பங்களும் நாக தீபப்பகுதி நிலங்களிலும் 3ஆம் கடல்கோளில் நீரில் மூழ்கி (கி மு 161) இன்றைய ஏழு தீவுகளிலும் எஞ்சிற்று. பிரளயா காலத்தை ஏற்படுத்தி நிலம் கடலாயும் கடல் நிலமாக்கிய படைத்தல் தொழிலில் மகா விஷ்ணுவாம் தேவநாராயணன் புது நிலத்தில் அமைந்த கற்பூமியாம் வடநிலமக்களின் கடல் வழங்களைக் கற்பித்து ஆன்ம ஈடேற்றத்தை உய்விக்கத் தனது சங்கை முத்துக்கள் பெருக்கமாகவுள்ள இடமாம் காரைநகர் அண்மித்த பாற்கடலின் ஒழித்து வைத்து லீலை செய்தார். அவ்லீலைப் போட்டியில் எல்லோரும் தோற்றுவிட மக்கள் மத்தியில் சங்கை எடுக்கும் திறன் பொருந்தியவர் யாரும் இல்லையா என்று தனது வலது காலில் தட்டி ஆக்ஞாபித்ததும் தோன்றினன் மக்கள் மத்தியின் முன் உகன் என்ற குகன் இவன் போட்டியில் வெற்றிவாகை சூடியதோடு விலை மதிக்க முடியாத முத்துக்களையும் கண்ட முதன்மையானவனும் முதலில் சங்கை எடுத்தமையாலும் முக்கியமான, முதல்வனை முன் உகன் என்று உணரப்பட்டவனே இசைத் தமிழ்இசைக்கும், இதயத்தோடு தேன் தமிழையும் சைவத்தையும் காத்துக் கால் கொண்ட அரச அம்ச முக நிறைவு பெற்ற ஆண் அழகனும் வீரம் மிகு வெடியரசன் ஆகும்.

வட நில மாந்தை நகர் உட்பட்ட வெளிநாட்டை ஆண்டதனால் வெளி – அரசன் வெடியரசன் என்ற சிறப்பு விருதுப் பெயர் பெற்றனன். தனது சகோதரர் நால்வருடன் ''ஐகொற்றரசர்'' தேசம் ஐம்பத்தாறையும், ஐயதோர் குடைக் கீழ் சிற்றரசர்களை நியமித்து ஆண்டனன். மின்னும் மீன் கொடிப் பாண்டிய வழி வந்த சேதுபதி மகாராசாவின் மகள் நீலகேசியை மணந்து சங்கு சக்கரச் சின்னத்துடன், கருடக்கொடியுடனும் யாருக்கும் திறை செலுத்தாத மாவீரன் வெடியரசன் வலிமை பெற்றிருந்தான். இத்தகு திறன், ஈடு எடுப்பு, முத்துகள், சிப்பிகள், சங்குகள், மாநாகமணிகளின் இணையிலா இயைபில் இவன் பெயர் விளக்கம் தென்னகத் தமிழ் நிலமெங்கும் தாவிப் படர்ந்தது. இதனால் தென்னிலங்கை அரசனும், தொண்டை நாட்டை வளப்படுத்தி சோழ ஆட்சியை விரிவுபடுத்தி வந்த கரிகால் வழவனும் வட ஈழ ஆட்சியைத் தம்வசப்படுத்த எண்ணிய போது 'கூர்வலன்தேவி'' கண்ணகியின் காற்சிலம்பிற்கு ஏற்ற விலை மதிப்பிட முடியாத நவ நாகமணிகள், மணியாலத் திருநாட்டு மன்னன் மாவீரன் வெடியரசன் வசம் இருந்தமையைப் பயன்படுத்தி ஏவினான் மீகாமனை. ஏவிய ஏறனுள் மீகாமன் ஈழத்தில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட போர் வீரர் சகிதம் மணிகள் மலிந்த மணியாலச் சொர்க்க பூமியாம் கீரிமலை தொட்டு நாகதீபம் வரை களங்கண்ட வீர மாத்தாண்ட வீர்நாராயணனை வீர சொர்க்கம் அனுப்பியும் வெல்ல முடியாத வள்ளல்கள் ஐபுவியோர் வழங்கிய மணியுடன் வெட்கித் தென்னகம் மீண்டனன். இவன் பெருமை கண்ட சோழன் தந்திரமாகத் தென் இலங்கை அரசன் கஜபாகு மன்னனைக் கண்ணகி விழாவுக்கு அழைப்பது போல் அழைத்து, 24. 000 போர் வீரர்களை அவனுடன் ஈழத்திற்கனுப்பி ஆங்காங்கே குடியமர்த்தப்பட்டு, வெடியரசனுக்கும் ஆதிக்குடி மக்களுக்கும் ஆக்கிரமிப்பை ஏற்படுத்தினர். அத்தோடு கண்ணகி மதுரையை எரித்து இறந்த கோவலனை மடியில் வைத்தழுதாள். உயிர்பெற்றகோவலன் ''மாதகியாள் வந்தாளே என்மடிமேல்'' என்று அவள் நினைவால் நின்றதனால் கோபங்கொண்டு ஐந்துதலை நாகமாகித்

தென் திசை நோக்கி நாகதீவை அடைந்து களேஓடை சீரணி, ஊடாகச் சென்று நாகர்கோவிலே அடைந்தாள் என்றும் அப் பாதையே இன்றைய ''வழுக்கையாறு' என்பர். பக்152 இதனுற் கண்ணகியின் மணிபரலே அலட்சியம் செய்த பயத்தினுல் சாபம் இடுவாள் என்று, ஊர்கள் தோறும் கண்ணகி அம்மன் ஆலயங் களே நிறுவினர். ஈற்றில் 2ஆம் நூற்ருண்டில், ஒடமதேறி நீடியே மட்டுநகர் சென்று வழமை போல் வன்னிமை பெற்று அங்கும் ஆட்சி செய்தான். இக்காலங்களில் இருந்து 5ம் நூற்ருண்டுவரை சிற்றரசர் ஆண்டு, பின் வடநிலக் குகன் குல ஆட்சி குன்றி இருண்ட காலமாயிற்று. இப்படியாக வெடியரசன் 173 வழிவந்த குகன் குலத்தோர் அங்கே ஒல்லாந்தர் காலம்வரை ஆண்டும் போடி மார்களாகவும் முற்குக நீதிச் சட்ட [176] நிர்வாகத்தின் கீழ்முதன்மையானவராய் ஆட்சி செய்தனர். இவர்களின் வன்னி பம், படையாட்சி மானிய தலைமைப் பட்டங்கள், போடிப்பாளைய காரர்கள், போடிகள் எனத் தலைமைப் பதவிகளை வகுத்து ஆண் டனர். குகன் குலத்தோர் ஏனையோர் போல் ஏழு பெரும் பிரி வினராக்கப்பட்டு [174]அருமைக்குட்டிப் போடியும், கந்தப்பபோடி யும் ஒல்லாந்தராலும், கண்டி அரசன் இராசசிங்கனுலும் சிறைத் தளதாபர அதிகாரம் பெற்று நிலமைப் போடிகளாக ஆட்சி செய் தனர். தேசாதிபதி பான்கூன் சிங்கின் அறிக்கைப்படி 17ஆம் நூற்ருண்டிலும் ஏருவூரில்முற்குக இளஞ்சிங்கன் வன்னிமை ஆண் டான் என்பது புலனுகும்175. கேரள, மலையாள ஒரிசா நாட்டு கங்கைக் குகன் குலத்தோர்களும், வங்கர், சிங்கர், கலிங்கர்களும் ஏழு பெரும் முற்குகர் குடிகளாக வாழ்ந்தனர்.

தென்கயிலாயமான திருமலையில் அளவிலா ''நித்திலம் கொழிக்கும்...'' என்ற சம்பந்தர் தேவாரம் மூலம் ஆதி முத்துக் குளித்த மக்கள்கூட்டம் [182]வாழ்ந்தது புலனுவதுடன் ஆங்காங்கே உள்ள கோவில் உபயம் வரலாறுகளும் இவற்றை விளக்கித் திரு மலை வன்னிமைகளாற் சிறப்படைகின்றன. யாழ்ப்பாண மக்கள் சிலாபம் வரை பரவியிருந்தனர் என்பதைக் குவேரோஸ் விபரித் துள்ளார். இதனுல் புத்தளத்தில் குகன் குதிரைமலை தொட்டு முனீஸ்வரம் வரை பரவியிருந்தனர் என்பது உறுதியாகின்றது. 13ஆம் நூற்ருண்டிலும் அதற்கு முற்பகுதிகளிலும் புத்தள முற் குகவன்னிமை இருந்ததுபுலனுகின்றது.[192]ஆசிரியர் நெவிலின் முக் கரகத்தாவவில் புத்தள முற்குகர்களுக்கும் 6ஆம் பராக்கிரமபாகு விற்கும் இடையில்நடந்த 3மாதப் போரினையும்வெல்ல முடியாது காஞ்சி, காவிரிப்பூம்பட்டணத்திலிருந்து 7746 போர் வீரர்களைக் கொண்டுவந்தே பராக்கிரமபாகு இவர்களை நிர்மூலப்படுத்தி நீர் கொழும்பின் எல்லையில் இப்போர் வீரர்களைக் குடியமர்த்தினுன் [195] போர்த்துக்கீசர் வரும் வரை முற்குக வன்னிமைகளின் ஆட்சி நடைபெற்றது புலனுகும். இவர்களின் ஒருபகுதியினர் கல்கமு வைக் காட்டில் பார்வையிற் சிங்களவராயும், பாஷையில் தமிழ ராயும், சாதியில் முற்குகராயும், சமயத்தில் கத்தோலிக்கராயும் இன்றும் வாழ்கின்றனர். சிலாபம் முனீஸ்வரர் ஆலயத்திலும் ஆதிப்பட்டங்கட்டித் தர்மசாதன விளைநிலமே இன்றும் இவர்கள் பெருமைகளை அங்கும் வலியுறுத்துகின்றனவாம்.

இப்படியாக மறந்து, மறைத்து வைத்த உண்மைச் செய்தி களை உலகிற்கு எடுத்து உணர்த்துவதே எமது நோக்கம். இதனுல் 1ஆம் நூற்றுண்டில் திராவிடத் தமிழர் ஈழத்தை ஆண்டனர் வாழ்ந்தனர் என்பது புலனுவதுடன் இவர்களே ஈழத்தின் பல பகுதிகளிலும் வாழும் மூல மனிதர்களாவர்.

O O O O

# நன்றியுரை

வழிவழிவந்த வரலாற்றுப் பிரதிகளையும், பார்வை,விஷகடி விபூதி போடல், வாய்கட்டு மந்திர தந்திரங்கள் கொண்ட மூதா தையரின் ஏடுகளைப் பத்திரமாகப் பட்டுப் புடவைகளிற் கட்டிக் கட்டுப் பெட்டி(பனைஓலைப் பெட்டி)களிற் போட்டு, இறப்புகளில் தூக்கிப் பாதுகாத்தும், எமக்கு அவற்றை மனனம் செய்வித்தும், நாளுக்குநாள் கதைகளாகச் சொல்லித்தந்தும்; அவற்றின் பெறு மதி தெரியாது அவற்றில் அதிகமானவற்றைக் கறையானுக்கு இரையாக்கிய போதிலும், ஒரு சில பாடல்களின் மூலமாவது இந் நூலை எழுத உதவிய எனது குருவும், தந்தையுமாகிய திண்ணைச் சட்டம்பி திரு. மு சுப்பிரமணியத்திற்கும், இந்நூலிற்கு ஆக் கமும் ஊக்கமும் அளித்த புகுந்த ஊரவர்களான காலஞ் சென்ற திருவாளர்கள் கோவிந்தர் கிருஷ்ணர் (ஆசிரியர்) கா. சின்னத்துரை(ஆசிரியர்), ஞா. யோசேப் (தலைமை ஆசிரியர்) ஆகியோர்க்கும், வேண்டிய செய்திகளைத் தந்த புலவர் திரு. நா. சிவபாதசுந்தரனுர் அவர்களுக்கும், இந்நூலை எழுத உதவிய தொல்புரம் மத்திய சனசமூக நிலைய உறுப்பினர்களான திரு. கி. நடராசா, திரு. இ. ஜெயகோபால், திரு. இ. இலட்சணகுமாரன் அவர்கட்கும் எமது நன்றிகள். மேலும் அட்டைப் படத்தினை எமக்கு இலவசமாக வரைந்து தந்த திரு. க. இராசரத்தினம்(கல் வித் திணைக்களம்), திருமதி செல்வநாதன் கோமதிதேவி (ஆசி ரியை) ஆகியோர்க்கும், புளொக், வரைபடங்கள் ஆகியவற்றைத் தந்துதவிய திருமதி திருச்சிற்றம்பலம் மங்கயற்கரசி, (செங்கை ஆழியான்) திரு. க.குணராசா, திரு கி. தியாகராசா ஆகி யோர்க்கும் தமது விளம்பரங்கள் மூலம் நல்வாழ்த்து வழங் கியும், ஷெல், பீரங்கித் தாக்குதல்கள், கொலை, கொள்ளை என்ப வற்றின் மத்தியிலும் குறித்த காலத்தில் இந்நூலை உருவாக்கிய

வட்டு - கற்பகவிநாயகர் அச்சகத்தாருக்கும், இதன் அட்டையை நவீன முறையில் நான்கு வர்ணங்களில் அச்சிட்ட யாழ்விஜயா பிறின்ரேஸ் ஸ்தாபனத்தாருக்கும் எமது நன்றிகள்.

இந்நூல் தொடர்பான கருத்துக்களைத் தக்காரிடம் உரையாடவேண்டுமென்ற நோக்கோடு, வெடியரசன் நாடகம் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்களைச் சந்தித்தேன். அவர் எனக்களித்த ஊக்கமும் உற்சாகமுமே இந்நூல் வெளிவருவதற்குப் பெரிதும் உறுதுணையாகவிருந்தன. யான் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதியை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, இருவாரங்களின்பின் மீண்டும் அவரைச் சந்தித்தபோது,அதனை வாசித்து வேண்டிய திருத்தங்களைச் செய்து தந்ததோடு, வேண்டிய துணைநூல்களையும் தந்துதவி மேலும் எந்தெந்த நூல்களைப் படிக்கவேண்டுமென்ற ஆலோசனைகளையும் வழங்கினார். இந்நூலாக்கத்திற்காக யான் அவரைப் பல தடவை சந்திக்கவேண்டியதாயிற்று. இத்தனை உதவிகளையும், மதிப்புரையையும் நல்கிய கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கட்கும, கலாநிதி சி. பத்மநாதன் அவர்களுக்கும் யான் பெரிதும் கடப்பாடுடையேன். மற்றும்; ஆசியுரை வழங்கிய திரு து. வைத்திலிங்கம் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திருவாளர்கள் பண்டிதர் இ. வடிவேலு, சி.வரதராசா, பொன். பூலோகசிங்கம், க. குணராசா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூல் முற்றிலும் வழுவற்றது எனக்கூறுவது தவறு ஆனல் தங்கத்தை உரைகல்லில் உரஞ்சி மாற்றைப் பரிசோதிப்பர் உயர்ந்தோர். ஆனல் அந்த உரைகல்லைப்பற்றியே பேசுபவரும் சிலர் உளர். கற்றது கைமண்ணளவு என்பது போல...... எனது கன்னிப் படைப்பாகிய இந் லின் உட்கருத்தை நோக்காது தவறு காணும் அன்பர்கட்கும் எனது நன்றிகள் அத்தோடு இந்நூல்பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் அடுத்த பதிப்பில் இணைவு செய்ய இயலும்.

மறைந்து புதையுண்டு கிடந்த பூர்வீக வரலாற்றுப் பாடல்களையும், கல்வெட்டுக்களையும் இதுவரை காலமும் எமது மூதாதையர் மனனஞ் செய்து வந்தது போன்று எமது வருங்காலச் சந்ததியினரும் மனனஞ் செய்யுமா என்ற ஐயுறவில் இவ் வரலாற்று உண்மைகள் காலத்தால் அழியாது நிலைக்கவேண்டுமென்ற நோக்கில் அச்சுவாகனமேற்றுவதற்கு வேண்டிய பணவுதவி புரிந்த மறுபக்கப் பெயர்ப்பட்டியல் அன்பர்களுக்கும் எனது நன்றிகள்

வணக்கம்

ஆயிலி
காரைநகர்
20-07-88

திரு மு. சு . சிவப்பிரகாசம்
(நூலாசிரியர்)
தொல்புரம் (மணிபுரம்)

| | | Rs |
|---|---|---|
| **காரைநகர்** | | |
| பரமசாமி பஞ்சாட்சரம்<br>சிவகாமி அம்பாள் வீதி | Elect. Charted Engineer<br>Qatar | 1000 |
| சிவஞானம் சிவபாலன்<br>பொன்னம்பலம் வீதி | Charted Accountant<br>Cardicf, U.K | 1000 |
| அரியகுட்டி புண்ணியம்<br>வெடியரசன் வீதி | Maintaining Accounts<br>Saudi-arabia | 1000 |
| தில்லைச்சியர் கதிரமலை குடும்பம்<br>சிவகாமி அம்பாள் வீதி | Mhaladsumy stores<br>Senkallady | 1000 |
| மு. க. முருகையா<br>வெடியரசன் வீதி | Co-op,Inspector<br>Jaf.na | 50 |
| கிருஷ்ணர் மகேந்திரன்<br>வெடியரசன் வீதி | Krishna Trade | 500 |
| க. கோவிந்தசாமி<br>விக்காவில் | Saudi arabia | 500 |
| இளையதம்பி தர்மலிங்கம்<br>சிவகாமி அம்பாள் வீதி | Building Contractor | 500 |
| டாக்டர் செ. செல்வத்தம்பி | Thampalagamam | 500 |
| டாக்டர் கி. சுப்பையா<br>வலந்தலை | Shaanthi Clinic<br>Kilinochchi | 1000 |
| **மூளாய்** | | |
| கிருஷ்ணர் சித்திவிநாயகம்<br>டச்சு வீதி | Krishna Trade<br>638,Rasagiriya | 500 |
| செல்லத்துரை தேவராசா<br>காரைநகர் வீதி | Sri Murugan medical<br>Moolai | 500 |
| **சுழிபுரம்** | | |
| க. முத்தையா<br>சுழிபுரம் மேற்கு | Trade Business<br>Mannar | 501 |
| க. இ, சிவசுப்பிரமணியம் | Trade Business<br>Vedataltewu | 500 |
| **தொல்புரம்** | | |
| ஓர் அன்பர் | Sri Krishna, Marbles | 1000 |
| கயிலநாதன் சுதர்மன் | Saudiarabia | 1000 |
| நா. பாலசுப்பிரமணியம் | Building contractor | 500 |
| **வட்டுக்கோட்டை** | | |
| க. ஜெயநாராயணன் | Electronic Engineer [Computre]<br>Saudiarabia | 1000 |
| கார்த்திகேசு சுப்பிரமணியம் | Pillayar Sawmill | 1000 |
| வேலுப்பிள்ளை பொன்னம்பலம் | Pakiaratnam Hardware<br>stores Chankanai | 1000 |
| கிருஷ்ணர் சிவசுப்பிரமணியம் | Krishna saw mill | 500 |
| கிருஷ்ணர் இராமநாதர் | Dhoba,Kata | 500 |

| | | |
|---|---|---|
| நாகேசு நவரட்ணம் | Building Contractor | 500 |

**வடலியடைப்பு**

| | | |
|---|---|---|
| கந்தையா செல்வராசா | Business | 500 |

**நவாலி**

| | | |
|---|---|---|
| முருகேசு சுகந்தசீலன் | Suganta Enterpises | 1000 |
| சங்கு ஏற்றுமதியாளர் | Exporters | |
| வே. செல்வராசா | Exporters | 1000 |
| ஜனாதிபதி விருது பெற்ற ஏற்றுமதியாளர் | | |
| முத்து இராசையா | Exporters | 750 |
| ஜனாதிபதி விருது பெற்ற ஏற்றுமதியாளர் | | |
| மாரிமுத்து செல்வராசா | Iron Industrialist | 500 |
| செல்லப்பா ஜெயரட்ணம் | Govt. Ret D.I.O | 500 |
| செல்லப்பாவீதி | | |

**யாழ்ப்பாணம்**

| | | |
|---|---|---|
| தம்பிப்பிள்ளை சபாரட்ணம் | 77/2, Mayfeld Rd, | 1000 |
| மகாலட்சுமி நகைமாளிகை | Clombo 13 | |
| கு. செல்லையா | Dealers for Timbers | 500 |
| காதிஅபூபக்கர் வீதி | Jaffna | |
| சோமு கணபதிப்பிள்ளை | Abirame Furniture | 500 |
| | 175, Manipay Road | |
| ஐயம்பிள்ளை நாகராசா | Building Gontractor | 500 |
| | Muththamil Rd | |
| சங்கரப்பிள்ளை அரியபுத்திரன் | Rajan Transport | 500 |
| | 15, Sivapragasam road | |

**கொழும்புத்துறை**

| | | |
|---|---|---|
| சின்னத்துரை சிவலோகநாதன் | Sydney, Australia | 1000 |
| வேலுப்பிள்ளை நடராசா J.P | Acting Magistrate | 500 |
| கார்த்திகேசு அரிநேசலிங்கம் | Sanitary Inspector | 500 |
| | School M. O. H | |
| செல்லர் நரேந்திரன் (ஓய்வூதியர்) | Narantheran Stores | 500 |

**பருத்தித்துறை**

| | | |
|---|---|---|
| A. V. பரமலிங்கம் | Govt. Contractor | 500 |
| சரஸ்வதிவாசம் | | |

**மீசாலை**

| | | |
|---|---|---|
| செல்லையா கணபதிப்பிள்ளை | Proctor & Notary | 500 |
| | Colombuthurai | |

**விடத்தல்தீவு**

| | | |
|---|---|---|
| மரியாம்பிள்ளை யோசெப் | Govt. Ret. Hellth Dept. | 400 |
| பிலோமினு (பிளசம்) | | |

உ

"ஸ்ரீ ராம ஜெயம்"



# விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு

## நூன்முகம்

திருவளர் துவள சீர்கரன் மார்பினில்
மருவளர் புவியில் மனுவெனத்துதித்து
குகன் எனக் குலமும் குவலயத் தமைத்து
மிக மகிழ ஓடி மிக்க வேண்டிய வரமும்
சங்கும் ஒளியும் பசுந்தாரம் இலங்க
மங்காமல் துலங்க மானிலம் புரக்க
கொங்கு வங்காழும் கோசறை பெற்று
மங்கராச் சின்னம் மயிலை புன்னலை
ஐகொற்றரசர் தேசம் ஐம்பத்தாறும்
ஐயதோர் குடைய்க் கீழ் துரைத்தனம் செலுத்தி
வண்ணமா நாகமணி அதையெடுக்க வந்த
மீகாமனை வழியது மறித்து
தோம், தோம் என்றடி தோர்க்கப்பண்ணி,
கூர்வலன் தேவி கூறும் சாபத்தால்
ஐபுலியோர்கள் அனைவரும் போற்ற
தம்பி தமயன் மார் சத்தியஞ் செய்து
ஓடமதேறி நீடியே சென்று
உடும்புறும் இராட்சதர் நிறைந்திடும்
இலங்கையின் மட்டுமா நன் நகரில்
மட்டைக் கொழும்பில் (மட்டக்களப்பு)
மனம் நிறைவாட வன்நிசைப்பட்டமும்
வழமைபோல் தரித்து
திட்டமாய் அரசு அங்கும் செலுத்திடும் நாளையில்
என்னிலத்தில் உள்ள எச்சாதிகனும்
வந்து அடிபணிய மானிலம் புரக்க
திட்டமாய் அரசும் செலுத்தினரே!

(கல்வெட்டு கர்ணபரம்பரை குலப்பாடல்)

**நில நிலையில்: எமது நிலம்**

இற்றைக்கு 1955885090 வருடங்களின் முன் தோன்றியதே நமது பூவுலகம். உயிர்த் தோற்றமற்ற அனற் பிழம்பாக எண்ணிலாக் காலம் வான வெளியில் உருண்டோடியதனால் மேற் பூமிப்படை ஆறிச்சிறு அணுக்களாக உயிர்த் தோற்றம் உண்டாகியது. இப்பூமி காலத்திற்குக்காலம் பிரளயாகாலம், பூமி அதிர்ச்சி, கடல்கோள் என்பனவற்றால் மாற்றம் அடைந்து மலை — கடலாகவும், கடல் — மலையாகவும், காடு — வனந்தரமாகவும், நாடு — கடலாகவும் மாறியதாக (20000) புவியியல் அறிஞர் கூற்றாகும். இப்படியே கி.மு 20000 ஆண்டிற்கு மேல் பூவுலகம் குமரிக் கண்டமாக இன்றைய ஈழம், இந்தியா, அவுஸ்ரேலியா, ஆபிரிக்கா அமரிக்காவரை ஒரே நிலப்பரப்பாகப்பரந்து இருந்தமை ஆராய்ச்சி, யாளர்களின் கருத்தாகும். இக் குமரிக்கண்டத்தில் கி.மு 20000 ஆண்டிற்குமுன் தோன்றியதே இமயமலை.

இப்பரந்த உலகில் நடு ரேகையும், அச்சுவர ரேகையும் சேருமிடத்திலேதான் மேருமலை இருந்தது. அதுதெற்கே 23 அரை பாகை வரை நீண்டும், உயர்ந்தும் 49கொடுமுடிகளை உடையதாய் இருந்தது. அக் கொடுமுடிகளில் மகேந்திரமலை, மணிமலை, குமரி மலை, கொல்லம் என்பன கொடுமுடிப்பெயர்களை உடையனவாகும். இம் மேருமலைத் தொடரினின்றுமே குமரியாறு, பேராறு பஃறுளியாறு, கன்னியாறு முதலிய ஆறுகள் தோன்றிக் கிழக்கு முகமாக ஓடிக் குமரிநாடு, பெருவளநாடு, ஒளிநாடுகளையும் வளப் படுத்தின. பேராறும், பஃறுளியாறும் பெருவள நாட்டிலே ஓடிக் கொண்டிருந்தன. இப் பெருவள நாட்டிலேதான் மணிமலை என்ற மேருவின் ஒரு கொடுமுடியும் அமைந்திருந்தது.

குமரிநாட்டுக் குமரியாற்றிற்கும், பெருவளநாட்டுப் பஃறுளியாற்றிற்கும் இடையே ஓடிய பேராற்றின் நிலப்பரப்பே ஆற்றிடைக்குறை என்ற இன்றைய இலங்கை ஆகும். இது கி. மு 10 000 ஆண்டளவில் நிகழ்ந்தது. அஃது அன்றைய பெருவள நாட்டின் எஞ்சியநிலம். ஆகவே அஃது மணிமலைப்பாங்கின் பகுப்பு நிலமாகும். இந்த உண்மையையே ஈழம் என்ற சொல் எடுத்துக் காட்டுகின்றது. ஈழம் என்பது பொன் எனப் பொருள். ஆதலால் மேருவின் மணிமலைப்பாங்கில் இரத்தினக்கற்களும் பொன்கனிக் கழிகளும் மிகவிருந்தன. இதனாலேயே "மேருவைச் சேர்ந்த காகமும் பொன்னாகும்" என்ற பழமொழி எழுந்தது. இதனால்ஈழத்தை இரத்தினதீபம் என்பர். ஈழம் என்ற சொல் ஈ — ஈழ் — ஈழம் என்றாகும். "ஈ" என்பது ஈதல் (ஈகை) ஆகுபெயராய்ப் பொன்



என்ற கருத்தாகும். பொன் பொருந்திய நாடு ஈழநாடாயிற்று என்ற கருத்தையும் தரும். இக் கிழக்குலகில் கிளர் மணியென இலங்கி இலங்காபுரியாக நடு நின்று நிலைக்கும் நம் நாடே இவ் ஈழத்திருநாடாகும். இதன் தொன்மைக் காலத்தில் தென் தமிழ் மொழிபேசும் தேர்ந்தநாடாகத்தெளிவுபெற்றதனாலன்றோ மன்னு "சிவனொளி" எங்கள் மலையே, மானிலம் இதுபோல் பிறிதிலையே என்று துள்ளுமிழை தடிக்கத் தோள் உயர்த்தித் தமிழ்க்குரல் கொடுத்தான் ஆதிமனிதன்.

இந்தச் "சிவனொளி"யாம் சிவனொளிபாத மலையில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் மொகாஞ்சதரோவில் காணப் பட்ட எழுத்துக்களை ஒத்துள்ளதென ஹெராஸ் பாதிரியார் குறிப் பிட்டுள்ளார். இம்மலையைச் சீனர்தமது "ஃபோ" என்னும் கடவுள் உடையதுஎனவும், முகமதியர் ஆதாம், ஏவாள்களின் மூதாதயரின் உறைவிடம் என்பர். சிவமதத்தவர் சிவனின் சிவபாதம் என்பர். பௌத்தர் தமது புத்தபகவானின் பாதச்சுவடு என்பர். அராபியர் ஆதம்மலை என்று பெயரிட்டு ஆதிமக்கள் தோன்றிய இடம் என்பர். இதனால்இதுவே ஆதியில் மேருமலையின் ஒருபகுதியாகும். சாவகதேசத்தில் காணப்பட்ட பழைய நூலில் இலங்கையின் ஆதி மக்கள் சாவகம் முதலிய நாடுகளிற்குப் பரவிக் குடியேறிப் பெருகினர் என்பர். அத்துடன் இலங்கை மொழி "எல்" எனவும் இதனால் அதற்கு எலு பெயரானதாகவும் எலு-ஈழம்+என்று திரிபு பெற்றது என்றுங்கூறுவர்களும்உளர். இலங்கையின்எல் என்னும் சொல்லில் இருந்தே தமிழ் என்னும் பெயர் பிறந்தது என்று

+ இலங்கை என்னும் சொல்லின் அடி எல். இலங்கைக்கு ஈழம் என்பது மற்றொரு பெயர். ஈழம் என்பதன் அடியும் எல்.

Ceylon in Puranic aeeount was ealled 'Ilam' and we find Elam' as a great kingdom on the frontier of Babylonia with purely Sumerian Civilization ...... .. It is clear from the traditions recorded in the Ramayana and the Mahawansa that for tha larger part of Ceylon (about 11 / 12 ths) had gone undar the sea. Is it not then probable that Sathiyavaratha or Manu, king of Dravida, who reached Malaya (in Malabar) after the deluge escaped from one of the submerged portions of Ceylon? This theory explains the Indian tradition that Indians came from Ela Vritam. This explains the Sumerean tradition that they went from Elam. This explains the Babylonean and Indian story of deluge — Our place in the civilization of the ancient world — Hon. K. Balasingam.

சென்னை ஆசிரியர் ந.சி. கந்தையாபிள்ளை பழந்தமிழர் நூலில் பக்கம் 117ல் குறிப்பிட்டுள்ளார். (இலங்கையின் ஞாயிற்றின் (சூரியன்) ஒளி விளங்கும் மலை "சிவன் ஒளி மலை" எனவும் அது "தாமம்எல் என்றும்; தாமம்அது "தாமீல்மாய்ப்" பின் தமிழாயிற்று எனவும்; தமிழ் என்பது இரு சொற்களிலானது என்னும்; இது தமிழும் (தாமம்எல்) எல் – ஞாயிறு – தமிழ்க்கடவுள் - சிவன் எனவும் ஆதலால் தமிழும் – சிவமதமும் சேர்ந்தது என்றார். அத்துடன் தமிழ் என்றால் சிவன் ஒளி என்பது பொருளாகும் என்பர்.) இலங்கையின் பரப்பு 65,610 ச. கி. மீ. அல்லது 25,332 ச.மைல் விஸ்தீரணமுடையது.

இந்த இலங்கையாம் ஈழத்திற்கு ஆதிச்சரித்திரங்கள்இல்லாதபோதிலும் இராமர், இராவணயுத்தத்தினால் இராமாயணம் இலங்கைச் சரித்திரமாக தொடங்குகின்றது. இககாவியம் பொய் என்போர்க்கு இராவணன் சிதாவை சிறை வைத்த நுவரஎலிய நகர் வெளி (இராவணனின் வெளி) சீதா எலிய (சீதையின் வெளி) சீதவக்க என்பன போன்ற பெயர்கள் இன்றும் இக் காவியத்தை உண்மைப்படுத்தி நிற்கின்றன. இங்கு காசிபரின் புதல்வர்களாகிய சூரன், தராகன் ஆகிய அசுரரும்; குபேரன், மாலியவர்ணன், இராவணன் ஆகிய இயக்கர் இனத்தவர் ஆதியில் ஆண்டனர் எனச் சொல்லப்படுகிறது. திருகோணமலையாம் கைலையை இராவணன் பெயர்த்ததும் இராவணன் சிவனுக்குச் சாமகீதம் பாடியதும்இராமர் முனீஸ்வரத்தில் லிங்கதரிசனம் செய்தலும் இராமயணத்திற்கு முற்பட்டகோயிலாக அமைந்தவைகளாகும். இந்த இலங்கைத்திவு என்ற ஈழம் மேற்குநாட்டவரால் "சிலோன்" என்று செப்பப்பட்டது. மூன்று புத்தர்காலத்தில் முறையே ஓசைத்தீப, வரதீப, மந்ததீப என்று சொல்லப்பட்டுள்ளது என்று வரலாறு கூறும். கிரேக்கர், உரோமர் ஆகியோர் இதை "தம்பிரபானே" என்பர். பாளியில் இது "தப்படண்ணி" ஆகும். இப்பெயர் வடமேற்குக் கரையோரத்தில் உள்ள ஒரு மாவட்டத்தைச் சுட்டிய தென்க. இம் மாவட்டத்தை பண்டைக் கடலோடும் வணிகர் நன்கு அறிந்திருந்தனர். இந்தக் குறிச்சிப்பெயர் அதனையுடைய பெருநிலப் பரப்பாம் நாட்டுப்பரப்பு முழுமைக்கும் உரியதாயிற்று. பெரிப்புளுசுவில் அதன் பழம் பெயர் தம்பிரபானே எனவும், புதுப்பெயர் "பளசிமுண்டு" எனவும் கொடுக்கப்பட்டது. சிங்களவர் குடியேறிய பின் இதுசங்கதத்தில் "சிங்களதூவீப" எனவும், பாளியில் "சீலகதீப" எனவும் குறிக்கப்பட்டது இப்பெயர் காலகதியில் அராபி மொழியில் "சிங்கலே" என்றும், "சரண்டிப்" எனவும், சிங்கள அல்லது சீகல எனவும் மாறியது. இதுவே சிலோன் என்பதற்கு மூலமாயிற்று.



இந்த ஈழப் பொன்னாடே சொன்னத்தரை, சொர்ணலங்கா, பொன்னாடு, சுவணலையபுரி, பொன்னகர், பொன்னாலை என்று கந்தபுராண கச்சியப்ப சுவாமிகளால் கூறப்பட்டது. இங்கேயே கந்தகுமாரன் சூரனைச் சிறைப்பிடித்துத் தேவர்களைக்காத்து ஏழு மண்டலமாம் சம்பு, சாகம், குசை, கிரவுஞ்சம், கோமேகம், புட்கம், மணற்றி என்ற ஏழும் உள்ளடங்கிய ஈழத்தின் வடபகுதியின் உச்சநிலத்தையே தேவலோகமாகக் கச்சியப்பர் புராணநெறியாகப்பாடினார். தேவர் பகுதியான இந்த ஈழமண்தலம் முத்து, வைரம், வராகம் போன்றவைகளும், இரத்தினம், பவளம், சங்கு, வலம்புரிபோன்ற பயன்தரும் கனிப்பொருட்களுடன் வளம்பொருந்தியதாயிற்று. இத்தனைச் சிறப்புக்களைக் கொண்டதனால் பரந்த இவ் உலகின் கண்ணே சிறிதானாலும் உடம்பாகிய உலகத்திலே சிறிய கண் அமைந்திருப்பதுபோல விளங்கி எமக்கெல்லாம் பிறந்த நாட்டின் பெருமையாக உலகின் கண்ணே உயர்ந்து நிற்கின்றது.

**நில நிலையில்:- மாந்தன் நிலைத்த வளர்வு**

எங்கும் நிறைந்திருந்து சகல உயிர்களையும் காத்தருளும் பொருட்டும் நல்லோர்களான தனது பக்தர்களை நன்னெறியில் உய்விக்கவும் அசுரர்களை அழிக்கவும் (சர்வம் விஷ்ணு மயம் ஜகத்) எடுத்த அவதாரங்கள் பத்து. இப்பத்து அவதாரங்களாவன:- மச்சம். கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என்பனவே ஆகும்.

விஷ்ணுவுக்குப் பீதாரம்பரன், கருடத்வஜன், சக்கராயுதன், இலக்குமிபதி, நாராயணன், வைகுண்டன், தாமோதரன், வற்ருஷீகேசன், கேசவன், மாதவன், தைத்யாரி, புண்டரீகாசன், கோவிந்தன், அர்ச்சுனன், சாரங்கபாணி, ஜனார்த்தனன், உபேந்திரன், சக்கரபாணி சதுப்புஜன், பார்த்தசாரதி, பெருமாள் முதலிய பல நாமங்களும் உரியனவாகும்.

இவரது ஆயுதங்கள்; சுதரிசம் என்னும் சக்கரமும், பாஞ்சயந்தம் என்னும் சங்கும், கௌமேகி என்னும் தண்டும், நந்தகம் என்னும் வாளும், சார்ங்கம் என்னும் வில்லுமாகிய ஐந்தாம்.

இவரது ஆபரணம்; கௌஸ்தூபம், இவர் மார்பிலே உள்ள மறுவுக்கு ஸ்ரீவத்சம் என்று பெயர். இவர் திருப்பாற்கடலிலே யோக நித்திராயிருப்பவர். நாராயணனே விஷ்ணு என்றும், சகுன வடிவென்றும், நிர்க்குண வடிவென்றும் புராணங்கள் பல பாடல்களிற் கூறுகின்றன.

இந்தியாவின் பல பகுதிகளிலும் விஷ்ணு வழிபாடு உண்டு. பத்திரி நாதத்தில் நாராயணன் என்றும்; மதுராநகரிலும், பிருந்தாவனத்திலும், கோகுலத்திலும், துவாரகையிலும் கிருஸ்ணர் என்றும்; பூரியில் ஜகந்நாதர் ஆகவும், பண்டரிபுரத்தில் விட்டோபாகவும், திருப்பதியில் ஸ்ரீநிவாசனாகவும், காஞ்சியில் வரதராஜனாகவும், ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதனாகவும், வழிபட்டனர். மேலும் உலகத்தின் பல பாகங்களிலும் விஷ்ணுவழிபாடு ஆதியில் இருந்தது. கம்போடியா (கம்பூச்சியா) என்னும் நாட்டிலே அங்கோர்வாற் விஷ்ணுவின் லீலைகளை அரைமைல் நீளத்தில் கருங்கல்லில் தொடர்ச்சிச் சிற்பம் அமைக்கப்பெற்றதும் கோவில்கட்டிடம் மட்டும் 4 மைல் சுற்றளவைக் கொண்டதாக உள்ளதையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதேபோன்று அமெரிக்காவிலும் விஷ்ணுவின் பழையருபங்கள் (தலையின் அமைப்பு செவ் இந்தியரின் முடி அமைப்பைப் போன்றது) கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஈழத்திலும் ஆதியில் எழுவான் கரையில் விஷ்ணு மீனாக வலைஞர்களுக்குக் காட்சி கொடுத்து வல்லிபுர ஆலயம் அமைக்கப்பட்டதும், படுவான் கரையில் கூர்ம அவதாரமாகப் பொன்னாலையில் விஷ்ணு ஆலயம் அமைக்கப்பட்டதும், தென்கரைக் கோடியில் தேவன்துறையில் பெரிய விஷ்ணு ஆலயம் அமைந்திருந்ததையும் ஈழத்து மக்களும் விஷ்ணு வழிபாட்டில் பண்டைய நாள் முதலாக ஈடுபாடுடையவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. விஷ்ணுவைப் பொதுக்கடவுளாக எல்லா மதத்தவரும் வழிபட்டு வருதல் சிறப்பு அம்சமாகும்.

விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் முதல் அவதாரம் மச்ச அவதாரமாகும் (மீன்). தமிழர்களின் பூர்வீக சரித்திரமும் சமயமும் என்ற நூல் அகத்தியானியர், பபிலோனியர், ஏயான்றேல் ஆகியோர் ஓவன்றேஸ் என்னும் இம்மீன் மூலம் தங்கட்குச் சகல சாஸ்திரங்களும் கற்பிக்கப்பட்டன என்று அம்மீனைத் தெய்வமாக வணங்கினார்கள். மீன் தெய்வம் அறு, பேல், ஏயா என்ற திருமூர்த்திகள் என்பர். பாண்டியர்களையும் மீனவர், மீன்கொடி உடையர் என்றனர்.

பண்டைக் காலங்களில் மதுரையின் தெய்வமும் மீனே. சிந்துவெளியிலும் மீனே தெய்வமாக இருந்தது. பழைய மீனாட்சி ஆலயம் என்பதன் கருத்து (மீன்+ஆட்சி) மீன் தலைவன் அன்றே மீன்தெய்வத்தை வைத்து வழிபாடு செய்த ஸ்தலமாகும். ஆரியர் குடியேற்றத்தின் பின் மீனாக்ஷி என்று (மீன் கண்ணுடையவள்) மாற்றி அமைத்தனர்.



நாராயணம் என்பதன் கருத்தும் மீனே. ஆதலால் அவரின் முதல் தோற்றம் மீன் அவதாரமாகும். மெ. தம்பிப்பிள்ளை என்ற அறிஞர் (நாரம் = நீர், அனம் = அனவுகிறது) நாராயணம் என்னும் சகஸ்கிருதச் சொல்லை ஆரியர் மீன் என்றும், ஆதி மனிதனுக்கு ஒரு மீனே சலப்பிரளயத்தைப்பற்றி உணர்த்தியது என்றும் கூறியுள்ளார்.

சிறுபிள்ளைகளுக்குச் சுகயீனம் ஏற்பட்ட வேளைகளில் பாரதத்தில் குழந்தையின்கையால் மீன்குஞ்சைக் கங்கையில்இடும் பழக்கம் உள்ளது. புதைபொருள் ஆய்வின் படி இறந்தவர்களுடன் ஆதியில் சுறா வேறும்பல மீன்கள் படைக்கப்பட்டன என்ற செய்தி கூறப்படுகிறது. இந்த மீன் தான் உயிரினம் தோன்றுவதற்கு மூலக் காரணம் என்றும் கூறுவர்.

அடுத்து நாராயணனின் இரண்டாவது அவதாரம் கூர்ம அவதாரமாகும். இந்த கூர்ம அவதாரமானது தேவர்களும், அசுரர்களும் பாற்கடலில் அமுதம் பெற எண்ணி மந்தார மலையை மத்தாகக் கொண்டு கடைந்தனர். இம் மலையைத் தாங்கியது இந்தக் கூர்மமான ஆமை வடிவான நாராயணனே. இதனால் தேவர்கள் வென்றனர் இக்கூர்ம அவதாரத்திலேயே நாராயணன் வலைஞனுக்கும் காட்சி கொடுத்த ஆடிப்பூர நன்னாளை விஷ்ணு புத்திர வரலாற்றில் காண்க. கம்போடியா விஷ்ணு அவதாரச்சிலை இக்காட்சியை உணர்த்தும்.

மேலும் விஞ்ஞான விளக்கமானது இக்கூர்ம அவதாரம் என்பது அமீபாவான அனு (மச்சம்) ஓரளவு விருத்தியடைந்து நீரிலும், நிலத்திலும் வாழும் தன்மையை நான்கு கால்களுடன் கொண்டதாகும் என்று விளக்கம் தருகின்றது.

அடுத்த நாராயணனின் மூன்றாவது அவதாரம் வராக அவதாரமாகும். அதாவது பன்றி ஆகும். பிரளய காலத்தில் பூமி நீரினுள் அமிழ்ந்து போகத் திருமாலின் மூக்கில் இருந்து தோன்றியது இவ் வராகமாகும். இப்பன்றி பூமியை மீண்டும் நீரினுள் இருந்து எடுத்து உரிய இடத்தில் ஏற்படுத்திய செயல்களே வராக அவதாரமாகும். இதற்கு விஞ்ஞான விளக்கமானது நீரிலும், நிலத்திலும் வாழும் தன்மை கொண்ட ஆமையை ஓரளவு விருத்தியடையச் செய்து ஓரளவு விலங்காகப் பன்றியாகப் பரினாமப்பட்டது என்று விளக்கம் தருகின்றது. இந்நிலையே பூமி கடல் கோளாலும் சிதைவாலும் பிரிந்த பிரளயகால நிலை என்பர்.

அடுத்து நாராயணனின் நான்காவது அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். அதாவது அரைவாசி மனித உருவமும் அரைவாசி மிருக உருவமும் ஆகும். இரண்யன் என்னும் அசுரன் தன்னைத் தெய்வமாக எல்லோரும் வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டான். ஆனால் அவன் மகன் பிரகலாதனோ நாராயணனை அன்றி அசுரர் எவரையும் கடவுளாக வணங்கேன் என்று மறுத்து உரைத்தான். இவன்பக்தியை மெய்ப்பிக்கத் தூணில்இருந்து தரிசனம் கொடுத்த அவதாரமே நரசிம்ம அவதாரமாகும்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது மேலும் பரிணாம வளர்ச்சி அடைந்தும் அரைவாசி மனிதன், அரைவாசி மிருகம் ஆக உருப்பெற்று மனிதசிங்கம் என்ற வளர்ச்சி பெற்ற ஆன்மா மனித உருவிற்கு வரும் நிலையாகும்.

அடுத்த நாராயணனின் ஐந்தாவது அவதாரம் வாமன அவதாரமாகும். அதாவது குள்ளன் என்ற உருவம். மாவலி என்னும் அசுரச் சக்கரவர்த்தி தேவர்களைத் தனது அடிமையாக்க எண்ணி வேள்வி செய்தான். வேள்வியில் சிறு பிராமண ரூபத்தில் சென்ற நாராயணன் அம் மகாவலி என்னும் அசுரச்சக்கரவர்த்தியிடம் தானத்தில் பங்கு கொள்ள முதற்கண் மூன்று அடி நிலம் கேட்டார். உடனே பேருருமாகிச் சக்கரவர்த்தியின் மூன்றுஉலகையும் இரண்டடியில் அளந்து மூன்றும் அடியை அவன் தலையில் வைத்து ஆட்கொண்டார்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது மேலும் பரிணாமவளர்ச்சி காரணமாக மனித சிங்கம் என்ற நிலையில் இருந்து சிறிது முன்னேறிக் குள்ளன் என்ற மூளை குறைந்த மனிதன் ஆனான் என்பதாகும்.

அடுத்து நாராயணனின் ஆறுவது அவதாரம் பரசுராமர் அவதாரமாகும். இவ் அவதாரமானது ஜமதக்கினி முனிவர்க்கும் ரேணுகாதேவிக்கும் மகனவர். தம்மனைவி கற்புநெறி தவறியதை அறிந்து தாயைக் கொல்லும்படி கேட்க; பரசுராமர் ''தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை'' என்று தாயைக் கொன்று பின்னர் உயிர்ப்பிச்சையும் கொடுத்தான்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது குள்ளன் என்ற நிலையில் இருந்து பரிணாமப்பட்டு மனிதன் என்ற வளர்ச்சி நிலையை அடைந்ததும் அறிவின்மையால் தாயைக் கொன்றதால் மனித இயற்கை நிலையற்ற நிலையாம் என்ற பாசம் அற்ற விலங்கியல் மனிதன் எனலாம்.



அடுத்து நாராயணனின் ஏழாவது அவதாரம் இராமர் அவதாரமாகும். இவ் அவதாரமானது இராவணனைச் சங்கரிப்பதற்காக உலகின் வேதநெறியினை நிலைநிறுத்த எடுத்த அவதாரமாகும்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது அறிவில்லாத மனநிலையில் இருந்து சற்று முன்னேற்றம் கொண்டு எதிரியைக் கொல்லுதல் என்ற நிலைக்கு வருதல் என்பர்.

அடுத்து நாராயணனின் எட்டாவது அவதாரம் பலராமர் அவதாரமாகும். கண்ணபிரானின் தந்தையான வாசுதேவனுக்கும், ரோகினிக்கும் பிறந்தவரே பலராமர் ஆவர். இவர் கலப்பையைத் தனது ஆயுதமாகப் பாவித்து பிரலம்பன், ரேனுகன் என்னும் அசுரர்களைக் கொன்று தேவர்களை இரட்சித்து ஆட்கொண்டார் என்றும்; இவ் அவதாரத்தை ஆதிசேடனின் அவதாரமென்றும் கூறுவர்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது மனிதவளர்ச்சியின் முன்னேற்றத்தால் எதிரியைக் கொன்றலும் மூளை அபிவிருத்தியடைந்து தர்மம் செய்கின்ற பகுத்தறிவு நிலைக்கு வருதல் என்பர். மேலும் விஞ்ஞான அறிவு காரணமாகக் கலப்பையைப் பாவித்து உழுதுண்ணும் நிலையுமாகும். ஆதியில் வேட்டையாடியவர்கள் உழுது உண்ண முற்பட்ட காலம் எனலாம்.

அடுத்து நாராயணனின் ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ண அவதாரமாகும். இவ் அவதாரமானது பகவக்கீதையை அருளி மகாபாரத யுத்தத்தை நடாத்தி இளமையில் பல திருவிளையாடல்களை நிகழ்த்தின அவதாரமேயாகும்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது மனித பரிணாமவளர்ச்சியானது தர்மம் செய்கின்றவன் என்ற பகுத்தறிவு நிலைக்கு வந்தாலும் முழுமையான மனிதன் என்ற நிலையை அடைந்தும்; அறியாமை என்ற மாயையில் சிக்குண்டு சிதறடிக்கப்படுவதை நீங்கி ''செஞ்சோற்றுக் கடன்'' போன்ற சில நல்ல செயல்களைச் செய்யும் மனநிலைக்கு வந்தமை.

அடுத்து நாராயணனின் பத்தாவது அவதாரம் கல்கி அவதாரமாகும். கலியுகத்தில் வேதநெறி மாறிக் கொடுமைகள் கூடி மனித வாழ்வு சீர்கெட்ட சமயத்தில் தெய்வீக ஒழுக்கத்தில் சிறப்பாக வாழும் ஒரு குடும்பத்தில் நாராயணன் பிறந்து அவர்களைச் சிறப்புடன் வாழ அருள்புரிந்ததே கல்கி அவதாரமாகும்.

இதற்கு விஞ்ஞான விளக்கமானது பகுத்தறிவை அடைந்த மனிதன் அறியாமை என்ற மாயையை நீக்கினலும் மீண்டு அக்கிரமம் அதர்மம் என்பன தலைதூக்கியது. இந்த அதர்மச் செயல்களை அழித்து சமுதாயத்தில் உத்தம புருஷர்களாக வாழ வேண்டும் என்ற நிலைக்கு வந்தமையாகும். இப்படியான மனிதன் தோற்றக் காலம் மாணவ சகம் (முதல் மனித உற்பத்தி 18618828 வருடங்களாகும்.

மேற்கூறிய சில காரணங்களைக் கொண்டும் அன்று மெய்ஞான உல்கத்தில் கூறப்பட்ட அனைத்தும் இன்றைய விஞ்ஞான உலகத்திலும் சரியென விஞ்ஞான அறிஞர் பலர் ஏற்றுள்ளார்கள் இதனுல் நாராயணனை விஷ்ணு உலகத்தில் ஆன்மாக்களை ஓர் அணுவில் உற்பத்தி செய்து ஆன்ம ஈடேற்றத்திற்காகத் தத்துவத்தை அறியும் மனிதர்கள்வரை படைத்து உலகை ஈடேற்றுவதை நாம் அறிவோம்.

இவ் உலகில் நீர்வாழ் பிரயாணிகள் படிப்படியாய் திரிபு பெற்று மனிதன் இற்றைக்கு 20 லட்சம் ஆண்டின்மேல் தோன்றினன்என் "றுஉயிர்த் தோற்றவளர்ச்சி நூலார்(EVOLUTIONISTS) கூற்றுகும். அவ்வப்பொழுது அச்சுமாமருல்இறைவனுல் படைக்கப்பட்டதென்பது நமதுசிவசமயம். இஃது எவ்வாருகினும் இற்றைக்கு 50.000 வருடங்களின்மேல் உள்ள மனிதனின் தோற்றத்தில் மாற்றம் உண்டெனப் பழங்கால மனிதரின் மண்டை ஓட்டை ஆதாரம் காட்டுவர் மக்கள் நூல் ஆராச்சிவல்லர். எங்கள் சமயப் புராணமும் மனித உற்பத்தியை காத்தற் தெய்வமான விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் என்று வெகு விரிவாக விளக்குகின்றன.

இயற்கையில் இயைந்த காத்தல் நெறி எப்படி நிலத்திலும் வானிலும் பரவிய உயிரற்ற பொருட் கூறுகளைத் தன் சக்தியற்ற ஆரவாரமற்ற மறைவான ஆற்றலாய் இலைகளாகவும் மலர்களாகவும் கனிகளாகவும் மாற்றிவிடுகிறதோ அழகும் பயனும் ஆற்றலும் மிக்கன ஆக்கி விடுகிறதோ - அதுபோலவே வாய் பேசாத மௌனமாகிய உழைப்பாளி மனிதர் உள்ளத்தையும் இயற்கையின் பரப்பையுமே தன் மாயமான ஆற்றலால் முற்றிலும் மாற்றியமைத்து விடுகிருன். இதுவே இன்றைய ஏவாயுத விருத்தியான விஞ்ஞான விரிவு என்க. முதிர்ந்த சிந்தனையின் பயனுகவே கருத்தெழுச்சி கொண்டு சொல்லிலும் செயலிலும் இறங்கும் அவனுக்குச் சழிவிரக்கம் இருக்க முடியாது. உண்மையில் உள்ளம் வேறுபனைச்சான்றுவேறுஎன் னும் நிலையே உணர்ச்சி வேறு அறிவு வேறு என்ற நிலையோஅவனிடம் இருக்க முடியாது என்க.



**மூலமனிதர்:-**

உலகவெளியில் ஆவியானது உயிர்களாகப் பரிணப்பட்டது. பரிணமான உயிர்கள் படிப்படியாகப் பற்பல பரிணுமாகித் தரைவாழ் மனிதரானுர் என்பதனை விஞ்ஞானிகளும், ஞானிகளும் விளம்பிய நோக்கில் மேலே நமது காத்தல் தெய்வம் மக்களோடு மக்களாய் மன்னியமுறை (அவதார) மூலமும் விளக்கியுள்ளோம். இம் மனிதர் உயிரியல் (BIOLOGY) அடிப்படையில் மனிதஜின்கள் எனப்படும் கமிற்சுக்கள் பாலூட்டி இனங்களை ஒத்தவையாக உள்ளன. மனித பரிணுமத்தில் சுறுமீன், தவளை, எலி, முயல், குரங்கு முதலியன ஆன்மஇனங்கள் யாவும் ஆன்மவளர்வில் உள்ளுறுப்புக்கள் யாவும் ஒரே வடிவமைப்பைக் கொண்ட பாலூட்டிகள் என்பதனை விஞ்ஞானிகள் ஆராய்ந்து நிரூபித்து உண்மையாக்கினுர்கள். இவற்றை "மம்ல்ஸ்" (MAMMALS) முலையூட்டிகள் குடும்பம் என்பர். இதனை நமது தமிழ்வேதமான திருக்குறள்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற குறளடி மெய்ப்படுத்தும்.

இப்படியாகப் பரிணுமம் பெற்ற மனிதர்கள் ஒரு கட்டமாக ஆதியில் வாழ்ந்தனர். பின்னர் உலகியலில் ஏற்பட்ட பூமி நடுக்கம், கடல்கோள் நிகழ்வுகளால் நிலவியல் மாற்றம் ஏற்பட்டபொழுது அந்தப் பெருங்குழு நாலாபக்கமும் சிதறி ஓடினர். அவ்வாறு ஓடிய மக்கள் ஆங்காங்கே சிறு, சிறு குழுவாகினர். இதேபோன்று குமரிக்கண்ட நிலம் பிரிந்தபோதும் அந்த நிலமக்கள் ஒவ்வோர் பல குழுக்களாயினர். இக் கூட்டத்தினரிடையே தங்களுக்கேற்ப எண்ணப்போக்கால் அறிவு விளக்கத்தால் கலைத்திறன் போன்றவைகள் வேறுபட்டன. தொடக்கத்தில் இக்கூட்டத்தினர் ஊமரும், செவிடரும் போல் உடல் அசைவான செய்கைகளாற் பேசினர், பின்பு சூழ்விலங்குகளின், பறவைகளின் ஓசை, ஒலிகளைக் கேட்டும் நிலப்பகுதி விரிவுகளை உணர்ந்தனர். பறவைகள் காகா என்றதும் காகம் என்றும்; கீ, கீ என்றது கிளி என்றும்; கூ, கூ என்றது குயில் என்பது போன்று பெயரிட்டு அழைத்துச்சீவ இனங்களைக் கண்டனர். இதேபோன்று பொருட்களின் பண்பிற்கேற்ப ஒலி அமைத்து மொழியை ஆக்கிக்கொண்டனர்.

மனிதன் சிறுகுழுவாய் இருந்தும், பூவெளியின் வேறுபட்ட தட்பவெட்ட நிலையும், காடு, மலை, வனந்தரம், கடல் என்ற நிலநிலையும், அந்தக்குழுமனிதனைக்குலமனித இனங்களாக்கின. அவை தோலின் நிறம், மயிரின் தன்மையும் நிறமும், மண்டை வடிவம், மூக்கு, இமை, நெற்றி, கண் ஆகியவற்றின் வடிவ மாற்ற மூலம் கணித்தலாயிற்று. ஆதலின் மனிதனின் ஒரே முறையான அல்லது நியதியான இயற்கை உருவிலே மேற்கூறிய செயற்கையான இயற்கை உருவின் இயைபு பொருந்தலால் பெற்ற மாற்றங்கள்

காலப்போக்கில் பலமுறையான மனிதநிலைகளை ஆன்றோர் கணிக்கலாயினர். இந்தக் கணிப்பே மனிதகூட்டத்தின் வகை என்க. இவர்கள் கூரிய கற்களினால் முரடான ஆயுதங்களைச் செய்து பயன்படுத்திய காலம் பழைய கற்காலம் என்றும்; உலோகங்களான செம்பைக் கண்டு பிடித்துச் செம்பினால் ஆயுதங்கள் செய்யப்பட்ட காலம் செம்புக்காலம் எனவும், தகரத்தைக் கண்டு பிடித்துத் தகரத்தையும், செம்பையும் கலந்து வெண்கலம் என்ற உலோக ஆயுதங்கள் செய்யப்பட்டகாலம் வெண்கலக்காலம் எனவும் அதனை அடுத்துக் கருப்பொன் எனப்பட்ட இரும்புமண் கண்டுபிடிக்கப்பட்டு அந்த இரும்பால் கருவிகள் செய்யப்பட்டும் அந்தக் குலமக்கள் கருவி மக்களாயினர்.

இவ்வாறாக நிறம் உருவம் வேறுபட்ட மனிதர்களை மூன்று பேரினங்களாக ஆன்றோர் அன்று பிரித்தனர்.. அவையாவன "நிக்ராயிடு, மங்கோலாயிடு, கார்க்காயிடு." ஆகும். இந்த ஒவ்வொருவர்க்கத்திலும் வெவ்வேறு பிரிவுஇனங்கள் மனித குல அமைப்பில் இனம் காணப்பட்டன.

நிக்ராயிடு:- ஆபிக்கா கண்டம் பொறிசியஸ் தீவுகளில் உயர்ந்தவர்களும் கட்டையர்களும் உளர். அவர்களில் நீண்ட உருண்டைத் தலையும் (WOOLLY), சுருள்மயிரும் (PRIZZLY), பரட்டைத் தலைமயிரும், வெப்பம் நிறைந்தமையால் கறுத்தமேனியும், சிறியமூக்கும் தடித்து வெளிப் பிதுங்கிய உதடும் அனேகர்க்குண்டு.

மங்கோலாயிடு:- இவ் இனத்தில் சீனர், மங்கோலியர், யப்பானியர், எச்சிமோஸ்சியர், அமெரிக்க இந்தியர், (REDINDIAN) அடங்குவர். இவர்கள் சப்பை முகம், குறைந்த மயிர், தலையில் குத்தான உரோமமும், இலேசான மஞ்சள் அல்லது பளுப்பு நிற மேனியை உடையவர்கள்.

கார்க்காயிடு: இவர்கள் வெள்ளைக்கார இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களில் கறுத்த நிறக் கார்க்காயிடுகளும் உண்டு. இவர்களில் ஒரு சில பழங்குடியினர் அரச மரத்தை வலம் வந்து இறை வணக்கம் செய்பவர்கள் ஆகும்.

இப்படியாக மனித இனங்களை வகுத்து மாறுபட்ட சமுதாய மனிதர்களைப் பற்றி "எல்லா மாந்தர்க்கும் ஆதிபிதா மனுவே" என்று இருக்கு வேதமும்; "நான் உனக்கு ஓதும் மறை பொருள் இதுவே மனிதனைவிடச் சிறந்தது எதுவும் இல்லை" என்று மகாபாரதத்திலும்; கூறப்பட்டுள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" (புறநானூறு 192) அன்று பூங்குன்றனாரும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" (திருமந்திரம் 2068) என்றுதிருமூலரும்; "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள் 971) என்று வள்ளுவப் பெருந்தகையும்; இன்று இவர்கள் இன்னுரை உணர்ந்த உரத்தால் என்றென்றும் தனது ஒற்றை விரலை நீட்டிய படியே "நாம் எல்லாம் ஒன்றே குலம்" என்று காட்டியபடி சிலையாக நிற்கும் அறிஞர் அண்ணாவும், அவரின் வாரிசான அமரர் புரட்சித் தலைவர் பொன்மலர்ச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும் மனிதர் இன நிலையைத் தமிழ் நெறியாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த அறமுறைக் கருத்தினை உலகியல் "யுனெஸ்கோ UNESCO" எனப்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி, விஞ்ஞானம், பண்பாட்டுக் கழகம் இனப்பிரச்சனைகளில் துறைபோகிய நிபுணர்களின் கூட்டறிக்கை பௌதீக, மானிட இயல், பிறப்பியல்புகளை ஆராய்ந்து இன்றைய மனிதர் யாவரும் "ஹோமோ சேப்பியன்ஸ்" (Homo Sapiens) அதாவது "அறிவுள்ள மனிதர்கள்" என்றே வலியுறுத்துவதாயிற்று, ஆகவே நாங்கள் எல்லோரும் அறிவுள்ள மனிதர்களாவோம் என்பது தெளிவு. அந்த அறிவே மனவறிவு என்ற பகுத்தறிவாம் ஆறும் அறிவு என்றும் சுட்டப்பட்டுள்ளது. இந்த ஆறும் அறிவுப் பிரிவில் மனிதரும், தேவரும் அடங்கும் முறையில் நமது முதுநூலாம் தொல்காப்பியம் என்றதமிழ்நூல் விரித்துக் கூறியுள்ளதைத் தமிழ் கற்றோர் நன்கு அறிவர்.



**தொன்மை முதல் மக்கள் தமிழர்:-**

தமிழரின் பழைய வரலாறுகள் ஆதியில் ஆர் இருள் மூடிக்கிடந்தது. நில நூலார், மக்களின நூலார், மொழி நூலார் பழம்பொருள் ஆராய்ச்சியாளர்களின் தொடர்ந்த உழைப்பினால் திராவிடர் என்னும் தமிழ்ப்பெரும் கூட்டத்தினரே உலகவரலாற்றில் பழமையில் முன்நிற்பதைக் காண்க என்பர். இதனை உன்னும் ஒவ்வொரு தமிழ்மகனும் உவகையும் இறும்பூதும் எய்துவான் என்பதில் ஐயம் இல்லை. ஏட்டிலடங்காத பழமை தொட்டுச் சீரும் சிறப்பும் எய்திய நாகரீகத்தினர் எகிப்தியர், சுமேரியர் என்போர் என்ற முடிவில் இருந்தது. அதற்குக் காரணம் அவர்கள் எடுத்திருந்த பழமையான சின்னங்களாகும். ஆனால் தமிழரின் பழையநாகரீகத்தைப் புலப்படுத்தும் சின்னங்கள் அண்மை வரை கண்டு பிடிக்கப்படாமல் இருந்தமையால் தொன்மை வரலாறு மறைவாகவே இருந்தது. இதனாலேயே ஆதியில் தமிழாராய்ச்சியில் இறங்கியோர் தமிழர் இன்னொரு நாட்டிலிருந்து வந்து குடி

Unesco:- United Nations Educational, Scientific and Cultural Organisation.

யேறியவர்கள் என்றும், தமிழ் வேறு மொழிகளில் இருந்து உதித்தது என்றும் சந்தேகிக்க இயல்பானது. 1 9 2 2 இல் மொகஞ்சதரோ, ஹரப்பா என்னும் சிந்துநதிப் பள்ளத்தாக்கின் புதையுண்ட புராதன நகரங்களில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட பழம் பொருள்கள் ஆராயப்பட்ட பின்னரே தமிழரையும் தமிழ் மொழியையும் பற்றிய ஆராய்ச்சி திசைதிருப்பப்பட்டுச் சிந்தனைக்கு எட்டாத பழைய மக்கள் கூட்டம் தமிழர் என்றும்; இவர்களே பிரிந்து சென்று வேறு நாடுகளில் குடியேறி, நாடு நகரங்களை அமைத்த தொன்மை முதல் மாந்தராய் நின்று நாகரீகத்தை முதன் முதவில் உலகிற் பரப்பினர் என்றும் சான்றோர் துணிந்தனர். சுமேரியாரும் தமிழரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என "ஹ்றால்' என்னும் ஆசிரியரின் கூற்றுகும்.

**திராவிடமும் பூர்வீகமும்.**

திரவிடம் என்பது ஒரு மூல மொழியின் கிளை மொழிகளைப் பேசிய மனித இனத்தின் கிளைகளாகப் பிரிந்த அம் மக்களின் கிளை மொழிகளைத் தொடுத்துச் சுட்டும் ஒரு பொதுச் சொல்லாகும். அந்த ஒரு மூல மொழி பழந்தமிழ் மொழியேயாகும். மொழியியலாளர் மொழி வளர்ச்சி காரணமாகப் பழந்தமிழைச் செம்மைப்படுத்திய போது அதனைப் பின்பற்ற முடியாத அறிவு, ஆற்றல் குறைவால் மனம் வேறுபட்டுப் பல பிரிவுகளாகப் பிரிந்தார்கள். அவ்வாறு பிரிந்த அவர்கள் வடமொழியாளர்களுடன் இணங்கி அந்தப் பழந்தமிழை மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்று இன்று பேசப்படும் மொழிகளாக நிலை பெறச் செய்து விட்டனர். இம்மொழிகளை ஆராய்ந்த அறிஞர்கள் பழந்தமிழாம் செந்தமிழுக்கு இசைவாக இருப்பதை உணர்ந்து அந்தந்த தமிழோடு இம் மொழிகளையும் தொகுத்துக் குறித்துக் கொள்வதற்குக் கையாண்ட சொல்லே திராவிடம் என்பது அறிஞர்களின் துணிவான கருத்தாகும். யுபிராதஸ், தைகிரஸ் நதிப்பள்ளத்தாக்கில் வாழ்ந்த சுமேரியரும், திராவிடரும் நாகரீகத்தில் ஒத்தவர்களானர்.

பாரத கண்டமாம் இந்திய கண்டப்பரப்பில் மேற்குஆசியாவிலும் திராவிடத் தொடர்பு மொழிகள் வழங்கின. ஆனட்டோலியாவில் வாழ்ந்த "லிஷயர்கள்" திருமகளை (TRIMMALAI) என்று கல்வெட்டில்" திரமிள (தமிழ்)" என்று வருவதாக அறிஞர் கூற்று. [1]

---

[1] எஸ். இராமகிருஷ்ணர், இந்தியப் பண்பாடும் தமிழரும், பக்கம்: 40—44.

A History of Indian Literature P. P. 30—36. (Herbert —H. Goneedi)



மொசப்பத்தோமியாவில் ஊர் (UR) நிப்பூர் (NIPPUR), ஆசூர் (ASSUR) என்பன தமிழ் "ஊர்" என்ற விகுதிபெற்று வழங்குகின்றன. ஆப்கானிஸ்தானிலும் ஈரானில் உள்ள பீடபூமியிலும் உள்ள பல இடங்களில் ஆதிப்பெயரும் திராவிட மொழி வடிவில் அமைந்துள்ளன. அங்கே "மலே" என்ற திராவிடச் சொல்லும் வழக்கிலுள்ளது.

ஆனட்டோ ஹரியன்களது மொழிக்கும், ஈரானில் காசைட்டுக்களின் மொழிக்கும் 5000 ஆண்டுகளுக்குமேல் நாகரீகம் கண்ட சுமேரியர்"ஈலம்" மொழிக்கும் (ஈலம் ஈழமாய் மாறியிருக்கலாம்) பாலூர்ச்சிஸ்தானின் "பிராஹீயி" என்ற திராவிட மொழிக்கும் ஒற்றுமை உளதென்பர்.

மேற்காசியாவில் திராவிடம் பேசியோர் பாரத நாடு வந்தனர் என்பர். மொசப்பத்தேமியாவின் தென்பகுதியில் 5000 ஆண்டிற்கு முன்னர் தாய்த் தெய்வத்தை "மலேமகள்" என்று வணங்கினர். மலேமகளுக்கும், சந்திரக் கடவுளுக்கும் திருக்கல்யாணம் செய்தனர். இன்றும் இந்நிகழ்ச்சி தென்னட்டுச் சிவன்கோவிலிலும் நடைபெறுகின்றது.

இத்தகைய மிகப் பெரிய நாகரீகப் பரப்பில் சுமேரியர் மொழி, ஜெஃபடிக்மொழி, அரபுமொழி என்ற மூன்று மொழி வழியோரும் வாழ்ந்தனர். மேலும் வடமேற்கு இந்தியாவிலேயே ஆரியர் திராவிடரை முதலில் சந்தித்தனர். பின்னர் வேதாகமத்தில் இராமாயண, மகாபாரத இதிகாசங்களில் ஆரியம், திராவிடச் சொற்களை அமைத்து வளம் பெற்றதால் திராவிடத்தின் தொன்மை புலனுகும். நாமடி ஒலிகள் திராவிடத்தில் சிறப்பு என்பதனுல் இருக்கு வேத ஆசிரியர் திராவிடத்திடமிருந்தே டகர, ணகர மான நாமடி ஒலிகளை அமைத்தனர் என்பது மொழியியலாளர் கருத்தாகும்.

**ஆரியர்**

நார்டிக், ஆல்ப்பைன்திஞர்க் இனமக்கள் ஆரிய மொழியினராய் கி. மு. 9000 ஆண்டளவில் பாரதம் வந்தனர். நார்டிக் இனக்கலப்பு வட இந்தியாவில் காஷ்மீரில் அதிகமாயிற்று. ஆனல் தென்னிந்தியாவில் - தமிழ் நாட்டில் குறைவாயிற்று. இந்தியாவின் தென்நிலமாம் திராவிட நாட்டு நாகரீகத்தைக் கண்ட ஆரியர். தாங்களும் இந்நாட்டு நாகரீகத்தைத் தழுவிப் "பாரதப் பண்பாடு" என்ற ஒன்றை உருவாக்கினர். மயில் களம், வலம், பழம் முதலிய திராவிடச் சொற்கள் ஆரியச் சொற்

களாகி இருக்கு வேதத்தில் காணப்படுகின்றன. "ஜவஹர்லால் நேரு'' இந்தியாவில் ஆரியர் வருகை என்னும் நூலின் 165—172 இல் இவ்விடயம் தொடர்பாக இன்னும் அனேகவிடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரியர்கள் வருமுன் தமிழர்களின் தமிழ்மொழி இலக்கண இலக்கியத் தன்மையதாய் இருந்தது. அரண்மனைகளையும், கோட்டைகளையும், பன்னிலை மாடங்களையும் கட்டி நாகரீகம் உள்ளவர்களாய் வாழ்ந்தனர். இதனைப் பார்த்த ஆரியர்; அவர்கள்மேல் பொறாமை கொண்டு சூழ்ச்சிமுறையாய் எத்தனையோ அக்கிரமங்கள், நரபலிகள் (புரிஷமேதயாகம்) போன்றவற்றைச் செய்தும் தமிழினத்தை ஒடுக்கிவந்தனர். இதனால் இவர்களைத் தமிழர்கள் ''அசுரர்'' என்று அழைத்தனர்.

இவ் ஆரியர்கள் திராவிடரின் நாகரீகத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டதனால் நாற்குலங்களையும் திராவிடர் மத்தியில் உட்புகுத்தினர். அவையாவன ஒழுககமும் அறிவும் படைத்தோர் அந்தணர் என்றும், புயவலியும் துணிவும் ஆற்றலும் படைத்தோர் அரசர் என்றும், திரை கடல் ஓடித் திரவியம் தேடுவோர் வணிகர் என்றும், உழுதுண் பெருக்கும் வல்லோர் வேளாளர் எனவும் வகுக்கப் பட்டனர். இதன் அடிப்படையில் தற்போது பாரதத்தில் மட்டும் முப்பது இலட்சம் பார்ப்பனர் தொடக்கம் ஏழுநூறு இலட்சம் தீண்டாதோர் வரையும் முந்நூற்றுக்கு மேற்பட்ட சாதிகளை உருவாக்கித் திராவிடர் இழிவுபட்டு ஒருவரை ஒருவர் போர் புரிந்தவண்ணம் இன்றும் நாளொன்றிற்குப் பல்வேறுபட்ட சாதிக் கொடுமை வழக்கினால் நீதிமன்றுகளில் திராவிடர் சின்னா பின்னமானது இவ் ஆரியரின் அன்றைய சூழ்ச்சியே காரணமாம். நிற்க; அவ் ஆரிய மக்கள் சிலர் கி. மு 6 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் மல்வத்து ஓயா, கலஓயா மகாவலி ஆகிய ஆற்றங்கரைகளில் வந்து குடியமர்ந்தனர். இவர்கள் இவ்வாறு குடியேறுங் காலங்களில் இலங்கையின் தொன்மையான மக்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் இந்து சமயத்தவராகக் கல்லையும்,மரத்தையும், ஆற்றையும் வணங்கியும் பேய், பிசாசு என்ற தெளிவற்ற நிலையே ஆரியருக்குப் பௌத்த மதத்தை இலங்கையில் பரப்புவதற்கு ஏதுவாக இருந்தது. அத்துடன் அக்காலத்தில் இருந்த அசோகச்சக்கரவர்த்தியும்இதற்கு உதவினான்.

கி. மு. 6000 ஆண்டில் இராமாயணம் ஆரம்பிக்கு முன் குஞ்சரகிரி அகத்திர் (ஆரியர்) ஈழத்தில் குஞ்சர மலையில் ஆரியத்தைப் பரப்பினர். வீபீசனன் போன்றோரை இராமர் பக்கம் திருப்



பித் தசரதச் சக்கரவர்த்தியின் ஒற்றனாக இருந்தார். இரண்டாம் குஞ்சரி அகத்தியன் இலங்கையில் கி. பி. 7ம் நூற்றாண்டு வரையில் ஆச்சிரமம் அமைத்து அந்த ஆச்சிரமச் சேவைகளால் நாகர்களோடு ஆரியரையும் கலந்து கொள்ளும் வகையில் நடந்து சிங்களவர் ஆயினர் சிலர் என்று தமிழ் மொழி இலக்கிய வரலாற்று ஆசிரியர் திரு. இராசமாணிக்கம் கூறுகிறார்.

**சிந்து வெளி:**

கி. மு. 2500 முதல் கி. மு. 1500 வரையில் வாழ்ந்த வட இந்திய நாகரீகம் சுமேரிய, பாபிலோனிய நாட்டுடன் தொடர்பாயிற்று. சுட்டசெங்கற்கள், குயவனதுசக்கரம், மட்பாண்டம், செம்பு வெண்கலப் பாத்திரங்கள், சித்திரங்கள் என்பன மேற்கு ஆசிய நாகரீகத்திலும், சிந்துவெளி நாகரீகம் முதன்மை பெறச் செய்தனவாகும். சாலைகள், வீடுகள், நாற்சார் வீடுகள் (நடுமுற்றம் சுற்றிவர வீடு) வீட்டினுள் குளியலறை, சுட்ட மண்ணிலான நெடுங்குழாய் மூலம் அமைக்கப்பட்ட வடிகால், சாக்கடை, நகர ஆட்சி இவையாவும் எகிப்திலோ மேற்கு ஆசியாவிலோ ரோமானி நாகரீகத்திலோ இல்லாமையால், சிந்துவெளி நாகரீகம் முதன்மை பெறுவதாயிற்று.

தாய்த்தெய்வ வழிபாடு சிந்து வெளியில் இருந்து ''கிரீட்'' என்ற மத்தியதரைக்கடல் தீவுக்கரைபரவியது உண்மையே.[1] இங்கேயே இந்து மதம் சிறப்புப்பெற்றது. இங்கே உள்ள முத்திரைகள் மூலம் சிவவழிபாடும், மூன்று முகங்களுள்ள சிவனை முக்கண்ணனாக வழிபட ஆரம்பித்தனர். சிவபெருமானை வேடர், கமக்காரர், வணிகர் போன்ற பல ரூபங்களில் வணங்கினர் என்பதற்கும் அங்கே கூம்பு உருவில் உள்ள கற்கள் சாட்சியாகும்.

அண்மைக் காலத்திலே மின்மூளை எனப்படும் கொம்பியூட்டர் மூலம் சிந்து சமவெளி நாகரீக லிபி பற்றி ஆராய்ந்து வரும் ஸ்காந்திநேவிய ஆசியக்கல்வி நிறுவனத்தைச் சார்ந்த அஸ்கோ பாபோலா முதலிய அறிஞரும்[2] சிவவழிபாடு, விஷ்ணுவழிபாடு, கணபதிவழிபாடு முதலியன அந்நாகரீகத்திலேயே நிலவியதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சிந்து சமவெளி நாகரீகம் ஆரியர் இந்தியாவுக்கு[3]

1 இந்தியப் பண்பாடும் தமிழரும். பக்கம் – 46

2 News letter of the scandinavian institute of asian studies no 3 jan, 1970 Copenahagen 16

3 Majumdar R.C (Ed) the vedic age, Bomday 1965 P. 164 - 165

வரும் முன்னரே நிலவியதென்று அறிஞர் பலர் கருதுவர். இந்தி
யாவின் முதுபெரும் மொழிநூல் அறிஞரான பேராசிரியர் சுநீதி
குமார்சட்டர்ஜி அலிஸ்கொற்றி ஆகியோரும் வேறு சிலரும் கண
பதி திராவிடத்தெய்வம் என்றே கருதுகின்றனர்.[1]

சிந்துவெளியில் நமது கலை கலாசாரம்உருவான என்பதை
அங்கே கிடைத்துள்ள முத்திரைகளும், நடன மாதின் வெண்கலச்
சிலை, திமில், பருந்து, எருது, எருமை, புலி ஆகியவை 2.5 அங்குல
சதுர முத்திரைகள் இன்றும் அதன் சிறப்பை ஒங்குவிற்கும் சான்
றுக விளங்குகின்றன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா
வில் சிந்துக்களின் நிலைமாறிச் சிந்து இந்துவாகமாறிய நாகரீகத்
தைச் சிந்து வெளி புதைபொருட்கள் விளக்குகின்றன. இந்நாகரீ
கம் 500 கி. மீ நீள 1100 கி. மீ அகலமுள்ள பஞ்சாப்பில் உள்ள
கரப்பாவும், சிந்துமாகாண மொகஞ்சதரோவும் ஒரே அமைப்பில்
உள்ளன.[2]

சிந்துவெளிக் குறிகளில் எழுத்து வரமுன் சில அடையாளங்
களைக் கொண்டு, அதாவது சீப்புக்குறி பெண் என்பதனையும், மீன்
வடிவக்குறி தெய்வத்தையும். திராவிடத்தில் மீன் என்பது நட்சத்
திரத்தையும் குறிப்பதாகும்.

(III) இக்கோட்டுடன் மீன்குறி அருகில் இருந்தால், அது அறு
மீன் ஆகி அவ் அறுமீன் ஆறுமுகி அது மீன்காதன் என்று சோவி
யத் அறிஞர் பொருள் காண்பர். நிறங்களையும் மீனின் பெயர்
கொண்டே அழைத்தனர். செம்மீன்[3] வெள்ளிமீன், பொன்மீன்,
என்று பொருள் கொள்வர். இக்கருத்து மேல்நாட்டு அறிஞர்
''மினிஸ்'' என்பவர் கூற்று. சிந்து இந்துவாகி இந்தியாவாகி இமய
மலையாகி அதிலிருந்து உற்பத்தியாகிய சமயங்கள் கூட்டாக இந்து
மதமாயின. இதன் ஒரு பிரிவே சைவசமயம். எனவே சைவசம
யத்தை மட்டும் இந்துசமயம் என்பது பொருத்தமற்றது. அண்
மைக் காலங்களில் சிந்து வெளியில் நடந்த ஆய்வில் கிடைத்த
மூன்று மனித உடம்புகளைக் கொண்டு சிந்து வெளியின் ஆதிமனி
தர் திராவிடரே என்பதைப் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம்.

1 Allceetty. Ganesa, Oxford univeksitypress. 1936, P. I.
2 இந்தியத் தமிழரும் பண்பாடும், பக்கம் 58
3 செம்மீன்:- செவ்வாய்க்கிரகம், திருவாதிரை (புறநானூறு 60)
மைமீன்:- கருநிறமீன் சனீஸ்வரனைக்குறிக்கும். இவனால் கிருஷ்
ணன் கரு நிறத்தோன் (புறநானூறு 117) கருநிறத்தை
கிருஷ்ணன் வழிபாட்டுடன் ஒன்றிணைந்தவர் ''பின்னிஸ்'' அறிஞர்

# இந்திய நாடும் ஈழமும்

இந்திய நாடு இமயமலைக் கடலினின்றும் வெளிக்கிளம்பி மனிதர்கள் குடியிருக்கத் தகுந்த வசதியுடன் அமைய நிலைத்த பின்னரே அப்பெயர்க்கு உரித்தாயிற்று. இந்த இந்திய நிலப்பரப்பில் முதன்முதல் இமயம் வரை தனது ஆட்சியை நிறுவியவன் சேரனே. இதனால் ''இமயவரம்பன்'' என்றும்; ''வானவரம்பன்'' என்றும்; சேரன்புகழ்மாலை பெறலானான். சிவனதுஅரசேசேரஅல்லதுகேரள அரசு என்பர். இதன் தென்மேற்குக் கடற்கரையில் இருந்ததுடன் நாளடைவில் மலையாளமாக மாறியது. பாண்டியர்க்குஒரு சோடி மீன் கொடியும், சேரற்கு விற்கொடியும் போன்று, சோழருக்குப் புலிக்கொடி சின்னமாக இருந்தது. ஈழத்தில் தமிழர் குடியேறினர் என்றாலும் சேரநாட்டின் கூடிய மக்கள் குடியேறினர் என்பது பெருத்தமானது.


ஈழ நாட்டவர்க்கும் சேர நாட்டவர்க்கும் ஆதியில் இருந்து கலை, கலாச்சார, குடியேற்ற உறவு முறைகள் தொடர்ச்சியாக இருந்து வருவது நாம் அறிந்ததே. இதற்குக் காரணம் இவ் ஈழம் இந்தியாவின் எஞ்சிய வளம் பொருந்திய நாடாகையாலும், ஆசியாக் கண்டத்தில் மையமாக இருப்பதாலும்: வணிகம், போர்க்களம் ஏனைய அனைத்தும் கடல் மார்க்கமாக ஈழத்தை மையமாகக் கொண்டே பாரதம் செல்ல வேண்டியதாலும்: இந்து மகா சமுத்திரத்தில் ஈழம் ஓர் தனிப்பட்ட பெரும் மைய நாடாக அமைந்துள்ளது. கிழக்கு உலக நாடுகளில் இலங்கையாம் ஈழம் எங்கே என்று வினவுவோர்க்கு இந்தியாவுக்குக் கீழ் இந்து சமுத்திரத்தில் உள்ளது என்ற விடையின்நிமித்தம் இது புலப்படுகின்றது. ஆதி நூலாகிய ''இராசாவளியிலும்'' ஈழத்தில் இருந்து சேரநாட்டிற்கு 12000 மக்களை அழைத்துச் சென்றதும் அங்கிருந்து 24000 ஈழத்தில் குடியேற்றியதைத் தொடர்ந்து ஈழநாட்டிலும், சேர நாட்டிலும் மக்கள் மாறி மாறிக் குடியேறியது புலனாகின்றது.
சேர, சோழ, பாண்டிய ஆட்சி தளர்ந்த சமயம் தமிழ்க் குடிகள் ஆகிய யதுக்கள், துருவாசகர்கள், அனுக்கள், பூருக்கள், பரதர், விசுவாமித்திரர்,பத்தர், பலாயணர், அவிஞர், சிவர், விஷநியர் ஆகியோர் சிந்துநாடு சென்று குடியேறினர். கி. மு. 9000 ஆண்டில் காகேசியா மலைப்பகுதியில் இருந்து ஆரியர் வந்து பெரும் சண்டை செய்ததுடன் சிலர் தமிழருடன் கலந்தனர். அப்போது அரக்கர்கள் வந்ததும் ஆரியரும், தமிழரும் சேர்ந்து அவர்களை எதிர்த்து சேரநாடு உட்பட தேசம் 56 கொண்ட நாட்டுற்கு அயோத்தி தலைநகரானது பூர்வீகம்.

இந்த அரக்கர் வம்சத்தில் சோமுகன், தக்கன், இரணியன் அர்த்தசாசுரன், அஞ்ஞுகிலாதன், சங்கிலாதன், கிலாதன், விரோசனன், மாபலி, சர்ச்சன், சகுனி, புலத்தியன், இராவணன், கும்பகர்ணன், விபீடணன் குபேரன், மதுவசிங்கன், கம்சன், சிசுபலன், தந்தவக்கிரன், சராசந்தன் முதலானோர் அடங்குவர். திருமாலின் பத்து அவதாரங்களும் இவ் அரக்கர் ஆட்சியை ஒழிக்கவேயாகும். அப்படி இருக்க கி. மு. 6015ல் 64 ஆரியப்பிராமணர் சேரநாடு வந்தனர்.[1] கி. பி. 4ம் நூற்றுண்டில் 84 குடும்பங்கள் பேலும் வந்து சேர்ந்தனர். 9ம் நூற்றுண்டில் பிராமணர்களும் வந்துகலந்தனர். இவர்கள் சேர்ந்து கலந்தமொழியே மலையாளம் ஆகும். சேர நாட்டவர்க்குப் பெருமாள் பட்டப் பெயரும் உருவானது. 3ம் நூற்றுண்டில் இருந்து கி. பி. 798 வரை 64 கிரமங்களையும் பெருமாள் பரம்பரையினரே ஆண்டனர்.[2] சேர நாடானது. மலையாளம், கொச்சி, திருவிதாங்கூர் எனும்மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய நாடாயிற்று. இம் மலையாள நாட்டார் ஈழத்தில் குடியேறிய இடங்களையும், யாழ்ப்பாணக் குடியேற்ற நூலில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

1. குறும்பர்:- குறும்பாவத்தை (சுதுமலை) குரும்பசிட்டி
2. முற்குகர்:- முகுக்குவிச்சி ஒல்லை, இணுவில், கோவளம், (காரைநகர், பருத்தித்துறை)
3. நாயர்:- பத்திநாயன் வயல் (மல்லாகம்)
4. புலையன்:- மூப்பன் புலம் (ஏழாலை)
5. மலையன்:- மலையன்சீமா (சிறுப்பிட்டி)
6. பணிக்கன்:- பணிக்கன் சாட்டி (வேலணை)
7. தீயன்:- தீயாவத்தை (கோப்பாய்)
8. பட்டன்:- பட்டன்வளவு (வரணி)
9. வாரியார்:- வாரிக்காயர்க்கட்டு (புங்குடுதீவு)
10. வேடுவன்:- வேடுவன் கண்டி (மூளாய், நவாலி)
11. பாணன்:- மாப்பாணன் கலட்டி (கச்சாய்)
12. பிராமணன்.- பிராமணன்வயல் (நாவற்குழி)
13. வேளான்:- வேளான் கொட்டகட்டி (கச்சாய்)[3]
14. நம்பி:- நம்பிரான் தோட்டம்

1 சேரர் வரலாறு பக்கம் 4 - 5
2 M. D. Ragavan — Traditions and Legends of Nagar Kovil Spolio Zeylanica Vol 27 — Part I, P 953
3 வேளான் — திருவாங்கூரில் பறையர் "வேளான்" என்று அழைக்கப்படுவர். (தென்னிந்திய குடிகளும் குலங்களும் ப.16)

தென்னிந்தியா



மேற்கூறிய பதின்நான்கு வகுப்பினரும் யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறி அவ்விடங்களுக்குத் தத்தமது வகுப்பின் பெயர்களை இட்டு வாழ்ந்தனர். மலையான்காடு, அராலி, கோப்டாயிலும், மலையாளன்சீமா அச்சுவேலி, நீர்வேலியிலும், மலையான்ஒல்லை உடுவிலிலும், மலையாக்பிட்டி களபூமியிலும், மலையாளன் தோட்டம் சங்கானை சுழிபுரம், கதுமலையிலும், மலையான் வளவு அத்தியடி, அச்செழுவிலும், மலையாளன்புரியல் காரைநகர், களபூமியிலுமாக மலையாளத்திலுள்ள முக்கியமான சாதிகள் 27இல் 14 சாதிகள் யாழ்ப்பாணத்தில் குடியேறினர் என்பதை ஒல்லாந்தர் எழுதி வைத்த தோம்புகளால் அறியலாம். இவர்களின் இக்குடியேற்றம் பற்றியும் நீலகண்ட சாஸ்திரியார், எமேர்சன் ரெனற் (Sir Emerson Tennent), சரித்திர ஆசிரியர் லிபிரேஸ் (Liveyrus) முதலியோர் எழுதியுள்ளார்கள். பரசுராமரால் குடியேற்றப்பட்ட நம்பூதிரிப்பிராமணர்கள் இம்மலையாளிகளை நாட்டை விட்டு வெளியேற்றினர் என்று கேரள உற்பத்தி நூலில் பேராசிரியர் வீ. ரங்காசாரியரினது கருத்தாகும்.

இராசாவளி என்னும் நூலின்படி கி.பி 2ம் நூற்றாண்டில் தீசன் மகன் 1ம் கஜபாகு (கி.பி 113—135) நீலன் என்னும் சூரன் ஒருவனோடு கடல்மார்க்கமாக ஈழத்தில் இருந்து சோழ மன்னனை அடைந்து, தந்தையார் காலத்தில் ஈழத்தில் சிறைபிடித்த 12,000 பேரையும் தரும்படி கேட்டான். அதற்கு அவன் மறுப்புத்தெரிவிக்க கஜபாகுசினங்கொண்டு மண்ணையும், இரும்புக்கதையையும் பிழிந்து நீர் எடுத்துக்காட்டினான். நீலன் நகர்ப்புறத்து யானைகளை ஒன்றுடனொன்று மோதி நகரை அழிக்கலானான் இவன் வலிமை கண்ட சோழன் 12,000 பேருடன் வட்டியாக மேலும் 12,000 பேரைச் சேர்த்து சமாதானமாகக் கொடுத்தான். இவனே பத்தினித் தெய்வத்தின் அணிபூண்ட நான்கு தேவாலயங்களுக்கேற்ற சிலைப்புச் சின்னங்களையும் கொண்டு வந்தானென்று கூறுகிறது. இம் மக்களே சாரசியப்பட்டு—நானூறு என்பன போன்ற பெயர்களிலிருந்து இதனை நாம் அறியக்கூடியதாகவுள்ளது. இக்காலத்திலேயே செங்குட்டுவனால் வஞ்சியில் பத்தினித் தெய்வத்திற்கு ஆலயம் அமைக்கப்பட்டது. இதனால் இச்சேர நாட்டுமக்கள் ஈழத்திற்கு குடியேறியதும் புலனாகிறது.

யாழ்ப்பாணத்தில் நாகர்களும் கர்ண பரம்பரையினரும் ஆட்சி கி.பி 55ம் ஆண்டளவில் முடிவடைந்ததாகும். இதன்பின் குடியேறிய படைவீரர்களான வன்னியர்களின் ஆதிக்கம் வளர்ச்சி அடையத் தொடங்கியது. ''மறவர்கள்'' வடக்கிலும், தென்கிழக்கிலும் பாணர்கள் தென்மேற்குப் பகுதிகளிலும் ஆட்சி பீடங்கள்



அமைத்தனர். அவை ''வடமராட்சி'' (வடமறவர்ஆட்சி) ''தென்மராட்சி'' (தென்மறவர் ஆட்சி) என்னும் பெயர்களைப் பெற்றன பாணர்கள் அமைந்த ஆட்சிப்பீடம் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, தமிழ் நாட்டில் உள்ள முக்கியம் வாய்ந்த [1] 48 சாதிகளில் 34 சாதிகளைச் சார்ந்த படைவீரர்கள் யாழ்ப்பாணத்திற் பல பாகங்களிலும் அதாவது மல்லாகம் தொடக்கம் வடமாகாணத்தின் ஏனைய முழுப்பகுதிகளிலும் குடியேறினார்கள் என்பதைத் தோம்புகளைக் கொண்டு [2] ஊகித்து அறியக்கூடியதாக உள்ளது.

சிங்கள அரசர்களிடமிருந்த இக் கூலிப்படைகள் [3] (சேர நாட்டுப் போர் வீரர்கள்) விலகிப் பிற்காலத்தில் யாழ்ப்பாணம் வந்து குடியேறினர் என்பதை M.D. ராகவன் நாகர்கோவில் வரலாற்று ஆய்வில் விளக்கியுள்ளார். இக்கருத்துக்களையே (யா.கு. பக்கம் 8—12) திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் அச்செழு, இடைக்காடு, கரம்பொன், கிளாவி, குதிரைமலை, கொல்லம், கோவளம், மாந்தை, பாலக்காடு முதலியஇடங்களும் துரும்பு, வண்ணான்பணம், தம்பி, அப்பச்சி, பறைதல், குட்டி, ஓம் என்ற மலையாளச் சொற்களும், பெண்வழிச் சொத்துரிமை, பெண்மார்பின் குறுக்கே சேலைகட்டல், மாதத்துடக்கிற்கு மாற்றுடை அணிதல், சம்பந்தக் கல்யாணம், கட்டுக்கல்யாணம், குருவில்லாக் கல்யாணம், ஆண்கள் வேட்டிகட்டும்முறை, கஞ்சிவடித்துச்சோறு சமைத்தல் நாற்சார் வீடு, சங்கடம்படலை, வேலி அடைத்தல், ஒழுங்கை அமைத்தல் முதலிய பழக்கங்களும், மலையாளத் தொடர்புடையன என்றார். [4] ஆதலால் இங்கு வாழ்ந்த மென்னிலமக்களில்

---

யாழ்ப்பாணக் குடியேற்றம் — பக்கம் — 9
சீமா:— எல்லை, மலையாள அகராதி, Gundert.
வில்லன்:— சேரன், இலக்கியச் சொல்லதிகாரி.
1. யா — பக்கம் —23
2 தோம்பு:— தோம்பு என்பது ஊர்களிலுள்ள காணிகளின், பெயரும், பரப்பும், உடையவன் பெயரும், சாதியும்' அரசிறை வரியும், கடமைகளும், ஊழியமும் குறிக்கப்பட்ட ஏட்டின் பெயராகும். இது கி. பி. 1702 இல் எழுதபட்டது
3 யாழ்ப்பாணக் குடியேற்றம்—பக்கம்—10
4. யா.கு — பக்கம் — 14

ஆதியில் இனவேறுபாடுகள் இருந்ததில்லை. வடபகுதி கற்பூமியாக இருந்தமையால் கடல்வளத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டு இருந்தனர் எனலாம்.

மலையாளிகள் வந்ததன் பின்பே இனவேறுபாடுகள் தோன்றின. மலையாள மக்கள் ஐயனாரையே [ஐயப்பன்] அதிகம் வணங்குவார்கள். இந்தியாவில் ஐயப்பனார் என்பதும் ஐயனாரையே குறிக்கும். 1981 ஆம் ஆண்டில் காரைதீவில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த முத்திரையில் இருந்தகுறி மலையாளக்குறி ஒன்று அது கோவேந்த கோவிந்த என்ற கருத்தை உடையது என்றும் கூறப்பட்டுள்ளது [1] இப் புதைபொருள் கி.பி 2ம் நூற்றாண்டினதாகு மென்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும். சேரநாட்டு நாணயங்கள் இங்கு புழக்கத்தில் இருந்தது என்ற மூதாதையர் கூற்று அதற்கு அரணாகும்.

மலையாளம் களப்பிரர் [கி.பி 3 - 6] சாளுக்கியர் [கி.பி6] பாண்டியர் மகமதியர் [கி.பி 1768 - 1793] முதலியோரது ஆளுகைக்குட்பட்டபோதும் மலையாளத்தில் இருந்தும் மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறினர் இக் குடியேற்றங்களுக்கு முன்பே வட மாகாணம் முழுவதிலும் திறமையாலும் விடாமுயற்சியாலும் வெடியரசன் முக்குகர் தலைவனாகவும் தரைப்படை கடற்படை முதலிய படைகளுடன் சிறந்த அரசனாகவும் விளங்கினான் என்றும் சோழ அரசன் அவன் வலிமையைக் கண்டு பொறாமை அடைந்து மீகாமனை அனுப்பிப்போர்புரியச் செய்தான் என்றும் இதனால் முக்குவர்களின் அநேகர் மட்டக்களப்பிற்குச் சென்று பாணகை, வலையிறவு முதலிய இடங்களில் குடியேறினர் என்றும் யாழ்ப்பாணக் குடியேற்ற நூலிலும் கூறப்படுகிறது.

**இராமர் அருளிய முதற் சேதுபதி குகன்:**

இதன் இயற்கை அமைப்பாலும் இராமாயணவரலாற்றாலும் சிற்பம் மலிந்த கோவில்களாலும் அவ்வூர் மக்களின் ஆற்றலாலும் எந்நாட்டவரும் இராமேஸ்வரத்தினை வ போற்றிப் புகழ்வர். '' தமிழ் கண்டதோர் வையை '' யாறு கடலை முகப்பது இந்த மாவட்டத்திலேதான். இதனால்இதனுக்கு முகவை என்ற பெயரும் நிலவி வருகிறது. தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் ஐவகைநிலமும் பாரிவள்ளலின் வரலாறும், பிள்ளையார் பட்டியும், திருவுத்தர

Ragupathy, p., ''Indus Brahmi Seal'' Letters to the Editor, The Hindu, 9th July 1981; 1



கோச மங்கையில் உள்ள ' மரகத நடராஜர்'' திருஉருவமும், எல்லாம் பல்வேறுஅரசர்கள், சிற்றரசர்கள் கலைஆர்வத்தையும் தமிழ் மக்களின் கலைத்திறனையும் உலகிற்கு உணர்த்துகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையகம் மதுரையே! இம் மாவட்டத்தின் பரப்பளவில் 4 / 3 பங்கான 3,708 சதுரமைல் இராமநாதபுரமே.

தமிழர் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் பரவர்களும் மேலும் பல்வேறு சமூகத்தவர்களும் ஆதியில் வாழ்ந்ததுடன் அங்கே முத்துக் குளிப்பதும், சங்கு குளிப்பதும் அவர்களின் முக்கிய தொழில் என்பதனை ''மார்க்கோபோலோ'' எடுத்துக்காட்டியது டன் தொண்டி [1] என்ற துறைமுகத்தாலும் பெயர் பெற்று விளங்கி நின்றது. இராமாயணகாலத்திலும் இந்தியஇலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது சோழர் இலங்கையை ஆண்டபோது இராமநாதபுர மாவட்டத்திலும் சோழர் செல்வாக்கு பரவியிருந்தது. சோழ - பாண்டிய போரில் பாண்டியர் இலங்கை அரசின் உதவியைப் பெற்றதால் சோழர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரப் பகுதியைப் பிடித்துக் கொண்டனர். இதனால் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து வந்த நகரத்தார்களும் முக்குலத்தோர்களும் [2] இராமநாதபுரத்தில் குடியேறினர். இலங்கையர் ஆட்சி கி.பி 1170 இல் பராக்கிரமபாகு; பாண்டிய அரச பராக்கிரமனுக்கு இலங்கையில் இருந்து பெரும்படையை அனுப்பினான். இப்படை இராமேஸ்வரத்தினில் கந்தமாதனபருவத்திற்கு அருகே புலியடிச் சாலையில் இறங்கி சைவப்படை வீரர்கள் சிவன் ஆலயத்தையும், சிங்களப்படைவீரரான லங்காபுரதண்டநாயகன் பௌத்த கோயிலையும் அமைக்க வழி கோலினர்.

கி.பி 1331 இல் மதுரையைத்தலை நகராகக் கொண்டு முஸ்லீம் ஆட்சி ஏற்பட்டு கி.பி 1371 இல்மதுரை அல்தான்களின் ஆட்சி சரியத்தொடங்கி கி.பி 1393 இல் அழிந்து நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. சேதுபதிகளும், நாயக்க மன்னர்களும் நலன் கருதிக் காடுவெட்டியும், சாலைகள் அமைத்தும், சத்திரங்கள் நிறு

தொண்டி:- ஒரு துறைமுகம் — விலையுயர்ந்த ஒருவகை முத்தின் பெயர், அதனால் இவ் முத்துக்களை ஏற்றுமதி செய்த துறைமுகம் எனக் காண்க.

முக்குலத்தோர்:- சங்கு குளிப்போர், முத்துக் குளிப்போர், வேளாண்மை செய்வோர்.

சேது:- செய்கரை, கடலைத் தூர்த்து ஆக்கும்கரை, இலங்கை இந்தியாவை இணைத்த அணை, — சிவத்த நிறம்.

வியும், பாதுகாப்பிற்காக கோட்டைகள் கட்டியும், மறவர் தலைவரே ஆளவேண்டும் என்ற முத்துக் கிருஷ்ணன் நாயக்க மன்னன் முடிவுப்படி கி.பி 1605 இல் சடைக்கத்தேவர் உடையான் சேதுபதிஎன்றபட்டம் பெற்றுன். இராமபிரான் இலங்கைசெல்வதற்கு இவ்விடத்திலேயே பாலம் அமைத்ததனுல் அவ்விடத்தைச் சேது என்றழைத்து அந் நாட்டுக்குத் ஒரு தலைவனுகக் குகனை சேதுபதியாக நியமித்திருந்தார்.

காசியில் இருந்து இராமேஸ்வரத்திற்குப் புனிதயாத்திரை செய்யும் பத்தர்கட்குப் பலநூற்றுண்டு காலமாக அன்னசத்திர மடங்கள் அமைத்து அவ் அறச்சாலைகள் சிறப்பாக இயங்க மானியமாய் சிற்றூர்களை அமைத்தும்; பாண்டிய மன்னர்க்குத் தேவைக் காலங்களில் பெரும் படைகளை அனுப்பியும்; இவர்கள் தங்கும் இடத்தைப்போர்வீரர் இராமநாதபுரம் எனஅழைப்பதனுல்தமிழ் நாட்டிலும், மலாயாவிலும் இப்பெயர் உள. சேதுபதிகளில் 1674 — 1710 வரை கிழவன் சேதுபதி குறிப்பிடத்தக்கவர். இவர் "ருஸ்தம்கான்" என்பவனை முறியடித்து மதுரையைக்காத்துப் பரராசகேசரி என்றழைக்கப்பட்டார். 1754 இல் டச்சுக்காரர்கள் கீழ்க்கரையில் பண்டகசாலை அமைக்க அனுமதி பெற்று படைத்தளம் அமைத்ததனுல் டச்சுக்காரர்களுடன் போர்புரிந்து கைதிகளாக்கி பின் மன்னிப்பின் பேரில் விடுதலையும் செய்தார். பின்பு முத்துராமலீங்கச் சேதுபதி பட்டத்திற்கு வந்தார்.

கர்நாடக நவாமுகமதுஅலி கிழக்கு இந்தியக் கம்பெனியாருடன் தனது செல்வாக்கால் இராமநாதபரம், சிவகங்கைச் சீமைக்காகத்தஞ்சை அரசர்களுடன் போரில் வெற்றியீட்டி1772-1780 வரை எட்டு ஆண்டு இராமநாதபுர ஆட்சி அவனிடம் உட்பட்டது. இதனுல் ஓர் ஆண்டிற்கு 2,20,000 ரூபா சீமை நவாபுகளுக்குக் கப்பம் கட்டினர்.

---

இச்சேதுபதி கட்டுரையை எழுதிய ஆசிரியர் "சோமலே" கிழக்காசிய நாடுகளுக்குப் இன்னும்பல வெளிநாடுகள் பயணம் செய்து அனுபவம் பெற்று பலஆராய்ச்சி நூல்களைத்தமிழில்எழுதி புகழ்கொண்டவர். Pen என்ற ஆங்கிலவெளியீட்டில் தமிழ்நாட்டு இலக்கிய வளர்ச்சிகுறித்து அடிக்கடி இவர் எழுதிவருவதனை யாவரும் அறிவோம். தமிழ்மாவட்டங்களின் வரலாறுகளைத்தொகுப்பு நூலாக எழுதியுள்ளார்,அதில் இராமநாதபுரத்தைப் பற்றிய இராமன்அருளிய நூலில்,இருந்து சிறு சுருக்கத்தை இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

சேதுபதியில் வாழ்ந்தமக்கள் அநேகர் முத்துக்குளிப் போரும், சங்கு குளிப்போராகவும் இருந்ததனுல் இவர்களின் உறவுமுறையும் வலுப் பெறுகின்றது.



**விடுதலை இயக்கம்:**

சுதந்திரப் போராட்டத்தை மருது சகோதரர்கள் தமிழ் மணம், தெய்வநெறி, தேசியஆர்வம், வீர உணர்ச்சி போன்றவற்றுல் ஆங்கிலேயரை எதிர்த்து காளையார் கோவிலில் போராடியதும் இராணிவேலு நாச்சி அம்மையார் காட்டிய வீரஉணர்ச்சியும் பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டியவை. சேதுபதிக்குச் சொந்தமான இராமலிங்கவிலாசம் என்னும் மாளிகையில் கலெக்டர்ஜாக்சன் கட்டைப்பொம்மனைக் கைதுசெய்யமுற்பட்டபோது. கட்டைப்பொம்மன் தன் உடைவாளை உருவி அங்கிருந்த நவீன ஆயுதப்படையையும் வென்று ஊமைத்துரையுடன் வெளியேறிய வீரச்செயலும் புலனுகிறது. அத்தோடு ஆங்கிலேயர் ஆட்சியிலும் அதன்பின்பும் நிறைந்த தமிழ் அறிவும், தேசிய உணர்ச்சியும் வீர முழக்கமும் ஊட்டியவரான பசும்பொன் முத்துஇராமலிங்க தேவரும் இந்நாட்டவரே. பாரதியாரின் புகழுக்குக்காரணமாகஇருந்த சிவாவும் இந்நாட்டவரே. 1942 ல் வெள்ளையனே வெளியேறு என்றபெரும் கிளர்ச்சியை ஏற்படுத்திக் காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் வந்தே மாதரம் என்றவர்களை இயந்திரத் துப்பாக்கியால் பொலிசார் சுட்டும், உடமைகளுக்குத் தீவைத்தும் சேதப்படுத்தியபோதிலும் அவர்களின் வீர உணர்ச்சி தணியவில்லை.

**தமிழ்ப்பணி:**

1785 ல் காலமான பெரும் புலவர் சிவஞான சுவாமிகளும் இவர் மாணவர் சோமசுந்தரம்பிள்ளையும். சரவணக்கவிராயரும், இராமானுசக்கவிராசரும், விசாகப்பெருமாளையர், திருத்தணிகைச் சரவணபெருமாளையர், டாக்டர் ஜி யு. போப் போன்று நூற்றுக்கணக்கானோர் சேதுபதிகளால் ஆதரிக்கப்பட்ட புலவர்களாவர். சங்ககாலத்தில் கணிஞன், பூங்குன்றனுர் போன்ற புலவர்களும் இந்நாட்டவரே. பாரதியார், நாமக்கல்கவிஞர் இராமலிங்கம் உட்பட தமிழ்நாட்டுக் கவிஞர்களும் இந்நாட்டவரே. மொழி, கலை, கலாச்சாரத்தை 1939ம் ஆண்டிலேயே கம்பன்கழகம் போன்ற கழகங்கள் மூலம் பரப்பி வந்தனர்.

**கப்பலோட்டிய தமிழர்:**

வ. உ. சிதம்பரனுர், சுதேசி நீராவிக்கப்பல் கம்பனியைப் பதிவுசெய்தபோது பாண்டித்துரைத்தேவர் ஒருலட்சம் ரூபாவுக்குப் பங்குப்பணம் செலுத்தி அவருடைய முயற்சியை ஆதரித்தார். அப்போது இலங்கைத் தமிழர்களும் நகரத் தொடர்புடையவர்களாய் ஒருசிலர் ஓரளவு பங்குப்பணமும் பெற்றுர்கள்.

1797 ல் இராமநாதபுரத்தில் ஜாக்சன் என்ற வெள்ளைக்காரன் கலெக்டராக நியமிக்கப்பட்டான். அப்போது ஏனைய பாளையக்காரர்கள் பயந்து ஆங்கிலக் கம்பனியாரின் ஆட்சியை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டிய கட்டப்பொம்ம நாயக்கர் வரிசெலுத்தவும் ஆட்சிக்கு உட்படவும் மறுத்துச் சிவகங்கையை ஆண்ட சின்னமருதுவும் பெரியமருதுவும் உயிர் நண்பர்களாக 1801 ல் சுதந்திரப் போரின் கடைசிக்கட்டம் கிளர்வு. பிரான்மலை, சிங்கம் புணரி, நந்தம் ஆகிய இடங்களில் நடந்து இறுதியாக ஊமைத்துரையும் மருது சகோதரர்களும் துரோகிகளின்துணையால் திருப்புத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். இதனால் மங்கலேஸ்வரிநாச்சியார் காலமான 1803 ல் இராமநாதபுரம் வெறும் ஜமீன் ஆனது.

பாஸ்கரஸ் சேதுபதி: என்ற இவர் ஆங்கிலேயரினால் ராஜா என்ற பட்டத்தைப் பெற்று ஆங்கிலக் கல்வி பயின்ற முதற்சேதுபதியானார். 1889 முதல் 14 ஆண்டுகள் சேதுபதியாக இருந்தார். இந்து மதத்தின் சிறப்பை உலகுக்குப் பரப்ப எழுந்த சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பியவரும் இவரே.

சிவகங்கையின் வரலாறு 17ம் நூற்றாண்டில் சேதுபதிகள் ஒரு பிரதிநிதியை நியமித்துக் காளையார்கோவில், சிவகங்கைப் பகுதிகளை ஆண்டுவந்தார்கள். இவர்களுள் கன்றுமேய்ந்த உடையத்தேவரும் சிறந்த வீரர். இதன்பின்னர், சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்கள் கட்டப்பொம்மனுக்குப் பாதுகாப்பு அளித்ததனால் கம்பனியாரால் தூக்கிலிடப்பட்டார்கள். 1910 ம் ஆண்டில் வைகைநீர் கிடைக்கப்பெற்றது. இங்கு முக்கியதொழிலாகிய சங்குகுளிப்பதில் 3000 க்கு மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். இச்சங்கு வளையல்களும மோதிரங்களும் வங்காளத்தில் விற்கப்பட்டதனால் இதன் சிறப்புப் புலனாகும.

சமயம்: இமயம் முதற் சேதுவரை, காசி — இராமேஸ்வரம் என்பதனால் சமயத்தின் சிறப்பிடம் புலனாகிறது. தேவாரப் புகழ்பெற்ற பதின்நான்கு ஸ்தலங்களில் கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புனல்வாயில், திருஆடானை, திருக்கானப்பேர், திருப்பூவணம், இராமேஸ்வரம், திருச்சுழியலும் இதில் அடங்கும். வைஷ்ணவத் தலங்களும், இராமேஸ்வரம், திருப்புல்லணை, அரியக்குடி, திருக்கோட்டியூர், ஸ்ரீவில்லிபுத்தூர். போன்றவை தொன்மைப் புகழ்பெற்றவை. மணிவாசகரும் இதன் எல்லையான திருவாதவூரில் பிறந்து உத்தரகோச மங்கையைப் பாடியதும் சிறப்புற்றதே. முக்குலத்தோர்முதுகுளத்தூர், அரிப்புக்கோட்டை, இராமநாதபுரம், பரமக்குடி, திருவாடானை போன்ற கிராமங்களில் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட முக்குலத்தோர் உளர். இவர்களைச் "செந்தமிழ் நாட்டுப்பொருநர்" என பாரதியார் இவர்களின் வீர மரபுபற்றிச் சிறப்பித்துள்ளார். மேலும் தன்மானம் மிக்கவர்களாகையால் 19 ம் நூற்றாண்டிலும் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட பெருமையும், வீரச்செயல்களும், வீரஉணர்ச்சியும் கேட்போர்க்கு மயிர்க் கூச்சலூட்டும்.



ஆற்றலும் ஆண்மையும் பெற்ற இக்குலத்தவனான "குகனுக்கு" இராமபிரான் முதன் முதலில் சேதுபதி என்ற பட்டத்தைச் சூட்டியதாக வரலாறு உண்டு. பாண்டிய மன்னன் சேதுபதிக்குக் கடற்கரையோரமாகக் காடுகளையெல்லாம் வழங்கினான். இச்சேதுபதியின் கொடிகளில் கருடன், அனுமன் உருவங்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. இராமேஸ்வரக் கோவிலின் பட்டயங்களிலிருந்து இவர்களின் வீரமும், புகழும் தெளிவாகும். ஆங்காங்கே ஏற்படும் வழக்குகளுக்கு அம்பலப் பட்டம் பெற்றவர்கள் நீதிபதிகளாக இருந்து நீதி வழங்கி வந்தனர். இவர்களுள் கோபுர வேலையில் தேர்ச்சிபெற்ற சிற்பிகள், கைவினைஞர் பலரும் அடங்குவர்.

**துறைமுகங்கள்:**

சேது சமுத்திரம் என்பது இராமநாதபுரத்தின் நாக்குப் போல இலங்கையை நோக்கி நீண்டுள்ளது. வடக்கே பாக்கு வளைகுடாவும், தெற்கே மன்னார் வளைகுடாவும், தொண்டி, மண்டபம் தேவிபட்டினம், கீழ்க்கரை, பாம்பன் ஆகிய துறைமுகங்களைக் கொண்டனவாகும். பெரும்கப்பல்கள், தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு இலங்கையைச் சுற்றி மொத்தம் 7 5 0 மைல்கள் சென்று சென்னைத் துறைமுகத்தை அடையும். இதற்குக் காரணம் இக்கடல் ஆழமற்றதே. இங்கே 1913ம் ஆண்டு, பாலத்தினூடு கப்பல் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக, ஒருகண் 40 அடி நீளத்தை உடையதாக 145 கண்களைக்கொண்ட பெரும்பாலத்தை அமைத்துள்ளனர். இப்பிரதேசம் 160 மைல் (272 கி.மீ) நீளமான தமிழ் நாட்டில் வேறெங்கும் காணப்படாத கடற்பிரதேசத்தை உடையதாகும்.

இப்படியாகப் புகழ் பெற்ற சேதுபதி மகாராஜாக்களாக இருந்தகுகன் குலத்தவர்கள் கங்கைக் குகன் குலத்தைச் சேர்ந்தவர்களென்றும் இவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த கங்கைக் குகனுடன் வந்து பாண்டி நாட்டின் காடாகஇருந்த இப்பிரதேசத்தை

பாண்டியனிடம் பெற்று நகராக்கி ஆண்டனர். மேலும் கலிங்க வம்சத்தவனாகியமாகனும் கன்னடநாட்டைஆட்சிசெய்தான். அத்தோடு இலங்கைச் சிங்களஅரசைக் கைப்பற்றமுயற்சி செய்தான் இவன் கங்கவம்சத்தவனாகும். பாண்டிநாட்டில் சேது என்னும் பிரிவை ஆட்சி செய்த கங்க குலத்தவரே யாழ் அரசைக் கைப்பற்றினர். இவர்கள் கலிங்க தேசத்தில் இருந்தே கன்னடத்தில் குடியேறி ஆட்சி செய்தனர். இது கி.பி 1213 ஆம் ஆண்டு ஆகும் என்று, திரு. கொடிற்றோன் இராசரத்தினம் ம.அ.இ.ச என்னும் நூலில் பக்கம் 96 இல் குறிப்பிட்டுள்ளார். இக் கருத்தும் மேலும் ஈழத்தில் வாழுகின்ற குகன் குலத்தவர்சட்கும் சேதுபதியில் இருக்கும் குகன் குலத்தவர்கட்கும் நெருங்கிய உறவு உண்டென்பதை ஈண்டும் வலியுறுத்துகிறது. மேலும் சேதுபதி குகன் குலத்தவர் சின்னம் கருடன் கொடியும் அனுமன் சின்னமும்போல் ஈழத்து வெடியரசனும் தான் புகுந்த நாட்டுக் கொடியாம் கருடனும் விஸ்னுவின் சின்னம் அனுமன்போல் சங்கு சக்கரத்தையும் சின்னமாகக் கொண்டு ஆட்சி செய்தமைபால் இருநாட்டு உறவும் உளங்கொண்டு இந்நூலிற்கு விஸ்னுபுத்திரர் என்ற தலைப்பைத் தாங்கினோம் குகனும் வெடியரசனும், கங்கைக்குகனும் சேதுபதி மகாராசாக்களுக்குள்ள உறவுமுறைகள், ஒருமைப்பாடுகளை விளக்கவே இக்கட்டுரை நான்முகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதனை வாசகர்கள் கவனத்திற்குக்கொண்டுவருவதுடன் இந்தியஇலங்கை தேசத்தவர்களும்தொடர்ந்து திருமணங்கள் குடியேற்றங்கள்செய்துவந்த செய்திகளை இந்நூலின் காரைநகர் பந்தியை நோக்குக.

## மென்னிலமக்கள்

மென்னில மக்கள் வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்திலும்; கடலும் கடல்சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்திலும் வாழ்த்துவந்தார்கள் என்பதைப்பத்துப்பாட்டு என்ற நூலில் சிறப்பாகக் காணலாம்.

அட்டதிக்குப் பாலகர்களில் தோன்றியகடல் தெய்வமாகக் கருதப்படும் வருணனினது குலத்தில் பிறந்த மென்னில மக்கள் தலைவனாகிய அதியரசனுக்கு மச்சகாந்தி என்ற அழகிய மகளும் மச்சகந்தன்என்ற இளவரசனும் இருந்தனர். புராணங்களை எழுதிய பராசரமுனிவர் ஒரு காலத்தில் மகாபுருடன் தோன்றுவதற்குரிய நட்சத்திரச் சேர்க்கையை உணர்ந்தார். அப்பொழுது அவருக்கு உலகநலன் கருதி இந்த நேரத்தில் கருத்தரித்து ஒரு ஜீவன் தோன்றுவதற்கான ஒரு மனநிலையோடு ஆற்றங்கரையில் இருந்த மச்சகாந்தி மீது காதல் கொண்டு அவளை மணம் முடித்தார் இம்



மணப்பேற்றினால் வியாசர் என்ற ஆண்பிள்ளை பிறந்தது. பராசமுனிவரே ''மச்சகாந்தி'' என்றபெயரைப் ''பரிமளகாந்தி'' என்று மாற்றிய நிலையில் அப்பெண் பெயராக நாட்டினார்.

வலைஞன் மகளின் மகனான் (பேரன்) வியாசர் இருக்கு, யசுர் சாமம், அதர்வனம் என்ற நான்குவேதங்களை வகுத்ததுடன் மகாபாரதம்உட்பட இதிகாச புராணங்களையும் இயற்றியவர். இவரே பிராமணர்கள், சத்திரியர் [அரசர்கள்] வைசியர், (செட்டி) சூத்திரர், (துரும்பர் அற்ற ஏனையோர்) என்ற வர்ணநிலைகளை வகுத்து அமைத்தவர் வேதத்தை வகுத்தமையால் இவர்' வேதவியாசர்'' என்ற சிறப்பு பெயரையும் பெற்றவர்.

வேதவியாசர் தாயின் ஆணைப்படி அம்பிகையை மணந்து திருதராட்டிரனையும், பாண்டுவையும் பெற்றார். இவர்கள் பரம்பரையினர் தாங்கள் பிடித்த முதல் மீனைச் சிறுவனுக்குக் காணிக்கையாகப் பூசை செய்வதாக நினைத்தும் மீனைத் தெய்வமாகமதித்தும் கடலில் மீண்டும் விட்டு வந்தனர். இப்படியாக இருக்கும் நாளில் உமாதேவியார் தனது பூர்வ சாபத்தால் அதியரசனுக்கும் மனைவி வருணவல்லிக்கும் மகளாய்த் ''திரைசேர்மடந்தை'' என்றநாமத்தோடு பிறந்தாள்.

முருகன் பெருமகரமாகி (மீனாகி)ப் பிறந்து கடலைக் கலக்கி அவ்வூர் மீனவருக்குத் தொல்லை கொடுத்தார். சிவபெருமான் அம்மீனை மடக்கிப் பிடித்தமையால் வலைஞன் திரைசேர்மடந்தையாம் தம்மகளைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்து மாமன் ஆனார்.

இன்றும் மென்னிலமக்கள் சிலர் சைவசமயச் சிவன் நாட்கள் மட்டுமன்றி ஏனைய நாட்களிலும் மீனைப்பிடித்தாலும் தாம் புசிக்காது தாவர போசனங்களுடன் உணவு உண்டு சிவபத்தியுடன் இன்றும் வாழ்கின்றனர் என்பது இப்புராண உண்மையை நினைவூட்டுகிறது. இவ்வாறு இவர்களின் சிறப்பு, சமயம், சமூகம்என்ற முறையில் தலைப்பட்டு ஓங்கி வளர்ந்தமையை ஆன்றோர் மேலும் எண்ணுவார்களாக. அன்றியும் இவர்கள் ஆதிகாலத்தில் கப்பல் ஓட்டிகளாகவும், பெரும் வணிகர்களாகவும், பிறருக்குச் சிறை அற்ற சுதந்திரமான தொழிலையே செய்தோராகவும் வாழ்ந்தனர் வெடியரசனும் அவன் சந்ததியினரும் முத்துக் குளிப்போர்களாக இம் மென்னில மக்கள் ஆவர்.

**கங்கைக் குகன்:**

தேவர்களும், இருடிகளும், இராமஇலக்குமணர்கள் ஸ்நானம் செய்த கங்கைக்கரையில் ''சிங்கேரி'' என்ற நகரில் ஆயிரமாயிரம் ஓடத்தின் நாயகனுகவும், பர்வதம் போன்ற தோள்களும், கையில் வில்லும், கொம்பு துருத்தி பம்பை முதலானவைகளுடன். யானைகள் போலக் கிராதகர் அனேகம் பேர் சூழ்ந்து வர மகாபலமான தொடைகளும், நீண்ட உயர்ச்சியும், செந்தோல் வஸ்திரமும், புலிவாற் கச்சையும், காலிற் செருப்பும், பயப்படத்தக்க குரலும், பலகரையாற் கட்டிய வீரகண்டா மணியையுடைய காலும், இருளைப் போன்ற நிறத்தையுடைய தலைமயிரும், யாழிபோல நெறித்திருக்கின்ற புருவங்களும், பனங்காடுபோல அவருடைய முன்கை மயிர்களும், அரையிலே வாளும், பாம்பைப்போல பார்வையும். பைத்தியக்காரன் போல வார்த்தையும், வச்சிராயுதம்போல இடுப்பும், கோபமில்லாமல் இருக்கின்ற கண்களில் நெருப்புப்பொறி பறக்கின்ற பார்வையும், நீண்ட உருண்ட திடகாத்திரமான மேனி அழகையுடைய குகன்; அன்னங்கள் விளையாடுகிறதும், தாமரை மலர்களாலே அலங்கரிக்கப்பட்ட; கயல் மீன்கள் கண்களுக்கு நாணி வில்லுப்போல தாமரை மலர்கள்மேலே பாய்ந்து விழுகின்ற அழகினையுடைய கங்காநதிக் கரையிலே ஸ்ரீராமனைக் காண வேண்டும் என்ற அவாவினுல், கையிலே தேனும், மீனும் காணிக்கையாகக் கொண்டு கூடவந்த கிராதகரையெல்லாம் அப்பால் நிறுத்தி நிஷ்கபடமான மனதோடு இராமன் முன் நிற்க; ஸ்ரீராமனும் அவருக்கு அனுமதி கொடுக்க இராமனைக் கண்களால் தரிசித்து மனது களித்து தலைமயிர்கள் எல்லாம் பூமிமேல் படிய சாஷ்டாங்கமாகச் சேவித்து எழுந்திருந்து பயபக்தியுடன் நின்ற குகனைப்பார்த்து, ஸ்ரீராமபிரான் இருக்க இடம் கொடுக்க இருக்காது நின்றபடியே, சுவாமி! தங்களுக்குத்தேனும், மீனும் கொண்டு வந்து இருக்கிறேன்; தங்கள் திருவுளம் என்னவோ என்ருன்.

ஸ்ரீராமன் அங்கிருந்து ரிஷிகளைப் பார்த்து அன்புடன் கொண்டு வந்தது எதுவாய் இருந்தாலும் அதை அமிர்தத்திலும் அதிகமாய்க் கொள்ளவேண்டும் என்று கூறி நாம் அங்கீகரிக்க வேண்டும் என்ருர். இதன் பின்பு ஸ்ரீராமர் குகனை வீடு சென்று நாளை வரும்படி பணிக்க, குகனும் தேவரீரை விட்டு நான் செல்லமாட்டேன் என்று கூற ஸ்ரீராமர் அவனின் அன்பை அவதானித்து நீ எனக்கு அன்பான தம்பிதான் அப்படியே நம்மிடத்தில் இரு என்று ஆக்கியாபித்தார். குகன் சாஷ்டாங்கமாக தண்டம் சமர்ப்பித்துமிகுந்த சந்தோசத்துடன் தனது சேனைகளை அப் பரணசாலையைச் சுற்றிக் காவல் புரியும்படி கூறி அதிகயாக்கிரதையுடன் இடியுடனே கூடியிருக்கும் மேகம் போல விழித்திருந்தான். அப்பொழுது குகன் மனது வெம்பிப் புளுங்கிக் கண்களில் கண்ணீர் வரத் தம்பியாகிய இலட்சுமணன் நிற்பதையும் ஸ்ரீராமன் படுத்திருக்கிற எளிமையையும் பார்த்து அருவியோடு இருந்த பர்வதம்போல நின்றபடி இருந்தான். சூரியன் தேவலோகம் முதலான உலகங்களில் இருந்து பூமியில் உதயமாகிஞர். உடனே குகன் தன்னை விட்டு ஸ்ரீராமர் செல்லப் போகிருர் என்பதை அறிந்து கண்களில் ஜலம் தாரை தாரையாக வழியமிகவும் பதைத்து சாஷ்டாங்கமாக அவர்களைச் செபித்துக் கொண்டு, சுவாமி! நாங்கள பொய் என்கிறதறியோம். தாங்கள் இட்ட ஏவலைச் செய்யத் தக்கவர்கள் நீங்கள் எங்கள் நகரத்திலேயே இருக்கவேண்டும். தேன், தினை தேவர்களுக்கும் யோக்கியமான பொருள்யாவும் இங்குண்டு. துணைக்கு நாங்கள் உள்ளோம் காவலுக்கு எனது படை உண்டு; விளையாடுவதற்கு ஆரணியமும், ஸ்நானத்திற்கு கங்கையும் இருக்கின்றது. எனது சரீரம் இருக்கும் வரைக்கும் இங்கேயே வாழவேண்டும் என்றும்; தனது சேனைகளின் திறமையான வஸ்திரங்கள் போலத் தோல்களையும், மஞ்சம் போல பரண்களையும், திறமையான மாளிகையும் அமைக்கும்படி கட்டளையிட்டு, தேவலோகத்தில் இருக்கும் வஸ்துக்களைத் தேவை என்ருலும் அதிசீக்கிரத்தில் கொண்டுவரத்தக்க 15000 தேவர்களுக்குச் சமமான பலசாலிகள் தங்களுடைய ஏவலுக்கு இங்கு ஆஜராகஇருக்கிருர்கள் தாங்கள் மீண்டும் ஒரு நாள்ஆவது எங்கள் குடிசையில் இருந்தால் அதைப்பார்க்கிலும் மிகுந்த பாக்கியம் வேருென்றுமில்லை என்று குகன் சொன்ஞன். ஸ்ரீ ராமர் தனது இலட்சியத்தைக் குகனுக்கு விளக்கி அவனின் அன்பிற்கு அடிமைப்பட்டவராய் அக்கினியில் விழுந்த மெழுகுபோல இருவரும் ஒருவரை ஒருவர் பிரிவதைஉணர்ந்து ஒடத்திலே படைகள்சூழ அக்கரையை அடைந்தனர்.



ஸ்ரீராமர் தனது சினேகிதரான குகனைப் பார்த்து சித்திரகூட பர்வதத்திற்குப் போகும் வழி கேட்க; குகன் காய்கனி கிழங்கு, தேன், தினை தேடவும் இங்கு அரண் அமைக்கவும் இப்பாதைகளை நன்கு அறிந்தவனும் நானே! தங்களை ஒரு நொடிப் பொழுதாகிலும் பிரியாமல் தங்கள் பாதாரவிந்தச் சாயலிலே காத்திருப்பேன். நான் ஒன்றிற்கும் பயப்படுகிறவன் அல்ல. தாங்கள் இங்கு தங்கிஞல் எனது சேனைகளையும் சேர்த்து நீங்கள் அரசமைக்கலாம். என் முன்னே எந்த எதிரிகள் வந்தாலும் மீண்டு போகமாட்டார்கள். அல்லது அடியேனும் தங்களுடனேயே வருகின்றேன் இதைக்கேட்ட ஸ்ரீராமர் ஓ! குகனே நீ என் பிராணன் உன்னுடைய தம்பி இலட்சுமணன் இந்தப் பெண் உனக்கு மதனி நாங்கள் இதுவரை நால்வராக இருந்தோம் இன்று முதல் உன்ஞேடு ஐவர் ஆனேம். இராட்சியமெல்லாம் உனதே நீ செய்கின்ற

படிக்கு நடக்கிறவன் நான். நான்தான் நீ உன்பேர்சைத் தட்டுகின்றவன் நான் அல்ல. ஆனால் வடக்கே திரும்பி வருகிறபொழுது உன்னிடத்திற்கு வருகிறேன். அயோத்தியாபுரிக் காரியத்துக்கு உன் தம்பி இருக்கிறான். உன்னுடைய பந்து ஜனங்கள் எல்லாம் என் பந்து ஜனங்கள் அல்லவா நீர் என்னுடன் வருவதானால் இவர்கள் உம்மைப் பிரிந்து கிலேசப்படலாமா. இவர்கள் என்னுடைய பந்து ஜனங்கள் ஆனபடியால் நீர் எனக்காக இங்கேயிருந்து எனக்காக இவர்களைக் காத்து, இரட்சித்துக் கொண்டிருப்பீர் என்றார். அவரது அன்பு வார்த்தையைத் தட்டாதவனாய் துயரத்தோடு வாழ்ந்தான் என ஸ்ரீமத் கம்பராமாயாணம் அயோத்தியா காண்டம் கங்கைப்படலத்தில் இருக்கும் குகனின் வரலாற்றைத் தந்தோம்.

இதனால் குகனின் தோற்றத்தையும், குகனின் படைபலத்தையும் அவனுடைய நண்பர்க்குச் செய்யும் கடமைகளையும் இதனால் ஸ்ரீராமருக்கு குகன் நண்பனாக ஆனதையும் இலட்சுமணனுக்கு மூத்த சகோதரனாக ஏற்றுக் கொண்டதையும் நால்வருடன் ஐவராகக் குகனையும் சேர்த்துக் கொண்டதையும் நீ: என்பிராணன் என்பதனாலும், நான்தான் நீ என்றதனாலும், உன் பேர்சைத் தட்டுவதில்லை என்ற ஸ்ரீராமபிரான் கருத்தினாலும், உன் இனஜன பந்துக்களெல்லாம் எனது இனஜனப் பந்துக்களே என்று கூறியதனால் நீரோடு விளையாடுகின்ற குகனும், அவன் வம்சத்தாரும் நீரிலே நித்திரையாகும் நாராயணனுடைய அம்சமாகிய ஸ்ரீராமருடைய உறவும் இரண்டறக் கலந்துள்ளதனை இராமாயணத்தின் இக்கதையின் மூலம் அறியகிடக்கின்றது. இக் குகத்தலைவனுடைய வழிவந்தோரே இப்போது வாழுகின்ற முற்குகர்கள் என்ற கர்ணபரம்பரைக் கதைகள் உள. (முன்+குகன் வழித்தோன்றல் =முற்குகர் என்பாரும் உளர், முற்+குகன்)

---

குகனை வேடன்என்று இடைக்காலப்புலவர்கள் பொருமையில்கூறுபவர்களும் உளர். வேடனாய் இருந்தால் இராமருக்கு இறைச்சியும் தேனும் அல்லவா கொடுத்திருப்பார். மீனும் தேனும் கொடுத்ததனாலும் 15000 வீரர்களை ஒத்த படைவீரர்களைக் கொண்ட தலைவனாகையாலும் ஓடங்களை உடையவனாகையாலும் குகன் வேடன் அல்ல என்பது புலனாகும். வால்மீகி எழுதிய இராமாயணத்தில் இராமர் குகன் அன்புடன் கொடுத்த மீனைப் புனிதமாகப் புசித்தார் என்று குறிப்பிட்டுள்ளதுடன், கம்பர் திராவிட வாசகர்க்கேற்றவாறு "உண்ணாது உண்டதாக நீ ஏற்றுக்கொள்" என்று கூறியுள்ளார்.

# ஈழநாடு

குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடை நிலமாம் பேராற்றின் வள நிலமான பெருவள நாடுக் குறை நிலமே நம் ஈழநாடு "தமிழ் மண்டலங்கள் ஐந்துந் தத்துவமாமே என்று திருமூலர் நம் ஈழத்தைச் "சிவபூமி" என்றார். ஈஸ்வர விக்கிரகங்கள் நிறைந்தகோவில் இலங்கியதால். இலங்கை என்றனர்சிலர். இரத்தினக் கனிகளும். பொன்கனிகளும், நிறைந்ததனால் இரத்தினபுரி, பொன்னகர் என்றனர். இன்னும்சிலர்; இலங்கை—ஈழம்—பொன் சொர்ணம் — பொன்நாடு, சொர்ணத்தரை, சுவர்க்கபூமி என்றெல்லாம்நாம் ஈழநாட்டைப் புகழ்ந்தோர் பலர். இவ்ஈழநாடு எமது இயற்கைத் தாயகம் ஆகும். ஆனால் இந்நாட்டில் பற்று அற்றுக் கூக்குரல் இடுபவர்கள்குழப்புவோர் "இரவல் தாயகத்தில்" வந்து குடிகொண்டவர்களாகக் கருதுவதில் ஐயம் இல்லை. அவர்களிடம் தாய்நாட்டுப் பற்று ஏது. ஈழம் பொன் கொண்டிழைத்த நாடு என்றார் கம்பர்.

ஈழநாட்டின் மூலப்பெயர் "எல்" என்பதாம் "எல்" என்பது ஞாயிற்றையும் இலங்குதலையும் குறிக்கும் தமிழ்ச் சொல். "எல்லே" இலக்கம் என்பது ஞாயிற்றையும் இலங்குதலையும் குறிக்கும் தமிழ்ச்சொல். "எல்லே" இலக்கம் என்பது தொல்காப்பியச் சூத்திரம். அராபியா, பபிலோனியா, சின்னஆசியா முதலிய இடங்களில் "எல்" சம்பந்தமான பெயர்களை நூற்றுக்கணக்கான இடங்களில் காணலாம். தைகிரஸ், யூபிரட்டீஸ் ஆறுகளின் கரையில் எல்லம் என்னும் நாட்டின் பெயர்களும் உள. அந் நாடுகளில் உள்ள அரசர்களும் தங்கள் பெயர்களுடன் "எல்" என்னும் புனைபெயரைச் சூட்டி வந்தனர். பாரசீய நாட்டுக் குடியேறிய மக்களும் இவ் "எல்" மக்களே.

ஈழநாடு என்ற இலங்கைத் தீவானது பிகிற்றி அல்லது இராசரட்டை அல்லது கீழ் வேந்தர்நாடு (மகயா, மாபா), உறுகுணை என்று மூன்று பிரிவுகளாகப் பகுக்கப் பட்டிருந்தது. இதற்கு முற்காலங்களில் உறுகுணையையும் மலைநாடு என்னும் மலயத்தையும் கேள்விப்பட்டிருக்கிறோம். (இக்கேள்விப்பகுதி இராவணன் ஆட்சிக்கால நிலப்பரப்பாகலாம்) இக்காலப் பகுதிகளில் வடநாடு, தென்நாடு, கீழ்நாடு, மேல்நாடு ஆகியவற்றையும் கேள்விப்படுகின்றோம். இவை தலைநகரான அனுராதபுரத்தை வைத்துக் கொண்ட தொன்றாகும் இப்போதுள்ள வடமத்தியமாகாணத்தின் உண்டாய தென்னாடு என்பது மாயரெட்டைஎன்று சிறந்து ஒரு

இளவரசனின் பகுதியானது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் உறுகுணை இரண்டு பகுதியாக பிரிக்கப்பட்டது. தீவின் வடபகுதி அரசன் நாடாக இருந்தது. அதன் மையம் முதற்கண் அனுராதபுரத்திலும் பின்னர் பொல நறுவையிலும் இருந்தது. இப்பகுதி அரசனின் நேரான ஆட்சியில் அடங்கியிருந்தது

இவர் தொலமியின் பழைய நாட்டுப் படத்தில் கங்கை நதி (மகாவலிகங்கை) கடலில் விழும் இடத்தோடுள்ள கீழ்க்கரையோரம் மிகத்தெளிவாக அறியக் கிடக்கிறது. ஆனால் வடமுனை என்பது இப்போதுள்ள தலை மன்னார் ஆகும். இதிலிருந்து " தலகோரி" என்னும் வணிகப் பட்டினம் அதிக தூரத்திலில்லை. இது பிற்காலத்தில் "மகாதித்த" அல்லதுமாந்தோட்டை எனப்பெயர் கொண்டது. மலய அல்லது மலைநாடு பெயர் மாற்றமின்றி அப்பெயராலேயே காட்டப்பட்டுள்ளது. அங்குள்ள இரு நகரங்கள் "அனுராக்கிரமன்" அல்லது அனுராதபுரம் எனப்படும் இராசநகரம் என்பதும், மகாவலிகங்கையிலுள்ள தலைநகர் மாக்கிரமன் (சங்கதம், மகாக்கிராமம்) என்பதுமாகும். மாக்கிரமன் என்பதே இப்பொழுது அளுத்துநுவரை எனப்படும் மகியங்கனை என்பர் சிலர். இது பொலநறுவை வழி மாகந்தோட்டைக்குப் போகும்போது அண்மையில் உள்ளதாய் இருந்திருக்கலாம் " புரம் — நகரம்" என்னும் சொல் முடிவுக்குப் பதிலாக கிராமன் – கிராமம் என்னும் முடிபு கவனத்திற்கு உரியவை. தொலமியின் காலத்துக்கு முன்னர் இலங்கையின் மேற்குக் கடற்கரை யோரம் ஆபிரிக்கா வரை பரந்திருந்தது எனக்கருதப்பட்டது என்பர். இன்னும் இந்தியாவை நோக்கி வடதிசையால் ஓடும் "சித்திரா" எனப் பெயருள்ள இன்னொன்றும் உள்நாட்டில் உள்ள பெரியதொரு குளம் "மெகிசபா" என்பதிலிருந்து ஓடுவனவாகக் கூறப்பட்டுள்ளது. இந்தியாவிலே இந்நாட்டிற்கு மிக அன்னியதாய் உள்ள முனையானது நான்கு நாள் கப்பல் பிரயாண தூரத்தினைக் கொண்ட சோழநிலப்பரப்பிலுள்ள இராமேசுவரம் ஆகும். இதைத் "தொலமி சொறை" என்பர்.

கி.பி 60 இல் பெரிப்புளூஸ் என்னும் நூல் ஆசிரியரும் இலங்கையைப் பற்றி எழுதியுள்ளார். இந்திய இலக்கியங்களுள் இலங்கை பற்றிய முதல் நூல் கௌடில்யன் (சாணக்கியன்) எழுதியதே. அதே காலத்தில் வாழ்ந்த "மெகஸ் தனியஸ்" என்ற கிரேக்க அறிஞரும் இலங்கையையும் துறைமுகங்களையும் பற்றி விரிவாக எழுதியுள்ளார். ஈழத்து வாணிகம் என்ற வணிகர் சங்கங்கள் பிராமி கல்வெட்டுக்களில் ஈழம் மிகவும் பழையகாலத்தில்



இருந்தே கடல் வணிகத்தை மேற்கொண்டிருந்தது என்றும் கடல் கடந்து பிறநாடு சென்று மீண்டமையும் வடக்கே உள்ள கடல்களில் சங்குகளும், முத்துக்களும், நிறைந்து காணப்பட்டதென்பது குறிக்கப் பட்டுள்ளதுடன் சாணக்கியன் தனது பொருள் நூலிலும் எழுதியுள்ளார். இவ் உலகளாவிய வணிகத்தில் இங்கிலாந்திலும் இலங்கையிலும் ஆங்கில ஆக்கிரமிப்புக்கு முன் உலகவணிகம் செய்த மொழியும் நம் தமிழ் மொழியே.

மேலும் ஆதியில் சாவகதேசத்தில் காணப்பட்ட பழைய நூல் ஒன்றில் ஈழத்தின் ஆதி மக்கள் சாவகம் முதலிய நாடுகளில் குடியேறினர் என்பதனாலும் அராபியரும் குடியேறியதாலும் மூதோர் சிவனொளிபாதமலையில் ஆதாம், ஏவாள்மூதாதையரின் இருப்பிடம் என்பதாலும் இவ் ஈழநாட்டிலேயே ஆதிமனிதர் உற்பத்தியாகி ஏனைய நாடுகளிற்கு பரவினர் என்பது புலனாகிறது மேற்கில் ஓர் எல்லம் இருப்பது போல, கிழக்கிலும் ஓர் எல்லம் இருப்பதை அறிகிறோம். பாரசீய எல்லத்தில் குடியேறிய மக்கள் செமித்திய ஹமித்திய சாதியினரல்லாதவர்கள் என்றும், மண்டையோடு மொழி ஆதியன திராவிட மக்களுடையன போல் விளங்குகின்றன என்றும் வரலாற்றாளர் கருத்து. இவ் ஈழநாட்டில் இருந்த ஆதிக் குடிமக்கள் இயக்கர், நாகர் தேவர் எனப் பகுக்கப் பட்டனர். இதனால் ஆரியர் வட இந்தியாவிலிருந்தும் தமிழரில் சிலர் கூலிப்படையாகவும் சிலர் ஆக்கிரமிப்புப் படைப் போர் வீரர்களாயும், வியாபாரிகளாகச் செட்டிகளும், பிரித்தானிய ஆட்சியில் தோட்டத் தொழிலாளிகளாயும் மேலும் பறங்கியர், இஸ்லாமியர், ஒல்லாந்தர், பிரித்தானியர்களும் குடியேறினர். இதனால் தொன்மை மக்களாம் நாகர்களின் ஆட்சி படிப்படியாய் வீழ்ச்சியுற்றது. 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி சிங்களவர் 11.0, இலங்கைத் தமிழர்கள் 1.8, இலங்கைச் சோனகர்கள் 1.1 இந்தியத் தமிழர்கள் 0.8, ஏனையோர் 0.1 மில்லியன் ஆக உள்ளனர்.

**நாகர்:**

இலங்கைச் சுருக்க வரலாற்று ஆசிரியர் "எச். டபிள்யு. கொடிறின்றன்" அவர்கள் சிங்கள மக்கள் குடியேறியவர் என்று குறிக்கப் பட்டுள்ளதால்; இலங்கையாம் ஈழத்து மூலமக்கள் யார் என்பதை நோக்குகையில் முதற்கண் நாகரும் அதனை ஒட்டி இயக்கரும் என்பது வரலாற்று தேர்வில் பொருந்துவர். இதில் மூலமக்களில் முன்னவரான நாகர் பொருந்தும் முறையைத் தென் இந்தியாவின் பெருவளநாட்டின் ஆற்றிடைக் குறைநிலமாக நின்றபோது அங்கு வசித்தமக்கள் நாகர் என்பர். பேராறுபெருகிப்பாயும் பெருநாடு, வன்னிலம், மென்னிலம் என்ற இரு வகுப்பில் வன்னில

மான மலையும் காடும் மலிந்த நிலப்பரப்பிலே பசுக்கள் என்ற கரந்தைகள் நிமித்தம் போலிப்போர் என்ற பூசல் நிகழும். இப்பூசலில் இயைந்த கரந்தை (பசு) வீரர் மீட்ட கரந்தையோடு தமது நில முன்றலில் ஒன்றாய்க் கூடி மது உண்டு உறவாடுவர். அந்த மது உண்டு உறவாடலில் தமது பூசலில் ஏற்பட்ட நகுதலுக்குரிய மோதல் நிகழ்வுகளைப் புலப்படுத்தி நகுதல் புரிவர். இந்த நகுதற் செயல்நிலையால் பசுக்கன்று; (நகு என்ற அடிச்சொல்லால் முதல் நீண்டு) "நாகு" என்றும் அந்த நாகு கன்றோடு கரந்தைப்பசுவையும் மீட்கும்திறனால் ஆகுபெயர் முறையில் [1] நாகு பசுவை மீட்போர் "நாகர்" (நாகு+அர்) என்றும் ஆயினர் என்று விளங்குவர்.

ஆரிய மொழி பேசிய மக்கள் வடபுலம் இருந்து ஈழம் வருங்கால் நாகரும், இயக்கரும், தேவரும் ஈழத்தில் வாழ்ந்தனர் என்று மகாவம்சம்கூறும். பண்டைத்தமிழரின் அகநானூறு, புறநானூறு என்ற சங்ககால இலக்கியங்களில் இளநாகர், முடிநாகர் போன்று இருபது நாகர்கள் புலவர்களாக விளங்கியதைகாட்டுவர் அறிஞர். பாண்டியன் அரசுசெலுத்தும் காலங்களில் படைவீரரும், கொடைவள்ளலுமாக நாகர் என்ற இன மக்கள் வாழ்ந்தனர் என்று புறநானூறு கூறுகின்றது. கள்ளர், மறவர், பரதவர்களுடன் ஒளியரும், அருவாளரும் நாகரே என்றார் யாழ்நகர் அறிஞர் கனகசபை அவர்கள், இதனைப் "பல்லொளியர் பணிவு ஒடுங்க தொல்அருவாளர் தொழில் கேட்ப"[2] என்று கரிகால் பெருவளத்தானுக்கு உருத்திரன் கண்ணனார் குறிப்பிட்டுள்ளதை அவர் காட்டுவர். "எச் டபிள்யு. கொடிறின்றன்" பழைய கதைகளின்படி இந்நாட்டின் பழங்குடிகள் இயக்கர், நாகர், தேவர் என்று இலங்கைச் சுருக்க வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். தேவர் என்பது வடஈழத்து நாகராயுமிருக்கலாம். ஈழத்துமுடிநாகஅரையர் இவர்கள் ஈழத்தையும் அதனை அடுத்த பாலதீவுகளையும் ஆண்ட அரச குடும்பத்தினர். முடிநாக அரையர் என்னும் சொல் முடிநாகராயர் என்று வழங்கப்பட்டது. இந்தியாவில் நாகர்என்பார் பதினெண் பழந்தமிழ்க் குடிகளில் ஒரு பிரிவான மக்கள் ஆகும். இக் குடியின் வழிவந்த "வளைசணன்" என்பவனுடைய மகள் பீலிவளையைக் கிள்ளிவளவன் என்ற சோழனும் அதற்கு முன் நாகர் நாட்டு அரசிளங்குமாரி நாக கன்னிகையை அர்ச்சுணனும் மணம் புரிந்த செய்தி யாவரும் அறிந்ததே.

1. புலவர் திரு நா. சிவபாதசுந்தரனார் மணற்றியின் தொல்புரம்
2. இந்தியப் பண்பாடும் தமிழரும் பக்கம் — 22 (பட்டினப் பாலை — 274)



நாகஅரச பரம்பரையினர் தங்கள் தலையில் நாகபடத்தைப் பொன்னால் செய்து தரித்துக் கொள்ளும் வழக்கம் உடையரானதால் முடிநாகஅரையர் என்ற பட்டத்தைப் பெற்றார். முடிநாக அரசர்களால் புதுப்பிக்கப்பட்ட தமிழ் நாட்டுக் கோயில்களில் ஐந்து தலைநாக படத்தை உடைய கிரிடங்களை அணிந்த பல விக்கிரங்களை நாம் பார்க்கலாம். மூலஸ்தானத்தில் உள்ள அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்திற்கு இன்றும் ஐந்து தலை நாக ஆபரணம் சாத்துவதை வழக்கமாக உள்ளதை நோக்கின் நாகர்கள் தென்னாட்டில் பல சிவன்கோயில் பணிகள் செய்துள்ளார்கள் என்று அறியக்கிடக்கிறது.

முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவர் தலைச்சங்கத்தில் (கோல் எழுத்துக் காலம் கி.மு 14004 — கி.மு 9564 வரை) புலவராக அங்கம் வகித்தார் நாகஅரயர் என்பது நாகராயர் என்று மருவி வழங்கலாயிற்று. முடிநாகர் என்பது தமிழ்நாட்டில் ஏற்பட்ட பதினெண் மக்கள் பிரிவுகளில் ஒன்றாகும்! ஈழத்தில் இருந்து தலைச்சங்கத்திற்கும், திருப்பரங்குன்ற தென்மதுரைச் தமிழ்சங்கத்திற்கும் கி.மு 1915 ஆம் ஆண்டளவில் முதலாவது புலவராக ஈழத்து முரஞ்சியூர் முடிநாக ஆரையர் தேர்ந்தெடுக்கப் பட்டதால் ஆதியில் ஈழத்து நாகரின் சிறப்பு போற்றப்பட்டதாகும். புவனேய கயபாகு என்னும் கலிங்கக் குமரன் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை வந்ததும், நாகர் குலத்துச் சிற்றரசன் மந்திரி கொட்டாயன் என்பவன் தடுத்து நிறுத்த அவன் அரசனையும் ஏனையோரையும் வெட்டிக் கொன்று இராஜ்யத்தைக் கைப்பற்றினான். ஈழத்தில் ஏற்பட்ட கடல் கோள்களால் ஈழம் அழிந்து பெரும் தொகையானோர் வடநாடு சென்றனர்.

ஒளி நாகன் மாடையன் அழகிய சோழ
அமர் நாட்டு மூவேந்த வேளாளன்
ஒளி நாகன் நாராயணன்
இந்து புரவான சங்கநாகன்
உச்சன் கிழவன் முகுளி நாகன்[1]

இதிலிருந்து ஒளியரே நாக மரபினர் என்பதும் கி.பி 11ம் நூற்றாண்டிலும் வலிமையோடு இருந்தனர் என்பதும் விளங்கும். தவிரச் சங்கநாகர், முகுளிநாகர், என்ற பிரிவினரும் இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது. இலங்கை கடல்கோளின் பின்பு

1. தலைச்சங்கம் பக்கம் — 53
2. இந்தியப் பண்பாடு பக்கம் — 22

இந்நாகர்கள் பாரதம் சென்று ஈழத்து வேளாளர்கள் என்று பதினெண் குடிமக்களில் அமைந்து அழைக்கப் பட்டனர். எஞ்சிய முகுளி நாகரும் சங்சநாகரும் வடஈழத்தில் முத்துக் குளிபோராகவும், சங்கு குளிப்போராகவும், இருந்தனர் என்பது நம் முன்னோரின் கருத்தாகும். சேனனது அனுராதபுர ஆட்சியைச் சேரநாகன் முப்பது வருடங்களாக ஆட்சி புரியுங்கால் கலிங்கதேசத்து மதிவாகாகுணன் மகன் இரஞ்சகன் 300 படைத் துணைவருடன் படகில் வந்து சிங்களத் தோப்பணையில் இறங்கி நாகரைச் சிநேகிதம்பிடித்துச் சமாதானப்பட்டு இலங்கையைப் பன்னிரண்டுபாகமாகப் பிரித்து எட்டுப் பங்கை விஜயதூபத்தோடு சோத்தும் ஏனைய மன்னர், வட ஈழபகுதியோடு நாகருக்கு அளித்தும் திறையின்றி ஆளக் சட்டமையிட்டான். இதனாலேயே நயினாதீவு தலைநகராக நாகர் ஆட்சி வட முனையில் வலுப்பெற்பறதாகும்.

சேரநாயக்கன் கி.மு 54 லிலும், மகாநாகன் கி.பி 9திலும் இளநாகன் கி.பி 38லும் ஈழத்தை ஆண்டனர். நாகர்கள் ஈழத்தில் நாகரீகமுள்ள ஆட்சியும் வாழ்க்கையும், தமிழ்ப் புலவர்களாகத் தமிழ்நாடும் சென்று புலவர்களாய் நிலைத்தும் தமிழ் கூறும் நல்லுலகமறிய வாழ்ந்தனர் என்பதை இக் கட்டுரை மூலம் அறிந்தோம். இவர்கள் கி.பி 5ம் நூற்றாண்டுவரை வடஈழத்தை ஆண்டனர் என்று ஆசிரியர் அருள் செல்வநாயகத்தின் கருத்துமாகையால் இவர்களே விஸ்ணு புத்திரரின் மூதாதைகளான ஆதிக்குடி நாகர்களின் வழித்தோன்றல் என்றும், முகுளிநாகர்களே முத்துக் குளித்தனராகையாலும் முற்குகர் என்று அழைக்கப்பட்டனர் என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் உள. இதனை ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. வெடியரசனும் அவன் சந்ததியினரும் முத்துக் குளித்தனர் எனக் கடலோட்டுக் காதை கூறுகிறது.

சலி பிறந்தெண் ணூற்றுண்டில் கருதிய இலங்கை தன்னில்
வலியவரியக் கரோடு கலந்தனர் மாவொன்றாகி
ஒலிவளருகந் தமென்னும் நகரத்திலுறைந் துவாழ்ந்து
வலியராயரசு செய்து மறைமுறை வளர்த்தார் நாகர்

நாகரே ஆயிரத்து நானூறு ஆண்டு மட்டும்
பாகமாயிலங்கை யாளபரு நேர்குலத் துச்சிங்க
வாகுவிதவத் தாயீன்ற மகவெனும் விசயன் தந்தை
வேகமே சண்டு நொந்து விறல் நாகர் மறைந்தொளிந்தார்
(மட். மா. பக்கம் 10)

---

நாகர்: இந்தியாவில் ஈழ நாட்டுவேளாளர் என்று தமிழ்ச்சங்கங்களின் வரலாறு பக்கம் 97 இல் குறிக்கப்பட்டுள்ளது.



**இயக்கர்:**

ஈழநாட்டை கி.மு 543 இல் விஜயன் என்னும் அரசனின் ஆட்சிக்குப்பின் இந்த ஈழநாட்டின் தென்பகுதி சிங்களநாடாயிற்று. வங்கத்து அரசனுக்கும் கலிங்கத்து அரசிக்கும் சுபதேவி பிறந்தாள். அவள்குசராடம் என்னும் லாலா நாட்டில் மிருகமனிதனைக் கூடியே சிங்கவாகு தோன்றினன். இவன் தன் தாயும், சகோதரியையும் மனிதர் வாழ் நாட்டிற்கு அழைத்துவரவே மனித சிங்கமானது குடும்பத்தினரைத் தேடி நாட்டை அழித்தது. இதனால் தகப்பனைக் கொன்று சிங்கபாகு அரசனாக்கப்பட்டுச் சிங்கபுரத்தை நிறுவினான். இவனின் மகனானவிஜயன் துஸ்டனாகையால் சுபாரக துறைமுகத்தில் இருந்து நண்பர்களுடன் ஈழத்தை அடைந்தான். அங்கே இயக்கர்களில் ஒருவரான குவேனியைக் காமக்களத்தியாக்கி இவளின உதவியுடன் அங்கே வாழ்ந்த இயக்கரை அழித்துச் சிறிவத்து என்னுமிடத்தை ஆட்சி செய்தான். இவனுக்கு முடிசூட எண்ணிப் பாண்டிய அரசிளங் குமரியையும் தோழிகளையும் வரவழைத்து முறையே விஜயன் அரசகுமாரியையும் அவன்தோழர் தோழிகளையும் மணந்து ஒருகுழுவானர். குவேனியை அவளின் இனத்தினர் கொல்ல அவள்பிள்ளைகள் சிவனொளிபாதத்திற்கு ஓடிஒளித்தனர். இதனாலேயே இத்தீவு சிங்கபாகுவின் மகனான விஜயன் சிம்மள, சிங்களன் என்றும் கருலாயினன் என்று ஆதிக் கதைகள் உள.

மேலும் தந்தையின் சொலைக்காகநாடு கடத்தப்பட்ட விஜயன் இரத்தின துவீபத்தில் மணிக்கற்களை வாங்கவந்த வணிகர்களையும் ஏனையோர்களையும் கொலைசெய்து எஞ்சியோரைத் தீவில் வழிமறித்து அவர்களின் தலைவனாகிச் சிங்களம் என்ற பெயர் கொண்டான் என்று எடுத்துரைக்கின்றன.

இந்நாட்டில் இயக்கர் வாழ்ந்தனர் என்பதை விஜயன் வருகை மூலம் அறிந்தோம். குவேனியும் இயக்கர் குலப் பெண்ணே. குவேனியின் காலத்தில் இரத்தின தீவகத்தில் உள்ள இரும்பு நகர் ஒன்றில் வாழ்ந்த இயக்கர் குலப் பெண்கள் இந்தியாவில் இருந்து வந்த சிங்கன் என்னும் அரசனின் மகனையும் 500 கடலோட்டி வணிகரையும் கரைக்கு வசப்படுத்தி அழைத்தனர் என்றும்; வந்தவர்கள் அப் பெண்களை மணப்பதனையும், இவர்களின் குணத்தை அறிந்த சிங்கன்மகன் பறக்கும் குதிரை ஒன்றும் தன்னோடு செல்ல அவனின் மனைவி அதனைப் பின் தொடர்ந்து இந்தியாவுக்குச் சென்றாள். அங்கே தன் ஏனையோரை அழைத்து அவ் அரண்மனையை அழித்தாள். இதனால் சிங்களன் தன் தந்தையின் இடத்தில் அரசனான். இதன் பின் ஏனைய மக்களுடன் வந்த சிங்கன் இங்கு குடியேறிச்

அரசை நிறுவினுன் என்னும்; இலங்கை ஸ்ரீசபத்து என்னும் ஓர் இயக்சர் நகர் இயக்களால் நிரம்பியிருந்தது என்றும் இவர்களே கல்யாணியில் இருந்து நாகதீபம் வரைக்கும் கடற் பிரதேசத்தைச் சூறையாடும் வழக்கத்தைக் கொண்டவர்களானர். இவ் இயக்கர்கள் கடலில் தத்தளித்த 500 வணிகர்களைக் காப்பாற்றினர் என்றும்; இவர்கள் இயக்கரென அறிந்து அவர்களில் 250 பேர் தப்பிவிட எஞ்சியோரை இவ்இயக்கர் கொன்றுஉண்டனர் என்றும் பழையகட்டுக்கதைகள் உண்டுஎன்று எச் டபிள்யு கொடிறின்றன் என்பவர் இ.வ.ப 8இல் குறிப்பிட்டுள்ளார்.

## வடஈழம்

ஈழநாட்டின் வடபகுதியான மண்தலத்தையே வடஈழம் என்று சுட்டுகின்றேம் தெதுறு ஓயா என்ற ஆறு மாலர் (மாயாரட்டை) விற்கு வடக்குப் பக்கமாக அமைந்தது சிலாபமிடத்து வீழ்ந்துள்ள தெதுறு ஓயா என்ற ஆறு வடஈழத்தின் தெற்காக ஆதியில் அமைந்துள்ளது. இவ் வடஈழமான மண்தலம் தனி நேரான அரசர் ஆட்சியில் அமைந்திருந்தது. இந்தப்பகுதி அபயபுரம் — வத்தமானம் — விசால நகரம் என்று வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட மண்தலம் அனுராக்கிரயன் என்று ஒருமைப் பெயர்ச் சொல்லாய் நிலைபெற்றது. இப் பெயர் இடத்தை மையமாகக் கொண்டு வடபகுதித் தலை நகரம் கால் கோலாயிற்று இங்கேதான் மூத்த சிவன், பின்னர் சேனன் — குத்திகன் இன்றரசர்களும் பன்னிருவர்களின் எல்லாளன் கி.மு 205இல் அரச கட்டில் அமர்ந்தார். இதன் பின்பும் வடஈழத் தலை நகரமான அனுராதபுரத்தில் ஐந்து தமிழர் (பாண்டியர்) கி.மு 103லும், சேர நாகன் கி.மு 62 லும், சிவன் கி.மு 57லும், மகாநாகர் கி.பி ஒன்பதிலும், இளநாகன் கி.பி 38 லும், சந்தமுக சிவன் கி.பி 44 லும், சுப்பராசன் கி.பி60லும் ஆண்டனர்என்றும், ஈழமண்டலம் ஒட்டி நாம் எண்ணலாம்.

இலங்கையில் நிகழ்ந்த மூன்று கடல் கோள்களில் முதலாவது கி.மு 2387 ல் இலங்கை இந்தியாவிலிருந்து பிரிந்து இரண்டாம் கடல்கோள் கி.மு 540ல் நிகழ்ந்தது. மூன்றும் கடல்கோள் கி.மு 205 — 161 ல் நிகழ்ந்தது இந்தக் கடல்கோளே வடஈழத்தின் உச்சிப்பகுதியான யாழ்குடா நிலமும் அதனை ஒட்டிய ஏழு தீவுகளையும் தோற்றுவித்தன என்க. இதனை தொலமியின் படத்தில் வடமுனை முதல் ( தலைமன்னர் ) வடமேற்கு "மர்கனு" உள்ள நிலப் பகுதி பூமியின் சிதைவின் எச்சங்கள். பொல



நறுவையை மையமாகக் கொண்ட வடஈழ அரச மட்டக்களப்பு பொருந்திய கீழ்க்கரையும் பரந்த பரப்பு நிலம் ஒன்பது மாகாணமாக வகுக்கப்பட்ட பின்பு அவ் வடநிலம் வடமாகாணமாக சிறிதாயிற்று.

மேலும் வடநிலம் வெளி நிலம் என்ற பெயரில் யாழ்ப்பாணம்,பூநகரி, மன்னர் மாவட்டம் வரை பரந்து இருந்தது. அவ் வெளியரசன் பட்டப்பெயரே வெடியரசன் என்ற புனை பெயர் என்றும் வெடி—வெளி என்று, பொருள் என்று யாழ். சரித்திர ஆசிரியர் திரு ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் கூற்றுகும். இப்படியாகக் காலத்துக்குக் காலம் வடமாநிலம் மாறுபட்டுக் குறுகியது நாமறிந்ததே எச்சங்களான தீவுகள் இன்றி வரையபட்டமுதல் இலங்கைப்படத்தில் காணலாம்.


தமிழருள் மறைந்த அரசகுலம் நூலின்ஆசிரியர் திரு.கொடில்ரேன் இராசரட்ணம் கருத்து இவ் வடநிலமாம் நாகதீபப் பகுதியை மணிபல்லவம், மணிநாகதிபம், மணிபுரம் என மூன்று பிரிவாக நிர்ணயிக்கப்பட்டது. இதன் மத்திய பகுதி வலிகம அல்லது நாகதீப என்றும்; கிழக்குப் பகுதி எநமைத்தீவு அல்லது முல்லைத் தீவு என்றும் நாக மன்னர்கள் இப் பகுதியை ஆட்சி செய்தனர். 1213 இல் கங்க (குகன்) வம்சத்தவனுன கலிங்க மாகன் இலங்கை அரசுடன் போர் தொடுத்தான். பாண்டிநாட்டில் சேது என்னும் பிரிவை ஆட்சி செய்த கங்க (குகன்) குலத்தவரே யாழ் அரசைக் கைப்பற்றினர். இவர்கள் கலிங்கதேசத்தில் இருந்தே கன்னடத்தில் குடியேறி ஆட்சி செய்தனர். இம் மாகன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆட்சி செய்தாலும் காலப்போக்கில் பொலநறுவையில் இருந்து வெளியேற்றப்பட்டு வடபகுதியான சிங்க நகரத்தைத் (வல்லிபுரம்பகுதி) தலைநகராக்கிக் கொண்டான். இதன் பின்பே யாழ்ப்பாண அரசுபலமுற்று சிற்றரசுகளான திருக்கேதீஸ்வரம், அடங்காபற்று, ஊர்காவற்றுறை போன்றவற்றை தன்னகத்தே கொண்டது கி.பி 1265 இல் சேதவர்மன் வீரபாண்டியனும் 1184இல் ,ஆரியச் சக்கரவர்த்தியும் யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றி முழு இலங்கையையும் ஆட்சி செய்தனர். யாழ்ப்பாண அரசனின் கோட்டைகள் கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற இடங்களில் காணப்பட்டன. பின்பே யாழ்ப்பாண அரசர் சிங்களப் பகுதிகளை இழந்தனர். யாழ்ப்பாணத்தரசர்கள் சப்பல் சித்திரமுடைய செப்பு அரச நாணயங்களும் உரோமரின் பொன், வெள்ளி நாணயங்களும், சேதுபதி நாணயங்களும் புதையலாய்க் கண்டெடுக்கப்பட்டதை நோக்குக. 14ஆம்நூற்றுண்டில்

எழுச்சியடைந்த விஜயநகர அரசுக்குப் பின்பே சாதிமுறை மிகக் கொடூரமான முறையில் செயல்படுத்தப்பட்டது. மறவர்களையும் வன்னியர்களையும் ஆதரித்து உயர் பதவிகளைக் கொடுத்தனர். சோழ, பாண்டிய குலத்தவர்கள் அடிமைகள் ஆக்கப்பட்டனர். பிராமணர்கள் விரும்பியபடியே செல்வாக்கு அதிகரித்தது. பிராமணர்களின் சமய ஆதிக்கத்தை ஏற்க மறுத்த திராவிடர்களுள் ஒரு சிலர் அடிமைகளாக்கப்பட்டு இவர்களைத் தீண்டாதோர் என வகைப்படுத்தினர். பிராமணர் விரும்பாத தொழில் செய்தவர்கள் கீழ்மட்டமாக்கப்பட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். பிராமணர்கள் தாங்கள் உயர்ந்தோராகக் கருத்தில் கொண்டு சமயஅச்சுறுத்தல்களால் மக்களின் திசைதிருப்பப்பட்டதே ஏனைய மதத்தை நாட வழிகோலியதுமாகும் எனலாம்.


## யாழ்ப்பாணம்

நாகதீபம், மணிபுரம், சுவர்க்கம், பொன்நகர் எனப்பலவாறுப் பெயர்பெற்றவடநிலம், பூமத்தியரேகைக்கு அண்மையானதால் ஏற்பட்ட இயற்கைத் தட்பவெட்ப நிலைகளாலும் கடல்அலைகளின் மோதல் உராய்விணலும் புளுதிப்புசல்காற்றினலும் ஆதிப்பாறைநிலம்படிப்படியாக மணல்தரையானது. இதனால்போலும் பெரு மணல் கண்ட மக்கள் மணற்றி என்று பின்பு அழைத்தனர். இப்பெருமை கொண்ட வடஇலங்கை இந்தியாவின் தென்கிழக்கே 36கட்டைதூரத்தில் பாக்குநீரிணையும், கிழக்கே வங்காளவிரிகுடாவையும், தெற்கே இந்து சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்டது; ஏழுதீவுகளையும் உள்ளடக்கி 55 மைல் நீளமும் 24 மைல் அகலமும் கொண்ட யாழ்ப்பாணத்தின் குடிசனத்தொகை 1981 இல் 739472 ஆக இருந்தது.


கடல் மட்டத்தின் மேல் சராசரி உயரம் ஒன்பது அடியாகவும். மலைநாடு என்னும கிரிமலை நாற்பது அடி உயரத்தையும் (இப்பகுதியே வடமாகாணத்தின் அதி உயரமான இடம்) உடையதாயிற்று. நகுல முனிவர் இருந்ததால் அது நகுலமலை எனவாயிற்று. அன்று தொட்டு இன்றுவரை பூமிக்கு அடியில் ஆயிரமாயிரம் மூலிகைகளின் வேர்களைக் கழுவி வரும் நன்னீர் ஊற்றின் மகிமையால் அங்குநீராடும் எல்லோரும சுகதேகியாவுர்கள். அருச்சுனன் முதலான அரசர்களும், வடஇந்திய அரசர்களும் முனிவர்களும், பக்தர்களும் இங்கு தீர்த்தயாத்திரை மேற்கொண்டனர். கி.பி 1343இல் இலங்கைவந்த "யோன் டி மரிக்காநோலியும்" கிரிமலையின் மகிமையைக் குறித்துள்ளார்.



கிரிமலைப் பிரதேசத் தோற்றம்



கிரிமலைத் தீர்த்தத் தடாகம்




யாழ்ப்பாணம் — சுவர்க்கம், நயினாதீவு — சம்புதீவு உப்புக்கடல், காரைதீவு — சாகம் பாற்கடல், புங்குடுதீவு — கிரவுஞ்சம் நெய்க்கடல், மண்டைதீவு — குசை (தனத்தீவு, காவற்றுறை) தயிர்க்கடல், எழுவதீவு — இலவு (சான்மலி), அனலைதீவு — கோமேதகம் (கோமேதஅகம்), நெடுந்தீவு — புட்கரம் (கழகம்).



மேலும் சரித்திர அகழ்வாராய்ச்சியை நோக்குமிடத்து வட இலங்கைக்குத் தனிவரலாறு உண்டு என்றும்; ''தனித்தமிழ்தேசம் அன்றும் இன்றும்'' என்ற கட்டுரையில் மகாஜனக் கல்லூரியை நிறுவிய பாவலர் - துரையப்பாபிள்ளை 1607 இல் கூறியுள்ளார். இதனை நிலைநாட்ட அகழ்வாராய்ச்சி, பொறிப்பு, பண்டையமட் பாண்டம், பழையகாசு போன்றன சான்றாகும். இச்சான்று களுக்கு ஆனைக்கோட்டையிலும் காரைநகரிலும், கந்தரோடை யிலும் நடத்திய ஆய்வுகள் அடிப்படையாகும். இதனால் பெறப் பட்டவை யாழ்ப்பாண ஆதிக்குடிகளான பெருங்கற்பாறை (Megalithiuliure) மக்கள் பற்றிய தரவுகளாகும். ஆனால் தொன் மையானது குறுணிக்கற்பண்பாடாகும். (Microlithictor mesoli thie culture) சமீபகாலத்தில் இலங்கைத் தொல்லியல் திரு.சிறுன் தெரணியகலை இதனை உறுதிப்படுத்தியும் உள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களி லும் இத்தகு பண்பாட்டெச்சம் காணப்படுகின்றன.

வரலாற்றிற்கு முற்பட்ட காலமாகிய (Prehistoric period) குறுணிக்கற் பண்பாட்டையடுத்து (Protohistoric perioc) வர லாறு தொடங்கும் காலத்தில் தென்னிந்தியப் பெருங்கற் பண் பாட்டின் வருகை ஏற்பட்டது என்பது தொல்லியற் கருத்தாகும் இது ஆரியர் இலங்கைக்கு வந்தமை குறித்து இது வரைக்கும் கூறிவந்த பாரம்பரிய கருத்துகட்கு முற்றிலும் மாறாக உள்ளது.

பெருங்கற் பண்பாடு இந்தியாவில் சிறப்புடையதாயினும் கி.மு 1000 — கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை இப்பண்பாடு நிலவியதாகும். முதுமக்கள் தாளி, குரங்குப்பட்டை, கற்கிடை எனப் பல்வேறு வகைப்பட்ட ஈமச்சின்னங்களை இறந்தோருக்கு நிறுவும் பண்பாட்டை உடையோர் இப்பெயரால் அழைக்கப் படுவர். பெருங் கற்களாலே ஈமச்சின்னம் நிறுவப்படுதலால். இக் காலத்தில் நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கை, நகரங்கள், முடியுடை மூவரசுகள் ஆட்சி தமிழ்நாட்டில் பெருங்கற் காலத்திலே இடம் பெற்றன.

யாழ்ப்பாணத்தின் ஆய்வில் மனிதக்குடியேற்றம் பெரும் கற் காலத்தையே இதுவரை குறிக்கிறது. இதனை முதன்முதல் 1981ம் ஆண்டு கந்தரோடை அகழ்வாய்வின் மூலம் பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தினர் உறுதிப்படுத்தினர். இதில் பெருங்கற்கால மட்பாண்டப், ரோம மட்கலங்களுமாம். இதில் காபன் காலக் கணிப்பின்படி பென்னிற்புரோன்சன் ( Bennet Bronson )சில பொருட்கள் கி. மு, 1-5 ஆம் நூற்றாண்டின் பொருட்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

1980 நவம்பர்மாதம் ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்டவை இருஎலும்புக்கூடுகள் ஈமப்படையல்களாகப் பெரும் கற்கால மட்பாண்டங்கள், இரும்புக்கருவி அகல்விளக்கு, சங்குகள் மணிவகைகள், கடல் உணவுகளின், எச்சங்கள், தாயக்கட்டைகள், முத்திரை என்பனவாம். முத்திரை மோதிரம் பிராமி எழுத்துக்களால் குறிக்கப்பட்டமையால் பேராசிரியர் கா. இந்திரபாலா "கோவேந்த" என்ற கருத்தை இப் பிராமி எழுத்து குறிக்கின்றது என வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் தானிய வகைகள் ஒன்றும் தாழியில் இல்லாமையைக் கவனிக்கவேண்டியதனால் அன்று கடல்வளம் மட்டுமே இருந்தது புலனாகும்.

1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வீரநாராயணன் பிட்டியை அண்மித்த பகுதியில் செய்த அனேக ஆய்வுகளில் பெருங்கற்பண்பாட்டுத் தடயங்கள் கிடைத்தன. ஆனைக்கோட்டை ஆராய்ச்சியும் இதுவும் ஒத்ததாக இருந்தபோதிலும் இங்கே சிறு குறுணிக்கல்லால் ஆன (Quartz) பளிங்குக் கல்லான மணிபோன்ற பொருட்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வேலணைப் பரவைக்கடலுக்கு மேற்கேயும் ஓர் ஆய்வு புலப்பட்டுள்ளது. இவ்ஆராய்ச்சியின்படி வடஇலங்கையில் பெருங்கற்காலத்தில் தமிழகத்து ஆதிக்குடிகள் (பௌத்தர்கள் வர முன்பே) இங்குவாழ்ந்தனர் என்பதனைத் தெளிவுபடுத்தும். இவர்கள் இங்கே ஆழமற்ற பரவைக்கடல்களில் கடலுணவை ஆபத்தின்றிப் பெற்றதாலும் சுண்ணாம்புப் பார்நிலத்தில் சிறு ஆழத்திலேயே குடிநீரைப் பெற்றதனாலும் மக்கள் ஆதியில் குடியேறினர் எனலாம். இதற்கு ஈமப்படைப்புக்களில் இருந்த கடலுணவுகள், சுறா, பிற மீன்களின் முள்ளந்தண்டு, நண்டு, கடலாமை ஓடுகள். மட்டி, சங்குகள் சான்றாகும். இச்சான்றுகளின் திரிசூலக் குறிகள் காணப்பட்ட மட்பாண்டங்கள் உள்ளமையாலும் இவர்கள் கலாநிதி. பொ. இரகுபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். 1945ம் பூமிசாத்திர ஆசிரியர் காரைநகர் சண்முகரத்தினத்தின் கருத்தின்படி வடஇலங்கையில் முதல் யாழ்ப்பாணத்தலைநகராக நாகதீபமும், பின்பு தொல்புரமும் அதனைத் தொடர்ந்து கதிரைமலையாகிய கந்தரோடையும், அடுத்து சிங்கநகரமான வடமராச்சியும் பின்பு யாழ்பாடிப் பெற்ற யாழ்ப்பாண நல்லூரும் நலைநகராகப் பெயர் பெற்றது அறியக்கூடியதாகும். கி. பி. 2ஆம் நூற்றுண்டின் பின்பு சிறுகற்காலமாக ஆய்வாளர்கள் கருதுவர். இச்சிறுகற்காலத்திலேயே வளமான பொன்தரைகளும் பளிங்குக்கற்களும், முருகு கற்பாறைகளும்



பூமத்திய ரேகைக்கு நேராய் உள்ளபடியினால் தட்பவெப்ப உஷ்ணத்தினால் இப்பார்க்கற்களும், கற்குகைகளும், சுண்ணாம்பு முருகைக்கற்களும் உடைந்து சிதைந்து மண்ணாகின. அந்நாளின் கடல் அலையினால் கடல் ஓரத்தில் இருந்த கற்பாறைகள் [illegible] வுற்றதுடன் மணலும் சேர்க்கப்பட்டது. சுழற் காற்றின் வேகத்தினால் மணல்மாரி போன்று காற்றுடன் மணல் வந்து குவிக்கப்பட்டது. இக்காலத்தின் பின்பே வடஇலங்கையில் உழவுத்தொழில் விருத்தி செய்யப்பட்டதாகும். இன்றும் [illegible] பலாலி, கட்டுடை, புன்னாலைக் கட்டுவன் போன்ற பகுதிகளில் நிலத்தில் உள்ள கற்களை உடைத்துக்கிளறி கமம் செய்யப்படுவது நாம் அறிந்ததே. அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட நிலம் கற்பார்களால் ஆனது என்பது நிலசரிதவியல் வாயிலாகவும் அறியப்படுகிறது.

கி. பி. 795 ஆம் ஆண்டு விஜராசனின் சகோதரனான உக்கிரசிங்கன் கதிரமலையில் ஆட்சிசெய்யும் காலங்களில் தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமான்; கரணவாய், வெள்ளாப்பரவை முதலிய இடங்களில் நல்ல உப்பு படிவதனை அறிந்து வெட்டிய உப்பு வாய்க்காலே தொண்டமானாறாகும். இங்கு உப்பு விளைவித்த மக்களுக்கும் அரசன் இந்தியாவில் இருந்து நெற் தானியம் கொணர்வித்து கொடுத்தமையாலும் இப்பகுதி மக்கள் அன்றும் கடல்வளத்தை மட்டுமே நம்பி வாழ்ந்தனர் என்பதும் உழவுத்தொழில் விருத்தி அடையவில்லை என்பதனை எடுத்துக் காட்டுவதாகும். இத்தொண்டமானுக்கு முன் சோழநாட்டுப் பாணன் ஜெயதுங்கராசன் என்றிடும் அந்தக்கவிவீரராகவன் யாழ்ப்பாணம் வந்து தனது யாழின் திறமையினால் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியை ஆட்சியாகப் பெற்று இந்தியா சென்று தொண்டமானிடம் சிறு சேனைகள் உட்பட அரண்மனை ஆயத்தங்களுடன் வந்து யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு அந்த நிலங்களை விளைநிலங்களாக்கிக் குளங்களையும் அமைத்து ஆண்டான் என்று யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது. ஆகவே இப் பகுதி ஆதியில் கற்பாறையானது என்றும் அதன் பின்பு குடியேறிய மக்களினால் பண்படுத்தப்பட்டுப் பயிர் செய்யப்பட்டதனையும் இயற்கை மாற்றலால் மணற்றியானதும் இச்செய்திகள் உணர்த்தும். இன்றும் பலாலி, கட்டுவன் பகுதிகளிலும் உள்ள நிலங்களில் கல்லுக் கிளறி எடுத்துக் கமம் செய்வது வழக்கமாயிற்று. யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் யோன் பாறை நிலம் கற்பூமி என்றும் இவ் கற்குகைகளில் ஆதியில் வாழ்ந்தோர் முன்குகன்கள் என்றும் கருதுகிறார். 1

---

'KUHAN'' Derived from kuhai (cave) and means cave man. Jaffna had hills, now submerged.

# பழமைச் செய்திகள்

இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிமக்கள் நாகர்கள் ஆகும். இலங்கை ஈழமாயினும் வட, கீழப்பகுதிகளே ஈழமண்டலமெனப்படும். நாகர் முதலானவர்களை வென்று சேர, சோழ, பாண்டியர்கள் ஈழத்தைக் கைப்பற்றியும் வந்தனர். இதனால் மாதோட்டம், திருகோணமலை அரசநகராயிற்று. இங்கு உள்ள சங்கும் முத்தும், பழம் ஆலயங்களுமே தமிழ் நாட்டவரைக் கவர்ந்ததாகும். காந்தக்கோட்டைக் குதிரைமலையும் மணிபுரமும் மாறி மாறிச் சோழருக்கும், பாண்டிய சிற்றரசருக்குக் கீழும் தமிழரே ஆண்டு வந்தனர். விஜயன் வருகையின் பின்பும் சைவமும், தமிழும் ஈழகத்தில் நிலை கொண்டிருந்தது- போர்க்குணம் நிறைந்த வன்னியர்களும் ஆரியரும் குடியேறினர். சமஸ்கிருதப் பிராசிருதச் சொற்களும், தமிழும் சேர்ந்து சிங்கள பாஷை ஏற்பட்டுச் சிங்கள துவீபகமாயிற்று. இதனைத் தொடர்ந்து சிங்களவர்களும், தமிழர்களும் மாறி மாறி ஆண்டும் சேர, சோழ, பாண்டியரும் குடியமர்ந்தும் வந்தனர். கி. பி. 1580 தில் போத்துக்கேயரும், 1640 தில் டச்சாளரும் 1796 ல் வந்த பிரித்தானியரும் மேற்கொண்ட ஆட்சிகளாலும் ஆதிக்குடி மக்களான விஸ்ணு புத்திரன் என்றிடும் குகன் குலம் சின்னபின்னமாயிற்று.

கி. பி. 1797 ல் பிரித்தானியர் நிலமாண்ய அமைப்பை மாற்றி அமைக்க விரும்பி மக்களின் எதிர்ப்பால் கைவிட்டனர். பின் 1828 ஆம் ஆண்டில் ''கோல்புருக் கமரன்'' ஆணைக்குழு சில சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தித் தாம் விரும்பிய தொழில் செய்வதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆனால் ஒல்லாந்தர் ஆட்சியில் பெருந்தோட்டப்பயிர் செய்து தமக்கு உதவியவர்களை உயர்ந்தகுலத்தவர் ஆக்கியமையால் பரம்பரை அமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. அத்தோடு நிலமானியச் சமூக அமைப்பு ''நிலவுடமை'' பயன் படுத்தும் உரிமையையும் கொண்டு நாட்டில் உள்ள பழங்குடி மக்களின் (குகன் குல) சகல நிலங்களும் அரச உடைமையாகக் கருதப்பட்டன. ''இராசகாரியம்'' என்று அரச ஊழியம் செய்வோருக்கு ஊழியத்திற்கேற்ப இந்த நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இதனையே ''நிந்தகம்'' என்றனர். அன்னியரிடம் ஆண்டிச் சீவித்த பெரும் ஊழியர்கள் பெரும் நிலப்பிரதேசத்தைத் தம்வசப்படுத்தியதுடன் சிறுசிறு ஊதியம் செய்வோருக்குச் சிறு சிறு நிலங்களைப் பகிர்ந்ததுடன் ஏனையோர் அந்த நிலத்தில் ஊழியம் செய்ய மட்டுமே பகிர்ந்துநிலங்கள் அளிக்கப்பட்டன. எத்தொழிலும் செய்யச்சுதந்திரம் கிடைத்தும் மக்கள் தம் தம் குலத்தொழில்களில் விரக்தி ஏற்பட்டு மாற்றுத் தொழிலில் ஈடுபட்டனர்.



கி. பி. 1840ம் ஆண்டில் ''தரிசுநிலச்சட்டம்'' ஏற்பாடாகியதும் உடைமைகள் அன்றய அவரவர் பெயர்களில் உறுதிப்படுத்தப்பட்டன. மட்டுநகர் சென்ற விஸ்ணுபுத்திரர்களின் காணிகளும் ஆலயங்களும் இதனால் மாறுபட்டது. உடமைகள் யாராலும் உறுதிப்படுத்தாத தரிசுநிலங்கள் '' முடிக்குரிய '' நிலமாயிற்று. இதனால் ஏற்பட்ட சமூகஅடிப்படைமாற்றத்தால் மக்கள் கூட்டம் முதலாளிவகுப்பினர், மத்தியவகுப்பினர், தொழிலாளி வகுப்பினராக மாறினர் அத்துடன் மேல்நாட்டு நாகரிகம், சமயமாற்றம் ஆங்கிலக் கல்வி முறையால் ஏற்பட்ட ஆங்கிலக்கல்விக்கு மேலதிகக்கட்டணமும், சமயமாற்றமும் இருந்ததனால் தன்மானம் உள்ள ஆதிக்குடி மக்களும் ஏழைகளும் ஆங்கிலக் கல்வி அற்றனர். ஆங்கிலக் கல்வி பெற்றோர் தேசியப் பண்பாட்டைமாற்றியும் கலாச்சார மாற்றலுமாய் ஆண்டோரின் ஏவலராய் நிலங்களையும் பணத்தையும் பெற்று மேலோரானர். இவர்களே வாக்குரிமை கூடப்பெற்று இருந்தனர். 1931 ம் ஆண்டு. சர்வசனவாக்குரிமையும் அதனைத் தொடர்ந்து 1945 ம் ஆண்டில் கன்னங்கராவின் இலவசத் தாய் மொழிக்கல்வியும், ஊரெங்கும் மத்திய கல்லூரி அமைத்தலும் 1959 ல் 12 ம் வகுப்பு வரையும் 1960 ல் பல்கலைக்கழகப் படிப்பு வரைச் சுயமொழி இலவசக்கல்வியும்'' அன்னியரின் ஆட்சியில் கைவிலங்கிட்டோரின் விலங்குகளைத் தகர்த்தன. எல்லோரும் படித்தனர். சிந்தித்தனர் (தரப்படுத்தல் அதனால் விரக்தியும் வேதனையும் அடைந்தனர்)வேலைவாய்ப்பும் பெற்றனர் சந்ததியாய் அனுபவித்த தொழில்கள் திறமைஅடிப்படையில் பகிர்ந்தனர்.

இவ் இடைப்பட்ட காலத்தில் தோன்றியதே வையாப் பாடல், யாழ்ப்பாணவைபவ மாலைகள். இவைகளே யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதிக்குடி மக்களையும் ஏனைய சரித்திரங்களையும் பொய்யாக்கித் தமக்குச் சேர்ந்தவர்கட்குச் சார்பாக எழுதினர். இடைக்காலப்புலவர்கள் அரசனைச்சிறப்பித்துக் கவிபாடுவது போல் ஆட்சியான அன்னியரையும் அவர்கள் ஏச்சஞ்ன்சிகளையும் புகழ்ந்தெழுதிப் புகழைப் போலியாகப் பெற்றனர் இதனை மேலும் விரிவாக நோக்குவாம். வையாபுரி ஐயா:- ஜெகராச சேகரனின் ஆட்சிக் காலமாம் 1519—1561 வரை அவைக்களப் புலவராய் அலங்கரித்தவர் இவர் ஒருசிலரின் குலங்கள் கோத்திரங்களை விளக்கிப்பாடியதுடன் குலமுறை மன்னர்களையும், குலங்கள் குடிகள் வந்தவரலாறுகளையும் பாடியுள்ளார்.

---

யா . ச . பக்கம் 6 திரு ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

புலவர்கள் யாழ்ப்பாணத்தைப் புகழும் வகையில் போர்த்துக்கல் ஆட்சியாளரையும் உரோமாபுரியையும் பாடத்தவறியதில்லை என்பதைக் கீழ்க் காண்க.

"தழைவு பெற்ற யாழ்ப்பாண சத்திய கிறிஸ்தவர்கள்
சந்ததமும் வாழ்வே கூவாய்குயிலே"
பேரான பாராளும் பிடுத்துக்கால்
மனு வென்றன் பிரதானம் வீசவே"

சேருசல நகரத்தினையும் உரோமாபுரியையுங் போட்டியிட்டுப் பாடிப் புகழ்ந்த புலவர்கள்

"ஏக நாதன்பி றந்தே வளர்ந்து
எமக்கு வேண்டியி றந்தே யுயிர்த்துத்
தேகமானதுங் கண்ணு ரக்கண்ட
சேரு சலைத்திரு நாடெங்கள் நாடே"

"நற்க ருணையி லெங்கோ ணிருப்பதும்
நாடோ றும்பூசை யேற்றிப்பு கழ்வதும்
உற்ப வித்து உயிர்த்துங் கண்ட
ரோமா னுபுரி நாடெங்கள்நாடே"

ஆதாரங்கள் கொண்ட சரித்திரங்கள் உருவாகுமுன் தோன்றிய கதைகள் புராணங்களே. இப்புராணங்கள் உரைநடை ரீதியாகவும், செய்யுள ரீதியாகவும் வெளிவந்தன. இவ்வாறு எழுதிய புலவர்கள் தங்கள் புலமைத்திறனைக் காட்டும் நோக்குடன் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கியதாகக் கதைகளைக் கற்பனை செய்து எழுதினர். இதன் வெளிக்கருத்தை ஆராய்பவர் இது வெறும் அண்டப்புளுகு என்பர். ஆனால் இப்புராணங்களின் உட்கூற்றுக்கள் பொய்யன்று; உண்மையே.

புராணங்களிற் கூறப்பட்ட சரித்திர வரலாறுகளை சங்க காலங்களுடன் ஒப்பிட்டும் கலை, நூற்கருத்துக்களைப் பிரித்தும் அறிந்து கொள்வார்க்குமே புராணம் புரிந்து கொள்ளும்; முரண்பாடு நீங்கும். ஆனால் புரியாதவர்களும் உளர். அவர்கள் புராணங்கள் புளுகு என்றேகருதுவர். புராணங்களில் சரித்திரப் புராணம், இதிகாசப் புராணம், சமயப்புராணம் எனப் பல வகையான புராணங்கள் உள. சரித்திரப் புராணங்களின் கூற்றின்படி கி. மு 30.000.000 ஆண்டளவில் இலங்கை, இந்தியா, அவுஸ்ரேலியா யாவும் ஒரே குமரிக்கண்டமாக இருந்தன. அதன் பின்பே லெமு



யா எனும் கண்டத்தின் பகுதியாக சம்புத்தீவு நாவலன்தீவு ஆகி
கி. மு. 10000 ஆண்டிற்குமுன் இலங்கை இந்தியாவிடம் இருந்து
பிரிந்தது. புராண இதிகாசங்களின்படி காலத்திற்குக் காலம் ஏற்
பட்ட கடல்கோள்களாலும் இலங்கையின் உருவம் மாறுபட்டது.
இதனால் அன்று இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே
இரண்டு காததூரம் இருந்ததாக புராணங்கள் கூறுவது பொய்
யானதன்று. இன்றும் குமரிக்கண்டத்தில் எஞ்சிய பகுதியாகிய
அவுஸ்ரேலியாவில் பழந்தமிழர் பண்பாடான பெண்கள் மரண
வீட்டில் கட்டிஅழுதல், பெண்கள் குறுக்குக் கட்டல், பிரேதஅடக்
கங்கள் போன்ற அனேக பழந்தமிழ்க் கலாசாரங்கள் தொடர்ச்
சியாக இன்றும் உள்ளதை நாம் அறிந்ததே. இதே போன்று
அமெரிக்காவிலும் பழைய தமிழ்க் கோவில்கள் இருப்பது இக்
குமரிக்கண்டத்தின் பழம் சரித்திரத்தை உறுதிப்படுத்துகின்றது.
அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் குடியேறிய ஆங்கி
லேயர் இன்றுஆட்சியாளராக உள்ளனர். மூன்றும் கடல்கோளின்
பின் நமதுஈழத்தையும், ஆண்டவர்களையும், வாழ்ந்தவர்களையும்,
இங்கு வந்து குடியேறியவர்களையும் பற்றி ஆராய்வதே இந்
நூலின் நோக்கமாகும்.

ஒரு பிள்ளையின் தந்தை பெயரைத் தாய் மூலம் அறிகின்
றோம். அல்லது அக்குடும்பத்தின் தலைவனாகிய கணவனின்பெயரே
பிள்ளையின் தந்தை பெயர் என ஏற்றுக்கொள்கின்றோம். இதைக்
கண்டவர்களோ, கேட்டவர்களோ அல்லது போதிய ஆதாரங்
களோ இல்லை. ஆனால் நம்பிக்கை என்ற ஒரேயொரு நோக்குடன்
தந்தையின் பெயரைச் சரியென ஏற்று வழங்குகின்றோம். அதே
போன்று புராணங்களிலும் நம்பிக்கை ஏற்படுத்தினால் அதிலுள்ள
உண்மை புலனாகும்.

இன்றைய உலகில் புராணங்களை எழுதும் புலவர்கள் தாங்கள்
உயர்ந்தோரின் நன்மதிப்பைப் பெறுவதற்காகப் புராணங்களில்
ஒரு சிலவற்றை மறைத்தும், ஒரு சிலவற்றைத் தாமாகச்சேர்த்தும்
காலத்திற்கு ஏற்றவாறு கருத்துக்களைத் திரித்தும் திணித்தும்
எழுதுவதனால் இப்புராணங்கள் புளுகு என்பவர்களுக்கு இவை
வாய்ப்பாகின்றது. உதாரணமாக யாழ்ப்பாணப் பகுதிகளில்
வெடிஅரசன் காலங்களிலும் அவன் சந்ததியினர் காலங்களிலும்
கட்டப்பட்ட கோயில்களை அவர்கள் மட்டக்களப்பு சென்ற
தாலும், பின்பு குடியேறியோரின் ஆட்சி அமைப்புக்களாலும் ஒல்
லாந்தர், போர்த்துகேசர், வருகையாலும் அழிந்த இவ் ஸ்தலங்
களை அதன் பின் ஆட்சிப்பலம் பெற்ற ஒருசிலர் ஆட்சி உறுதிகளை
எழுதி இவ்வாலயங்களைத் தங்கள் வயிறு வளர்ப்பிற்காகப் பயன்

படுத்திக் கொண்டு இவ்வாலயங்களைக் குளக்கோட்ட மன்னன் கட்டியதாக புதிய புராணங்களை எழுதியும், எழுதமுற்பட்டும் வருகிறார்கள். இப்பொய்ப் புராணங்கள் மூலம் அவர்களும் அவர்களது கருத்துக்களும் பொய்யானவை என்பதை தற்காலத்து அறிவுள்ள மக்கள் ஆராய்ந்து அறிந்து கொள்வார்களாக.

உண்மைகள் சிறிது காலம் உறங்கினாலும் அவை அழிவன இல்லை என்பது ஆணித்தரமான உண்மை. ஆனால் இந்தஉண்மை வெளிச்சங்கள் உறக்கத்தால் எழுந்ததும் இவ்வுலகை ஆண்ட பொய்யாகிய இருள் எங்கே எப்படி ஓடிமறையும் என்பதை ஆராய்ச்சியாளர்களும், அறிஞர்களும் அறிந்து கொள்வார்கள் என்பது திண்ணம். உதாரணமாக யாழ்ப்பாணச் சரித்திரம் காலத்திற்கு ஏற்றவாறு எழுதப்பட்ட பொய்யான தகவல்களைக் கொண்டது என்பதனை (யாழ்ப்பாணக் குடியேற்றம் பக்கம் 30 - 35 ) கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை என்ற அறிஞர் குறித்துள்ளார் இன்னும் அவ்வப்போது வெளிவந்த பத்திரிகைகளின் செய்திகளும், வையாபாடலும் இவை பொய் என்பதனை உறுதிப்படுத்தும். சன்மார்க்க போதினிப் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளை புத்தகமாகக் கோர்த்த யாழ்ப்பாண வைபவ விமர்சனம் சேர்த்தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைபவ மாலையின் முதல் நூல்கள்.

மாதகல் மயில்வாகனப்புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவ மாலை கி.பி. 1736ம் ஆண்டு இது மேக்கே றாக் என்னும் ஒல்லாந்ததேசாதிபதி காலத்தைக் கொண்டு நிச்சயிக்கப்படும் பாடல் பின்வருமாறு.

உரராசன் தொழுகழன்மேக் கெறுனென் றோது
    மூலாந்தேசு மன்னன் உரைத்த மொழிநற்கேட்க
வரராச கைலாய மாலை தொன்னூல்
    வரம்புகண்ட கவிஞர் பிரான் வையாபாடல்
பரராசசேகரன்றன் னுலாவும் காலப்
    படிவழுவா துற்ற சம்பவங்க மீட்டும்
திரராச முறைகளுந் தேர்த்தி யாழ்ப்பாணத்தின்
    செய்தி மயில்வாகன் வேள் செப்பினனே.

இப்பாவடிகள் தாமே மயில்வாகனப் புலவர் தமது வைபவ மாலைக்கு ஆதாரமாகக்கொண்ட முதநூல்கள் இவையும்என் நமக்குத் தெரிகின்றன. அவை கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்பன. இந்நூல்கள் நான்கும்



தமிழரசர் காலத்தையே விபரிப்பவை. பின்வந்த பறங்கிய காலமும் ஒல்லாந்தர் காலத்து முற்பகுதியும் என்னும் இவைகளைப் பற்றிய சம்பவங்களை மயில்வாகனப்புலவர் யாதோர் முதநூலின் துணை கொண்டன்று கர்ண பரம்பரையின் துர்ப்பெலமான உதவியோடு மட்டும் வரைந்துள்ளார் என்பது அவர் இவை இரண்டு காலங்களையும் சுட்டிப்பேசும் இடத்து நிகழ்த்தும் பல சத்திரிர மாறுபாடுகளால் விளங்கும்.

தமிழரசர் காலத்தை விபரிக்கும் முதநூல்கள் நான்கினுள்ளும் இன்னதின்னது வைபவமாலையின் இன்னின்ன பாகதிற்கு ஆதாரமாயிற்றுஎன ஆராயுமிடத்து யாழ்பாடியின் குடியேற்றம் வரைக்கும் பேசப்படுமவற்றிற்கு வையாபாடல் ஆதாரம். கூழங்கையாரியச் சக்கரவர்த்தியின்கீழ் மீண்டும் நடந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணக் குடியேற்ற வர்ணனைக்கு கைலாயமாலை ஆதாரம்: யாழ்ப்பாண அரசர்களின் வரிசையையும் பரராசசேகரனையும் சுட்டிய விபரங்களுக்கு இராசமுறையும், பரராசசேகரனுலாவும் இதற்கு ஆதாரமாகும் எனக்காணலாம் இம்முதனூல்களில் வையாபாடலின் வழுநிறைந்த ஏட்டுப்பிரதி இப்போதே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியருளொருவராகும் ஸ்ரீ அருட் பிரகாசம் அவர்களால் கண்டெடுக்கப்பட்டது. இதனால் வையாபாடல் வழுநிரம்பியது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழரசர் காலத்தையும், பறங்கியர் காலத்தையும், அடிதலை மாற்றிப் புரட்டி ஓதும் இக்கதையூடே வெடியரசன், மீரா கடற்கொள்ளைக்காரன் என்னும் பொய்யான கதையும் சொருகப்பட்டுள்ளது. மதுரையரசன் கண்ணகைக்கு காற்சிலம்பு செய்ய மீகாமன் என்னும் கரையார்த்தலைவனை இலங்கைக்கு அனுப்பினான். இவன் வெடிஅரசனையும் மீராவையும் வென்று ஐந்துதலை நாகத்திடம் நாகரத்தினம் கவர்ந்து சென்ற பின் வெடியரசன் மட்டக்களப்பிலும், மீரா விடத்தல்த்தீவிலும் குடியேறி முந்திய விடத்தில் ஓர் முக்குவக் குறிச்சியையும் பிந்தியதில் ஒரு மகம்மதிய குறிச்சியையும். உண்டாக்கினர் என்று எழுதியுள்ளார்.

மேலும் வையாபாடல்கள் முறைபிறழ்ந்து அரைகுறையாகவும் இருந்தது என்பதையும், ஆண்ட அரசர்களின் பட்டியல்கள் தலைகீழாக முறைமாறி குறிக்கப்பட்டதனாலும் பிற்காலத்திலிருந்தவைகளை முற்காலத்தனவாகி மாறி அமைக்கப் பட்டுள்ளது எனவும் நூலாசிரியர் மயக்கிக் கூறியுள்ளார் எனவும் பக்கம் 42 இல் குறிக்கப்பட்டுள்ளது புலனாகின்றது. இன்னும் இவ்விமர்சனத்தில் 172 பக்கங்கள் வரையும் நம்நாட்டில் வைபமாலை

எழுதியவர்களை விமர்சித்துக் கூறப்பட்டுள்ளது. இதனால் அன்றி லிருந்த ஒருசில பிராமணர்களும், புலவர்களும் அக்காலத்திற்கு ஏற்றவாறு தமது கருத்தை எழுதினார்கள் என்பது புலனாகின்றது மேலும் எங்கள் கிராமங்களில் கிராமியப் பழமையில் நித்தம் பொய்சொல்லுகின்ற பொய்யனை "இவன்ஒரு வையாபுரி" என்று மக்கள் இன்றும் அழைப்பது இப்போதும் நமக்குப் புலனாகின்றது. வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் இவ்விடயம் பற்றி மீள்ளாய்வு செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம். இப்பேற்பட்ட யாழ்ப் பாணத்துப் பொய் எழுத்தாளர்களினால் வெடியரசனும் அவன் சந்ததியினரும் தம்நிலையிழந்து மட்டக்களப்பு சென்று குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

உதாரணமாக ஈழத்துச் சிதம்பர குடமுழுக்கு விழா மலரில் 1970 ஆண்டு இக் கோயிலை வெடியரசன் சந்ததியினர் கட்டி யெழுப்பிப் பூசித்து வந்தனர் என்ற ஐதீகக் கதையுண்டு. வெடி அரசன் சந்ததியினராகிய முற்குகர் "பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை வணங்கவே மாட்டோம் என்று மீகாமனுக்குக் கூறிய சூளுரைக்கு இணங்க ஐயனார் அன்பர்களானார்கள் என்று பக்கம் 18ல் உள்ளதுடன், காரைநகர் மான்மியமும் இதனை உறு திப்படுத்துகையில் ஆண்டிகேணி ஐயனார் என்னும் நூலின் ஆசிரி யரான வித்துவான்மு. சபாரத்தினம் அவர்கள் பக்கம் 31 ல் காவிரிப்பூம் பட்டணத்தில் இருந்துவந்த இராமசேது மகாரா சாவின் மகனாகிய குளக்கோட்டு மகாராசா யாழ்ப்பாணத்தை அரசாளத் தொடங்கினார் என்றும் ஐயனார் கோவிலைப் பெரிதா கக்கட்டு வித்தான் என்றும், காரைநகரில் இராசாவின் தோட்ட த்தில் குளக்கோட்டன் வாழ்ந்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார் அப்படியே பல புலவர்களின் மாறுபட்டக் கருத்துகளினால், குளக் கோட்டு மகாராசாவின் சரியான சரித்திரத்தை இங்கு தரு கின்றேன்.

## குளக்கோட்டுமகாராசன்

**கலியுகம் 512 [கி.பி. 589]**

திருந்து கலிபிறந்து ஐநூற்றெருபதுடன் இரண்டாண்டு சென்ற
—பின்னர்

புரிந்திடப மாதமதில் ஈரைந்தாந்தேதி புனர் நன்நாளில்
தெரிந்த புகழ் ஆலயமும் சினகரமும் கோபுரமும் தேரூர்வீதி
பரிந்து ரத்ன மணிமதிலும் பாப நாசச்சுனையும் பகுத்தான்
—மேலோன்
(கோனேஸ்வரக் கல்வெட்டு)



சோழநாட்டிலே திருவாரூரிலே மனுநீதிகண்ட சோழமரபிலு தித்த சூரிய குலோத்துங்க ஸ்ரீவரராமதேவ சோழமகாராஜாவின் புத்திரரான பாலசிருங்க மகாராஜாவாகிய குளக்கோட்டு மகா ராஜா கலியப்பகம் 512 நிகழுங்காலத்தில் இலங்காபுரியில் திருக் கோணேஸ்வரர் ஆலயத்தை வந்தடைந்தார்.

அங்கு ஆலய தரிசனம் செய்தும், ஆலயத்தைப் புதுப்பித்தும் 17,000 அமண் நெல் விதைப்பதற்கேற்ற நிலப்பரப்புகளை அமைத் தும், அதற்கு நீர்ப்பாய்ச்சுவதற்காகக் கந்தாளாய்க் குளத்தைக் கட்டி அதற்கு நீர் வினியோகிக்கும் சூத்திரமும் அமைத்து அடங் காப்பற்று என்னும் கிராமங்களை அமைத்து வன்னியர்களை அழைப் பித்து வேலை செய்வித்தும் தன்னாடு திரும்பினான். கி. பி593 ஆம் ஆண்டு ஏழுவன்னியர்கள் சேர்ந்து தலைமை தாங்கி ஆண்டனர். இதனால் உக்கிரபோதி மகாராஜன் இத்திக்கிற்கு விஜயம் செய்து இவர்களைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தான் என்பது யாழ்ப்பாணச் சரித்திரம் பக்11இல் ஜோன் ஆசிரியர் கூற்றாகும்.

வடமாகாணத்தில் வெடியரசனின் சந்ததியினர் சிற்றரசர் களாகத் தங்கள் தங்கள் இடங்களை ஆண்டுவரும் அக்காலத்தில் சேந்தன், குசுமன் * ஆகிய இருமுற்குகத் தலைவர்களும் முறையே கீரிமலை, மாதகல் பகுதிகளை ஆண்டுவந்தனர். அக்காலத்தில் இங்கு வந்த சிங்கள வியாபாரிகள் கோவிற்கிணறுகளை மாசுபடுத்திய தனால் பிராமணர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே சச்சரவு மூண்டது. இச் சச்சரவுகளைத் தீர்ப்பதற்காகக், கண்டியிலிருந்து தீர்த்தமாடவந்த பாண்டுசு அரசன் விசாரணையை மேற்கொண் டார் என்பர். இவ்வேளை, இக்குளக்கோட்டனின் திறமைகளையும், திருகோணமலையில் ஆலயம்அமைப்பதனையும், இவ்வாலய நித்திய தேவைகளுக்கு வேண்டிய விளைநிலம், குளம் அமைப்பதனையும் அறிந்த பாண்டுசுவின் மனைவி சேனைகளை அனுப்பிக் குளக் கோட்டனை விரட்டிவரும்படி ஏவினான். சேனைகள் திருகோணமலை சென்றதும் குளக்கோட்டனின் திறமையையும், அவன் வீரச் செயல்களையும் கண்டறிந்து திரும்பிவந்து பாண்டுசுவின் மனைவி யிடம் அவன் பெருமையை எடுத்துக்கூறினர். இதன்பின் குளக் கோட்டன் தேகவியோகமானதும் வன்னியர்கள் தங்கள் தலை மையில் அரசுஅமைத்து வன்னிநாடு என்றுஅழைத்து ஆண்டனர்.

* சேந்தான் — சேந்தான்துறை, குசுமன் — குசுமன்துறை. இவர்கள் மட்டக்களப்பிலும், தொல்புரம், சுழிபுரத்திலும், குடி யேறியதாக யாழ்ப்பாணச்சரித்திரம் பக்கம் 10இல் கூறுகின்றது. யாழ்ப்பாண அரசுக்கு உட்படாதபகுதியே அடங்காப்பற்று ஆகும்

குளக்கோட்டனால் கட்டப்பட்ட கோவில்கள் பற்றிய கல்வெட்டுப் பாடல்கள் (1.)

(1) சீர்மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு
செல்வமும் சிவதேச இரு சமயமும்
செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்
செகமேவு கதிர மலையும்
(2) ஏர்பெறும் தென்கயிலை வாழ் கோணலிங்கம்
மேன்மை தான் தோன்று லிங்கம்
வெற்றிபுனை மயூர சித்திர சங்காரவேல்
வெள்ளை நாவற் பதியதாம்.
(3) பேர்பெறு தென் திருக்கோயில்
செய்முறைகள் சிவபூசை தேவாரமும்
செய்முறைகள் என்றென்றும் நீடுழிகாலமும்
தேசம் தளம் பாமலும்
ஏர் பெருகு பரிதி குலராசன்
குளக்கோட்டர் எவ்வுலக முய்வதாக
ஏழு கோபுரம் கோயில் தொழுவார் தினம்
தேட எங்கெங்கு மியற்றினரே

மேற்கூறிய பாடல்களில் குளக்கோட்டனின் திருப்பணியைப் பெற்ற ஏழு கோவில்களின் பெயர்கள் வருமாறு:- கதிர்காமம், கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரம், போரதீவு சித்திரவேலாயுதசுவாமி, வெருகல், திருக்கோவில், என்பனவாம்.

குளக்கோட்டன் ஆட்சியில் முன்னேஸ்வர ஆலயம் வளர்ச்சிக்காகச் சோழதேசத்துத் தன் குலகுருவாகிய நீலகண்ட சிவச்சாரியாரையும், மனைவி விசாலாட்சி அம்பாளையும், புத்திரர்களையும் வேத, வேதாந்த, சிவாசம, கலைஞான விற்பன்னர்களாகிய ஏனைய பிராமணர்களையும், ஊழியம் செய்யப் பதினெண்குடிகளையும் வரவழைத்துச் சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகத்தை நடாத்துவித்து, முன்னேஸ்வரக் குடிமக்களையும், தொழும்பாளர்களையும் சேர்த்து ஒரு மகாசபை அமைப்பித்து, சந்திரகுலதிலகமாகிய தனியுண்ணாப் பூபாலனென்னும் நீதிநிறைந்த உத்தம சுகுணோத்துங்க மகாராஜனை (பூபாலவன்னியனை) முன்னேஸ்வர மகாநகரில் அரசு புரியும்படி முடிசூட்டுவித்தான். இந்த அரசனும் குளக்கோட்டு மகாராஜாவின் கட்டளைப்படி அவ்வூரை அறுபத்தியாறு கிராமங்களாக்கி இடுகுறிப்பெயர், காரணப்பெயர்களை வைத்து நிர்வாகத்தைக் கவனிக்க, ''சந்திரசேகரமுதலிப் பட்டங்கட்டி''



என்றும் இரண்டாவதாய் உள்ளவரை "பட்டங்கட்டிக்கோறளை" என்றும் அதன்பின்பு "அத்துக்கோறளை" என்றும்நியமித்து; சபடா, கோவில் உட்பிரகாரம், இரண்டாம் பிரகாரம், சுவாமி எழுந்தருளப்பண்ணல் போன்றவற்றை அவர்கள் மரபினரே செய்தல் வேண்டுமென்றுநியமித்தார்.*மற்றப்பதினெண்மரையும் அக்கிராமங்களிற் குடியிருக்கப்பண்ணி, பத்திற்கு இரண்டுவீத வருவாய் ஆலயத்திற்குச் செலுத்த வேண்டும் என்று கட்டளைபிறப்பித்து நிர்வாகத்தை நடாத்தினர். இன்றும் விஷ்ணுபுத்திரர்களைப் பட்டங்கட்டிகளென்றும் அழைப்பதை இங்கு ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. சாலிவாகன சகாப்தம் 515 [கி பி 591]இல் இலங்கையை ஆண்ட அக்கிரபோதி மகாராஜன் இவ் வன்னியர்களைத் தனது ஆணைக்குட்படுத்தினன் என்பதிலிருந்து, குளக்கோட்டன்காலம் 6ம்நூற்றாண்டுஎன்பது புலனாகும் யாழ்ப்பாணச் சரித்திரம் பக்கம் 24 இல் ஆசிரியர் முத்துத்தம்பிப்பிள்ளையின் கூற்றுப்படிகலியுகவருடம்512 இடபமாதம் 10ம்திகதி திங்கட்கிழமை குளக்கோட்டன் 17000 அமன் விதைப்பாடுள்ள கிராமம் அமைத்து 51 வன்னியக் குடும்பத்தைக் குடியேற்றித் தனியுண்ணாப் பூபாலவன்னியனை அவர்கட்குத் தலைவனாக்கிய பின்பே சிலவன்னியர்கள் சிங்களவர்களோடு சேர்ந்து தேசாதிபதிகளாகிச் சிங்கள அரசர்களுக்குக் கீழே யாழ் அரசுக்கு உட்படாத இடங்களில் (அடங்காப்பற்று) வாழ்ந்தனர். ஆகவே பலசரித்திர ஆசிரியர்களின் கூற்றுப்படியும், முனீஸ்வரம், ஏனைய கோவிற்கல்வெட்டுக்களின் ஆதாரங்களாலும், மேற்கூறப்பட்ட விபரங்களாலும் குளக்கோட்டன் 6ஆம் நூற்றாண்டு வாழ்ந்தான் என்பது உறுதியாயிற்று.

அதுமட்டுமல்லாது, குளக்கோட்டன் எக்காலத்திலேனும் யாழ்ப்பாணம் (வட இலங்கை) வந்தான் என்பதைத் தெளிவுபடுத்தும் எந்தச்சரித்திரத்தையும் நாம் வரலாற்று மூலமாக அறிந்ததுமில்லை, கேட்டதுமில்லை, படித்ததுமில்லை. அப்படிச் சரித்திரம் இருக்க, இந்நாட்டு ஆதித்திறமைமிக்க சிற்பவல்லுனர்களினாற் கட்டப்பட்ட எமது கோவில்களின் திறமைகளை அழகு எழுச்சிகளாக இன்றும் ஆணித்தரமாக நிற்பவற்றை, ஏனோ நம் புது ஆசிரியர்கள் மறை பொருள் ஆக்கி, எங்கிருந்தோ வந்த குளக்கோட்டன் கட்டினான் என்று திரிபுபடுத்தும் எழுத்தாளர்களை வாசகர்கள் இனம் காண்பதுடன் காலம் பதில் சொல்லும். இவ் உண்மை நிலையை உணர்த்திச் சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்காகவே நூன்முகத்தில் இதனைப் பழமைச்செய்தியுடன் சமர்ப்பித்தும் உள்ளேன்.

* ஸ்ரீ முன்னேஸ்வரமலர் 1962. பக்கம் 8



# விஷ்ணு புத்திரர் தோற்றம்

காத்தற் தொழிலைச் செய்யும் விஷ்ணுவாம் தெய்வம், உலகத்தே யுள்ள ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்கும்பொருட்டு, பிரளய காலத்தை உண்டாக்கிப் பூமியைக் கடலினுள் அமிழ்த்தி (கடள் கோள்), பின்பு நீரைஅகற்றித் தனக்குத் தேவையான இடங்களில் பூமியைத் தோற்றுவித்தும்; ஆன்மாக்களைத் திரும்பவும் படைத்தும்; இறைவனே அரசர்களாகி ஆன்மாக்களுக்கு அருள்புரிந்ததனைப் புராணங்கள் மூலமாகவும், கடல்கோள் சரித்திரங்கள் மூலமாகவும், விஞ்ஞான விளக்கங்கள் மூலமாகவும் நூன்முகத்தில் அறிந்தோம்.

மனிதர் தேவராவதும், தேவர் அரசனுவதும், அரசன் தேவராவதும் பற்றிப் புராண இலக்கியங்கள் மூலம் நாம் அறிந்ததேயாம். புத்தர், இயேசு,முகமது ஆகியோரும் மனிதர்களே! மனிதருக்கும் தேவருக்கும் மாத்திரமே ஆறறிவு உண்டு. இந்த ஆறறிவு இனங்களில் எண்குணம் நிரம்பியவர்களே தேவ மனிதர்களாகக் கணிக்கப்பட்டனர்.முனிவர்களும், ஞானிகளும் இந்நிலையைஅடைவர். இக்கோட்பாட்டால் அரசனையும் ஆண்டவனையும் ஒருங்கே "கோ" என மதித்தனர் முன்னோர். இதனுலேயே இன்றும் கோயில்களில் * எழுந்தருளியாய் இருக்கும் மூர்த்தத்தை வசந்த மண்டபத்தில் வைத்து, இத் தெய்வங்களை அரசர்களாக மதித்து, பாவனைசெய்து வெற்றிக்கொடி காட்டல்; வெண்சாமரை வீசல்; கொடி, குடை ஆலவட்டம் பிடித்தல்: தாம்பூல, நைவேத்தியம் படைத்தல் முதலாய அரசனைக் கௌரவிக்கும் சிறப்பு ஆராதனைகளை இறைவனுக்கு நாம் செய்துவருகின்ரேம். இக் கிரியைகள் கிராமத்திற்கும் மக்களிற்கும் நன்மைபயக்கும் தெய்வ பூசையாகும். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்" என்ற ஆன்ரேர் வாக்கும் இதனை மெய்ப்படுத்துவதாகும்.

இவ்வாறு இறைவன் அரசநெறியாகி ஆன்மாக்கட்கு அருள் பாலித்தனைக் கடல்கோள் மூலமாகவும் நாம் அறிவோம் என்பதை ஈண்டு சற்று விரிவாக்குவோம். ஏறக்குறைய 12,000 ஆண்டுகளுக்கு

* கோ + இல் — கோயில்; கோ — இறைவன், அரசன்.



முன் ஏற்பட்ட முதலாவது கடல்கோளாற் குமரிக்கண்டம் கடலி னுள் அமிழ்ந்துபோக, தென்னிலம், தென்னிந்தியா, இலங்கை என வெவ்வேருகப் பிரிந்தன வென்பதை நூன்முகத்தில் விபரித்தோம். பிற்காலத்தில் ஏற்பட்ட இரண்டாவது கடல்கோளினுல் இலங்கைத் தீவின் வடபாகத்தின் பெருநிலப்பரப்பு பெருந்தீவையுடைய நிலப் பரப்பானது. அதுவே பழந்தமிழ் நூல்களில் "நாகதீபம்" என அழைக்கப்பட்டது கி. மு 205 - 161 இற்கும் இடையே ஏற்பட்ட மூன்ருவது கடல்கோளினுல் நாகதீபத்தின் பெரும் பகுதி கடலினுள் மூழ்கிப்போக எஞ்சியது இப்போதுள்ள யாழ்ப் பாணமும் ஏனைய தீவுகளுமாகும். இக் கடல்கோளைப்பற்றிச் சிங்கள இராசாவழிநூலில் பின்வருமாறு உள்ளது. திஸ்ஸ அரசன், தன் மனைவியுடன் தொடர்பு என நான்ணீஸ் எனும் பௌத்த ஆசிரியர் மீது ஐயுறவுகொண்டு, அவனைக் காய்ச்சிய கொப்பரு எண்ணெயிற் போட்டு எரித்தானென்றும், இதனுல் இலங்கைத் தீவைக் காத்த தேவர்கள் வெகுண்டு பூமிமேல் கடல் பொங்கச் செய்தனர் என்றும்; துவாரகபுரத்து இராவணன் கொடுமையால் அவனது 25 அரண் மனைகளைக் கொண்ட மன்னர் புரத்து நிலம் முன்னைய (இரண்டாம்) கடல்கோளால் விழுங்கப்பட்டது போல, இப்போது (மூன்ரும் கடல் கோளால்) கல்யாணி இராசப்பகுதியில் ஓர்இலக்க ஊர்களும், 970 மீன்வலைஞர் சிற்றூர்களுமாக முக்காலே அரைக்கால் நீரில் மூழ்கின என்றும், மாதர்பை என்றநாடும் எஞ்சியதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. இராசமாணிக் கனர், தமிழ்மொழி இலக்கிய வரலாறு எனும்நூலின் பக்கம் 82இல் இம் மூன்ரும் கடல்கோள் பற்றிக் குறிப்பிடுகையில்; ஒரு இலட்சம் மீன்பிடிப்போர் சிற்றூர்களும், 910 முத்தெடுப்போரின் ஊர்களும், 400 சிற்றூர்களும் அழிந்ததாகக் கூறியுள்ளார். இதிலிருந்து ஈழத்தில் ஆதிக்குடிகளாக முத்துக்குளிப்போரும், மீன்பிடிப்போருமே வாழ்ந் திருந்தனரென்பது புலனுகிறது.

இக் கடல்கோளிற்ருன் கந்தபுராணம் சுட்டும் தமிழ் நாட்டை அண்டியிருந்த ஆழிமலை அமிழ்ந்திருக்கவேண்டும். அம்மலை இருந்த இந்திய கரைநிலப் பகுதியே கோடிக்கரை என்றும், அக் கடற் கரையை அண்டிய வடபால் பொருந்திய இந்தியக் குடாக்கடல் கோடிக் குடாக்கடல் என்றும் கூறப்பட்டன. இக் கோடிக்குடாக் கடலே காலப்போக்கில் அராபியரின் வாணிகத்திற்கு வழிநிலக்கட லாக அமைந்ததனுல் அராபிக்கடல் என்று பின்னர் வழங்கலாயிற்று. இத்தகு கடல்கோளைப் பிரளயகாலம் என்றும்; நாடுகள் அழிய, விஷ்ணுவாம் நாராயணன் வராக அவதாரம் எடுத்து, மூக்கிலிருந்து பன்றியாகி, நீரினுட் சென்று ஆழ்ந்த நிலத்தை மறுபடியும் கவ்வி ஆன்மாக்களுக்காக ஊர்களை அமைத்தார் என்று புராணங்கள் தெய்வநம்பிக்கை ஆற்றல் நெறியாகக் கூறுகின்றன.

தனிக்கரை நிலமாம் காரைதீவு என்றிடும் கரை நீர் நிலத்தைச் சுற்றியுள்ள நீர்ப்பகுதியை "பாற்கடல்" * என்று தத்துவ முறையில் கச்சியப்பசிவாச்சாரியார் நியமனம் செய்துள்ளார். அத்துடன் அவரின் இத்தத்துவ நியமனம் நிலத்தின் இயல்பால் "நீரியல் திரியும்" என்ற புவியியல் விஞ்ஞான நெறிக்கும் ஒத்த தொன்றாகும். இப்படியான பாற்கடல் சூழ்ந்த நிலப்பரப்பைப் பற்றுக்கோடாக நின்ற கடல்கோளால் வருந்திய மக்கள், அந்நிலத்தையும் பாற்கடல் நோக்கில் மாயவனும் நாராயணனைப் பாவித்துத் தம்மைக் காக்கும் தெய்வமாக எண்ணித் தம் முயற்சியில் முனைந்து வந்தனர். ஆதிக்குடி நாகர் வழித்தோன்றலாகிய இம் மக்கள் ஆதியில் முத்துக்குளிப்போராயும், சங்குகுளிப்போராயும். மென்னில மக்கள் இருந்தனரென்பது முன்சுட்டிய கடல்கோளிலிருந்து தெரிய வருகின்றதன்றோ. இவ்வாறு நிலவுறை தெய்வமாக வணங்கிய பாற்கடலை அண்டிய காரை மக்களுக்குக் கருணைபுரிய நாராயணன் நிலம் உறைதலாம் பாற்கடற் பள்ளியிலிருந்து தேவஅம்சமான சீவ நாராயணன் அந்நில மக்களோடு மக்களாக உலவிவந்தார் என்பதை கடலோட்டுகாதை மூலம் அறியலாம்.

இது இவ்வாறிருக்க; தஷ்ண கைலாய புராணத்தின் பக்கம் 136 இல்; முன்னொரு காலத்தில் அத்திரி முனிவர் குலத்திற் பிறந்த துருவாசர், இந்திரனுக்கு இட்டசாபத்தால் சாபப்பேறு அடைந்த இந்திரன் தனது சாபவிமோசனத்தைத் தீர்ப்பதற்காகத் துருவாசமுனிவரை வணங்கிச் சாபந்தீர வழிசொல்லவேண்டுமெனக் கேட்க, துருவாசரும், "ஓ இந்திரனே! நீ போய்ச் சேது நாட்டிற்கு அப்பால் ஈழநாட்டில் இருக்கும் பொன்னகர் எனும் நிலப்பரப்பில் வாழும் மென்னிலமக்கள் குடும்பத்திற் பிறப்பாய். ஐனார்த்தனராகிய வாசுதேவர் (ஆடிப்பூரத்தில்)கூர்ம(ஆமை)அவதாரம் செய்வார். உபதுவலையிலேயே அக்கூர்மம் கட்டுப்பட்டுப் பலபேர் முன்நிலையில் உமது கைபட்டதும் சாபம் நீங்கப்பெற்று, உமது பெயர் பூவுலகின் கண்ணே என்றும் நிலைத்துநிற்கும்" என்றுகூறி மறைந்தருளினார். இதன்படி இந்திரன் "தாசன்" எனும் நாமத்துடன் மென்னில மக்கள் குடும்பத்திற் பிறந்து இளைஞனாகும் காலத்தில், மகாவிஷ்ணுவின் அம்சமான வாசுதேவன் கூர்ம அவதாரமாகத் தோன்றித் திருப்பாற்கடலில் வாழும் நாளில், இவ் இளைஞனின் வலையிற் சிக்கியதும் அவனால் அதை அசைக்கமுடியவில்லை. அயலில் நின்றவர்களின் உதவிகொண்டும் அக்கூர்மத்தை அசைக்கமுடியாது போகவே

* தஷ்ண கைலாய புராணம், கடலோட்டுகாதை ஆகியவற்றில் காரைதீவைச் சுற்றியுள்ள கடலே பாற்கடல் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.



அவ்வூர் மென்னில மக்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து ஒருவாறு பெருஞ்சிரமத்தின் மத்தியிற் கரைசேர்த்துக் கட்டிவைக்க முயன்றனர். அப்போது இவர்களது கட்டுக்கடங்காத கூர்மம் அங்குமிங்கும் ஓடியதால் நாள்முழுதும் முயன்று சலிப்படைந்த அம்மக்கள், தங்கள் முழுமுதற் கடவுளாகிய உள்ளத்து நாராயணனை வேண்டி நிற்க பேரொளியுடன் ஓர்அசரீரி பேரிரைச்சலுடன் வானிற்கேட்டது.

"ஆமை பிடிப்பவன் மல்லாத்துவான் நாமது சொன்னாற் பாவமில்லை" 1 என்ற அவ்வசரீரி எழ அத்திக்கை நோக்கிப் பார்த்தபோது பொன்னொளி கொண்ட விமானம் 2 தன் அழகிய நிறங்களால் வானிலே ஒளிவீசி அழகிய காட்சியைக் கொடுத்தது. இதைக் கண்டு ஆனந்தங்கொண்ட அம்மக்கள், அசரீரிப்படி ஆமையை முதுகுப் பக்கம் நிலத்திற் படும்படியாகப் பிரட்டிவிட்டனர். இவ்வேளை ஆமை பிடித்தவரது திருக்கரங்கள் பட்டதனால் அவ்வாமையே பொன்மயமான ஆமையாக இலங்கியது என்று சூதமுனிவர் குறிப்பிட்டுள்ளார். இப் பொன்னாமையிலிருந்து ஆவியாகிய ஆன்மா வான்வெளியில் விஷ்ணுவின் பேருருபமாகி அம்முத்துக்குளிக்கும் மக்களுக்கு அருள் பாலித்து வடபுறமாக நகர்ந்து, பாற்கடலின் கரையில் இருந்த பாறைக்கல்மீது அவ்வொளிக்கதிர் குறியாகப் பொருந்தவே ஒளித் திருஅடியாகி நீரலையாற் கழுவுப்பட, மறுஒளித்திருஅடி இன்று சிவனொளிபாதமலை என்று சொல்லப்படும் மலையிலே பொருந்தி மறைந்தது. இந்தக் கற்பார் அமைந்த பகுதியே காலப்போக்கில் திருவடி

1 (அ) அசரீரி வாக்கிற்கமைய ஆமையைப் பிடித்தால் பிரட்டிவிடுவது இன்றும் வழக்கில் உள்ளது அக்காலங்களில் இங்கு வந்த வியாபாரிகளான சிங்களவரும் விஷ்ணு பக்தர்கள் ஆகையால் ஆமையை விஷ்ணு எனக்கருதி ஆமை பிடிப்பதனைச் சட்டம் மூலமாகத் தடைசெய்துள்ளனர். ஈழத்திலும் ஆமை இறைச்சி உண்டால் ஆறு மாதங்களுக்குக் கோவிலினுட் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இன்றும் பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய மூலஸ்தானத்தில் இவ் ஆமை உள்ளது. இதன் முதுகு, வயிற்றுப் பகுதிகளில் ஆமைஓட்டு வரிகள் இன்றும் அழியாது உள்ளது.

2. ஒளி விமானம் - புஷ்பரக விமானம் - பறக்கும்தட்டு. இருபதாம் நூற்றாண்டாகிய இன்றும்; 17. 10. 1987 - சிந்தாமணி செய்திப் பத்திரிகைப்படி, மேல்நாட்டிற்கு வந்த பறக்கும் தட்டு அங்கிருந்து திரும்பச் செல்லும்வரை, அப்பிரதேசத்திற் செயற்கையால் அமைந்த சக்திகள் அனைத்தும் வலுவிழந்த இருந்ததிலிருந்து, அப்பறக்கும் தட்டில் வந்தவர்கள் வலிமைபொருந்திய தேவசக்தி உடையவர்கள் என்பது புலனாகின்றது. (இச் செய்தி மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியை உறுதிப்படுத்தும்).

நிலை என, புனித நாட்களில் நீராடிப் பூசித்து வழிபடும் இடமாகியது. பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலய தீர்த்தோற்சவமும் இவ்விடத்திலேயே இன்றும் நடைபெற்று வருகின்றது.

ஆமை பொன்னையாகிய இடத்தை மையமாக வைத்து, அவ்வெளியிடத்திலே ஆடிப்பூர முகூர்த்தத்தில் ஆலயத்தை ஸ்தாபித்த அம்மக்கள் தாமே பூசையும் செய்தனர். பின்னர் ஒரு நல்ல முகூர்த்தத்தில், உத்தம பிராமணர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து, ''சூரிய தோத்திரப்'' செய்து, வைஷ்ணவ (வைகாசன தந்திர) விதிப்படி அந்த மூல இடத்திலேயே இலட்சுமி ஸ்ரீவரதராஜப் பெருமாள் எனத்திருநாமமிட்டு நித்திய பூஜைகளையும் நடாத்தி வந்தனர். இதனால் இவர்கள் கல்வியும், அறிவும், செல்வமும், வீரமும் ஒருங்கே கொண்டவர்களாக விளைநிலச் செல்வங்களையும் பெற்று இன்றும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். இதுவரை கூறிய செய்திக்குறிப்புகளிலிருந்து இம் மென்னில மக்கள் விஷ்ணு வழிப் புத்திரர் என்றும், இந்திரன் பரம்பரையினர் என்றும், விஷ்ணுவின் உபதேசம் பெற்ற சீடர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இக் கூர்ம அவதார நன்னாளைக் கிருஷ்ண ஜெயந்தி தினமாகப் பக்தர்கள் தற்போதும் கொண்டாடிவருகின்றார்கள்

இவ்வாறு கந்தபுராணம் சுட்டும் பொன்னகரிலே ஆலயம் அமைத்து வழிபடுகின்ற காலங்களில், மதுரையில் வெளியிட்ட கந்த புராண மறைபொருள் என்ற நூலின் பக்கம் 89 இல் கூறப்பட்டுள்ளதாவது; மகாபாரதத்தின் கூற்றுப்படி,(A.J.P.P-33-41)கிருட்டினன் எனப்பட்ட அருச்சுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டு இலங்காபுரியை அடைந்து, பொன்னகரிலே வாழ்ந்த (வலைஞர்களின்) அரசனான மணிப்புர அரசனின் மகளை மணம்புரிந்து ''பப்பிரவாசன்'' எனும் மகனைப் பெற்றான். பின்னர் தான் வந்த நோக்கு நினைவிற்கு வர, தாயையும் மகனையும் விட்டுவிட்டுத் தன்னாடு சென்றான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தர்மராஜன் தம்பி அருச்சுனன் தீர்த்தமாடிய இடமே கிரிமலை என யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய அறிஞர் முத்துத்தம்பி கூற்றும் ஈண்டு நிலைத்தற்பாற்று. பொன்னகரிற் பொருந்திய பொன்ஆனமக்கோயில் அமைந்த இடைந்தையே பொன்னாலை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இப் பப்பிரவாசன் சந்ததியினர் அருச்சுனன்போல் வலிமையும் ஆற்றலும் பொருந்தியவர்களாகக் காணப்படுகின்றார்கள். மேலும் இப்பகுதி மக்கள், மழைகாலத்தில் ஏற்படுகின்ற இடிமுழக்கத்தின்போது ''இதுஅருச்சுனன்நாடு அபயம்! அகலப்போ!!'' என்று விஷ்ணுபுத்திரர்கள் கூறுவது இன்றும் வழமையில் உள்ளது. கூர்ம அவதாரத்திற் கூறப்பட்ட இந்திரன் வழித்தோன்றலாகிய வலைஞரையும், பப்பிரவாசன் வழித்தோன்றலாகிய முக்குளிநாகர் வழித்தோன்றல்களையும் ஒருங்கே அருச்சுனன் புத்திரர் என்றும் அழைப்பதுண்டு.



இது இவ்வாறு இருக்க ஆதித்தமிழ்நில ''கொல்'' (KOLS) என்ற மக்களே கடற் பயணத்திலும் ஆதிக்கத்திலும் பழுத்த அனுபவம் உடையவர்களாவர் இதனைக் கோலாலம்பூர், கொல் — கோய்என்ற கொற்கையானதும் ஞாபகப்பெயராயிற்று. வராகமிகிரர் ''கொல்லகிரி'' என்றமலைப்பிரதேசம் சோழநாட்டிற்கு அருகே உள்ளது என்றர். முதன்முதலில் இக்கொல்மக்களிடமிருந்து கரை நாடுகளையும் கடல் ஆதிக்கத்தையும் நாகர்கள் கைப்பற்றினர். சமஸ்கிருத நூல்களிற் காணப்படும் வரலாறுகளிலும், பழயதமிழ் நூல்களிலும் நாகர்கள் சரித்திர காலத்திற்கு முன்னரே இந்துமா கடற்தீவுகளில் வாழ்ந்து ஆண்டனர் என்பது புலனாகும், இதனை நாகபட்டினம், நாகர்கோயில், நாகதீபம் போன்ற இடப்பெயர்கள் வலியுறுத்து வனவாகும் சென்னை ஆசிரியர் ந. சி. கந்தையா அவர்களும் ஆதியில் இலங்கையில் இராக்கதரும், அசுரரும் வலிமை மிக்கவராயினும் நாகர் மிகத்திருந்திய மக்கள் என்றும், நாகர் வடக்கிலும், மேற்கிலும் வாழ்ந்ததுடன் அவர்களுள் தனிஅரசன் இருந்தான் என்றும் இலங்கையில் வாழும் மக்கள் சிலர் இப்பழய மக்களின் வழித்தோன்றல்களே என்பர். இன்னும் அருச்சுனன் உலூபி என்ற நாககன்னியை மணந்ததும், இராமபிரானின் புதல்வனாகிய ''குசலன்'' குமுட்வதி என்றநாகரினப் பெண்ணை மணந்ததனாலும் இவர்கள் சரித்திரத் தொடர்புடையோராகவும் அருச்சுனன் சந்ததியினர் மகாவிஷ்ணுவின் அம்சமான நாகரினம் நலத்தது என்பதனை அறிஞர் ஒப்புவர். சோழநிலத்துத் தலைவன் கிள்ளியின் நாககுலப்பெண்ணையும் பல்லவஅரசன் வீரகூர்ச்சன் நாககன்னிகையை மணந்ததும் நாகர்சிறப்பை வெளிப்படுத்தும் பாண்டிய நாட்டிலும் நாகர் வாழ்ந்தனர். இதனால் வரலாற்றுக்காலத்திற்கு முன்பே கடலோட்டிகளாக இருந்தனர். குமரி, கொற்கை, காயல், பாம்பன் என்ற பாண்டியரின் துறைமுகங்களூடாகத் தொண்டையர் கடாரம் (பர்மா) சிங்கள வரை கடல்வணிகம் நடத்தினர். மேலும் நூன் முகத்தில் நாகர்பற்றி அறிந்தோம். இப்படியான விஷ்ணுவம்சத்தவர்களான ஆதிக்குடி முகுளிநாகர்கள் ஈழத்தைச்சீருஞ் சிறப்புடனும் ஆளுங்காலத்தில் ஏற்பட்ட 3ம் கடல் கோளினால் (கி. மு. 161) சின்னாபின்னமாகி பாரதம் செல்ல எஞ்சியமக்கள் தம்தொழில் இன்றிப் புதிய மிகுதி நிலத்தில் கண்ணீருடன் சிறிது காலம் வாழ்ந்தனர். இவ் முகுளி நாகர் இனமக்கள் விஷ்ணுவாம் நாராயணனைத் தலைமையாக வழிபட்டு வாழும் நாளில், அந்த நாராயணன், தெய்வமாக வணங்கிய பாற்கடல் மக்கட்குக் கருணைபுரிய எண்ணி, அவர்களின் ஆன்மஈடேற்றத்திற்காக உறைநிலமாம் காரைநகர் சூழ்பாற்கடற் சயனப்பள்ளியில் யோகநித்தராய்இருக்கும்நேரம், தனதுவலம்புரிச்சங்கை விலைமதிக்கமுடியா தமுத்துக்களும், சங்குகளும்இருக்கின்ற திருப்பாற்கடலிலே மறைத்துவைத்தார். பின் தனது சயனப்பள்ளி

யால் சக்கரவாளமலை அமைந்த சொர்ணபூமியாம் நன்னீர் சுரக்கும் கண்டகி தீர்த்தத்தில் (கீரிமலையில்) நீராடி, அங்கே அமைந்த திருத் தம்பலேசுவர் — ஈஸ்வரியைத் தரிசனம்செய்து இம் மென்னிலமக்கள் வாழும் பகுதியை அடைந்து, தனது வலம்புரிச் சங்கைப் பாற்கடற் பள்ளியிலிருந்து எடுத்துவரும்படி பணித்தார். எங்கும் தேடிக் கிடைக்காத பட்சத்தில் சோகமே உருவாக வந்து தேவநாராயண னிடம் தெரிவித்தனர் அவ்வூர் மென்னிலமக்கள்.

திருந்துபதி கீரிமலை திருமால்முன் பாற்கடலில்
அருந்துயில்கொள் முன்னாளில் அற்றுவந்த வலம்புரியை
தருந்தொழிலை மற்றவர்கள் தலைமீதில் அற்றதினால்
பிரிந்தவென்றன் தொடைநோக்கிப்பார்க்க அங்கேதான் பிறந்தான்.

கடலோட்டு காதை பா. 3

திருவளர் துவள சீர்சரன் மார்பினில்
மருவளர் புவியில் மனுவெனத் துதித்து
குகன் எனக் குலமும் குவலையத் தமைத்து (க.ப.கல்வெட்டு)

இதனாற் தேவநாராயணன் தன் கருத்தும் உலகைக் காத்தலும் நிறைவேறும்பொருட்டு, சிவபெருமானைத் துதித்துத் தன்நோக்கைத் தனது வலது தொடையிற் பொருந்தியதும் அந்நோக்கின் ஆற்ற லால் அம்மக்கள் மத்தியின்முன் தோன்றினான் உகன் எனும்குகன். * அவன், வானிலே உள்ள நட்சத்திரக் கூட்டங்கள் ஒன்றுசேர்ந்தாற் போன்ற ஒளிப்பிரகாசமான திருமேனியையும், நீண்டு அகன்ற மார் பையும் நேரிய பார்வையையும் உடையவனாக அம்மக்கள்முன் தோன் றிக் குகன் எனும் பெயர் பெற்றான்.

பிறந்துமுன்னே தொழுதுநிற்கப் பெருமாளும் என்சொல்லுவார்
மறந்துவந்தோம் வலம்புரியை வாரியிலே நீர்போகி
அறிந்தபடி முக்குளித்து அதனைஇங்கே தருவதென்ன
சிறந்தவன்போய் எடுத்துவந்து திருமுன்னே வைத்துநின்றான்.

க. கா. பா. 4

ஆனந்தங்கொண்ட நாராயணன் குகனை நோக்கி, திருப்பாற் கடலிலே தவறிய எனது சங்கை எவராலும் எடுக்க இயலவில்லை, நீவிர் சென்று எடுத்துவாரும் எனப் பணித்தார். உடனே குகனும் ஏனையோருமாகக் கடலினுட் குதித்து நீந்திச் சுழியோடித் திருப்பாற் கடலை [காரைதீவைச் சூழ்ந்த கடல்] அடைந்து தேடியபோது

* முன் தோன்றிய உகன், சிவபெருமான் பெண்கள் கூட்டத்தில் பார்வையில் நோக்கியவள் பார்வதியானது போன்ற கூற்றையொக்கும். அஃதேல் அம்மக்கள் மத்தியில் முன் தோன்றியவனாகலாம்.



அங்கே விலைமதிக்கமுடியாத முத்துகளும் சங்குகளும் இருப்பதுகண்டு அவ்விடத்தைக் குறிப்பில் வைத்து, மகாவிஷ்ணுவின் வலம்புரிச் சங்கைக் கண்டெடுத்துவந்து அவர்முன் வைத்து வணங்கிநின்றான் குகன். இதனால் மகிழ்வுற்ற நாராயணன், தன் திருவிளையாடலின் நோக்கு நிறைவேறியதாலும் என்ன வரம் வேண்டுமெனக் குகனைக் கேட்டு நீ என் திருநோக்கில் முற்பட்டு முன்தோன்றி என் வலம் புரிச் சங்கை எடுத்துவந்தமையால் நீயே முதன்மையானவன் [முன் + உகன்] என உன்னை அழைப்பார்களாகவென வரங்கொடுத்து இவர்கள் யாவருள்ளும் முக்கியமானவன் [முக்கியன்] நீயே! எனக் குலவிருதும் கொடுத்தார் (இதனாலேயே குகன் சந்ததியினரை முக்கியர் என்பதனைக் காண்க).

"குகன் எனக் குலமும் குவலையைத் தமைத்து... ..."

(கர்ணபரம்பரைக் கல்வெட்டு)

என்றும், "நீஎன்றும் குகனே! எனது சங்கும் சக்கரமும் உனது சின்னமாகட்டும்! நீயே இவர்களின் தலைவனாகி, முழு ஈழத்தை யும் ஆள்வாயாக" என்று வரங்கொடுத்து மறைந்தருளினார்.

நின்றவனை முகநோக்கி நெடியோனு மேதுசொல்வான்
சென்றுதிருப் பாற்கடலிற் றிரிந்துஇது தந்தமையால்
உன்றன்பேர் முக்கியன்காண் உனக்கென்னால் வேண்டியது
இன்றிங்கே நான்தருவேன் என்னவேணு மென்றுரைத்தான்.

க. கா. பா. 5

மேலும் இக் குகன் எனப்பட்ட வெடியரசனைப்பற்றிய, நவாலி யூர்ப் புலவர் வயிரவி இராமு அவர்களால் 1821 ஆம் ஆண்டில் (நந்தன வருடம்) பாடப்பட்ட ஒரு பாடலின் பகுதி வருமாறு;

பொங்கலையுடுத்த பூவின் மாந்தர்களே
இங்கிதத்துடனவிலின் மொழி கேளீர்
பராபரமான பரமேஸ்பரன் முன்
றராதலம்படைக்கத் தானினைந் தருளித்
தன்பரையிடத்திற் சாற்றுகா நூபுரத்
தென்றிடு வட்டத்தீசுர மூர்த்தி
பராபரம் பரமாய்ப் பரத்திற் சிவமாய்ச்
சிவத்திற் சக்தியாய்ச் சத்தியினாதமாய்
நாதத்தில் விந்தாய் நாதநாரென்று
பூதலந் தன்னில் புகழ்சதாசிவமாய்ச்
சதாசிவந் தன்னிற் றன்னருமகேச்சுரன்
பிதாவென வுதித்தவப் பேருருவதனில்
உர்து மகேச்சுர னுருவினிலிருந்து

வந்தது வுருத்திரன் வருவுருவதனிற்
சிந்தையதான ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி
வந்திங்கெவர்க்கும் வகுக்கரும் பொருளா
யிந்தநல் வண்ணத் தின்னமுமநேக
முய்ந்திடு சபைதனி லுண்மையதாக
வதுவெலா முங்கட் கன்புடனுரைக்க
விதுவேளை தனிலே யியம்பிடவரிதாம்
பரியுருவாகுமப் பச்சை மாலொருநாட்
பரிந்தவர் துயில்புரி பாலாழி தன்னிலே
நித்திரை பண்ணியே நீண்டிடு தன்கரம்
வைத்திடு வலம்புரி மறந்தவர் வந்தார்
வந்தபின் வலம்புரி மறந்து விட்டேனென்
றந்தணன் ஒருவனை யடை வுடனழைத்து
நன்றி சேர்சங்கை நரலை விட்டெழுந்தேன்
இன்று நீயேகி எடுத்துவா வென்றார்
மறையவ னேகியும் மகாநேர மானதாற்
குறை யொன்றிலாதவக் கோவிந்த மூர்த்தி
வலத்துடை தட்டினர் மலிகதிர் போலப்
பெலத் துடனங்கனோர் பிள்ளை யொன்றுதித்தது
அப் பொழுதவரும் அகத்திடை மகிழ்ந்து
செப்பருந்திறல் சேர் செல்வனே தேனே
என் பணி புரியவே யேவுவானுன்னை
யின்றழைத் திட்டே னின்பமே யினிய
மகனேநீர் கேளும் வலம்புரிச் சங்கை
மகர வேலையிலே வைத்துநான் வந்தேன்
எடுத்துவா வென்றுமே யெம்பிரான் சொல்லத்
திடுக்கெனு வெடுத்ததைத் திருமுன் னேவைத்தான
மகனே யுன்னுமம் மாற்றவர் பணிந்திடுங்
குகனென்று சொல்லியே குரிசிலு மப்போ
சங்கு சக்கரமுந் தரியலர்க் கரிதாய்ச்
செங்கண்மால் கருடக் கொடியையுங் கொடுத்து
வெடியரசென்று விளம்பியோர் பட்டம்
படிதனையாளப் பாங்குடன் வைத்தார்
வைத்தபின் மாலும் மனதினினைந்து
சித்திர மலை போற் சிருட்டித்து நால்வரை
அரச நின் றுணையென வடைவுடன் விடுத்து
மரு மலர்க் குழல் சேர் மடமயிறன்னையும்
மன்னவன் பாங்கினில் வைத்தவன் பாரியா
யுன்னிதத் தோடவனு யுலகமாண்டிருந்தான் ... ... ...



இவ் அற்புதத்தைக் கண்ட அவ்லூர் மக்கள், குகனைத் தங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்டனர். இப்படியாக ஆட்சிபுரியும் காலத்தில் குகன் என்ற இவ் அரசனுக்கு "வெடியரசன்" எனும் விருதுநாமம் வழங்கப்பட்டு; வீரத் தம்பிகளாக வீரநாராயணன், விளங்குதேவர், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் ஆகியோருடன் ஐவர்களாகித் தேசம் ஐம்பத்தாறையும் ஐயதோர்குடைக்கீழ் ஆண்டனர். சங்கும் ஒலியும் அவர்களது சின்னமாகவும், கருடன் அவர்களது கொடியாகவும் இருந்தது. (அட்டைப்படத்தில் குதிரையின் கழுத்தில் உள்ள ஆபரணத்திலும் கொடியிலும் காண்க).

சங்கும் ஒலியும் பசுந்தாரமும் இலங்க...
ஐகொற்றரசர் தேசம் ஐம்பத்தாறையும்
ஐயதோர் குடைக்கீழ் துரைத்தனம் செலுத்தி...

மேலும், மதுரையில் வெளியிடப்பட்ட "கந்தபுராண மறை பொருள் உரை" யின் பக்கம் 89 இல் ஆசிரியர் டானியல்யோன் குறிப்பிட்டுள்ளதாவது: குகன் கந்தகுமாரனின் ஒரு பெயரென்றும் நாராயணன் விஷ்ணுவின் ஒரு பெயரென்றும் மகாவம்சம் — பந்தி 5 இல் ( MHV . vii 5 ) கூறுவதாகவும்; வெடியரசனும் தம்பிமார்களும் இமயவரின் சந்ததியினரென்றும், இவர்கள் ஐவரும் கிருட்டினன் (விஷ்ணு) புத்திரர் என்றும், யாழ்ப்பாணத்தின் பூர்வஅரசர்கள் குகன் வம்சத்தாரென்றும், தனது கருத்தில் இமையவரின் சந்ததியினரே முற்குகர் — முக்கியர் — முக்குவர் என்றும் இவர்கள் வெடியரசன் சந்ததியினர் என்றும், ஈழத்தில் இன்றும் இச்சாதிப் பெயருடனேயே வாழ்ந்து வருகிறார்களென்றும, குறிப்பிட்டுள்ளார். மேலும், சிலப்பதிகாரத்திற் பாராட்டப்படும் கண்ணகிகாலத்தில் யாழ்ப்பாணத்திலும் (காந்தரூபநகரம்) தீவுப்பற்றிலும் வெடியரசன் எனும் குகனும் அவனுக்குக்கீழ் அவன் சகோதரர்களாகிய வீரநாராயணன், விளங்குதேவர், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் எனும் நால்வரும் சிற்றரசர்களாக இருந்தார்களென்ற பூர்வ சரித்திரம் உண்டென்றும், வெடியரசனைக் குகன் எனவும் அவன் தம்பியை நாராயணன் எனவும் அழைக்கப்பட்டதனைக் கவனிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கை, யாழ்ப்பாணத்தின் பெயர்போன பகுதியாகிய தம்பலைப்பகுதியின் பெயராலும், இலங்கைவாசிகளை முற்குகரின் பெயராலும் கிரேக்கரும் ஏனைய வெளிநாட்டு வர்த்தகர்களும் வழங்கினார்கள் என்பதைக் கீழ்கா ணும் குறிப்புகள் நிரூபிக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார். [TAPROBANE] தப்பழடனை தப்பலபதி ["R= ழ"PALAECGONI= பழைஉகன் = முன்உகன் = முற்குகன். "I ஐ" பன்மை விகுதி என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கந்தபுராணப் போரில் அசுரராகிய சூரபத்மனையும் அவன் இனத்தையும் அழித்து, தேவர்களை ஏழு கண்டங்களாகிய ஏழுதீவுகளிலும் சுவர்க்கபூமியாகிய வடஇலங்கையிலுமிருந்து சிறைமீட்டு, சூரபத்மன் மகன் பானுகோபனுல் எரிக்க

பட்ட பொன்னகரத்தை மீண்டும் பொலிவுசெய்து, திருவடிநிலைவழியாகக் கந்தபிரான் சென்றதாகவும், அதன்பின் காந்தரூபநகரத்தை வெடியரசனும் அவன் தம்பிமார்களும் ஆண்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்க அறிஞர்களின் ஆராய்ச்சி அறிக்கைகளிலிருந்து, வெடியரசன் நாட்டு வணிகம், துறைமுகங்கள், கடல்வளம் போன்ற வெடியரசனைப்பற்றிய சிறப்புகள் புலனாகும். மேலும் அன்றைய சுசுஅர (Sousonara) என்றஇலங்கையில் முன்பிருந்ததீவு (காரைதீவு-சுவர்க்க தீவு) பற்றியும் (A.I.P-251 இல் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால் மதுரைஆசிரியர் டானியல் யோன் அவர்களுங்கூட வெடியரசன் சமூகத்தினர் விஷ்ணுபுத்திரர் என்பதனையும் அரச பரம்பரையினர் என்பதனையும், நிரூபித்துள்ளார். மேலும் வெடியரசன் சிலப்பதிகாரக் கண்ணகியின் காலத்தில் ஆண்டான் என்பதனை யாழ்ப்பாணச் சரித்திரங்கள், யாழ்ப்பாணக் குடியேற்றம், கண்ணகி வழக்குரையில் கடலோட்டுகாதை, கந்தபுராண மறை பொருள் போன்றநூல்கள் உறுதிப்படுத்துவதுடன்; நெடுந்தீவிலுள்ள கோட்டை, வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை, காரைநகரில் கோட்டை தொல்புரம் கொட்டையாவத்தைக் கோட்டை, அமைந்த இடங்களும், மண்பிட்டிகளும், ஈழத்து ஐயனார்கோவிலும், பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயமும், குகன்குலத்தவரின் கர்ணபரம்பரைக் கல்வெட்டுகளும் ஆதாரமாகவுள்ளன. எனவே வெடியரசனும் அவன் தம்பிமாரும் அவர்கள் வழித்தோன்றல்களும் விஷ்ணுபுத்திரர்கள் என்பது ஊர்ஜிதமாகின்றது. இதனை மேலும் உறுதிப்படுத்த, குகன்குலத்தவர்களின் சின்னம் ஏனையவைபோன்றல்ல விஷ்ணுவின் சங்கும் சக்கரமுமே * என ஆராய்ச்சியாளர் M.D. ராகவன் அவர்கள் ஆராய்ந்து விபரித்துள்ளார். குகன் என்ற நாமமே விஷ்ணுவின் நெருங்கிய அம்சமானதை, கங்கைக் குகனும் இராமபிரானின் உயிர் நண்பனாகவும் இலக்குமணருக்கு மூத்த சகோதரனாயும், உதவிசெய்யும் பொருட்டுபூவுலகில் ஜெனித்தார் என்பதனை அனுபந்தத்திற்கண்டோம். இறைவன் அரசர்களாகப் பூவுலகிற்பிறந்துஆன்மாக்களைவழிநடத்தினர் என்பதனை முன்கூறியிருந்தேன். மின்னும்மீன்கொடியினையுடைய பஞ்சபாண்டவர்களும் கண்ணனும் விஷ்ணுவின் சகோதரர்கள் தோற்றம் என்பதனையும் நாமறிந்ததே!. கடலுக்கு அதிபதியாம் மகாவிஷ்ணு மென்னிலமக்களுடன் இரண்டறக்கலந்து உலகை உய்வித்தார் என்பதனைப் புராண இதிகாசங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. அவைபோலவே வெடியரசனும் விஷ்ணுபுத்திரன் ஆனான். இதனால் இவர் பிறப்பும் தெய்வஅம்சமான விஷ்ணுபுத்திரன் ஆகும்.

* Tamil Culture In Ceylon by Page—159. The Cattle Brand Marks are Shanka & Chakra, are the Legendary Descent From the Race of Sri Maha Vishnu. M.D. Raghavan.

# விஷ்ணுபுத்திர வெடியரசன்

பூதலத்து வேந்தரெல்தாம் போற்றுஞ்சிங்கம்
பொங்கரவ மணியுலவு புனிதசிங்கம்
மாதவர்கள் புகழ்ந்து கலையோதுசிங்கம்
மாட்சி பெறு மறையறிந்த நாதசிங்கம்
ஆதபனை நிகழ்த்து முடியணிந்தசிங்கம்
மடர்ந்து வலம்புரிமுழங்க வடருஞ்சிங்கம்
வேதனுமோர் துணையாக விளங்குசிங்கம்
வெடியரசனான சிங்கம் வெளிப்பட்டானே.

வாரணங்களோசைவர மத்தள தாளந் தொனிக்க
வீரவீரர் சூழவர வெடியரசு தோற்றினானே
சீர்கெருடக் கொடிகள் வரச்சிறந்த சித்திரக் குடைகள்வர
ஏர்செறியுஞ் சேனைவர ராசராசன் தோற்றினானே
நாகபண மணிதுலங்க நற்பவள வொளி யிலங்க
நேரலரு ரங்கலங்க நீதிராசன் தோற்றினானே
துளசியண்ணல் கிருபை செய்யத் தொல்லுலகுள் ளோர்களுய்ய
விழிகள்களித்தரசு செய்யும் வெடியரசு தோற்றினானே
(ந. பு. வ. இ)

சதுர எழுத்துக் காலமாகிய கடைச்சங்க காலத்தில் நான் மாடக்கூடல் ஆலவாய் உத்தர மதுரையில் சங்கம் நடைபெறும் போதினிலும், சேரநாட்டில் நெடுஞ்சேரலாதனும், சோழநாட்டில் கரிகால்வளவச்சோழனும் (கி. பி. 75 — 115), பாண்டிநாட்டில் நெடுமாறனும் ஆட்சிசெய்யும் காலமுமான இந்தக் காலத்தில், வெடியரசன், கிழக்குலகின் கிளர்மணியென நடுநின்று நிலைத்த ஈழத் திருநாடாம் இலங்காபுரியின் வட நிலத்தில் தென்தமிழ்மொழியில் தேர்ந்த தமிழ்ச்சங்கப் புலவர்கள் வழிவந்த நாகர் இன மரபினரின் முக்குளிநாகர்களின் தலைவனாகவும் தேவநாராயணனாம்விஷ்ணுவினால் விளக்கம் அடைந்து சிருஷ்டிக்கப்பட்ட அதிபதியாகவும் சீரும் சிறப்புடனும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்தான். அவ் வெடியரசன், விஷ்ணுபுத்திரன், இமையவரின் சந்ததியினர் குகன், முக்கியஸ்தன், திருவாசன் என்ற பெயர்களைக்கொண்டவனாய் வெளிநாடாம் வடஈழத்தை ஆண்டமையால் வெளிஅரசன் (வெடியரசன்) என்றசிறப்பு பெயரையும்பெற்று நாராயணன் அருட்கடாட்சத்தோடு சங்குசக்கர சின்னத்துடன் ஆண்டுவந்தான்.

ஆரியரின் கெடுபிடிகளாலும் மாறி மாறி நடந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிப்போர்களாலும் தனது படைத்தளத்தினை வலுப்படுத்திப் பகைவர்கள் எளிதில் அணுகமுடியாத நெடுந்தீவைத் தனது ஆட்சிக் கோட்டையாக அமைப்பதற்குத் தேர்ந்து, அங்கே பிரமாண்டமான இன்றும் அழியாது நிலைகொண்டிருக்கும் கற்கோட்டையைக் கட்டுவித்தும், காரைதீவில் அரசமாளிகையை அமைத்தும், சதுரங்கமணல் பொன்னகரில் சமையக்கோட்டையும், வட்டுடை அணிந்தபோர்வீரர்களை வட்டுக்கோட்டையிலும், யானைப் படைகளை ஆனைக்கோட்டையிலும், நாகதீபத்தில் நாகமணி, மரகதம், நீலம், பவளம், வச்சிரம், பதுமராகம், முத்து கோமேதகம், புருடராகம், வைடூரியங்களையுடைய கழஞ்சியக்கோட்டையும் மற்றும் மயிலிட்டி, கீரிமலை, திருவடிநிலைப் பகுதிகளிலும் பெரும்படைவீடுகளையும் கொத்தளங்களையும் அமைத்துப் பகைவர்கள் தீண்டாதவண்ணம் பெரும் படைபலத்துடன் ஆண்டுவந்தான்.

இங்கு சங்குகளும் (வலம்புரிகளும்) முத்துக்களும் ஏனைய கடற்திரவியங்களும் விலையுயர்ந்த நாகமணிகளும் ஒருங்கேகிடைக்கப்பெற்றதனால், பெருஞ்செல்வம் படைத்தவனாகவும், ஏனைய அரசர்களின் கண்ணெறிக்கு உட்பட்டவனாகவும் ஆட்சிசெய்துவந்தான். இதனால் கடலோட்டும் வணிகர்களும் பெருங்கப்பலோட்டிகளும் உலகின் கடற்பிரயாணத்திற்கு மையமாக விளங்கிய இலங்காபுரியினில் வாழ்கின்ற வெடியரசனின் புகழையும் கடல்படுதிரவியங்களையும் அறிந்து வடஈழம் வருவதற்கு நாட்டங்கொண்டனர். இதனால்கிரேக்கர்களும், உரோமர்களும் அராபியர்களும் மற்றும் மேலைத்தேசத்தவர்களும் நயினாதீவுத்துறைமுகம், ஊர்காவற்றுறை, கொழும்புத்துறை, காங்கேசன்துறை, மாந்தை போன்ற துறைமுகங்களில் வந்து இக்கடல்வளங்களான முத்துக்களையும், சங்கில் அறுத்த வளையல்களையும், மாணிக்கக் கற்களையும், நாகமணிகளையும், யானைத்தந்தங்களையும் பெற்று, அதற்குப் பண்டமாற்றாகப் பொன், இரும்பு, மட்பாண்டங்கள் வெள்ளிநாணயங்கள், உயர்ரக மதுபானங்கள், ஈயம், தகரம், விளையாட்டுப்பொருட்கள் போன்றனவற்றையும் பெற்று ஏற்றுமதி — இறக்குமதி மூலம் உலகளாவிய வணிகம் செய்வித்து பெரும் செல்வம் செழித்த அரசநாடாக ஆண்டுவந்தான். இதன் பெருமையினால் பர்மா, மலேசியா, சீனா, இந்தோசீன வணிகரும்வணிகம் செய்தனர். உரோமாபுரி இராணிகளும் சீமாட்டிகளும் அரசர்களும் முத்துக்களைப் பெருமளவில் விலைகொடுத்து வாங்கினர். இதனால் தன் நாட்டுச் செல்வம் குறைகின்றது என்று உரோமப் பேரரசன் திபெரிஸ்'' தனது ஆய்வின்மூலம் கண்டு செனற் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தான். இதனால் பெண்கள் இம்முத்துக்களின்மேற் காட்டும் ஆசைகளைக் குறைத்துத் தன்னாட்டுச்



செல்வங்களை அதிகம் செலவுசெய்வதைக் கட்டுப்படுத்த உரோமாபுரி அரசர்கள் முயற்சித்தமை, இம்முத்துக்களுக்கு அன்றிருந்த பெருமதிப்பைப் புலனாக்குகின்றது. மேலும் ''பெரினாஸ்'' என்றநூல் ஆசிரியர் முத்து ஏற்றுமதிபற்றி மிகவிளக்கமாகக் குறிப்பிட்டுள்ளதனாலும் ஈழத்தின் தனிச்சிறப்புப் புலனாகின்றது. இதனாற் செல்வப் பெருக்குற்ற வெடியரசன், ''தொண்டி'' போன்ற விலைமதிக்கமுடியாத முத்துக்களையும், மாணிக்கங்களையும், நாகமணிகளையும் நயினாதீவிற் களஞ்சியப்படுத்தி வரலானான். இலங்கையில் முதன்முதலில் திறம் குதிரைகளை வெளிநாடுகளிலிருந்து வாங்கியவர்களும் தமிழ் அரசர்களேயென்று கடல்வாணிப வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை நோக்கும்போது, இன்றும் வெடியரசனின் கோட்டை அமைந்த நெடுந்தீவில் சிறந்த இனக் குதிரைகள் காணப்படுவதனால் இவற்றை முதன்முதலில் வாங்கிய இலங்கை அரசன் வெடியரசனே என்று எமக்குப்புலப்படுகின்றது. அத்தோடு கிழக்குக்கரைத் துறைமுகங்களிலிருந்து பாரிய கப்பல்கள் ஈழம் ஊடாகப்பர்மா வரைக்கும் தமிழ்நாட்டுச் சேரநாட்டுத் தொண்டி, முசிறி, குமரி, என்ற துறைகளிலும் சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டணத்திலும் பாண்டிநாட்டுக் கொற்கைத் துறைமுகத்திலும் முத்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டதனையும் பெரினாஸ் ஆசிரியர் விபரித்துள்ளமையினாலும் இவன் மகிமையும் முத்துக்களின் ஏற்றுமதியும் உலகளாவியதெனலாம். அக்காலத்தில் இலங்கைப் படத்தினை முதன்முதலில் வரைந்த மாலுமி தொலமியும் இலங்கையின் கடல் வணிகம்பற்றி மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அன்றைய நமது நாட்டுக் கடல்வணிகம் பற்றிக் கடல்வணிக வரலாற்றுநூலில் அறியலாம்.

இப்படியாகச் சீரும் சிறப்புடனும் செல்வம் கொழிக்கும் நாடாக வடஈழம் அமைந்ததனாலும், சிறந்த முத்துக்கள் சுலபமாகக் கிடைப்பதனாலும் உலகளாவிய வணிகர்களால் இந்நாடு பெயரும் புகழும் பெற்றது. இதனை அறிந்த மக்கள் குளுக்கள் இங்கு குடியேறவும் முற்பட்டனர். அத்தோடு கி.மு. 2ஆம் நூற்றாண்டில் கடல்கோளால் இந்தியா சென்ற ஈழவர் ''மாவிலங்கை'' எனச்சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுஇன்றும் இப்பெயர் நிலைத்துள்ள இந்தியாவில் ஈழத்து வேளாளர் என்ற நாகர்களில் சிலர் தமது தாயகமாம் வடஈழத்திற்கு மீளவும்குடியேறமுற்பட்டனர். சோழநாட்டின் சேதுபதியில் வாழ்ந்த முத்துக்குளிப்போரும் இங்கு பெருமளவில் விலையுயர்ந்த முத்துக்கள் கிடைப்பதனால் இம் முத்துக்குளிக்கும் குகன்குலத்தவர்களும் இங்கு வந்து குடியேறலாயினர். ஜீவராசிகளையும் ஆன்மாக்களையும் ஈடேற்றும் நோக்கிற்காகவே இடங்களை அழிப்பதும் படைப்பதும் நராயணனும் மகாவிஷ்ணுவின் லீலைகள் என்பதனைத் தத்துவமூலமும் விஞ்ஞான விளக்கத்துடனும் நூன்முகத்தில் எழுதியிருந்ததுபோல,

இம்முத்துக்கள்கூட இருந்தஇடம் பாற்கடலை அண்டிய காரைநகர் (சாகதீபம்) அமைந்த கடற்பரப்பாகையால் முதன் முதலில் இங்கேயே மக்கள் வந்து குடியேறி இடப்பெயர்களையும் தாங்கள் வாழும் குறிச்சிப்பெயர்களையும் வைத்து வாழ்ந்துவரலாயினர். இப்படியாக வாழுங்காலங்களில் வெடியரசனும் விஷ்ணுபக்தராகையால் குடியேறிய சேதுபதி மக்கள் ஐயப்பனுரைத் துதிப்பதுகுறல், வெடியரசன் தனது மண்குவியற் கோட்டைக்கு அருகாமையில் அதாவது தற்சமயம் காரைநகரில் வியாவில் என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் மேற்கரை ஓரமாக ஒரு பிரமாண்டமான எழுநிலைமாட (ஏழு வீதிகளையுடைய) ஐயப்பனுர் ஆலயத்தை நிறுவி அதற்குச் சிறந்த சிற்பவேலைகளும் தூபிகளும் ஒருங்கே அமைந்தவாறு வானளாவும்பிரமாண்டமான இராஜகோபுரத்தையும் அமைத்துநீலகேசியினதும் குடிமக்களினதும் ஆசையை நிறைவேற்றினுன். இக்காலங்களில் வடஇந்தியாவில் கனிஸ்கன் எனும் பேரரசன் (கி. பி. 78 — 120) புத்த சமயத்தைப் பரப்பிக்கொண்டிருந்த காலமாகையால், அன்று வெடியரசன் சைவத்திற்குச் செய்த இப்பெரும்பணியே, இன்று நாமெல்லாம் எமது சமயம் என்று சொல்லிப் பெருமைப்படக் கூடியதாக இருக்கின்றது. ஐயனுர் ஆலயம் இதுவே இன்றும் ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றிப் புகழப்படுவதனை உணரும்போது மயிர் சிலிர்க்கின்றது. இப்படியான பெரும் ஆலயத்தைக்கட்டி புகுமுரிலே சேதுபதி மகாராஜாக்களிடம் தூது அனுப்பி, சுவாமிக்குப் பூஜைசெய்ய அதி உத்தம குருவாக திருவுத்தரகோசமங்கையிலிருந்து வேதவல்லவக் குருக்களையும் வேண்டிய சிஷர்களையும் அவர்களின் குடும்பத்துடனும் தென்னுட்டிலிருந்து வேத வல்லுனர்களான அந்தணர்களையும், சிறந்த ஓதுவார்களையும், சித்தாந்த வித்தகர்களையும் அழைப்பித்து அவர்களுக்கு வேண்டிய பொன்னும், மணியும், முத்தும் பொருளும் அளித்து வீடுகளையும் மண்டபங்களையும் கோவில் முன்றலிலும் ஆலய சுற்றுடலிலும் அமைத்து நித்திய நைமித்திய பூஜைகளையும் கோவிற் பரிவாரங்களையும் ஒழுங்கு முறைப்படி நேரந் தவருது செய்வித்து வந்தான். இவ்வாலயமே காரைநகரில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்ட சைவ ஆலயமாகையால் இன்றும் அங்கு செல்லும் அடியவர்கள் ஆலயத்திற்கு இரு நுழைவாயில்கள் இருந்தும்கூட ஐயாணுர் வாயிலால் உட்சென்று ஆதிமூர்த்தியாம் ஐயப்பனுரை வழிபட்ட பின்னரே ஏனைய தெய்வதரிசனம் செய்யும் வழக்கம் உள்ளது. இக்காலங்களில் ஆரியரின் கெடுபிடியிலிருந்து வடஈழம் முழுவதும் வேதநெறிதழைத்தது. சைவத்துறை மிக விளங்கிற்று. கோவில்களில் கிரியைமுறைகள் விரிவடைந்தன. திருமுறைகளும், வேத மந்திரங்களும் இன்னிசையுடன் ஆலயங்களிலும், அரண்மனையிலும், ஊரெங்கும் ஒலித்தன. புராண படலங்கள் ஆங்காங்கே நடைபெற்றன. ஊர்மக்கள் நெற்றிகளில் திருநீறும், உத்தமர்கள்



உடலெல்லாம் உருத்திராக்கமும் தொங்கி விளக்கமடைந்தன. இவ் எழுநிலைமாடமான ஐயனுர் ஆலயத்தின் சாஸ்திரக்கணக்குக் கருவறையாம் ஆதிமூலத்தில் ஓதப்படுகின்ற "ஓம்" என்ற ஓங்கார ஒலி ஓசை கருவறை ஆதிமூல மூலக்கற்களில் அதிர்வுற்றுத் திரும்பி மூலமூர்த்தியாம் நாதத்துடன் சேர்ந்திருந்து நாதஇசைஓசையாய்க் காற்றுடன் கலந்து நாடெங்கும் செறிந்து நாதத்தின் தன்மையை விஞ்ஞானமுறையில் நாட்டினுற் பரப்பிற்று. இதனுற் சைவமும் தமிழும் பூத்துக் காய்கனிகளாகக் காட்சியளித்தன. வெடியரசன் இத்தனைச் சிறப்புகளுடன் அந்தணர்களையும், கோவில் தொண்டர்களையும் தனது முத்துக்களாலும் மணிகளாலும் அலங்கரித்து பொருட்செல்வங்களையும் வாரி வழங்கிக் கௌரவப்டுத்தியதுடன், தனது நாட்டில் வேதம் சிறப்புடன் ஓதவேண்டும் — அவ் ஓசை அலைகளின் அதிர்வு விண்ணவர்களின் செவிபற்றிக் கண்கள் திறக்கப்படவேண்டும் — வானங்கூட இவ்வேத ஓதலின் அதிர்வால் முழங்கி மழையாகப்பெய்யவேண்டுமென நாட்டங்கொண்டு அரும்பாடுபட்டதன் பயனுகக் காலம்மாருது வானமும் இடியோடுகூடியமழை பெய்தது. குடிமக்களும் இன்புற்று நல்வாழ்வு வாழ்ந்தனர். வேதம் ஓதுவாகள் மீண்டும் மீண்டும் இசைவுடன் ஓத, ஓதுவார்களும் பண்ணுடன் ஓதினர். இவை ஊரெல்லாம் ஒலிக்க, பௌத்த சமயத்தவர்கள் எட்டியும் பார்க்கமுடியாத அளவுக்கு சைவசமயம் வலுப்பெற்று, மிகுந்த செல்வங்களாலும் சிறந்த படை அணிகளுடனும், பிறதேசத்தவர்களின் வணிக விருத்தியினுலும் குறுகிய காலத்தில் எல்லாஅரசர்களின் மனதிலும் கண்பட்டவனுய் சிறப்புடன் அரசுசெலுத்தி வந்தான். இப்படியாக இருந்துவரும் வேளையில், கொங்குதேசத்தில் இருந்தமக்கள் சேதுகரை ஊடாகஈழத்திற்குப் பலதடவை நெருங்கியவர்கள்போல வந்துசென்றுர்கள் என்பதனை முன் அறிந்தோம். வெடியரசனும் அவன் தம்பியர் நால்வரும் தேசம் ஐம்பத்தாறையும் (சிற்றூர்கள்) வெடியரசன் தலைமையின்கீழ் சிற்றரசர்களாக இருந்து ஒருகுடைக்கீழ் அரசுசெலுத்தி வந்தனர். இச்சிற்றரசர்கள் தங்கள் தங்கள்சிற்றூர்களில், வீரநாராயணன் தொல்புரம் பொன்னாலைச்சதுரங்கமணல் மாளிகை அடைப்பு என்னும் இடத்தில் காரைநகர்ஐயனுர்கோவிலைப்போன்று எழுநிலைமாட * பொன்னுலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தும், விளங்குதேவன் சுழிபுரத்திலே சங்கமித்தையால் திருவடிநிலை அருகாமையில் வைத்த வெள்ளரசமரத்தின் கீழிருந்தபுத்தபீடகைக்கு அருகாமையில் பிள்ளை

* 1. ஜோன் ஆசிரியரின் யாழ்ப்பாணச் சரித்திரம். பக்கம் 6.
2. 28. 08. 1986 இல் ஈழநாடு,ஈழமுரசு பத்திரிகைகளின் வெளியான சிறப்புக் கட்டுரைகள்.
3. அடுத்த வெளியீட்டில் மேலும் சான்றுபகரும்.

யார் ஆலயத்தையும், ஐயனார் ஆலயத்தையும் அமைத்துச் சைவ சமயத்தை வளர்த்தனர். இதேபோன்று கீரிமலை, மயிலிட்டிப் பகுதிகளை ஆண்ட போர்வீரகண்டனும், காங்கேசன்துறைப் பகுதியை ஆண்ட ஏரிளங்குருவனும் தங்கள் தங்கள் சிற்றூர்களில் பல ஆலயங்களை அமைத்தும், திருத்தம்பலேஸ்வரர்- திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டவர் ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்து, புத்த சமயத்தைப் பரவவிடாது சைவசமயத்தை வளர்த்தார்கள். இவர்கள் புகழ் திக்கெட்டும் பரவியதனால் வெடியரசனுக்குத் திருமணம் செய்யும் பொருட்டு; ஆதியில் இலங்கை அரசர்கள் இந்தியாவிலுள்ள மகாராணிகளைத் திருமணம் செய்தது போன்று, முதன்முதலில் இராமபிரானால் குகனுக்குச் "சேதுபதி மகாராஜா" என்ற நாமம் இடப்பட்டதனை அடுத்து, குகன் குலத்தவர் வழித்தோன்றலாக வந்த சேதுபதி மகாராஜாவின் மகளுக்குத் திருமண நிச்சயார்த்தம் செய்யப்பட்டது. (இச் சேதுபதி மகாராஜாக்கள் பற்றிய விபரம் நூன் முகத்தில் உள).

இவ்வாறான சிறப்புப்பொருந்திய குகன்குலத்தவர்கள் அதிகம் வாழுகின்ற சேதுநாட்டிலே சேதுபதி மகாராஜனுடைய மகளாகிய இளவரசி நீலகேசியை வெடியரசன் முறைப்படி திருமணம் செய்து காரைநகரிலே தற்சமயம் நீலங்காடு என்று அழைக்கப்படுகின்ற இராஜாவின் தோட்டத்திற்கருகில் அரசமாளிகையை அமைத்து; கடலோரம் உள்ள புன்னைக்காய்கள் கோர்க்கப்பட்ட மாலையை அணிந்தவளும், வடித்த சுடரையுடைய வேற்கண்ணை உடையவளும், சுடர்நெருப்பின் கூர்மையை ஒத்த கயல்விழிகளை உடையவளும், துடிபோன்ற இடை அழகைக் கொண்டவளும், மென்மையான இளநீல மேனியை உடையவளுமான பூங்குழலி நீலகேசி, வண்டுகள் ரீங்காரம் பாடுகின்ற மென்மலர்களாற் தூவி அலங்கரிக்கப்பட்ட பஞ்சணைமெத்தையைக் கொண்ட அந்தப்புரத்திலே வெடியரசன் மடிமீது அமர்ந்து வாழ்ந்தாள்.

> கொடுத்தவரம் பெற்றுடைய குலவுபுகழ் முக்கியர்கோன்
> வெடித்தபுன்னைத் தாருடையான் வெடியரசன் தேவியவள்
> வடித்தசுடர் வேற்கண்ணாள் வண்ண நீல கேசை என்பாள்
> துடிக்குளிடை வாணுதலாள் துயின்றனள்பூ வணைமீதே.
>
> க. கா. 7

> திங்கள்போன்முகத்தி செழித்தநல்லகத்தி
> —தேனவிழ்தாமரைப்பதத்தி
> செப்பரும்வரத்தி செல்வத்தின்னயத்தி
> —செப்புமேழ்தாயரிலொருத்தி

---

நீலகேசி + காடு = நீலங்காடு
இராசா, இராணி உலாவிய அந்தப்புரம் - இராசாவின் தோட்டம்



> சங்குசக்கரத்தி தந்தியின்புரத்தி
> —தண்டளிர்க்காந்தளங்கரத்தி
> தரைபுகழொருத்தி தரளத்தாற்கழுத்தி
> —சதுர்மறைதனையறிகழுத்தி
> செங்கண்மானிறத்தி சீர்செறியுளத்தி
> —திருவெனச்சிறந்தவுத்தமத்தி
> சேனையினூரத்தி திகழும்பொற்புயத்தி
> —தேங்கமழ்மணிமுடிச்சிரத்தி
> வெங்களப்புறத்தி வேந்தரைத்துரத்தி
> —வெற்றிகொள்வெடிமன்னனிடத்தி
> மெல்லியர்சூழ வன்னம்போனில்
> —மெல்லியள்சபையில்வந்தனளே.
>
> (நவாலியூர்ப் புலவர் வைரவி இராமு)

வெடியரசன் அணிந்திருந்த முத்துக்களின் ஒளிக்கதிர்களும், நீலகேசியின் அந்தப்புரத்தினில் அமைந்துள்ள முத்துக்களும், வைரங்களும், இரத்தினங்களும், நாகமணிகளும் காலுகின்ற ஒளிக்கற்றைகளும் ஆதவனுடன் போட்டியிடும் வகையில் காட்சியளித்தன. தேவலோகத்தைத் தரிசித்துவரும் ஆதவனும் நீலகேசியின் அரண்மனை கண்டதும் சற்றுத் திடுக்கிட்டு தான் சென்ற இடம் வேறோ என்று எண்ணித்தெளியும் அளவிற்கு எழில்கொண்ட அந்தப்புரத்தில் நீலகேசியின் அழகிய இயற்கைஎழிலை எவ்வாறு எழுத்தில் வடித்திடலாம்.

நிலாப்போன்று தண்ஒளிவீசும் நீலகேசியின் அரண்மனை முத்துக்களை நிலா அற்றவேளையில் ஆயிரம் நிலாப்போன்று காட்சியளித்தன. நிலா அற்றவேளையில் அவைகளின் இனங்களை இங்கே காணலாம்:-

> தண்ணமர் சாலி முத்தும்
> தடங்கடல் இப்பி முத்தும்
> வண்ணவொண் பணில முத்தும்
> வரையமூ வேல முத்தும்
> கண்ணமர் கரும்பின் முத்தும்
> ககனமஞ் சீன்ற முத்தும்
> வெண்ணில வில்லாப் போது
> மிகு நிலாக் கொழிக்குமன்றே.

இவ்வாறாக மணம்புரிந்து வாழுங்காலங்களில் சிற்றரசர்களும் புலவர்களும், ஏனையோரும், வெடியரசனையும் நீலகேசியையும் "கனியிடை ஏறிய சுவையும், கர்ப்பும் பாலிடைஏறிய ருசியும், நிலவிடை ஏறிய குளிரும், செந்தேனிடைய இனிப்பும், நெருப்பும் ஒளியும் போல், பூவும் மணமும்போல் இருவரும் இளமை இனிப்புடன் வாழி இல்லறத் தேன்நிலவினில் இனிது இனிமையுடன் இணங்கி வாழ்ந்திடு" என புதுத்தம்பதிகளைவாழ்த்தினர்.

மேலும் பிறதேசஅரசர்களும், மக்களும் மேலைத்தேச கடலோட்டு வணிகர்களும் பின்கண்டவாறு வாழ்த்தலாயினர்.

" இளமையில் இன்பம் பொங்க, வாழ்க்கையதில் வளம் பொங்க, புகழும் கரையிலாக் கல்விதழைக்கவும். வாலியின் வலிமையும், விஜயனின் வெற்றியும், அரிய மக்களும், மாசறு பொன்னும், மணியும், முத்தும், வல்ல நல்லூழும், இனிமையின் நுகர்ச்சியும் பண்புடை அறிவும், நிலவின் அழகும், தோன்றுப் பெருமையும், குன்று இளமையும், நோயின்மையும், குறைவிலா உணவும் இப்பதினறு பேறும் பெற்று, ஆழியும் மலையும் போலவே வாழ வாழியென வாழ்த்தியதும்;

அன்பும் அறனும் உடைத்தாயின் — இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது! "

என்ற திருவள்ளுவரின் வாக்குப்போல இனிது இருவரும் இல்லறத்திற்கலந்து இன்புற்று குடிமக்களுடன் சிறப்புற்று ஆண்டுவந்தனர். அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியென வாழ்ந்துவரலானார்கள்.

சங்கு சக்கரமும் பெற்றாய் தரணியையாளப் பெற்றாய்
துங்கமா மவுலி பெற்றாய் துளசிநன்மாலை பெற்றாய்
கங்கெனுங் கொடியைப்பெற்றாய் காமனைத்துணையாய்ப்பெற்றாய்
பங்கய மலர்த்தாள் சென்னி பதித்திட்டேன் பதித்திட்டேனே!
(புலவர் வயிரவி இராமு)

## கண்ணகி அம்மன் பிறந்த கதை

பரராச முனிதவத்தாற் பரிந்துபெற்ற கன்னிதன்னைச்
சீராரும் சிவனருளாற் சிவலோகச் சபைதனிலே
ஆராலுங் காணரிய அருள்பதத்தைப் பணிந்துமுனி
பேராருந்தி ருவளாற்பெற்ற கன்னிதனைத் தொழுதான்.

கருணையுற்றே யப்பொழுது கற்புநெறி யுங்கொடுத்துத்
தரைமதிக்க அஞ்செழுத்துச் சக்கரமுந் தானருளிப்
பரிவான கற்புடைய பத்தினியென் றேயுரைத்து
அருளாருங் கிருபையுடன் அன்பாக வீற்றிருந்தார்.
அம்மன் பிறந்த காதைப் பாடல்கள் 43—48



பரராச முனிவரின் மகள் கற்பிலும், பொற்பிலும், அருங்குணம் கடவுள் பக்திகளிலும் சிறந்தமையால்,பூவுலகோர் போற்றும் கற்பின் மணிதெய்வமாய்ப் பிறக்கும்படி சிவபெருமான் வரங்கொடுத்தார். அக்காலத்தில் வாழ்ந்த தவப்பேறுடைய பாண்டிய மன்னன், சிவன் போல் தானும் நெற்றிக்கண் உள்ளவன் எனச் செருக்குற்றிருந்தான். இதனால் இவனின் செருக்கை அடக்குவதற்காக உமாதேவியாரும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். இவ்வேளை பாண்டிநாட்டில் ஒருவராலும் பறிக்கமுடியாத ஓர் அதிசய மாங்கனி தோன்றிற்று. அதனை யாராலும் பறிக்க இயலாது போகவே, பாண்டிய மன்னன் ஒரு முனிவரின் ஆலோசனைப்படி அதனைக் கைகளாற் பற்றினன். உடனே அக்கனி அவனின் கைகளில் நெருப்புருண்டையானதும் கனியைக் கைவிட்டான். நெருப்பின் பயத்தால் ஏற்பட்ட வியர்வையை மன்னன் அக்கரங்களாற் துடைத்ததும் அவன் நெற்றிக்கண் மறைந்துவிட,அத்தீப்பிழம்பும் மாங்கனியாயிற்று. அக்கனியை மன்னவன் தன்மனைவியிடம் கொடுக்க, அவள் பொற்குடத்தில் வைத்தாள். மூன்றும் நாள் அம்மாங்கனி ஒரு தெய்வீகக் குழந்தையாயிற்று. இதனால் வியப்புற்ற மன்னவன் சோதிடரை நாடி வேதியர்கள் கூற்றுப்படி குழந்தையை ஓர் பேழையில் வைத்துக்கடலில் இட்டான்.

"துன்று புகழ்க் கூடல் மன்னா
தொல் வினைகள் வரும் இதனால்"
(வரம் பெறு காதை 77)

கரிகாற் பெருவளத்தான் சோழநாட்டை ஆண்ட காலத்தில், காவிரிப்பூம் பட்டணத்தில் மாசாத்துவான்,[1] மாநாய்கன்[2] என இரு பெரும் வணிகத்தலைவர்கள் இருந்தனர். மாசாத்துவானுக்குக் கோவலன் எனும் தவப்புதல்வன் இருந்தான். ஒருநாள் இருவரும் துறைமுகத்தில் நின்றபொழுது, கடலில் இடப்பட்ட அப்பேழை வருவதனை மாசாத்துவான் முதலிற் கண்டதும் அது தனக்கென்றான் மாநாய்கனும் தனக்கென்றான். இப்படியாக இருவரும் வாதாடி ஈற்றில், நீர் கண்டபேழை உமக்கென்றால்,

1. மாசாத்துவான் — பெரும் வணிகன்
2. மாநாய்கன் - அதிக நாவாய்க்கூட்டத் தலைவன். (நாவாய்-கப்பல்)

அன்று ஒரு பெண்ணிற்கு5-6ஆண்கள் என்றவிகிதத்தில் இருந்தனர். பஞ்சபாண்டவர் திரௌபதையை மணந்தமையும் தாய்வழிப் பெயர் உறவுமுறையும் இதற்குச் சான்றாகும். இதனால்அன்று கற்பிற்கரசி அவதரித்தனள். ஆனால் இன்றோ ஒரு ஆணிற்கு 7–8 பெண்கள் என்றுள்ளமையால் (7 பெண்களை மணப்பது இஸ்லாம் வழக்கமாகும்) இன்று கற்பிற்கரசன் அவதரிக்க வேண்டுமோமாக!.

அதனுள் இருக்கின்றகாணுதை பொருள் எனக்கேஎன்றான் மாநாய்கன். அதன்படியே, பிள்ளைப்பேறற்ற, கண் ஒளி குன்றிய மாநாய்கனே அப்பேழையில் இருந்த குழந்தையை எடுத்துத் தனக்குக் கண்ஒளி ஊட்டியமையால் கண்ணகை* எனப் பெயரிட்டுத் தன் மகளாக வளர்த்து வந்தான்.

பருவமடைந்த கண்ணகியைக் கோவலனுக்கு மணப்பெண்ணுக நிர்ணயித்தனர். திருமணத்திற்காக விலையுயர்ந்த அணிகலன்களையும் செய்வித்தனர். காற்சிலம்பிற்கு வேண்டிய ஏனையோராற் பெறமுடியாத விலையுயர்ந்த நாகமணியானது, தென்பாலுள்ள தீவாம் ஈழத்தில் வெடியரசன் வசமுள்ளதனை மாநாய்கன் தனது கப்பற்காரர்கள் மூலம் அறிந்து சோழமன்னனுக்குத் தெரிவித்தான். வெடியரசனின் ஆற்றலிலும் படைத்திறனிலும் பொறாமை கொண்டிருந்த சோழமன்னனுக்குத் தன்நாட்டை வளப்படுத்த இச்செய்தி நல்ல வாய்ப்பாயிற்று. பெருஞ்செல்வந்தனான மாநாய்கன் பணமோ பொருளோ கொடுத்து இந்நாகமணியை வாங்கக்கூடிய ஆற்றல் அற்றவனாய் நாகதீபக் களஞ்சியத்தில் மிகப்பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள விலைமதிக்கமுடியாத இந்நாகமணியை வெடியரசனுடன் போர்செய்தே பெறவேண்டிய நிலையினை அறிந்து சோழமன்னனின் உதவியை நாடினான்.

சீரும் சிறப்புடனும் வாழ்ந்த வெடியரசன் புகழ் எண்திசையும் பரவியதும் சோழ நாட்டவர்களையும் இந்நாட்டவரின் செல்வச் சிறப்புக் கவர்ந்ததால் அவர்களும் இங்குவந்து குடியேறியமையாலும் மேல்நாட்டு வணிகர்களும் சோழநாட்டில் முத்துக்களை வாங்காது ஈழநாட்டிலேயே அதிக விலைகொடுத்துப் பெற்றதனாலும் சோழநாட்டிற் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. இந்நிலையில் இருந்த சோழஅரசனுக்கு கண்ணகியின் காற்சிலம்புக்கு வேண்டிய முத்து வெடியரசனிடம் இருப்பதை அறிந்ததும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெடியரசனுடன் போர்தொடுத்து வடஈழ ஆதிக்கத்தையும் தன்வசப்படுத்த இராஜதந்திரத்தைப் பயன்படுத்தினான். இவனே இமயம் சென்றுமீண்ட பேரரசனும் தொண்டை நாட்டை வளப்படுத்திச் சோழ ஆட்சியை விரிவுசெய்தவனுமாகும். ஆதலால் வடஈழ ஆட்சியையும் கைப்பற்ற முயற்சித்திருக்கலாம். எனவே இவன் கடல்சூழ் இலங்கையை வெல்ல மீகாமனை அழைத்துப் போருக்கேற்ற ஆயத்தங்களை இரகசியமாகச் செய்வித்ததுடன் படைபலமிக்க வெடியரசனை வீழ்த்துவதற்கு வேண்டிய உதவியைத் தென்னிலங்கை அரசர்களிடம் நாடினான்.

---

* கண்ணகை — கண் + நகை (த, வி)



துட்டகமுனு கி. மு. 161 இல் தனது தந்தையின் பிரதேசம் மகாவலிகங்கைக்கு உட்பட்ட சிறுபிரதேசம் என்றும், ஏனையவை தமிழர்களின் (எல்லாளன்உட்பட)நேரடி ஆட்சியில் இருந்தமையால் துஷ்டனாகி ஆட்சியைக் கைப்பற்றியதும். கைமுனு இறக்கத் தம்பி சதாதீசனும் பின்னர் இவன் நான்காம் புத்திரன் வலகம்பாகுவும் அரசனாகி 5ஆம் மாதம், தமிழ்ப்பிரதானிகள் படைஎடுத்து அரசனைத் துரத்தி அனுராதபுரியில் ஆண்டதும் (கி பி 103) இதைத்தொடர்ந்து வலகம்பாகு 15 வருடத்தின் பின் இராச்சியத்தைக் கைப்பற்றியதும். தமிழரும், சிங்களவரும் மாறி மாறி ஆட்சியைக்கைப்பற்றியமை நாமறிந்தசரித்திர உண்மையே. இப்படியாக ஆதிக்குடிகளானநாகர்களும் சேர, சோழர்களும் யுத்தம்செய்து மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றியது சரித்திர உண்மை. இதேபோன்று கி. மு. 20 ஆம் நூற்றாண்டளவிலும் வடஇலங்கையை ஆண்டவெடியரசனின் மூதாதையர்களான விஷ்ணுபுத்திரர்கள் வடஈழத்தின் பொன்னகர்ப் பகுதியிலிருந்து தென்இலங்கையை ஆண்ட பாதிக்கவாய என்னும் சிங்கள அரசனுடன் கடுஞ்சமர் புரிந்தனர் என்பதுபற்றியும், இவர்களின் போர் வலிமைபற்றியும் சிங்கள நூலான ''உடறட்டவிடி'' யில் மிகத்தெளிவாக அறியக்கூடியதாகையினால் தென்னிலங்கை அரசனும் வட இலங்கை அரசனும் பகைவராக இருந்தமை புலனாகின்றது. இதனால் தென்னிலங்கை அரசர்களும் சோழ அரசர்களும் சேர்ந்து வெடியரசனை வீழ்த்துவதற்கு அரசியற்சூழ்ச்சி செய்வதற்குக் கண்ணகியின் சிலம்புமணி அமைவுற்றது. சிலப்பதிகாரக் கண்ணகியின் கப்பல் வைத்தகாதையும் இதனை மெய்ப்படுத்தும்.

மணிவாங்கித் தாருமென்ற வணிகேசா நீர்சேளும்
மணிவாங்கப் போம்வழியில் வழிமறிப்பான் வெடியரசன்
மணிவாங்க மனதுமுண்டால் மரக்கலமா யிரந்தேடி
மணிவாங்க எனை விடுநீ வாங்கிவந்து தருவேனே. 105

பொன்கொடுத்துக் கொண்டகப்பல் போருக்கு மாகாது
வன்படையால் வெடியரசன் மரக்கலங்களைமறிப்பான்
முன்படையாய் விட்டுப்போக முகமொத்த கப்பல்வேணும்
என்கொடுத்தும் பலகைதேடி எடுக்கவேணும் கப்பலென்றான்
117

மாணுகர் தாமுமந்த மதிவல்லோர் முகநோக்கித்
தேனுநுஞ் சோலைசூழந் தென்னிலங்கை அரசனுக்குத்
தானுகக் கட்டிவைத்த பாகுடங்க ளுள்ளதெல்லாம்
யானுக அறியவிங்கே இயம்பிடுங்கள் நீங்களென்றார். 119

மீ. கா. பா

எனவே சோழமன்னன் அழைத்து, ஆதியில் எங்கும்கிடையாத நல்லினத் தேக்குகளும், விலைமதிக்கமுடியாத பெருமதிவாய்ந்த கப்பல் செய்யப் பொருத்தமான மரவகைகளும் இலங்கையிலேயே இருந்தமையினாலும் மீகாமனைக் கட்டுமரங்கள் பெறப் பணித்து, தென்னிலங்கை அரசர்கட்டு வரிசைப்பொருட்கள் பலவும் கொடுத்து வெடியரசனுடன் போர்தொடுத்தல் பற்றியும் கூறும்படி பணித்து முகூர்த்த நாளில் தென்னிலங்கைக்கு வழியனுப்பிவைத்தான்.

புறகிட்டுத் தூரியெல்லாம் புணரியின்மேல் விரைந்தோட
அறிவுற்றோ ரெல்லோரும் ஆய்ந்துணர்ந்தங் கேதுசொல்வார்
வெறியுற்ற தொடைமார்பன் வெடியரசன் மறிப்பனென்று
எறியுற்ற திரைக்கடலை ஈழஞ்சுற்றி யோடுமென்றார். 136

ஈழஞ்சுற்றி யோடுமென்ன எல்லோருஞ் சம்மதித்து
ஆழ்ந்துற்ற கடல்செறிந்த அடங்கலுமே சமுத்திரத்தில்
வீழ்ந்துற்ற அடவிகள்தான் மிகத்தோன்றிவிடுவதன்முன்
காழ்ந்துற்ற கடல்செறிந்த கற்கோவளம் கரைப்பட்டதே.137

பன்றித்தீவு சல்லித்தீவு பாலமுனை பாசிக்குடா
என்றைக்கா லமும்வழங்கும் ஏறுவூர் தனைக்கடந்து
சென்றப்போர் புளியந்துறை சேரப்புற கிட்டோடி
மன்றலொத்த தொடைமார்பர் மட்டக்க ளப்பில்விட்டார்.
துரியோட்டு 151

மீகாமனின் தூரி வெடியரசனின் இராஜ்ய எல்லையால் வராது களவாகக் கீழ்த்திசை வழியாகத் தரங்கம்பாடி, நாவூர், சீனக்குன்று களைக்கடந்து, இலங்கையில் செம்மலை, கொக்காலை, யானையாறு, சலுப்பையாறு, கண்டியாறு, புருமலை, சிவனார்திருமலை, மகாவலிகங்கை, யாமுனை, ஈச்சிலம்பத்தை, பன்றித்தீவு, பாலமுனை, பாசிக்குடா, ஏறுவூர், புளியந்துறை, மட்டுநகர், கண்டபாணந்துறை, பாணகை இராவணன் கோட்டை, தங்காலை, வலிகாம, காலி முதலிய இடங்களைக் கடந்து அளுத்கம எனும் ஊரில் (புதிய நகரம்) வந்திறங்கி தென்னிலங்கை மன்னனைச் சென்றடைந்து வரிசைப் பொருட்களையும் பாகுடங்களையும் வழங்கி வணங்கி நின்று தான் வந்த (நாகமணிபற்றிய) விபரத்தைக் கூறலானான்.

இவற்றைக் கேட்ட அவ்வரசனும் வடஈழ மன்னனின் படைபலத்தையும் வலிமையையும் எடுத்துச்கூறி, போதியளவு பெருமரங்களை மூன்றுதினங்களில் வெட்டிக்கொடுத்து, வடதிசைசென்று வெடியரசனிடம் அகப்படாது வந்தவழியே செல்லும்படி கூறி மீகாமனை வாழ்த்தி வழியனுப்பிவைத்தான்.



ஏற்றியே மரங்களெல்லாம் எல்லையற்ற நாள்மூன்றில்
ஆற்றில்விட்ட தூரியெல்லாம் அடைவுசெய்தோ மென்றுமிகப்
போற்றிசெய்து நின்றுசொல்வான் புண்ணியனே நாள்மூன்றில்
மாற்றமதில் லாதபடி மரங்களேற்ற முகூர்த்தமென்றார்.
தூ·கா–பா 175

இப்படியாகக் கடல்முழுதும் மரம்போலக் காட்சியளிக்கும் மரங்களைச் சோழமண்டலம் கொண்டுசென்று, வெடியரசனுடன் போரிடச் செல்லும் படைகளுக்கு வேண்டிய பாரிய கப்பல்களைச் செய்வித்தான். இவன் வடஈழத்தையும் தனதாக்கிச் சோழநாட்டை மேலும் விரிவுசெய்ய எண்ணி; வெடியரசனுடன் போரிட மறுத்துரைந்த மீகாமனுக்கு, வெடியரசனை வென்று நாகமணியுடன் வந்தால் ஒரு சிற்றூரும் அரசுரிமையும் தருவதாக ஆசைவார்த்தை கூறி, கடலெங்கும் கப்பல்களும்,வள்ளங்களும், கட்டுமரங்களுமாய்க் காட்சியளிக்க நாகமணி எடுப்பதற்காகப் படைவீரர்கள் புடைசூழ மீகாமனின் தலைமையில் பெரும் படையொன்றைக் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நன்முகூர்த்தத்தில் வடஈழம் நோக்கி அனுப்பிவைத்தான்.

## நீலகேசிகனவும் வெடியரசன் போரும்

பூவணைமேற் கண்துயின்ற போதந்தப் பூங்குழலாள்
தாவுபரி சொற்பனங்கள் தான்பெரிதாய்த் தோன்றிடவே
ஏவனைய கண்ணியஞ்சி ஏங்கியுட னெழுந்திருந்து
காவலனை கண்ணனே கடலரசே கேளுமெல்லாம்.

கடலரசே பெருமானே கண்டோரஞ்சுங் கொடையானே
வெடியரசே யிங்கரசே விழிதுயின்ற போதுதன்னில்
கொடியபெரு மாதேசங் கொடுவினைகள் கண்டேனே
துடியைவென்ற இடையாளே சொல்லுமெனச் சொல்லலுற்றாள்.

சொல்லுவாள் வாணுதலாள் துய்யமீனம் விழுந்திடவும்
அல்லுலகை விழுங்கிடவும் அவனியெல்லாம் எரிந்திடவும்
கல்லுமழை பொழிந்திடவுங் கடலேழும் வற்றிடவும்
பல்லதுதான் விழுந்திடவும் பதிவிடவுங் கண்டேனே

விடங்கடலிற் பிறந்திடவும் வெற்பெட்டும் முறிந்திடவும்
கடம்பிடியிற் பிரிந்திடவுங் கண்ணொன்று மறைந்திடவும்
கொடுந்தொழில்சேர் மதயானை கோடதுதான் இழந்திடவும்
இடம்பெரிய வெண்முகிலால் இடிவிழவுங் கண்டேனே.
க. கா. பா 8 11

கண்டனைய சொல்லொருத்தி கண்ணையெல்லாம் மிகவணிந்து
வண்டமரும் குழல்மடவார் வடக்குநோக்கிப் போய்விடவும்
கொண்டாட மன்றில்நின்ற குலவரசு வீழ்ந்திடவும்
விண்டோயுந் தீதரையில் வீழ்ந்திடவுங் கண்டேனே.

தரையில்வரும் இருளகற்றத் தானுண்ட திசையனைத்தும்
சிறுமுயல்போய்ச் சிங்கந்தனைச் சென்றுடனே பிடித்திடவும்
உறையுனையும் நின்கைவாள் ஒடிந்திடவுங் கண்டேனே
சிறையுனையே செய்திடவுந் தீவினையேன் கண்டேனே.

வினையான சொற்பனங்கள் மிகவுந்தான் கண்டதனல்
வினைவருமென் கோமானே வெடியரசே பெருமானே
வினைவருங்காண் என்கணவா வென்றியபோர் செய்தாலும்
வினைவேண்டா மென்கணவா வேறேயூர் போகாதே.

க கா பா, 12 14

அதிசயிக்கக்கூடிய தேவலோகம் போன்றதும், நிலாப் போன்ற குளிர்மையான ஒளிவீசும் முத்துக்களைக் கொண்டதும், விலைமதிக்கமுடியாதமேல்நாட்டுவாசனைத் திரவியங்களையும் பஞ்சணை மெத்தைகளையும் கொண்டதுமான நீலகேசியின் அந்தப்புரத்திலே கடலோரப் புன்னையின் பேரிரைச்சலுடன் தேனீக்களும் கீதமுரைக்க முத்துக்கள், அரசன் மார்பெங்கும் ஒளிவீச, முத்துப்பவளத்தால் அலங்கரித்த தாலி ஆபரணங்களோடு அலங்காரப் பொருட்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துக் கட்டிலில் மலைபோன்ற எழில்மிகு தோற்றத்தையுடைய வெடியரசனின் அழகிய மேனிமேல் தலைவைத்துக் கண்துயிலும் வேளையிலே ஓர் பின்னிரவு ஒரு தீய கனவு கண்ட நீலகேசி தன்கணவனிடம் வானத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து வீழ்ந்தன; உலகமெல்லாம் பேரிருள் மயமாய் இருந்து பின் அக்கினி மயமாய்த்தோன்றியது; கல்மழை பொழிந்தது; சப்தசமுத்திரங்களும் அணைகளைக் கடந்து உலகைப் பயமுறுத்தின; பற்கள் ஒவ்வொன்றாக வீழ்ந்திடவும்; நம்நாட்டைவிட்டு நாம் அகன்று சென்றிடவும்; நமது பட்டயானையின் கொம்பு முறிந்திடவும்; வானிலிருந்து இடிவிழவும்; சந்தியில் நின்ற அரசமரம் சிதறி விழவும்; சந்திரன் வானிலிருந்து பூமியில் விழவும்; இவை மட்டுமல்ல அரசே .........ம்.........ம்...... என அழுதவாறு.........உமது கையிலிருந்த போர் வாளும் முறியக் கண்டேன் என்று கதறி அழுதவாறு கூறினள்.

இதைக் கேட்ட வெடியரசன் நீலகேசியின் கனவை இகழ்ந்து, எனக்குப் பெரிய துயர் வருமென்று அஞ்சுகிறாய். என் வல்லமையை நீ முற்றும் அறிந்திலை போலும். என்னை வெல்ல வல்லார் மூவுலகிலும் இல்லை என்பதை மறந்துவிட்டாய். நீ வீணாக எண்ணி அஞ்சி



நடுங்கவேண்டாம்; நாகரத்தினம், முத்துக்கள், சிப்பிகள், சங்குகள் போன்ற விலைமதிக்கமுடியாத பொருட்களும்; மேலும் வலிமை பொருந்திய தரைப்படை, கடற்படை போன்ற படைபலங்கள் என்னிடமுள்ளதாலும் சோழநாட்டு அரசன் என்மீது பொறாமை கொண்டு மீகாமனைப் போருக்கு அனுப்ப இருப்பதாகவும் நான் ஒற்றர்கள் மூலம் அறிந்துள்ளேன் என்றும், என் படைக்கலங்களெல்லாம் ஆயத்தமாக உள்ளனவென்றும், மான் கூட்டத்துட் புகுந்த புலிபோல் அவர்களைத் துரத்தி அழித்துவிடுவேனென்றும் கீழ்க்கண்டவாறு ஆறுதல் கூறினான்.

வேறேயூர் போவதென்று மின்னிடையே யென்னசொன்னாய்
ஆறாத சொற்பனங்கள் கண்டவற்கங் கடாதுகண்டாய்
மாறாக மீகாமன் வாரணந்தான் வந்தாலும்
கூறாகக் கொன்றிடுவேன் கொடியிடையே யஞ்சாதே

கொடியைவென்ற இடையாளே கோடிநாகம் வந்தாலும்
கடுகவொரு கல்லெறிந்தாற் காகமஞ்சி யோடாதோ
வெடியரசன் என்றென்னை மேதினியோ ரறியாரோ
படியிலுள்ள எலிதிரண்டாற் பாம்பாமோ பார்மொழியே

மொழியில்நாய்சிங்கம்முன்னே முயல்திரண்டுவந்ததுண்டோ
செழுவாயின்புலியின்முன்னே திரண்டுபுல்வாய்சென்றதுண்டோ
கிளிமொழியே கற்றூணைக் கறையானும் தின்றதுண்டோ
மழைமுகில்சேர் குழலாரே மற்றெனக்கிங் கெதிரியுண்டோ

எதிர்பொருத வந்தவனை இயமபுரம் ஏற்றேனே
மதியாமல் மரக்கலங்கள் வாரியின்மேல் வந்ததுண்டோ
சதியாக வெட்டியங்கே தாழ்ப்பதுவு மறியாரோ
புதிதோதான் என்சமத்துப்புவியிலுள்ளோரறியாரோ

அறிவுடைய பட்டணத்தான் அவனேதான் வருவனாகில்
செறிவுடைய மான்திரளைச் சென்றுபுலி துரந்தாற்போல்
முறியவெட்டியவன்படையைமுனையின்முன்னேகொன்றிலனேல்
மறையவர்க்குத் தாரைவார்த்து மற்றில்லையென் றவனாவேன்

மற்றுநீ வருந்தவேண்டாம் வஞ்சியஞ்சு மிடையாளே
இற்றையிராக் கண்டகனா எல்லாம்கொடி தானாலும்
கற்றுணர்ந்தோர் சொல்லிவைத்தார் கண்டவர்க் கடாதெனவே
அற்றவர்க்கும் மறையவர்க்கும் அன்னதானம் வழங்குமென்றார்

க கா பா: 15-20

தானந்தான் வழங்குமென்னத் தார்குழலும் மனம்மகிழ்ந்து
தேனிசைந்த தாரெனவே சிந்தையெல்லாம் மிகமகிழ்ந்து
புனல்நந்து வாளைதாவும் பொய்கை தனில் மூழ்கி
வாறுகந்த மதிநுதலாள் வந்திருந்தாள் தன்முகப்பில்.

தன்ம மிகவளித்தாள் தன்னுயிரைக் கொல்லவந்த
வன்மவினைச் சொற்பனங்கள் வாராமல் — உன்னிப்
படியரசர் கொண்டாடப் பாரதப்போர் வென்ற
வெடியரசன் தேவி விரைந்து.

விரைகமழுந் தொடைமார்பன் வெடியரச னேதுரைப்பான்
அருகுநின்ற வரைநோக்கி அழைத்தோடிப் போகவென்று
திரைகடல்மேல் மரக்கலங்கள் திரிவதிப்போ துண்டோதான்
குரைசெறிந்த கடல்தனிலே குலவியங்கே பாருமென்றான்.

க கா பா 21-23

வெடியரசன் தனது கடற்படைத் தளபதியை அழைத்து, வடமுனையிலுள்ள காராளி கடற்கரைக்காவல் அரண்களை வலுப்படுத்தும்படியும், தனது கடல் எல்லையில் எதிரிகள் வருகின்றார்களா என்பதனைக் கண்காணிக்கும் படியும் உத்தரவிட்டான்.

பாருமென்ன அவர்சென்று படர்ந்தபாய் மரமிசையே
தூரமுற உயர்ந்தகொப்பிற் றொத்தியுச்சந் தனிலேறி
வீரமெல்லாம் மிகப்பெரிய வெடியரசன் ஏவலினால்
காராழி தனில்மீதே கண்ணையுற்றுப் பார்த்திருந்தார்.

பார்த்தவப்போ தூரத்தே பாய்தலைகள் தோன்றிடவே
வேர்த்துள்ளம் மிகநடுங்கி விரைவினுட னேயிறங்கி
பூத்தமலர்த் திருவுறையும் புயத்தானே வெடியரசே
நீத்தமெல்லாம் மரக்கலமாய் நிறையவந்து தோணுதென்றார்.

நிறையவந்து தோணுதென்ன நீநிபுனே வெடியரசன்
குறையறவே வேடியெல்லாம் கோடியிங்கே யென்றுரைக்கத்
துறையிலுள்ள வேடியெல்லாம் தூயவண்ணக் கொடிவிரித்து
இறைப்பொழுதில் ஆட்கள்சென்று எக்குறையுந் தீர்த்துவந்தார்

எக்குறையுந் தீர்த்துவந்து ஏறுநீர் என்றுசொல்ல
மைக்கடல் மீதுவந்த மாற்றானை வெல்வதற்குத்
திக்கிலுள்ள வீரர்களைச் சென்றழைத்து வாருமென்றான்
அக்கணமே தூதர்சென்று அனைவரையும் அழைத்துவந்தார்.

க கா பா: 24-27



இக் காவல்அரண்களிலிருந்தகாவலர்கள், தூரத்திலே பலகப்பல்களின் பாய்முனைகள் தெரிவதாகத் தளபதிக்குத்தெரிவித்தனர் இக்கனவின் நிமித்தம் அதன் விளைவுகளை எதிர்பார்த்து வெடிஅரசன் நீலகேசியிடம், வேண்டிய பிராயச்சித்தங்களையும்; அந்தணர்க்கும் இரவலர்க்கும் மிகையாகப் பொன்னையும், பொருளையும்வழங்கி; ஏனையோர்க்குத் தான தர்மங்களையும் செய்து, தம் குலதெய்வமாகிய பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாளிற்கு விஷேட அபிஷேக ஆராதனைகளைச் செய்யும்படியும்பணித்தான். அவ்வாறேநீலகேசியும் தன் கனவின் பலன் தீர மன்னவன் கூறியதற்கு மேலாகப் பயபக்தியுடன் அவற்றைச் செய்து, பொன்னகர் நாராயணனிடம் பின் கண்டவாறு வேண்டிநின்றாள்:

"வாசவா மாதவா கோபாலா கோவிந்தா
வைகுந்த மாயனே பொன்னாலை ஐயனே ஐயனே
வாடுதே மனஞ் சோருதேதேகம் நாமிதற்கென்ன செய்வேன்
சாரங்கபாணிராமா எப்போதுமுன் பாதம் மாமா
தாமதமாயிராதே யிப்போதுன் பாலனைக் காரும் மாமாமாமா"

"ராம ராம ராயா ஸ்ரீ ராமா ஆ பரந்தாமா நீர் கிருபை தாராயோ
கார்கடல்வண்ணா கமலசெங்கண்ணா காருண்ய னேயருள் நீ புரிமன்னா
காராயோ குறைதீராயோ விதோ வாராயோ வண்ணா
தாயார் முலையைப் போற் பேயார் முலை தன்னை
வாயாலிழுத்து வதைசெய்த வண்ணலே
காயாம் பூநிற நேயா நீ மறவாதே யிப்போதையா........"

(ந. பு. வ. இ.)

குறைவின்றிச் செய்த மன்னவனின் இப் பிராயச்சித்தத்தால் சிற்றரசர்களும், அரசசபையோரும், வல்லுனர்களும், புலவர்களும், பிராமணர்களும், ஏனையோரும் வந்து பாண்டியதேவன் என்று போற்றிப் புகழ்ந்து வாழ்த்திநின்றனர்.

வந்தெதிர்த்தவர் சிந்தை வெட்டவே
வல்ல நாரணன் வாரி தன்னிலே
தந்த மூலமாய் நின்ற நாரணன்
சலதி நாரணன் சமரில் நாரணன்
பந்து வன்னிய தங்கள் நாரணன்
பருதி நாரணன் சுருதி நாரணன்
விந்தை மாமயல் தங்கு நாரணன்
வெடி யரசனை வந்து கண்டனர்.

க கா பா: 28

கண்டு சொல்லவே தங்கள் நாரணன்
காலை நாரணன் கமல நாரணன்
வண்டு லாவிய தொங்கல் நாரணன்
வாரி நாரணன் மதிகொள் நாரணன்
கொண்டல் போலவே யுதவு நாரணன்
குழலை யூதியே நின்ற நாரணன்
விண்டு ஆனிரை காத்த நாரணன்
வெடி யரசனை வந்து கண்டனர்.

வெடிகள் நிகழவே கடிகொள் நாரணன்
வேலை நாரணன் காலை நாரணன்
படிக ளேழையு முண்ட நாரணன்
பரவை மீதிலே துயிலு நாரணன்
அடல ரசர்கள் தங்கள் நாரணன்
அமல நாரணன் அவனி நாரணன்
கடுகு தோள்வலை யிட்ட வீரர்கள்
கட லரசனை வந்து கண்டனர்.

கடலில் வீரர்கள் கண்ட வெம்முனை
கருது வீரர்கள் கண்ட மின்றிசைப்
பருடம் வீரர்கள் கண்டு கண்டெனப்
பகரும் வீரர்கள் கண்ட கார்தனில்
இடரும் வீரர்கள் எதிர்ந டத்தியே
எத்தி சைக்குமோர் புகழை வைத்தவர்
அடைய வார்கழ லிட்ட வீரர்கள்
அடைய வந்துகண் டருகி ருந்தனர்.

இருகை வல்ல துளகி ராசனும்
எழுதொண் ணுவிடர் துன்றி ராசனும்
மருது சாயவே தவளி ராசனும்
வங்க ராசனும் துங்க ராசனும்
விருதி ராசனும் வீர ராசனும்
மேவ லர்களை வென்ற ராசனும்
மருவ லர்களை வென்று தோள்வலை
மாலை யிட்டவர் வந்து கண்டனர்.

இட்ட பேரணி வெட்டு தேவனும்
இகலும் வீரர்கள் தங்கள் தேவனும்
மூட்டொ ணுதிடர் வெட்டு தேவனும்
உள்ள தன்புகழ் நிலவு தேவனுந்



துட்ட ரானவர் அந்த தேவனுந்
துலக்கும் பாண்டிய தேவ னென்னவே
மட்டில் லாததோர் வெடி யரசனை
வந்து கண்டடி மனம்ம கிழ்ந்தனர்.

வந்துகண்ட வீரரெல்லாம் வண்மை வெடியரசே
சிந்தைநினை வேதென்று செப்புமென — முந்தி
அடல்புனையு மீகாமன் ஆண்ட படையெல்லாம்
கடல்வினையால் வந்தெதிர்த்தார் காண்.

காணமுன்னம் வந்தவரை கடலரசன் முகம்பார்த்துத்
தூணிவென்ற வரியணைக்கத் துய்யவீர ரென்சொல்வார்
பேணிவந்த கப்பலெல்லாம் பிடியாமல் விட்டோமால்
ஆண்மைவிட்டுப் பெண்மை நச்சு அலியனும் ஆவோமென்றார்.

நிகரற்ற வெற்றியுற்ற நீடுதிறல் வீரர்சூழ
நகரத்திற் செட்டிவிட்ட நல்லகப்ப லாயிரமும்
தகரப் பொருதழக்கிச் சலதியின்மேற் கொன்றிலமால்
அகரத்தை முற்றவெட்டி அழித்தவர்கள் ஆவோமென்றார்.

அழிவுசெய்யக் கருதிவந்த அடல்புனையு மீகாமன்
எழுதரிய கப்பலெல்லாம் இக்கணமே பிடித்திலமால்
தெளிவுறுநற் றமிழாலே தெரிந்துபாடி வந்தவரைப்
பழுதுசொல்லி அகற்றிவிட்ட பாதகர்நாம் ஆவோமென்றார்.

பாவிரித்த தமிழ்வாணர் பரவுபுகழ் வெடியரசே
காவிரிப்பூம் பட்டணத்தான் கப்பலெல்லாம் பிடித்திலமேற்
பூதலத் தரசர்சோற்றைப் பெருகவுண்டு போர்க்களத்தில்
ஏவுற்றும் போர்செய்யாமல் இருந்தவர்கள் ஆவோமென்றார்.

என்றாரே வீரரெல்லாம் எனனசொல்வான் வெடியரச
நன்றாக நாமாண்ட நல்லகப்பல் உள்ளதெல்லாம்
ஒன்றாகக் கூட்டிமிக உரைத்திடுவீர் தன்னையெலாம்
இன்றேற்றி வெட்டுதற்கு எல்லோரு மேறுமென்றார்.

ஏறுமென்று சொல்லியபின் எழுதிவைத்த கணக்கின்படி
கூறுமெனக் கணக்கரெல்லாங் குடப்பணத்தை முன்குவித்து
ஆறுமாதம் படைச்செலவு அனைவருக்குந் தான்கொடுத்துப்
பாரறிய மாற்றலரைப் படைமலைந்து வருவதென்றார்.

படைமலைந்து வருவதென்னப் படைத்தலைவர் தங்களுக்கு
உடுகூறை தனைக்கொடுத்து உற்றசவ றணையுமிட்டு
விடுதிதனிற் போய்நீங்கள் விரையவாரு மென்றுசொல்லிக்
கடலரசன் அனைவருக்குங் கற்பூரவெற் றிலையுமிட்டார்.

க கா பா: 29 - 41

இது இவ்வாறிருக்க, வெடியரசன் கடல் எல்லைக்குள் பல மைல்தொலைவில், எதிரியாகிய மீகாமனின் கப்பல்கள் வருவதை அறிந்தும் கடற்படை வீரர்கள் எல்லோரையும் அழைக்க அவர்கள் அனைவரும் வந்து வெடியரசனை வணங்கிப் பணிவிடை வேண்டி நின்றார்கள். அரசன் அவர்களைப் பார்த்து, மீகாமன் தலைமையில் வரும் அத்தனை கப்பல்களையும் அழித்து வெற்றிபெறவேண்டுமெனக் கூறி போருக்குரிய ஆயத்தங்களைச் செய்து, கடற்படை வீரர்களுக்கு ஆறு மாதங்களுக்கு வேண்டியஉணவு, உடை, படைக்கலம் முதலான சகலனவற்றையும் குறைவறக் கொடுத்தான் வீரத்தளபதிகளுக்கு வேண்டிய சிறப்புக்கள் எல்லாம் செய்து, போர்க்கப்பலில் ஏறும் படி உத்தரவிட்டான்.

பின்னர் வெடியரசன் தானும் பாலடிசில் உண்டு போருக்குச் செல்ல ஆயத்தமாகி, போர் அணி தரித்து உடைவாளை நீலகேசியின் திருக்கரங்களாற் பெற்று அவளிடம் விடைபெற்றுக்கொண்டு அவனுக்கென ஆயத்தமாக நின்ற போர்க்கப்பலிலேறி ஏனைய ஆயிரமாயிரம் போர்க்கப்பல்கள் புடைசூழ போர்ப்பறை முழங்க கடலிற் பிரவேசித்தான். அப்போது மீகாமன் ஈழத்து அரசனின் படைகள் கடலில் தோன்றுவதை உணர்ந்து தன் படைத்தளபதிகளை நோக்கிப் படைகளை உசார்ப்படுத்தும்படி கட்டளையிட்டான் கீரிமலைக்கப்பாலுள்ள கடலில் தூரத்தே வெடியரசனின் போர்க் கப்பல்கள் வருவதனைக் கண்ட மீகாமன் தன் படையை உற்சாகப் படுத்துமுகமாக, மிகுந்த பயபீடத்துடன், வெடியசனையும் அவன் படைகளையும் இன்று நாம் வெல்லாமல் விடுவதில்லையென வஞ்சினம் உரைத்துக்கொண்டு முன்னேக்கினான்.

இரு பக்சத்துப் படைகளும் ஒன்றையொன்று எதிர்நோக்கின வெடியரசன் கடுங்கோபத்துடன் சினந்து மீகாமனை நோக்கி, எனது எல்லைக்குள் என் அனுமதியின்றி வந்த கருமம் என்னவெனக் கேட்டான். அதற்கு மீகாமன், தேனுறு பாயும் திருநாகநாடு செங்கோல் செலுத்தும் அரசே! மாநாய்க்கன் செட்டி மகள் கண்ணகிக்கு மறுதாட்சிலப்பு செய்யக் கோவன சோழமகாராஜன் என்னைக் குறிப்பாய் அழைத்து இங்கே மாநாக மணியை வாங்கி வாவென்று அனுப்பினரே என்றவாறு, மேலும் இக் கப்பல்கள் எல்லாம் மாநாய்கன் உடையதென்றும், தனது பெயரையும் மரபை



யும் உணர்த்தி, இந் நாகமணிக்கு வேண்டிய திறைகளையும் தரலா மெனவும் உரைத்தான். இதனைக் கேட்ட வெடியரசன், தனது எல்லைப் பிரதேசத்துள் முன் அனுமதியின்றிப் பிரவேசித்ததனால் சினங்கொண்ட சிங்கம்போல வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல கர்ச்சித்துப் பின்கண்டவாறு பாடலானான்.

வருமுறை போலவந்து மணியது கேட்பீரானால்
அருமையாய் வந்தாயென்று அவமொழி கூறமாட்டேன்
கருகலாய் மனதிலெண்ணிக் கப்பல் சேனைகள் கொண்ணந்தாய்
பொருதி நீ வெற்றி பெற்றுப் பெருமணி யெடுத்துச் செல்வாய்
[நவாலியூர்ப் புலவர் வ. இராமு. 1894 நந்தனவருடம் தை மாதம்]

என்றவாறு, போர்முரசு ஒலிக்கப் போருக்கு அணிவகுத்தான். இருவரும் பலவாறு பேசிப் பின்னர், இராம — இராவண யுத்தம் சோலவும், மகாபாரதப் போர் போலவும் நீண்ட நேரம் வெற்றி தோல்வி இன்றிப் போர் நடைபெற்றது. இப் போரில் வாள், அம்பு, ஈட்டி, சங்கு, சக்கரம் போன்ற பல ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் வெட்டியும், குத்தியும், துண்டாடியும் தாக்கினர். இதனால் நீலக் கடலானது செங்கடலாக மாறும் வகையில் ஆயிரமாயிரம் உயிர்கள் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, உடலெல்லாம் வெட்டுக் காயங்களுடன் பிணமாக இரத்தக் கடலில் மிதந்தன. இக் கடுஞ்சமரிலே வெடியரசனை வெல்ல இயலாத மீகாமன் தலைசாய்ந்தான். வெட்கித்து வேதனையடைந்து தோல்வி கண்டான். இறந்தவன்போற் கிடந்து கண்ணகிதேவியைத் தியானித்து தன் சக்கராயுதத்தை ஏவியதனால் வெடியரசன் நிராயுதபாணியாகியதும் வெடியரசனைப் பிடித்துத் தன் கப்பலிலே சிறைவைத்தான் மீகாமன்.

வந்தேனு னுங்களண்ணர் மனைவி நீலகேசரியால்
கொந்தாருங் குழல் விரித்துக் கொங்கைதனில் நீர் சொரிய
அந்தோ வென்றழுதரற்றி யாருத துயரமுடன்
வெந்து மனம் பதைந்தழுது வீழ்ந்தான் றேயுரைத்தான்

[கோ. கா. பா]

தன் தலைவனுக்கு நேர்ந்த கதியைக் கண்ட வீரனொருவன் நடுக்கடலிலே குதித்து, அங்கு மிதந்த ஒருபிணத்தைத் தெப்பமாகக் கொண்டு காரைநகர்க் கரையை அடைந்து, வெடியரசன் மனைவி நீலகேசியிடம் நடந்தனவற்றையெல்லாம் எடுத்துரைத்தான் நீலகேசி மனம் மிக நொந்து, தனது கனவின் பயனையும் சொல்லையும் பொருட்படுத்தாது மாற்றானிடத்திற்சென்று பிணிப்புண்பீரோ என அழுது புலம்பித் தலைவிரி கோலமாய்த் தரையிலே விழுந்து புரண்டு அன்புடைய என் கணவா ஐயகோ! என்றழுது, இதுவரை மாற்று

னிடம் மண்டியிடாத நீ இன்று பூவணையிற் துயிலாமற் போனீரோ வீரமுள்ள பெருஞ்சிங்கமே! வெடியரசனே! நேராகப் போர்புரியாமல் நெட்டூரம் செய்தானே மீகாமன் பாரினிலே இது சரியா என்று பரிதவித்தாள். இவ்வாறு அழுதுபுரண்ட நீலகேசி, மீகாமனிடம் சிறைப்பட்டுள்ள தன் கணவனையும் படையையும் மீட்கும் முகமாக; தன் அண்ணனான வெடியரசனை மீட்கப் புறப்படும்படி, போரிலே வல்லவனான பெரும் படையையுடைய வீரநாராயணனுக்குத் தன் தூதுவர் மூலம் அவசர ஓலை அனுப்பினாள்.

இட்டபின்பு வெடியரசன் இயல்புடனே எழுந்திருந்து
திட்டெனவே தன்மனையிற் சென்றுபா லடிசிலுண்டு
பட்டுநல்ல கச்சைகட்டி பரிந்துசீரா விடைநிறுத்தி
மட்டுலவுங் குழலாரே வாளெடுத்து வாருமென்றார்

வாளெடுத்து வாருமென்ன வண்ணநீல கேசையென்பாள்
தாளிட்ட புவியளந்து சலதியிற்கண் துயின்றபோது
மாளவிட்டாய் நிருதர்களை மாயவனே இவறகுவந்த
கோளகற்ற வேணுமென்று கொடுத்தனளே கொம்பனையாள்.

கொடுத்தவாள் தனைவாங்கிக் கொம்புசங்கு தாரையூத
வெடித்தசா மரமிட்ட வெற்றிமுத்தின் குடைநிழற்ற
அடற்பெரிய வீரர்சூழ அஞ்சாரை வெல்லவென்றே
கடற்கரையில் வந்துநின்றான் காவல்புனை வெடியரசன்

காவல்புனை மீகாமன் கப்பலோ ராயிரமும்
தாழ்வுகட லோடவென்று தான்வரவே — மேவும்
அடலரசர் முக்கியர்கோன் ஆண்ட படைசூழ
கடற்கரையில் வந்துநின்றான் காண்.

---

மகாபாரதத்திலே பாஞ்சாலி தலைவிரி கோலமாக இருந்தது போல, தன் கணவன் சிறைப்பட்டதும் நீலகேசியும் தலைவிரிகோலமானாள். கண்ணகியின் கூந்தல் குலைந்ததனால் மதுரைமாநகர் பற்றி எரிந்தது. இதனாலேயே பெண்கள் தலைவிரித்தால் அழிவு என்றனர் நம் முன்னோர். (ஆனால் இன்றோ நமது நவநாகரீக மங்கையர் நாள்பூராவும் தலைவிரிகோலமாய்த் துவிச்சக்கர வண்டிகளிற் சவாரி செய்வதனால் இன்றைய உலகில் இவ் அவலநிலை தோன்றியுள்ளதனை உணர்க). "கொந்தாருங் குழல் " என்னும் தொடர், பெண்கள் தலைவிரித்தால் அவர்களின் கூந்தல் நறுமணம் கெட்டு அழகும் குன்றுவதனைக் குறிக்கின்றது. கூந்தலுக்கு இயற்கையாக வாசனை உண்டு. கூந்தல் முடிந்து கொய்யகம் இறுகக் கட்டிய எப்பெண்ணும் வீரம், உற்சாகம் பெறுவாள் என்பது இயற்கையே!.



நின்றானே வெடியரசன் நீதிதிறல் வீரர்சூழ
ஒன்றாக மீகாமன் உருக்களெல்லாம் சூழ்ந்துவரக்
குன்றாத பஞ்சிலியைக் கொம்பிலேறிப் பாருமென்ன
சென்றேறிப் பார்த்தவனும் செப்புவான் சிலவார்த்தை.

செப்பமாகக் கீரிமலை தெரியுதங்கே அதற்கருகே
ஒப்பமான கன்மதிலும் ஓடைகளும் வாவிகளும்
துப்புலவு சோலைதனிற் துய்யமயி லாடிடவும்
எப்புறமும் வண்டினங்கள் இசைபாடத் தோன்றியதே.

தோன்றுமிந்தக் கனகிரிமேற் துப்பநவ ரெத்தினமும்
வான்றோயும் மண்டபமும் மாஞ்சோலைப் பூங்காவும்
ஏன்றபெருங் கோட்டைகளும் இரண்டருகு கிடங்குகளும்
மூன்றுலகும் புகழ்படைத்த முக்கியர்தன் பதிபாராய்.

பாரெல்லாம் படையதாகப் பரிந்துதோன்று தெல்லையில்லை
நீரெல்லாம் மரக்கலமாய் நிறைந்துதோன்று தெல்லையில்லை
போரெல்லாம் மிகவிளைப்பான் போகிலுமோ போகவிடான்
சீருலவு மீகாமா செம்மியெடாய் உன்படையை.

படைதனைச் செம்மியென்று பஞ்சிலியுஞ் சொன்னதற்பின்
திடமுடைய மீகாமன் சிரித்திருந்தங் கென்சொல்வான்
கடலரசன் என்னுடனே கன்றிவலை செய்வனாகில்
விடமருவும் வாளாலே விண்ணேற விடுப்பேனே.

விண்ணிலவன் றனைவிடுவேன் வீரருள்ளோ ரஞ்சாதே
கண்ணனைதன் அருளாலே கடல்வினையும் வாராது
எண்ணரிய கொப்புமிட்டு இடங்கணியும் பலகணியும்
நண்ணரிய பீலிகொப்பு நன்றா யிடுவதென்றான்.

இடுவதென்னப் பாய்மரத்தில் இருந்துவினை செய்வதற்குத்
திடமுடைய தளிகையிட்டுச் சிறக்கமுக்கித் தான்திருகி
முடுகநாலு பண்தனக்கு முகமொக்கச்சங் கிலியுமிட்டுக்
கடுகவாங்கு பஞ்சிலிக்குக் கதித்தசங் கிலியுமிட்டார்.

இட்டபின்பு மீகாமன் இயல்வீரர் தங்களுக்கு
மட்டுலவும் பசுங்கூட்டு வகைவகையே தான்கொடுத்தார்
வெட்டியிப்போ வெடியரசை வேடியெல்லாம் தீக்கொழுந்திப்
பட்டணமும் அழித்திடுவேன் படைவீரர் அஞ்சாதே.

அஞ்சாதே வீரரெல்லாம் ஆயுதங்கள் கொடுப்பதென்ன
நஞ்சாரும் கண்டர்தமை நன்றாக நினைத்துகொண்டு
தஞ்சான சவுரியங்கள் சலதியின்மேற் காட்டவென்று
மஞ்சாருங்கொடை படைத்தமாலுமியும் வீற்றிருந்தான். 54

மாலைபுனை மரக்கலங்கள் வருங்கடிகை தன்னையெல்லாம்
வேலையிலே பார்த்திருந்து வெடியரசன் என்சொலுவான்
காலனிலும் மிகக்கொடிய கடல்வீரர் தம்மையெல்லாம்
ஏலுமுன்னம் வளைவதற்கு ஏறுமுங்கள் வேடியிலே. 55

வேடிதனில் வீரர்சூழ வெடியரசர் போயேறி
நாடியிங்கே மணிவாங்க நாடிவழி வந்தவனை
ஓடிவெட்ட வேணுமென்று உருக்களெல்லாம பாய்வாங்கி
வாடியீடா போலடைய வளைந்துகொண்டு விட்டானே. 56

விட்டபின்பு வேடிதனில் வீரர்தம்மை முகம்பார்த்து
மட்டுலவும் வெடியரசன் மனமகிழ்ந்தங்கேது சொல்வான்
பட்டணத்தான் தனக்காகப் படைவீர ரஞ்சாதே
முட்டியவன் றனைவெட்டி முனையில்முன்னங் கொல்வனென்றான். 57

முனைதனக்குள் அஞ்சாத முட்டவல்ல மீகாமன்
கனைகடற்குள் கப்பலெல்லாம் கதித்தொக்கச் சரிந்துவர
சினமிகுந்த சிங்கம்போல சிறும்பியின்மேல் வீற்றிருந்தான்
வினையுற்று வளைத்தவன்றான் வெடியரசன் ஏதுரைப்பான். 58

உரைத்தவெற்றி மீகாமன் உருக்களெல்லாஞ் சரிந்துவர
கரைக்குலத்தார் முகம்பார்த்துக் கட்டுரைத்தான் சிலவார்த்தை
திரைக்கடலில் வெடியரசைச் செருச்செய்ய வேணுமென்று
உரைத்தவார்த்தை நின்றவீரர் ஓதுவதே நீங்களென்றார். 59

என்றுரைக்கக் கரைவீர ரெல்லாரு மென்சொலுவார்
நன்றுரைத்த வாறதன்று நகைசெய்து வீரரெலாம்
அன்றுரைத்தாற் போலவர அமர்மலைந்தோ மில்லாகில்
மன்றுதனில் வழக்கோரம் வகுத்துரைத்தார் ஆகோமோ. 60

கோமானே நீயுமிங்கு கொண்டுசென்று விட்டபோது
தேமாலை வெடியரசைச் செருமுனையிற் கொன்றிலமேற்
தாமாகப் பொரும்போரிற் றரியாமற் புறங்கொடுத்துப்
போய்வீரர் தனைவெட்டிப் பொருதவர்க ளாவோமென்றார். 61

போந்தவர்க ளிவ்வார்த்தை புகன்றிடவுங் கப்பலெல்லாஞ்
சேர்ந்தொக்கத் திரண்டுவெட்டிச் செருச்செய்ய வேணுமென்று
ஏந்தியங்கே ஏவிவிட்டான் எவ்விடைக்குந் தானெனவே
பாய்ந்தள்மணி வாங்கவந்த படவனைத்து மோடியதே. க-கா-பா 62



ஓடியபின் கப்பலெல்லாம் உளமகிழ்ந்து கொண்டாடி
வேடிதனக் கெதிர்நின்று விளம்புவான் சிலவார்த்தை
தேடியிங்கே வந்ததேதுன் தேசமெது பதியேது
நாடியுன்னை விடுத்தவரார் நானறியச் சொல்லுமென்றான். 63

சொல்லுமென்ன வெடியரசன் சொல்லுவான் மீகாமன்
மல்லமரும் திண்புயத்தான் மாஞகர் கப்பலிது
நல்லபதி புகார்நாடு நற்சோழ மண்டலங்காண்
மெல்லவிங்கே நான்போந்தேன் மீகாமனென் பேருமென்றான் 64

என்பேரு மீகாமன் யான்வருண குலத்திலுள்ளோன்
உன்காவல் தானல்லவோ உவரிசூழுலகேழும்
தென்பாகை மாஞகர் திருமகளார் மணம்முடிக்க
அன்பாக நான்போந்தேன் அண்ணாவி வழியைவிடாய். 65

வழியைவிடுவதில்லை மணிவாங்கப் போகவொட்டேன்
அழியவுனைப்பொருது ஆண்மையெலாங் கண்டடுவேன்
செழியன்நகர் தமிழ்தெரியுந் தென்புகார் மீகாமா
பொழுது புகுமளவுதன்னிற் பொருது நீர்போவதென்றான். 66

பொருவதென்றாய் வெடியரசே போர்பொரவும் யானறியேன்
திருவின்மணம் முடிப்பதற்குச் செய்யமணி வாங்கவந்தேன்
விருதரசர் கொண்டாடும் வெடியரசே பெருமானே
தருமமிது புகழுண்டாஞ் சலதிவழி விடுகென்றான். 67

விடுவதென்றான் மீகாமன் வெகுண்டேது வார்த்தைசொல்வான்
கடலரசன் என்றென்னைக் காசினியோ ரறியாரோ
கெடுகருமங் கருதிவந்தாய் கிளையோடு முனைவானில்
படைமலைவேன் மீகாமாபாயை விடாய் என்றுரைத்தான். 68

பாயைவிடாய் என்றுசொல்லிப் பதறாதே வெடியரசே
போயவனை யிப்பொழுது பொருது வெல்லக் கூடாது
சேயனைய திறலானே திறையுனக்கு நான்தருவேன்
காய்வதுவுங் கருமமல்லக் கடலரசே அண்ணாவி. 69

அண்ணாவி என்றுசொன்னாய் அடல்புனையு மீகாமா
பண்ணாரு மொழிமடவார் பணிக்குமணி வாங்கமுன்னே
எண்ணாதார் புரமதனை ஈசன்எரித் தாப்போலே
விண்ணேற விட்டிலனால் வெடியரச னல்லேனே. 70

அல்லாருங் குழல்மடவார் அணிபணிக்கு வாங்கவந்த
நல்லரவின் மணிவாங்க நாளைவழி விட்டேனேல்
எல்லையற்ற பசுநிதியம் இளைத்துவந்தார்க் கில்லையென்று
நல்லடிசில் அருந்தினவர் நானாவேன் என்றுரைத்தான். 71

உரைத்தவப்போ கப்பலெல்லாம் ஒன்றுபடத்தான்கூட்டி
திரைக்கடலில் வந்துபொரும் திறல்வீரர் சிங்கமென்ன
இரைத்தபெருஞ் சின்னோசை எத்திசையுந் தான்முழங்க
கரைக்குலத்தார் முகம்பார்த்துக் கண்சிவந்தங் கேதுசொல்வான்

கண்சிவந்து கோபித்துக் கடலரசே நீயுமின்று
பண்குலவு மடந்தையைப்போல் பரிதவித்துச் சொன்னாலும்
வெண்குலவு வீரர்முன்னே வெகுண்டுன்னைப் போர்மலைந்து
விண்குலவ விட்டிலனேல் மீகாம னல்லேனோ. 73

மீகாம னீதுரைக்க வெடியரசன் மிகவெகுண்டு
நீகாவ லாகிவந்த நீடுகப்ப லாயிரமும்
தீகாவ லாக்கிவிட்டுச் செயமுற்று விட்டிலனேல்
பேயாழி யுயிரையுண்ட பெரியோனைப் பிழைத்தேனென்றான். 74

பிழையேது மில்லாத பேகனென்னச் சங்கமென்ன
மழையாருங் கொடைபடைத்த மகாதேவர் தம்மாணை
தளைவாகச் சொன்னாலும் சலதிவழி தகைந்தவுன்னைச்
செழுவாரிக் கிரையிடுவேன் சிறியனென்றோநீ நினைத்தாய். 75

சிறியனென்று நினைத்தாலும் சிலைமுறிக்கும் சிற்றுளிகாண்
வெறிகமழுந் தொடையானே வெடியரசே மாயவன்தான்
குறியவுரு வாகியல்லோ குவலயத்தைத் தானளந்தான்
நெறியுடனே வழியைவிடாய் நின்குடலைப் பிடுங்கிடுவேன். 76

நிணம்செருக்கி வந்தாய்காண் நீதிபுகார் மீகாமா
மணந்தனக்கு மணிவாங்கி மகிழ்ந்துபோக வந்தவுன்னைக்
குணம்பெருக வுன்படையைக் கொடும்புலிதான் புல்வாயைக்
கணந்துரந்தாற் போற்றுரந்து கடலெங்கு மோட்டேனோ. 77

கடலரச னீதுரைக்கக் காகுந்தி மீகாமன்
அடல்புனையுங் கப்பலெல்லாம் அணியாகத் தான்பிடித்து
வெடியரசே போருக்கு வேணுமெல்லாம் வேடியெல்லாம்
முடுகவிட்டு அணிவகுத்து முந்தவந்து பொருவதென்றான் 78

பொருவதென்னப் பாயைவிட்டுப் போருக் கணிவகுத்து
விரைவினுடன் மீகாமன் மேலான வெடியரசன்
வருவதுநீ யென்றுசொல்லி வலித்துவந்தான் வேடியெல்லாம்
இருவரும்போர் பொருதவகை யானறிந்த படியுரைப்பேன். 79

படியோழுங் கொண்டாடப் பாரதப் போர்வென்ற
நெடியோனும் ராவணனும் நேராம் — படியேதான்
வாரிக் அரசன்முன் வண்புகார் மீகாமன்
போருக்குத் தாவிசைந்தான் போய். 80



போயே போர்எதிர்ப் பார்எதிர் புகையார் எழுவெடியுந்
தீய சொரிவெடி யுஞ்சிலர் சொரிவார் பகைபுரிவார்
ஓயா கணை மாரிகள் உருவும் படிவிடவே
ஆயா வகைஎறி கோல்கொடு அமரே சிலர்புரிவார். 81

புரிந்தூரும் பலபாம்பும் பொதித்தகூட மெடுத்தெறிவார்
அரிந்தோடச் சக்கரங்கள் அவர்விடுவார் தாரைசின்னம்
இரைந்தோட எதிர்நிற்பார் இடியென்னத் தவில்முழங்க
விரைந்தே யிருபடையும் வெம்போரை விளைத்தனவே. 82

வெம்போரி லணிவகுத்து வேல்எறிவார் சங்கெறிவார்
அம்பேவும் அவர்கள்தம்மை ஆனகல்லா லெயெறிவார்
அம்போடு கவண்கள்தன்னில் ஆனகல்லை வைத்தெறிவார்
கொம்பூத இருபடையுங் கொதித்தெழுந்து பொருதனவே. 83

கொதிக்கஎண்ணெய் தனைக்காய்ச்சிக் கோலிபுட னெறிவாரும்
மதிக்கநின்று வெட்டுவாரும் வாளுருவி எதிர்ப்பாரும்
சதிக்கவங்கே வளைதடியால் சாடியுட னெறிவாரும்
கதித்தெழுந்து இருபடையுங் கனலெனவே பொருதனவே 84

கனலெனவே இருப்புப்பாளம் காய்ச்சியங்கே எறிவாங்கி
வினைசெய்வார் மடியும்வகை வெடியம்பு விடுவாரும்
முளையில்வந்தார் தங்களைத்தான் முட்டியோடி வெட்டுவாரும்
சினமுறவே யிருபடையும் செருச்செய்யத் தொடங்கினவே. 85

தொடங்கிவரு வாரைமுன்னே தோங்கணியாற் குத்துவாரும்
நடந்துசென்று குத்துவாருஞ் சரீரங்கள் கிழிபடவே
கடந்துவைத்துக் கதையாலே காதிமோதி வெட்டுவாரும்
படர்ந்தபெருங் கல்லெடுத்துப் பாய்மரத்தி லெறிவாரும் 86

வாருமென்று சொல்லிமுன்னே மாலையிட்டு வெட்டுவாரும்
ஊதும் விருதசைய ஓடிவந்து வெட்டுவாரும்
நீரில்விழுந் தழுவாரும் நீள்குடல்கள் சரிவாரும்
பாரிலன்று பாரதப்போர் படைபொரவே நின்றனரே. 87

நின்ற போர்தனில் வீரர்க ளானவர்
நேரமேசெல்லு தென்றுஎன்று நின்றவர்
கன்றி வந்தவர் கைகளை வெட்டவே
கைக ளற்றுக் கடல்வீழ வெட்டுவர்
நன்றி தென்றுப டைபோர் செய்யவே
நகைத்து நின்று நடுங்கி யமர்செய்வார்
குன்று போலிடக் கொம்பற வெட்டியே
கொடிய பூசல் விளைத்தெழுந் தார்த்தனர். 88

ஆர்த்த போதினில் ஒட்டி யப்பப்பா
ராட்டிருஞ் சிலர் பட்டு வீழ்ந்திட
நீத்த மெல்லாம் இரத்தம் நிறைந்திட
நீடு யிர்கள் துவைத்து முழங்கிட
வேர்த் துடன்சில ரஞ்சி விலக்கவே
வேலை யெங்கும் பிணங்கள் மிதந்திட
பார்த்த னும்கண்ணன் ருனும் பொருதிடும்
பார துப்படி வந்தே பொருதனர் 89

பொருது நின்றனர் வீரர் மடிந்திடப்
புனையு முத்தணித் தாவட மற்றிட
திருகி நின்றனர் வீரர் பதைத்திடச்
செம்பொன் மாலையுந் தொங்கலும் மற்றிட
குருதி வேலைகள் தன்னை மறந்திடக்
கொடிய பூசல் மிகவும் விளைந்திட
விருதை யூதென மீகாமன் வந்தனன்
வெடிய ரசனும் வந்தே யெதிர்த்தனன்
நிருதர் தம்முடன் மாயவன் பொருதபோர்
நிகரு மென்ன இருவரும் போய்ச்சேர்ந்தார் 90

எதிர்த்து நின்ற விருதர்கள் தம்முடன்
என்று மாயவன் பொருதபோ ராமென
செருச்செய் போரினில் வீரர்க ளானவர்
செங்கை வாளது தன்னைவீ திர்த்திட
அதிர்த்து ஐயகோ வென்று விழும்படி
அஞ்சி யெங்கும் முறிந்தே வெட்டுவார்
உயிர்த்து உய்வகை யில்லையென் றோடவே.
ஒட்டி மீகாமன் வெட்டியே சென்றனன் 91

சென்றெதிர்த்தார் தங்களைத்தான் செங்கைவடி வாளாலே
கொன்றெங்கும் பிணமாக்கிக் குவலயத்தோர் கொண்டாட
வென்றுசில முக்கியரை வேடிமிகத் தான்பிடித்து
மின்றுலங்கும் வேல்விரன் மீகாம ஞர்ப்பரித்தான். 92

ஆர்ப்பரிக்கக் கடலரசன் ஆனபடை யத்தனையும்
போர்க்கிசைந்து சென்றுவெட்டப் பொருததலை போனவுடல்
கார்க்குடைசேர் கண்ணுளர் கருத்தொக்கத் தான்சரிந்து
நீர்க்குள்வைத்த போதிகைபோல் நிரம்பியங்கே மிதந்ததுவே. 93

நிரப்பிவாங்கி விடுகணையால் நீடுயிர்கள் போவாரும்
சரங்களற்று விழுவாரும் கழுத்தற்று விழுவாரும்
தரஞ்சிதறி விழுவாரும் தாளைவாரி விழுவாரும்
உரப்பெரிய சவளங்களால் ஓடிவந்து குத்துவாரும். 94



குத்தியதொங் கணியாலே கோலியொட்டி யெறிவாரும்
சித்திரஞ்சேர் திறல்வீரர் செருமுனையிற் றெதித்துவிட்ட
அத்திரங்கள் பட்டவுடன் அருள்வணிகர் தங்கள்கையின்
முத்துப்பெட்டி போலுடல்கள் முட்டியங்கே மிதந்தனவே. 95

முகந்தனிலே வெட்டுண்டு முன்னடந்து போவதல்லால்
அகந்தனிலே போயிருந்தால் அவனியுள்ளோர் சிரியாரோ
செகந்தனுக்கும் புகழுண்டாம் திறல்வீரர் பார்த்துநிற்க
உகந்திரண்டாற் போற்றிரண்டு ஒருப்பட்டு வெட்டினரே. 96

ஒருப்பட்டு முக்கியர்தான் ஒன்றுபடச் சென்றுபொரக்
கறுப்புற்றுச் சிங்கம்போற் கண்சிவந்து மீகாமன்
விருப்புற்றுத் தானுண்ட வீரர்தம்மை யேவிவிட்டு
செருப்புக்கு வண்புயத்தான் சென்றெதிர்த்துப் பொருதனன்காண்.

சென்றெதிர்த்த மீகாமன் திறமையெலாம் தான்கண்டு
நன்றுநன்று சொன்னபடி நல்லதல்ல வென்றுசொல்லிக்
கன்றிவந்து உன்னையும்நான் காவிரிப்பூம் பட்டணத்தே
இன்றுனைத்தான் போகவிட்டால் எடுத்ததுவா னல்லவென்றான். 98

அல்ல வெடியரசன் ஆண்டபடை தற்சூழ
வெல்லவெட்ட வேணுமென்று வேடியெல்லாம் முடுகவிட்டு
மல்லையொத்த திண்புயத்தான் மானுகர் தன்படையைக்
கொல்லவெட்ட வேணுமென்று கொன்றுழக்கி ஆர்ப்பரித்தான். 99

ஆர்ப்பரிக்கத் தான்கண்டு அண்ணுவி வெடியரசே
போர்க்குமே நீவலியான் பொருதபடி நன்றென்று
நீர்க்குள்வரும் வேடிஉள்ளோர் நீறுபட மாளவங்கே
கார்க்குள்இடி முழக்கமென்னக் கைகலந்து வெட்டினனே. 100

வெட்டினனே மீகாமன் மேதினியோர் கொண்டாட
பட்டனரே வீரரெல்லாம் படக்கண்டு வெடியரசன்
அட்டபக்கந் தனைச்சூழ்ந்த ஐஞ்ஞூறு வேடியுடன்
கெட்டுப்போய்த் திகைத்து நின்று கிளர்ந்தேது மதிநினைந்தான். 101

நினைந்தநினை வெல்லாம்போய் நீடுதிறல் வேடிகளும்
சினந்தீரப் பொருபடையுஞ் சேரவங்கே தோற்றுவிட்டு
அனஞ்சேரும் நடையாரே யாதவித்து நாம்போனல்
முனைந்ததேவல் பொரும்வீரர் முன்னேதான் நகையாரோ. 102

முன்னேதான் கடலரசன் மோதுகட லுருக்களெல்லாம்
கொன்னேதான் தோற்றுக் கொடியிடைபோல் வந்ததென்று
இந்நேரம் பட்டணத்தில் எல்லாரும் தானுரைப்பர்
பின்னேதான் என்குடிக்குப் பிழைபாக நகையாரோ 103

நகையாரோ பின்நமக்கு நம்குலத்து வீரரெலாம்
பகையாகப் பொரும்போரிற் பட்டாலும் சொர்க்கமுண்டு
வகையாகத் திறல் வீரர் மனமொத்து ஒன்றுபட்டுத்
தொகையாகச் சென்றுபொரத் துணிவீரே யென்றுரைத்தான்.

உரைத்தபடி நன்றென்று ஒளிமுத்தின் குடைவிரித்து
நிரைத்தபடி சவளங்களால் நெருங்க அங்கே யணிவகுத்து
கரைக்குலத்து மீகாமன் கப்பலெல்லாம் முடுசவிட்டு
திரைக்கடல்மேற் பொருகவென்று செலவிட்டான் வேடியெல்லாம்.

வேடியெல்லாம் வருங்கடுமை மீகாமன் தான் கண்டு
தேடரிய மாணிக்கந் திசழுநல்ல குடைவிரித்துக்
காடுதனில் மதயானை களிறுநின்றாற் போலேநின்று
நாட்டறிய வீரர்சூழ நன்றென்று பார்த்துநின்றான்.

நின்றப்போ வேடியெல்லாம் நிமைத்து விளிப்பளவில்
சென்றுதிறல் வீரரோடே செருச்செய்யத் தான்நெருங்கி
குன்றமிகு திசைநாலுங் குரைகடல்க ளோரேழும்
ஒன்றுபடத் தான்முழங்கி உறுபூசல் செய்தனரே.

உறுதிசொல்லி வீரர்தம்மை ஒன்று படக்கூட்டி
கறுவமர் செய்யக் கருதி—வெறிகுலவு
தார்குலவு மீகாமன் தன்படைக்குப் புக்கென்னச்
சீருலவு முக்கியர்கோன் சென்று.

சென்றெ திர்த்தவர் நின்று பொருதிட
சிந்தி யெங்கும் மணிக ளுதிர்ந்திட
வென்றி வீரர் மடிந்துவி ழுந்திட
வேலும் வாளும் இழந்தவர் பட்டிடக்
கொன்று கொன்று குருதிக ளித்திடக்
கூளி காளிகள் தொந்தோமென் றாடவே
ஒன்றை ஒன்றுகள் தள்ளவொண் ணுவகை
உற்றபூசல் விளைத்தெழுந் தார்த்தனர்.

உற்ற போரினில் ஒட்டியே நின்றிட
வோர்ச ரங்க ளுடல்க ளடர்ந்திட
எற்றி யேகுத்து வாளும் விலக்கியே
ஏவி யோடிய தாரை முழங்கிட
வெற்றி வீரர்கள் வெட்டின வெட்டெலாம்
மேலைப் பார்த்துக் கடகமாய் வெட்டுவார்
மற்றும் மற்றும் மடசி விலக்கியே
மற்றுக் காயமு மற்றிட வெட்டுவார். (110)



வெட்டு வெட்டென ஒற்றிபுட் குத்துவார்
வீரர்பாற் கார்ச்சிலை பட்டது பட்டனர்
சொட்டை யாலவர் ஒட்டியே போர்செய்து
சுருதி மக்களும் தொங்கரும் பட்டனர்
கிட்டவொண் ணுவகை முக்கியர் போர்செய்யக்
கிரிகள் போர்செய்த தென்றுகொண் டாடவே
பட்ட வீரர்கள் மட்டில்லை எங்கனும்
பாறு கழுகும் பருந்து மருந்தின. 111

பாறு தோறும் பிணங்கள் மிதந்திடப்
பதறி வீரர் முனைந்து பொருதிட
வேறு குற்றுயி ருற்ற பிணங்களை
மிக்க மீன்களு முண்டு மகிழ்ந்திட
சீறு செய்த வுரத்த மரக்கலம்
சேர வங்கவை வந்து குழம்பிட
ஊறு செய்து பொருதிடு வீரர்கள்
உடைய மீகாமன் வந்து பொருதனன். 112

பொருது நின்றனர் வீரர் மடிந்திடப்
புனையு முத்தணித் தாவட மற்றிடத்
திருகி நின்றனர் வீரர் பதைத்திடச்
செம்பொன் மாலையுஞ் செங்கையு மற்றிட
குருதி வேலைகள் தன்னை மறைத்திடக்
குடையும் வாளு மிழந்தவர் பட்டிட
அரிகள் போலவே வாளமர் செய்யவே
அடைய மீகாம னும்விழ வெட்டினான். 113

வெட்டியமர் செய்யவந்த வீரரெல்லாம் பட்டபின்பு
கட்டாண்மை மிக்க கடலரசன்— அவ்விடத்தே
தட்டேது மில்லாத தாமரைபோல் வேடிதனில்
இட்டபடி இஃதெனவே நின்றான். 114

நின்றவப்போ வேடியெல்லாம் நிமைத்துமிக விளிப்பளவில்
சென்றதிறல் வீரரோடே செருச்செய்து தான்நெருக்கி
வென்றுகொண்டு வேடியெல்லாம் வேலாலும் வாளாலும்
கொன்றிடா வகைசெய்து குதித்துப் பிடியுமென்றான். 115

பிடித்துத்தான் கடலரசைப் பெரியகொப்பிற் சேர்த்துவைக்கக்
குடைக்காரன் படுமளவுங் கூடவே பார்த்துநின்று
தடம்பெரிய திறம்புனையும் சமர்த்தர்தனில் தலைவன்தானும்
கடற்குளங்கே பயந்திறங்கிக் கரையை நோக்கிப் போகலுற்றான் 116

போசவிடா தந்தப் போரில் வெடியரசை
வாகைபுனை மீகாமன் வாள்வலியால்— ஆகமுற
ஆர்த்துப் பொருமவரை அஞ்ச அமர்மலைந்து
சேர்த்துக் கொடுவந்தான் சென்று. 117

சென்றிறங்கிப் பதிதனக்கே செய்திசொல்லப் போம்வீரன்
வென்றுசென்று பட்டாங்கே விழுந்தபிணம் தனைப்பற்றி
நன்றியுள்ள தெப்பயாக நகரிதனைத் திசைநோக்கி
அன்றுசென்று கரையேறி அவன்மனையை அணுகவந்தான். 118

அணுகவந்த வனைநோக்கி அணிநீல வேசிசொல்வாள்
சனியறவே புகழ்பூண்ட சமர்த்தர்தனில் தலைதானும்
மணியுறவே வாங்கவந்த மாற்றானும் நம்படையும்
துணிவுறவே பொரும்போரிற் தோற்றபடை யாதென்றாள். 119

தோற்றபடை யாதென்னச் சொல்லுவான் ஒருவார்த்தை
வேற்றொருவர் பிழைத்ததில்லை மீண்டுநான் பிழைத்தேனல்
ஊற்றமுள்ள வேடியெல்லாம் ஒன்னலர்கள் கைப்பட்டுத்
தேற்றமுறப் பொருப்போரிற் சேர்ப்புண்டான் உன்கணவன். 120

உன்கணவன் சேர்ப்புண்டான் உள்ளபடி தானிதென்னத்
தன்குழலை விரித்தலறித் தரையிலே போய்விழுந்தாள்
பொன்றிகழும் மேனியெல்லாம் புழுதிமிக வேபுரள
அன்புடைய என்கணவா ஆகோவென் றேயழுதாள். 121

அழுதாள் அலறினாள் ஐயகோ வென்றென்று
தொழுதாள் விழுந்துள்ளஞ் சோர்ந்தே யயர்ந்தனளே
எழுதரிய பிறையழகே எதிர்த்தபடை வெல்வதுவும்
பழுதாக முடிந்ததுவே பாவியே னெனவழுதாள். 122

பாவியேன் என்கணவா படைவீரர் பெருமானே
ஆவிபோ யுடல்கொண்டு அடியேனு மிங்கிருந்தேன்
பூவணையிற் றுயிலாமற் போவதுவோ கருமமென்னக்
காவிவிழி நீர்சொரியக் காரிகையு மழுதனளே. 123

காரியந்தான் சொன்னேன் கனவுகொடி தென்றுசொல்லி
வீரமுள்ள செருச்சிங்கமே வெடியரசே யென்கணவா
நேராகப் போர்செயாமல் நெட்டூரஞ் செய்தானே
பாரிலிது திறலோவென்று பரிதவித்தங் கேயழுதாள். 124

பரிதவித் தழுதாலும் பார்மொழியே நீயுமிப்போ
இயல்வார்த்தை சொல்லாய்நீ யென்றுசொல்லித் தலைத்தாழும்
உலாவுத்த புகழ்சேருங் காகுந்திமீ காமனொடே
சலாபித்துக் கொள்ளுகைக்குத் தப்பிக்காள் விடுவதென்ன. 125

# வீரநாராயணன் வரலாறு

செம்பொன்முடி பளபளென்னச் செங்கையில் வாள்
வெம்பரியின் மீதிலேறி வீரதேவன் தோன்றினனே
மேதினிக்கு வீரமுள்ளான் விண்ணவர்க்கு நேசமுள்ளான்
நீதிநெறித் தாழ்வுமில்லாம் நிச்சயமாய்த் தோற்றினனே
சங்கு கொம்பு ஊதிவரத் தவின் முரசு கூடிவர
எங்கு மன்னர் தேடிவர ராசராசன் தோற்றினனே
தங்கரத்தினத் தொங்கல்வரத் தரள சந்திரக் குடைகள் வர
மங்கலங்கண் மறையோர் பாட மகிபன் சபை தோற்றினனே

(ந.பு.வழி.)

இலங்கை, இந்தியா, பர்மா ஆகிய நிலப்பரப்பின் பெரும்பகுதியை நாகர் ஆண்டனர். "நஞ்சுறைவன் பற்கள் கொடு நாகரின் மைந்தர் மிஞ்சவரு போகவதி மேவுநகரத்தே.[1] என்ற பாடலில் நாகர் தலைநகரை இராமாயணத்திற் காணலாம். கி.மு 13ம் நூற்றாண்டினருகாமையில் கங்கைக்கும் யமுனைக்குமிடையே நாக அரசுக்கள் இருந்ததாக மகாபாரதத்திலிருந்து அறிகிறோம். தொடர்ந்து இலங்கைத் தீவின் வடக்கு, மேற்குக் கரைகளில் வல்லமை பொருந்திய நாக அரசுகள் நிலவியதென்பதனைச் சரித்திரங்களில் காணலாம். நாகர் தீவும், நாகர்கோவில்களும் இக்கருத்தினை உறுதிப்படுத்துவனவாம். 1800 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அமராவதிச் சிற்பங்களிலும் பாதிமனிதனும் பாதி நாகமாயும் அமைந்த நாகர் உருவங்களின்[2] சிலைத்தவுகள் சென்னை அரசியற் கண்காட்சிச் சாலையில் அன்றைய தொன்மைத் தமிழ் நாகர்களின் சிறப்பை வெளிப்படுத்தும். கி.மு மே நூற்றாண்டில் நாகதீபத்தை "வீரமகோதரன்" என்ற நாக அரசன் ஆட்சி (மகாவம்சம்) செய்ததனைத் தொடர்ந்து இராசர்குலாம் நிரம்பிய வீர அந்திரியராக நின்ற முகுளிநாகர் பரம்பரையில் நாராயணன் தோன்றினன். இவன் தன் வீரத்தின் திறமையால் "வீர நாராயணன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்று மாவீரன் வெடியரசன் கீழ் தொல்புரம் என்று விளங்கும் நிலப் பிரதேசத்தை இராசதானியாகக் கொண்டு இன்று கொட்டையாவத்தை என்ற இடத்தில் மாபெரும் மையக் கோட்டையும், கிழக்கில் யானைப்படைக் கோட்டையும். தெற்கே வட்டுடை அணிந்த போர்வீரர்கள் அடங்கிய கோட்டையும், மேற்கே "மிருமஞ்சிமலை" என்று இன்றைய வேரப்பிட்டியில் (வீர நாராயணன் பிட்டி) மண்வீரர்கள் அடங்கிய புழுதி மணற்பிட்டிக் கோட்டையும்

1. Griffith's Ramayana IV 205, Indian Antiquary, Vol8 p-5
2. Archaeological Survey of Southern India, Vol,-1

வடக்கில் நெல்லியான் என்ற இன்றைய பகுதியில் நெற் களஞ்சி யக்கோட்டை கொத்தளங்களையும் அமைத்துவீரஅரசனாக ஆண் டதுடன், வெளிநாடாம் மாந்தை நகர் உட்பட அல்லிராணியின் ராச்சியமாம். சிலாபம் வரைபடை ஆதிக்கத்தையும், படை பலங்களையும் கண்காணித்தும் வரலானான்.

அல்லிராணியின் ஆட்சிப்பிரதேசமான புத்தளம், அரிப்பு,கிலா பம் பகுதிகளில் சேர, சோழ, பாண்டிய நாட்டவர்கள் வந்து கள வாக முத்துக் குளிப்பதையும். பொன்னாவெளிப் பகுதியில் யானை பிடிக்க வந்த கண்டி அரசனின் ஏவலர்கள் கிராஞ்சி குடிமக்களைப் பகுதிக் குடிமனைகளுட் புகுந்து குடிமக்களைத் துன்புறுத்திய செய் திகளைக் கேட்டுச் சினங்கொண்ட வீரநாராயணன் தளபதி இளஞ் சிங்கனின் படைகளுடன் மாந்தைநகர் விரைந்து "ஆட்டுப்பட்டியி னுள் புகுந்தசிங்கம் போன்று களவாக முத்துக்குளிப்போரையும் கண்டி அரசனின் ஏவலர்களையும் விரட்டியடித்தும் ஏனையோரை கைது செய்தும், அக்கடலிலே முத்துக்குளிப்போரைக் கொன்று வந்த இராட்சதக் கடற்பன்றியையும் கொன்று அவ்வூர் மக்க ளின் ஆசீர்வாதங்களையும் வரவேற்பக்களையும்" மாவீரன் என்ற விருதையும் பெற்றான் பின் மாலைப் பொழுதினில் அரிவியாற்றில் நீராடச் சென்றபோது அற்றின் நடுவே பொற்சிலை போன்ற எழில் அழகு ததும்பும் வட்டமுகம், அதில் இருந்த கருங் கயல் விழிகள் அங்கே துள்ளி விளையாடிய கயல் மீன்களின் கண்க ளிலும் பிரகாசமாயிற்று முத்துப் போன்ற பல்வரிசை அதன் மேல் அமைந்த இளஞ் செந்நிற உதடுகள் முத்துப் பற்கட்கு ஒளி கொடுத்துப் பிரகாசித்தன. கருமலர்க் குழலாள் தோகை கருமேகத்தில் வட்ட முழுமதியொன்று நின்றது போன்ற முகக் காட்சியும், உறைத்தமிர்தமே பொதிந்த ஒளிமுத்தப் பவளம் போல் நீராடும் துகிலிடையில் விண்மிகப் பரந்த இளமுலைகள் புடை பெகந்து வனப்பளித்துச் சிறந்த முத்து இரண்டும் முனைக் கோட்டின் பிரகாசங்களை அள்ளி வீசுவது போல் இளம்முலைகள் புடைபொந்தன. நாகர் முடிமேல் இருக்கும் நல்லபாம்புகளும் ஆதிசிவன் முடியமர்ந்த பாம்புகளும் ஒருங்கே வந்து பல்லாயி ரக் கருநாகங்கள் படம் விரித்தாடுங்கால் அப்படப்பாங்குபோல் கொடியிடையாள் இயற்கைக் கருங்கூந்தல் நீள் தோகைகள் பொருந்திய முறையும் அவை நீரில் அடர்ந்து படர்ந்ததனால் நீல நிற அற்று நீர்களும் கருநீல மயிலின் தோகை போன்று கூந்தல்கள் காட்சியளித்தன. நீரில் மூழ்கி எழுந்ததிறன் ஆயிரம் செந்தாமரை போன்ற தோழிகள் மத்தியிலே தடாகத்து நடு நின்ற வெண்தாமரை போல் பூமகளோ அல்லது நாமகளோ



அன்று பூவுலகத் தேவதையோ எனக்கண் இமையாது பொருந் தின வீரநாராயணன் விழிகள். காலைக் காட்சிப் பொருள் கொடுத்த ஆதவனும் மறைந்தான் மழை முகிலினுள் ஆற்றை அலங்கரித்த வெண் செந்தாமரைகளும் தங்கள் அழகு எழிலை ஒருமுறையேனும் இவன் பாதத்திலனே என்று வாடித் தலைசரிந்து நாணங் கொண்டன. துள்ளியோடிய கயல் மீன்களும் வெட் கத்தில் பாரினுள் புகுந்தன. அலங்காரமாக ஆங்காங்கே அமர்ந்து அழகுபடுத்திய அன்னங்கள்,கொக்குகள், நிறக் குருவிக் கூட்டங்கள் யாவும் தங்களை ஒருவரும் ரசிக்காததனால் பறந் தன. இயற்கை அழகும், இழம் காற்றும், காலைக்காட்சிகளுமே இயற்கைக்கு மருயின இத்தனை காட்சிகளும் ஒருவர்மாறி ஒரு வர் கண்களினூடே உட்செல்லாது அவரவர் ஒளி ஓவிய உரு வங்கள் மட்டும் தோன்றின, உணர்வுகள் ஒத்தன மெய் மறந்த னர் தோழியர் இருப்பதனை உணர்ந்தனர் முறைமச்சான் என்று முகம் மலர்ந்து நீராடலை நீத்து எழுந்தாள் அந்த எழுகையில் அவளின் எழுதரிய முழுவண்ண வடிவத்தினையும் கண்டுவிட ஆத வனும் கிழக்கே தோன்றி வஞ்சியிடை இயற்கை அழகுகளின் தோற்றம் இடையே வந்த ஒளிக்கதிர்கள் துகிலிடையே கருநா கம் படம் விரித்தாட அதன் சக்கரக் கலம் நோன்றுவது போல் இடை அழகினை இயைந்த காட்சியைக் கண்ணுற்றான். மேற்கில் நின்ற வீரநாராயணன் முழுவண்ண வடிவத்தையும் மனதில் உட்கொண்டவளாய் உள்ளமெல்லாம் உருகி நிலைதர்கி நின்றான்.

அவள் உருவெளித் தோற்றத்தைக் கண்டுநிலை தளருகின்றான் உருவெளியைத் தொட்டுத் சடவ நினைக்கின்றான் பிணங்கினை யென்று வருந்துகிறான். விரைவிலே மணந்து கன்னி முலையிலே காவியம் வரைவேன் நான் பணர்ந்து இளைப்புறும் மென் திரு மேனிகளில் ஆகாய கங்கை நீர் படிகின்றனவே அவள் அவய வங்களில் எல்லாம் தாமரை மலர் எனவண்டுகள் கனதனங்க ளைச் சுமந்தோ திருவுருவம் தளர்கின்றதே, என ஏங்கிநின்றான். கண்ணுற்ற சந்திரவதனை கீழ்க்கண்டவர்.

கொங்கு விம்மு கோதை யோடு கோதை தாழ வாண்முகம்
பங்க யத்தை மற்றோர் பங்கயத்து வைத்த பாண்மையோ
லங்கை சேர்த்தி மைக்க ணிலவாவி—சிந்த வைகிய
மங்கை யென்மு லைத்த டத்துமாரன் வாளி யேவினன்.
செப்பு நேர்மு லைக்கண் வேனில் வேடொடுத்த தேயல
ரப்பு மாரிகாம வெம்மை செய்ய வாத்தலாமையா
லெப்பு விக்கும் வேந்தே முற்க டற்ப டிந்து மீண்டுமால்

வெப்பு நோயர் நீரின் மூழ்கின் வெம்மை யாறு மேகொலாம்
மைம்ம றந்த நீல வொண்கண் வார்பு னற்சொ ரிந்தியாழ்
கைப்ப றந்த கூட லெண்ணி மெல்வி ரல்கள் கன்றின
பொய்ப்பால் வெம்மு லைதத் டங்க லந்து றந்த பூமறந்
தம்மெ லோதி சோர்ந்த துள்ள மார்வ மோட ழிந்ததே.
மழைமை தர்க்கண் முலைகள் செய்ய மார்ப ணைத்து மென்மைநே
ரிழைபு கப்பெ றுது விம்மி யோர்வ றக்க வர்ந்ததாற்
கழைகு ழைத்து மார னெய்த கணையி னுள்ள மூடுபோய்
நுழைவ தற்கி டம்பெ றுது நொய்து நைத்து மீனுமால்.

(கைக்கிளைப் படலம்)

கொங்கு வாசனை கூந்தலின் விசித்ததும்ப முகம், உள்ளங் கை, உதடு, மைகண், மெல்முலைகள் ஊடாகவும் செப்புப்போல் பிரகாசம் ஏறிய முலைகளும், மேல்விரல்கள் நிகக்கண்களும், மென் முலைகனிடங்களானவை ஆபரணங்களை நீக்கும் நிலையிலும், உள்ள மானது ஆர்வமொடுகூடி ஆசைப்பட நினைந்துகொடியிடையுறுண்டு பிணைந்து கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னுப்பட்டவளாய் இவ் அத்தனை உள் உறுப்புகள் வழியாகவும் சூரியனைக்கண்டவெண்ணை போல் மன்மதன் வீர நாராயணனின் எதிர்ச்சிக்கண்பார்வையில் உள்ளம் உருகி அன்பு அலைகளாக, அன்பு அம்புகளாக, அம்பு மாரிகள் சொரிந்து சுரம் ஏறியது போல் காமக்கடலில் குளித்த சுரம் போல் சூடேறி மறுபடியும் நீரினுள் மூழ்கி எழுந்தாள். சந்திரவதனை. இம்மைமறந்த நிலையில் அவனும் நோக்க அவளும் நோக்க ஒத்தன உள்ளங்கள். இடையே தோழிகள் உணர்ந் தனர். மெய்மறந்து காதல் வானிலே பறந்த இருஉள்ளங்களையும் பூவுலகிற்கு எடுத்து வந்தனர். நிலையுணர்ந்த சந்திரவதனை தோழி யர் புடைசூழ நீராடி முடித்து வீரத்தால் வெற்றி வாகை சூடிய வீரவேந்தா வருக! யாபன்னன் வெடியரசன் தம்பியே வருக! இராக்கதப் பன்றியை வென்று வெற்றி வாகை சூடிய மாவீரனே வருக! வருக! என வாழ்த்தி அல்லிக் கோட்டைக்கு ஆனந்தமாக அழைத்துச் சென்றனர்.

சிலாபத்திலே அரிப்பு என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே இன்றும் காட்சியளிக்கின்ற அல்லிராணிக் கோட்டைகளும்கரங் கங்களும் அன்று எத்தகு எழில்மிகு மாளிகை என்பது புலனாகும். அத்துடன் அல்லிராணி முத்துக் குளிக்கும் பகுதியாம். வங்காலை தொட்டு குதிரைமலை வரை ஆண்டுவந்தவள். முத்துக் குளிக்கும் மக்கள் தலைவியான இவளிடமே எங்கும் கிடைக்கமுடியாத பவள முத்துத் தேர் இருந்ததென்றும் இந்தியாவில் பவளராணிக்கு இத்தேரை எடுக்கவந்த அர்ச்சுனன் இத்தேரைக் கொண்டு



போக நினைந்தபோது அது சேற்றினிற் புதைந்து அல்லிராணி யின் வழித்தோன்றலாகிய முதலிநாகர்கட்கே தான் ரதம் என்ப தனை உணர்த்தியதும், அருச்சுனன் புதைபுண்ட இடத்திலேயே இம்முத்துப் பவளத்தேரை விட்டுச்சென்றான் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் உள. அப்படியான அல்லிராணியின் வழித் தோன்றலாகிய சந்திரவதனை வீரநாராயணனின் வீரத்தை மெச்சிப் பகைவரையும், இராட்சதப் பன்றியையும் அழித்த தற்கு கைமாற்றுப் பரிசாக மணம்முடித்துவைக்க முற்பட்டனர். ஆனந்தம் கொண்ட இளம்வேங்கை முதல்வனும் அண்ணனிடம் ஓடோடிவந்து நடந்தவற்றைக் கூறி முறைப்படி விவாகம் செய் யத் தன் கருத்தை வெளியிட்டான் வீரநாராயணன். வெடியர சன் சற்று நிதானத்துடன் கொள்ளைக்காரரைக் கண்டிக்கப் போனாய், ஊர்காவல்செய்யப் போனாய், இராட்சதப் பன்றியைக் கொன்ற நீ கொள்ளையுமடித்தாய் அல்லவா உனக்குஎன்ன தண் டனை தெரியுமா? என்று உரைத்ததும் அண்ணனுக்குப் பயந்த தம்பி ஒன்றுமறியாது ஏங்கிநிற்க நீலகேசி (அண்ணி) உடனே நீர் சந்திரவதனையின் உள்ளத்தைக் கொள்ளையிட்டீர் அதற்குத் தண்டனை திருமணம் என்றதும் எல்லோரும் நிலை உணர்ந்து முறைப்படி முறைப் பெண்ணான சந்திரவதனையை நன் முகூர்த் தத்தில் ஊரார், உறவினர், அரசர்கள் வாழ்த்தத் திருமணம் செய்து மாந்தை ஈஸ்வரனையும் வணங்கிப் பவளத் தேரினில் தொல்புரம் வந்தனர்.

அங்கு இன்று மாளிகை அடைப்பாக வழங்கும் இடைப் பரப்பில் மாளிகை அமைத்து இன்றைய வீராவத்தை என்னும் இடத்தில் இருவரும் உலாவும் பூந்தோட்டத்தினையும் அமைத்து பொன்னகரிலே இருந்த குலதெய்வமாம் விஷ்ணுவை வணங்கி அண்ணன் காரைநகரில் எழுநிலை மாடம் அமைத்ததுபோல் பொன்னகர் விஷ்ணுமூர்த்திக்கு எழுநிலை மாடக் கோபுரத்தை யும் அமைத்துப் புனருத்தாரணம் செய்வித்தான். இச்செய்தியை யாழ்ப்பாணச் சரித்திரம் (பக் 6ல்) ஆசிரியர் உறுதிப்படுத்தியது டன் இப்பெயர்கள் இன்றுவரை பாவிக்கப்படுகின்றது. மேலும் விபரங்கட்கு இந்நூலில் தொல்புரம் தலைப்பை நோக்குக. இப்படியாக ஆட்சிசெய்து அன்று பௌத்த சமயம் அறுதுபோல் எங்கும் பரவும் காலகட்டத்தில் எமது சைவசமயத்தைக் காப் பாற்றுவதற்காக அண்ணி நீலகேசியினூடாகச் சேதுபதி மகா ராஜாக்களிடமிருந்து சிறந்த வைஷ்ணவ சைவக் குருக்களையும் தருவித்து நித்திய பூஜைகளையும் திருவிழாக்களையும் ஏற்படுத்தி மக்கள் பிறசமயத்தை நாடாது சைவம் தழைக்கப் பாடுபட் டான்.

தம்பிக்காள் என்றுசொன்ன சமரதனில் நீர்தாமும்
தம்பிக்காள் விடுகிலும்நீ தாலிதன்னைத் தருகிலும்நீ
நம்பிப் பொரும்வீர நாரணன்பாற் போகிலிப்போ
வம்பிற்போ யுங்களண்ணர் வளைப்புண்டா ரென்றுசொல்லாய்.

சொல்லாய்நீ எனக்கேட்டுத் தொங்காமல் எழுந்திருந்தான்
எல்லாருங் கொண்டாடு மிருமஞ்சி மலைநோக்கிக்
கல்லான நெஞ்சுடையான் கடலுக்கஞ்சாத் திறல்வீரன்
வில்லாண்மை நாரணனும் வேட்டைக்கென்று புறப்பட்டான்.
க.கா.பா126—127.

ஒருநாள் வேட்டையாடுதலில் வல்லவனான வீர நாராயணன் தனது கைகளுக்கு பயிற்சியும், ஓய்வுநேரத்தைக் களிப்பதற்கும் எண்ணி தென்புறமாகச் சென்று வட்டுடை அணிந்த கோட்டைக்கருகாமையில் உள்ள இன்றைய கொட்டைக்காடு என்னும் கோட்டைக்காட்டினில் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் நீலகேசியின் தூதுவன் அவசரஅவசரமாக வந்து வணங்கி நீலகேசி கொடுத்த ஓலையைக் கையளித்ததுடன் நடந்தவற்றைக் கூறிநின்றான்.

வேட்டைகொண்டு புறப்பட்ட வீரநா ரணதேவன்
ஓட்டத்தில் வருமவனை உற்று அங்கே பார்த்துநின்று
வாட்டத்தில் வந்தாய்நீ வந்தபடி செப்புமென்னப்
பாட்டுற்ற புகழானே பகரவினிக் கேளுமென்றான். 128

கேளுமியல் மாலுகர் கிளர்ந்தகப்பல் ஆயிரமும்
வாளரவின் மணிவாங்க வரும்வழியிற் றிரண்டுசென்று
மூள அமர் செய்துவந்து முகரியிலே படையனைத்தும்
தூள் எனவே படக்கொடுத்துத் தோற்றான் காண் உங்கள்
(அண்ணன் 129

தோற்பதுமொன்றறியாத தொல்புகழான் வெடியரசன்
போற்றரிய வேடியெல்லாம் பொருதுதோற்றுக் கைப்பட்டுக்
கார்குடைசேர் மீகாமன் கைகளிலே போர்முனையிற்
சேர்ப்புண்டான் உங்கள்அண்ணன் செய்திசொல்லவந்தேன்காண்

செய்தியிது வென்றபோது சிந்தையெல்லாம் மிகத்தளர்ந்து
எய்தியதோர் கோபமுடன் இயல்வீரன் என்சொலுவான்
மைதவழும் வெற்பளவும் வளர்ந்த அப கீர்த்திப்பேர்
வெய்யஅப கீர்த்தியிது விளைந்ததுவே யெனவுரைத்தான். 131

விளைந்தபுகார் மீகாமன் வெம்போரில் நம்மையிங்கே
வளைந்துகொண்டு கட்டுகைக்கு மடந்தையரா யிருந்தாரோ
உளன்றோ அண்ணர்தம்மை ஒஞ்சாதே எய்தவனை
களந்தனக்குட் கொன்றிலனேல் கடலரசன் தம்பியல்லேன். 132



கடற்புவியிற் புகழ்படைத்த கடல்வீரர் தங்கள்முன்னே
அடற்கரிய மீகாமன் ஆண்டபடை யத்தனையும்
படப்பொருது களந்தனிலே பருந்தருந்த விட்டிலனேல்
இடத்தில்வைத்தார் அடைக்கலத்தை எடுத்தவனான் ஆதவனே.

ஆகமெல்லாங் களிகூர்ந்து அரவின்தலை மணிவாங்கப்
போகவென்று வந்தவனைப் புணரியின்மேற் கொன்றிலனேல்
யோகமது செய்துகொண்ட மெல்லியல் வீட்டிருக்கையிலே
தோகையர்பால் மனதுவைத்த சுணையில்லா னாகேனே. 134

சுணையறவே செய்துவந்து தொல்புகாரில் மீகாமன்
அணியனைத்துங் கொண்டவனை ஆகாச மேற்றேனேல்
துணிவினுடன் தானுண்ட சுவாமிபட்டப் பார்த்திருந்து
அணுகவந்து சமர்த்துரைத்த அநும்பாவி ஆகேனே. 135

சந்திரோதய வதன வட்டலட்சுமி நிதஞ்சார் வீரநாராயணன்
றனைநிந்திட வெழுது வாசகமதேடுதனிற் சகலகுண செல்வநிறையுஞ்

சுந்தரநிறைந்த காவேரிசூழ் பட்டினத்துறை மருவுவர்த்தகர்க்குத்
தூதாக மீகாமனுகநகரனுகியே துணிவிலுன்னண்ணர் தம்மை
அந்தமுறு நாகமணி யாரியெனக் கேட்கவேயவர் மறுத்திலை
யென்ன

வடல்கொண்ட சேனையையகற்றி வெடியரசனையமர்க்களத்திற்
பிடித்தான்

சித்தை மகிழ்வாகவே மைந்துறநீர்வந்து சேனை தனை வெல்ல
வேணுந்

செப்பரிய வாசகங் கையெழுத்தோலை திரு நீலகேசியவளே.
(ந.பு.வ.இ)

அண்ணன் சிறைப்பட்டான் என்றதும் வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் ஆகிய அட்டதிக்கு நாக அரசர்கட்கும் தலைவனான என் தலைவன் மீகாமனிடம் அடங்கினானே. நானும் போருக்கு வருகின்றேன் என்றதும் போர் அறம் போதித்து என்னைத் தடுத்துப் போருக்குச் சென்றீரே என் அண்ணா! எனரங்கி நின்றான். அட்டதிக்குப்பாலகர்களான இந்திரன், அக்கினி, இயமன், வருணன், வாயுதேவன் நிருதி, குபேரன், ஈசானன் எனக்கு அடங்குவர். தேவாதி தேவர்களின் வரங்களையும் பெற்று நாராயணனின் வலது காலில் உதித்த அண்ணன் இப்பட்டணத்து மீகாமனிடம் மண்டியிட்டானே! எஞ்சாது எய்த மீகாமனைக் கொல்லாவிடில் அடைக்கலப் பொருள் தீண்டிய அரும்பாவியாகேனே, சுணையில்லாத

மரமாகேனே, ஒரு நொடிப் பொழுதில் கொல்றிலனேல் நான் மாவேந்தன் வெடியரசன் தம்பியல்லேன், என்றவாறு வீராவேசத்துடன் தனது மாளிகையடைப்பிற்கு விரைந்த வீரவேங்கை ஒலிக்கட்டும் வீரச் சங்கு நாதம், ஒலிக்கட்டும் நம்வீரமுரசு புறப்படுங்கள் போர்,போர்,போர் புறப்படட்டும் எமது ரத சஜதுரக பரதாதிகள் மீகாமனையும் அவன் படைகளினதும் தலைகளைக் கிள்ளி எறிந்து சூறை ஆடிவிடுவோம் எனக்கட்டளை பிறப்பித்துச் சதுரங்கக்கோட்டை. வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள சஜரத துரக பரதாதிகளைப் போருக்குப் புறப்பட உத்தரவிட்டுத் தானும் போர்க்கோலம் பூண்டு, பாலடிசில் உண்டு, தேவி சந்திரவதனாவிடம் விடயத்தைக்கூறி அவள்திருக்கரங்களால் வீரவாளைப் பெறும்வேளை, அவள் தான் கண்ட தீய கனாவுற்றிப் பின்வருமாறு உரைக்கலானாள். "பூனைக் கண்ணன், புனைக்கண்ணன்,செங்கண்ணன்" ஆகியோரால் எமது பொன்னகர் விஷ்ணுவாலயம் மாறிமாறி இடிக்கப்படவும்;பட்டத்துயானை சரியவும்: கற்பாறைகள் பிளக்கவும்; ஏழுகடல்வந்து விழுங்கவும் கனாக்கண்டேன். வயிற்றிலுள்ள. எமதுகரு பூவுலகைக் காணும்வேளை அப்பா எங்கேயென்றால் என்சொல்வேன் தலைவா! இன்றிருந்து நாளைபுறப்படலாகாதா! என்று அழுது என் செய்வேன்! போகாதே போகாதே!என்கணவா! பொல்லாத சொற்பனங்கள் நானுங்கண்டேன் எனக்கதறிவீழ்ந்தாள்.இதைக் கேட்ட வீரநாராயணன் சிரித்து."நீஉன் வயிற்றிலுள்ள. சிசுவிற்காகப் பலப்படுகிறாய் ஆனால் எனக்கோ என் நாடும் மக்களுமே பெரிது. ஒருகை விரல்போல் ஒன்றியிருந்த ஐவரில் அண்ணன் சிறைப்பட்டிருக்கையில் எமது உள்ளம் துடிப்பதை நீ அறிந்திலை போலும்" எனக்கூறவும். அங்கே போர்முரசு கேட்டதும் அவசர அவசரமாய்தேவியிடம் விடைபெற்றுப் போர்ப்பல்லக்கிலேறினான் போருக்கு ஆயத்தமாகநின்ற வீரர்களுடன் பொன்னகர் நாராயணனைத் தரிசித்து, அந்தணர்க்கும் புலவர்கட்கும் ஏனையோருக்கும் தானதருமஞ்செய்து கீரிமலை, பயிலிட்டிப்பகுதிகளை ஆண்ட தன்தம்பிமார்க்கும் அவசரசெய்தி அனுப்பி தன் பட்டத்து யானைமீதேறிப் போர்வீரர்கள் புடைசூழக் காரைதீவிலுள்ள நீலகேசியின் அரண்மனையை அடைந்தான். அங்கு துயர்தோய்ந்திருந்த அண்ணியிடம் இலக்குவன் சீதைமேல் கொண்டிருந்த பாசம்போல, அண்ணனைச் சிறைமீட்டுவருவாதாக ஆறுதல்வார்த்தைக்கூறி, வியாவில்ஐயனாரை வழிபட்டு, அங்குள்ள இருமிலஞ்சி மணற்கோட்டையில் பணையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு வேண்டியபடைக்கலங்களுடன போர்முரசுமுழங்க போர்வீரர்களுடன் போர்க்கப்பலேறிப் போருக்குப் புறப்பட்டான் வீரநாராயணன். முகில் கூட்டம் போன்ற படைநாவாய்களுடன்



அருமையுற்ற திறல்புனையும் அடல்வீர நாரணனுந்
திருவிருக்கும் தன்முகப்பில் சென்றங்கே தானிருந்து
விரைவிலிப்போ படைபொரவேவேணும்நம் படையனைத்தும்
வருவதற்குப் புறப்படவே மகிழ்ந்தூது மென்றுசொன்னான். 136

சொல்லுமெனப் புறப்பாட்டைத் தொங்காம லூதிடவே
எல்லையற்ற படைவீரர் எல்லாரும் வந்துகண்டார்
மல்லையொத்த புயத்தானும் மற்றவரை முகநோக்கிக்
கல்லையொத்த நெஞ்சுடையீர் கட்டுரைக்கக் கேளுமெல்லாம் 137

கட்டுரைப்பேன் என்வார்த்தை கடலரசன் றன்னைபங்கே
முட்டிமீகா மன்வெட்டி முகரியின்மேற் படைபொருதிச்
செட்டிவிட்ட கப்பலின்மேற் சேர்த்தவனும் கொடுபோனான்
வெட்டிவிடு வித்துவர விரைவில்ஏக வேணுமென்றான். 138

வேணுமென்று சொன்னபோது வீரருள்ளோ ரேதுசொல்வார்
தாணுவாம் வெடியரசன் றனைப்பிடித்த மீகாமன்
காணமுன்னே நிற்பானாகிற் கடற்கரைதான் ஓட்டிலமேல்
ஆணல்லா தவருடனே அமர்மலைந்தோ மேவமென்றார். 139

என்றாய சொல்லுரைத்த இயல்வீரர் முகம்பார்த்து
வென்றாய புகழுடைய வேடியெல்லாம் முடுகவிட்டுச்
சென்றேறிப் பொருவதற்குத் தீர்த்துநீர் ஒருவார்த்தை
குன்றாத குடப்பணத்தைக் கூசாம லேகொடுத்தான். 140

கொடுத்தினிய வகைபெற்றுக் குலவுபுகழ் வீரரேறித்
தடம்பெரிய வேடியெல்லாம் சமுத்திரங்கள் தான்நிறையப்
புடத்துடனே தானோட்டிப் பின்பிடித்துத் தான்சென்று
கடற்குள்அவன் பொருநிடத்தேகல்லு விட்டான்வேடியெல்லாம்

கல்லுடைய நெஞ்சுடையான் காவல்புனை வெடியரசை
வெல்லஅமர் செய்து விடுவிக்கச் — சொல்லரிய
வீரநா ரணன்சிறந்த வேடியெல்லா மொன்றுவிடப்
பாரவா ரத்தில்விட்டான் பாய். 142

ஒப்புதற் கெண்ணி யிராமபா ணந்தான்
ஒன்றுநா றாயிரம் ஒட்டினாற் போலச்
செப்ப மதுகூ மேழுபதி னென்பதுஞ்
சென்று பருத்தித் தீவுகடந் தோடி
வைப்பாரும் வேலைக் கடல்மீள வென்று
வங்கப் பரிமாற வண்ணமேற் கொள்ளக்
கைப்பால மிட்டவூர் காவற் றுறையும்
கடற்காரை தீவுங் கடந்தோடி னாரே.

காதபொன்று தான்கடந்து கப்பல்எல்லாம் வருமளவில்
மோதுகடல் தனில்மேலே முகில்போலே தோன்றிடவும்
ஏதெதிரே தோற்றுகின்ற தென்னவென்று கேட்டிடவும்
ஓதுமொருபஞ்சிலியும்உருக்கள்வந்துதோன்றுதென்றான். 200

உருக்கள்வந்து தோன்றுதென்ன ஒன்னலர்கள் ஆர்ப்பரிக்கத்
திருத்தமுறச் கடல்மீது திரளாக வருகுதென்றான்
கருத்தமைந்த வீரரெல்லாங் கலங்காதே வாருமென்ன
பெருத்ததிறற்கப்பலெல்லாம்பிடித்துவாறதென்றுரைத்தான்.

அதுமேலே பிடித்துச்செல்லும் அவ்வளவில் முன்னாகவே
புதுமையுள்ள வெடியெல்லாம் போதவிட்டு வளைந்துகொண்டு
அதிகோபத் தானெழவே யடல்புனையு மீகாமன் 202
சதியாக மறித்தவனுன் தம்பியடா வெடியரசே.

தம்பியென்று மீகாமன் தான்உரைக்க என்சொலுவான்
வம்பினால் வந்தவனோ மற்றெனது தம்பியோதான்
எம்பிதான் போயிருப்பான் இருமிலஞ்சி மலைமீதே 203
துப்பிழவ மென்றவற்குத் தோற்கநா னறியேனே.

நானறியேன் என்றுசொல்ல நன்றிபுனை மீகாமன்
தானுமங்கே மனமகிழ்ந்து சாற்றலுற்றான் சிலவார்த்தை
கானமருந் தொடையானே கடலரசே யுன்தம்பி 204
ஆனவனே யாமாகில் ஆண்மைக்குத்தாழ் வில்லைகண்டாய்.

ஆண்மைக்குத்தாழ் வில்லைகண்டாய் அடலரசே யுன்தம்பி
வாய்மைக்கும் வீரனென்பான் வழிமறித்தல் எல்லையினால்
வீண்மைக்குஞ் சொன்னதல்லால் வெடியரசே மேலாகப்
பூணித்த வன்றனைநீ போகச்சொல் லுறவாயென்றான். 205

உறவுசெய்து போகச்சொல்லி உன்னை நான் கொண்டுபோனால்
மறையவர்கள் கொண்டாட மானாகற் குங்காட்டி
இறைப்பொழுது தாழாமல் இங்கேக விடுவேன்எனச்
சிறைசெய்தேன் உன்னையொன்றுஞ் சிந்தியாதே வெடியரசே. 206

சிந்தியாதே யென்றபோது திறல்புனையும் வெடியரசன்
எந்தனுடை தம்பியாகில் எழுதுவேன் ஓலையென்று
வந்ததுவும் மிகநல்லது வாங்கிப்போகை கருமமென்று
வெந்திறல்சேர் வெடியரசன் விரைவிலோலை எழுதிவிட்டான். 207

விட்டோலை யம்புசென்று வேடியிலே விழும்படிக்குச்
பட்டியம்பு தனைச்சேர்த்துக் கடுகெனவே வில்எடுத்து
கிட்டாடையில் ஒக்கவாங்கிப் பதறாமல் ஒருவன்நின்று
தொட்டுவிட்டான் அம்புசென்று தொங்காமல் விழுந்ததுவே. 208



விழுந்தோலை யம்புசென்று வேடியிலே விழும்படிக்குச்
செழும்புகழ்சேர் அண்ணாவி திருமுகமென் றேபோற்றி
தொழும்பரிசைத்தொழுதெடுத்து தொட்டேவாசித்துக்கொண்டு
செழுந்தியெண்ணெ சொரிந்ததுபோற் சீறியவன் என்சொலுவான்

சொன்னதுவும் மிகவழகு தொல்புகாரில் மீகாமன்
தன்னையும்நான் போகவிடேன் சமுத்திரத்தைச் சென்றுழக்கிப்
பின்னையண்ணன் சிறைவிடுத்துப் பெரும்புகழ் எய்தேனென்றால்
என்வீரம் அழகியவாறென்றுபின்னை என்சொலுவான். 210

மீண்டுநான் போறவனோ மீகாமன் றனக்கஞ்சி
மூண்டவனைப் பொருவனாகில் முட்டவெட்டி யமர்மலைந்து
பாண்டவர்செய் படுகளம்போற் படையனைத்தும் விட்டிலனேல்
ஆண்டவனைப் படக்கொடுத்து மீண்டவர்க ளாகேனே. 211

ஆவனைய கைபடைத்த அண்ணாவி சிறைவிடுத்துப்
போவதன்றி மீகாமா போகவிடேன் எனச்சீறிக்
கோபமுடனெழுதிக் கோர்த்துமீள வெய்துவிட்டுத்
தாவுதிறல் வேடிவிட்டுத் தக்கவீரன் தான்வளைந்தான். 212

வீரநாரணதேவன் வெடியரசன் தன்சிறையை
வீரியமே செய்ய விறல்எண்ணிப்— பாரில்
வளைந்தபுகார் மீகாமன் வந்தகப்பல் எல்லாம்
வளைந்துகொண்டான் வாரியின்மேல் வந்து. 213

வந்தவெடி யுள்ளதெல்லாம் மதியாமற் கப்பலிலே
முந்தவிட்டுப் போர்செய்ய முகமொக்கத் தான்பிடித்துச்
சந்தமுற்ற திண்புயத்தான் தக்கவீரன் தான்வளைக்க
விந்தைவைத்த திண்புயத்தான் வீரநாரணன் பொருதான். 214

வீரநார ணன்பொருது வெற்றிசெய முக்கியர்கோன்
போரிலது வாற்றாமற் புறங்கொடுத்துக் கெட்டோடி
வாரிமீதி லும்பிறகே வகையாக வணிவகுத்துப்
பாரும் விண்ணும் நடுங்கப்படைபொரத் தொடங்கினரே. 215

வில்வ ளைத்தனர் மேதிக் குழாமென
மேக தாரைபோ லம்மைச் சொரிந்தனர்
கல்லெ டுத்துக் கவண்கொண் டெறிந்தனர்
காடு போலச்ச வளம் நிரைத்தனர்.
வல்லெ றிகோல்வ ளைதடி யீட்டிகூர்
வாங்க ருவாள் மருவுகோல் சக்கரம்
எல்லெ டுக்கெதிர் வாளும் பரிசையும்
எடுத்தி ரண்டுப டையுமெ திர்த்ததே. 216

கோல கால மெனவே டிசளுங்
    கொடிய பாருவ ளையுந் தடிகளுங்
கால மென்னக் குறன்சம்பு மனலிற்
    காய்ச்சி யெறிய வெள் ளீடமுங்
கால மேயவன் பாய்மரம் பஞ்சிலி
    காய்ச்சி யெண்ணெயுங் கல்லு மெறியவே
ஏல காலன்ப டைக்கல மானவை
    எடுத்தி ரண்டுடவ டையுமெ திர்த்ததே. 217

மின்னி லுற்ற இடிமு ழங்கவே
    மேக தாரைவி ருதுகொம் பூதவே
துண்ணெ னத்தவில் மத்தளம் பேரிகை
    சுறுநாகம் வெண்கலம் மல்லாரி சேகண்டி
டண் ணுக் குள்ளே சின்னமென் றெண்ணியே
    டலடல வாச்சி யங்கள்மு ழங்கவே
எண்ணி லொப்பில் எனப்பல வாயுதம்
    எடுத்தி ரண்டு படையுமெ திர்த்ததே. 218

படைமுறிய வேலெறிவார் டண்டெறிக்க வெட்டிடுவார்
இடியப்பு விடுவாரும் எண்ணெய்காய்ச்சி யெறிவாருங்
கடிதுடனே கல்லெறியக் கால்தறிந்து விழுவாருந்
தடிகள்கொண்டு பொருதுமிகத் தாக்கியமர் மலைந்தனரே. 219

தாக்கிவரு வீரர்தம்மை மத் தலையுருள எறிவாரும்
ஏற்கவே பஞ்சிலியை யெடுப்புண்ண விடுவாரும்
வாக்குடைய கிறிசுகளை மார்புருவ எறிவாரும்
போக்கறவே இருபடையும் பொருதுநின்று ஆர்ப்பரித்தார். 220

மரக்கலத்தின் நிழற்கீழே மஞ்சிலியை யறுப்பாரும்
உரைத்தபடி தலையோட்டில் ஓடிவந்து வெட்டுவாரும்
திடுக்கிடவே சுக்கானைச் சென்றறுத்து விடுவாரும்
பரக்கவைத்த பரிவாரப் படையிரண்டும் கொதித்தனவே. 221

பட்டு வந்த சரத்தைக் கவுண்களிற்
    பறித்து வீசிச் சுழற்றி எறிந்திட
மட்டில் லாததோர் சேனைமடிந்திட
    வாரி யெங்கும் இரத்தம் நிறைந்திட
கொட்டி யாடியே கூளியுங் காளியுங்
    குருதியுண்டு மிகவும் குளித்திட
அட்டை யாடியே அந்தியும் பட்டது
    ஆதவ னுங்குட பாலைய டைந்தான். 224



அடைந்து குடபாலில் ஆதவனும் போய்மறைய
புடைந்துபொரு வீரரெல்லாம் போர்வாங்கித்—திடம்பெறவே
மீகாமன் தன்படையும் வீரநார ணன்படையுந்
தீயநா வாய்களின்மேற் சேர்ந்து. 225

அளியுடனே மனமகிழ்ந்து ஆனசீனி கற்கண்டுடன்
தெளிவுறவே இளநீருந் தேனுமாக அருந்தியபின்
எளிபொருந்து குங்குமமும் இனியசவ்வா துங்கொடுத்து
பழுதறவே வெற்றிலையும் பாக்கும்படைத் தேகொடுத்தான்.

திரிபுரத்தைச் சிவன்எரித்த செயல்போலே யவன்படையைப்
பொரவெரித்துப் பொருமளைபிற் போகாமற் கொன்றிலமேல்
கரைபுரளப் பெருகிமிகக் கதித்தோடு மாற்றில்நடு
விரைவிலவர் இசைந்தவகை விட்டவர்கள் ஆவோமென்றார். 230

எழுந்துபொரு வதுகண்டு இயல்வீர நாரணனும்
செழுந்தரள வெண்குடைக்குள் சிங்கமென வேசீறி
உழுந்துருளு பொழுதுதன்னில் உருக்கமெல்லாம் நெருங்கவிட்டுச்
செழுந்தீயென வேவெகுண்டு சென்றுவீரர் பொருதனரே. 232

வீரர்பொ ரும்போரில் வெண்சங்கு விடுவாருந்
தாரைவாரி யுள்ளோடிச் சரந்தொடுத்து விடுவாரும்
தீரமெல்லாம் பிணமாகச் சென்றுபெரும் பூசல்செய்து
பார்வாரம் தனில்மிகவே படைபொருது நின்றனரே. 233

கருவிட னிகரென வருகணை யுடனே
    கடுவொடு வெடிசுடர் விறல்வாளுங்
கொடுகொடு படையிடு குடையிட வே
    குரைகடல் ஒலியென முரசதிர
நெடுமணி கலமிசை யுடனெழ வே
    நிரைநிரை பணியொடு விற்பரிபோய்
விடுவெடி யரசனை விடுவி டென
    வெட்டினன் வீர நாரணனே. 238

வெட்டின வாள்கொடு பரதவர் சேனையை
    வெண்ணெயு டைத்தது போல்நிலையத்
தட்டின மானவர் கப்பலை விட்டமர்
    சாய்படை சாய்பலை யாழியுற
நெட்டென வாயுதங் காடென வெங்கும்
    நிரைத்தணி யிட்டற வான்முரசம்
கொட்டிட மிகுவிரு தூதிட வார்த்தனர்
    கொக்கரித் திட்டனர் முக்கியரே. 239

பரிசைக ளைச்சிலர் தூளெள வெட்டுவர்
படையினில் வேடிகள் சிலவு மெரித்தனர்
திரைகடல் முட்டவே பிணமு மிகுத்தது
திறலது கெட்டுறு கொடிக ளறுத்தனர்
வரைகள் எதிர்த்தென விரைவொடு வெட்டினர்
வகைவகை சவளம் மணித்திரள் கேட்டது
குருகுல முற்றவர் குணவழி முக்கியர்
குறைவற விப்படி வெட்டின ரே. 241

வெட்டிமிக வார்ப்பரித்தார் வீரநார ணன்படையும்
பட்டுலவு மீகாமன் றன்படை யும்—இட்டவணி
சரிகுலை விட்டடியே சம்மதித்துப் போர்மலைந்தான்
விரிகடல்மீ காமன் வெகுண்டு. 242

வெகுண்டிரண்டு படையும் மிகவும்யுத்தஞ் செய்துநிற்க
குகன்குலத்தில் வந்துதித்த கொற்றவீர நாரணனும்
செகம்புகழப் பொருவேனென்று சிந்தையுள் நினைந்துகொண்டு
மனமகிழ்ந்து மீகாமன் மரக்கலங்கள் அடுக்கவிட்டான். 243

தனித்துவெட்ட வாருமென்னத் தரியாமல் வந்தெதிரே
வினைத்திறஞ்சேர் புவியிரண்டும் மிகவும்யுத்தஞ் செய்துநிற்கச்
சினத்தசிங்கம் இரண்டுதான் சென்றுயுத்தம் செய்ததுபோல்
சனத்திறல் மீகாமன் கப்பல்தன்னை அடுக்கவிட்டான். 245

கப்பல்தன்னை அடுக்கவிட்டுக் காவலன் மீகாமன்
செப்புவான் இருவோர்க்குஞ் செருமுனைந்து பொருப்போரில்
ஒப்பமாக வெட்டாமல் ஒவ்வொருவ ராகவெட்டி
இப்போதே தந்தவற்கு ஏதுவெற்றி சொல்லுமென்முன். 246

ஒட்டிநின்ற தல்லாது உற்றவனும் ஒருகாயம்
வெட்டஇட மில்லாமல் வீரநார ணன்வெட்டத்
தொட்டெதிரே நடந்துசென்று தொங்காமற் பொருதிடவே
வீட்டுப்போய் மீகாமன் மிகத்தளர்ந்து தோற்றனனே. 251

தோற்றுப்போய் மீகாமன் துயரமுற்றுக் கப்பலிலே
ஆற்றுமற் போய்விழுந்தான் அணியக்கட யாலளவும்
வேற்றொருவர் ஒவ்வாத வீரநார ணன்படையும்
சாற்றரிய வெற்றிகொண்டு தான்மிகவும் ஆர்ப்பரித்தான் 252

ஆர்ப்பரித் ததுகண்டு அடல்படையு மீகாமன்
சீற்றஇயல் நாரணன்முன் சென்றுநின்றங் கேதுசெய்வான்
போர்க்கிசைந்துபொருப்போரில்புறங்கொண்டார் வீரருள்ளோர்
கார்க்குமிந்த வாளைவேண்டிக் கன்றிக்காய்ந்து வெட்டினனே.253



கன்றிமீ காமன்வெட்டக் காத்துவீர நாரணனும்
நன்றுநீ பொருவதென்று நடந்துசென்று கட்கம்வெட்ட
நின்வாளை நீட்டஅதை வெட்டவென்று மென்றுவெட்ட
சென்றுபட்டக் கையும்வாளும் தெறித்துடனே வீழ்ந்ததுவே. 354

தெறித்துக்கை வீழ்ந்திடவே திறல்வீர நாரணனும்
மறித்துமற்றக் கைதனிலே வாளெடுத்து நடந்துசென்று
தெறித்தஅவன் வாளெடுத்துச் சென்றுயுத்தம் செய்துநிற்கப்
குறித்தபுகழ்ப் பரவதனைக் குறித்தோட வெட்டினனே. 255

வெட்டினன் வெட்டினுக்கு மீகாமன் ஆற்றாமல்
அட்டமேறிப் பத்தினியார் அருளைஉள்ளே நினைந்துகொண்டு
சுட்டுருவும் படியாகச் சூரன்என்னும் வேலெடுத்து
விட்டான்வீர நாரணன்மேல் விரைந்துசென்று பட்டதுவே. 256

பட்டவேல் தனைப்பிடித்துப் பார்த்துவீர நாரணனும்
வெட்டியெதிர் பொருவோமென்று மீகாமா வந்தெதிர்த்துத்
தொட்டெதிரேபோர்செய்யாமற்சோராயஞ் செய்துகொண்டாய்
இட்டபடி எனக்கிதுவோ என்றுவீர நாரணன்பட்டான் 257

சிங்கத்துக் கொப்பான திறல்வீர நாரணனைச்
சங்கொத்த வாளாலே தாமறுத்து மீகாமன்
வங்கத்திலே யிருந்துவந்து வண்மைவெடி யரசன்முன்னே
இங்குற்ற தம்பியர்தாம் இந்தாரும் என்று வைத்தான். 259

வீரநாராயணனின் படைகள் கடலிற் பிரவேசிக்கும் வேளை, மீகாமனும் அவன் படைகளும் நாகதீபத்தில் பெற்ற நாகமணியுடனும் வெடியரசனுடனும், ஏழாற்றுப் பிரிவு வழியாக கைதல் தீவு, பருத்தித்தீவு, எழுவைதீவு, ஊர்காவல்தீவுகளைக் கடந்து கடற்காரைதீவு தென்மேற் பகுதியை நெருங்கும்வேளை; கார் முகில் திரண்டு வருவதுபோல—இராமாயண வானரப்படைகள் போல, ஆயிரமாயிரம் கப்பல்களில் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் சகிதம் வீரநாராயணன் எதிர்கொள்வதைக் கண்டான் மீகாமன். அவன் தோற்றத்தையும் படை வலிமையையும் கண்டு அச்சங்கொண்டு வெடியரசனின் தம்பியே தன்னுடன் பொருதவருகிறான் என்பதையுணர்ந்து, வெடியரசனிடம் பின்வருமாறு கூறலானான். "உமது தம்பியைச் சமாதானப் படுத்தித் திருப்பியனுப்பினால், உம்மை எனது தோழனாக ஏற்று மாநாய்கனிடமும் சோழ அரசனிடமும் அழைத்துச் சென்று வேண்டிய பொன் பொருள் தந்து உறவு கொண்டாடி. மீண்டும் உமது நாட்டிற்கு அனுப்பிவைப்பேன்" என்றான். உடன்சமா

தான ஓலை எழுதி, அதனை அம்பில் குத்தி வீரநாராயணனின்
கப்பலில் விழும்படி எய்வித்தான் மீகாமன். இதனை எடுத்து
வாசித்த வீரநாராயணன் நாகம்போற் சீறிச்சினந்து பரிகாசம்
செய்து, ''எமது நாட்டெல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து
என் அண்ணனைச் சிறைப்பிடித்தவனைக் கொல்வேன்'' எனச்
சூளுரைத்தான். மான்கூட்டத்தில்புகுந்த புலிபோல்எதிரிகளுட்புகு
ந்தான் இருபகுதியினருக்குமிடையேஉக்கிரமானபோர்மூண்டது.
பல்லாயிரம் போர் வீரர்கள் வீரமரணம் எய்தியதால், கப்பல்கள்
நகரமுடியாத அளவுக்குக் கடலிற் பிரேதங்கள் மிதந்தன. இத
னல் தனது படை வலிமை குறைவதையுணர்ந்த மீகாமன், இரு
வரும் தனித்தனியே போரிடுவதே தர்மமெனக் கூறினன். மிகுந்த
தெய்வ பக்தனும் விஷ்னு புத்திரனுமாகிய வீரநாராயணனும்
இவ்யுத்தத்திற்கு இணங்கி இருவரும் தனித்து நீண்டநேரமாகச்
சமர் புரிந்தனர். இருவரும் பிரயோகிக்கும் பாணங்கள் ஒன்றை
யொன்று மோதும்போது ஏற்படும் உராய்வு ஒளியானது ஆத
வனிலும் கூடிய பிரகாசமாக இருப்பதுகண்டு ஆதவனும் கார்
முகிலினுள் மறைந்து கொண்டான். அப்போது வீரநாராயண
னுக்கு ஈடுகொடுக்க இயலாத மீகாமன் பின்னடைந்தான். பின்
னடைந்து இறந்தவன் போல் வீழ்ந்து கிடந்தவாறு, வீரநாரா
யணனுடன் போரிட்டு வெல்ல இயலாது என்பதையுணர்ந்து
தன்தெய்வமாகிய கண்ணகி தேவியை நினைந்து வேண்டினன்.
கண்ணகியின் அருளால் வீராவேசத்துடன் எழுந்து சூராபா
ணத்தை ஏவினன். அது வீரநாராயணனின் மார்பைப் பிளந்தது.
உடனே மீகாமனின் போர்வீரர்கள் வீரநாராயணனின் உடலைத்
தமது கப்பலிலேற்றி வெடியரசனுக்குக்காட்ட, அவன் தனது
தம்பியையும். கையிழந்து, காலிழந்து, தலையிழந்து கடலிலே
மிதந்த பல்லாயிரம் போர் வீரர்களையும் நீலகேசியின் கணவின்
பலாபலனையும் எண்ணிக் கலங்கியவனுய்க் கதறினன்.

முன்னேதானுப் லைவக்க முகத்தினிலே மோதிக்கொண்டு
மின்னரே வெல்லவல்ல வீரநாரணன் தம்பி
பொன்னுடு தனையாளப் போனீரோ பூதலத்தே
என்னுணை இவையாளப் பாரீரோ வெனவழுதான்.

ஆரொட்பார் உன்சமர்த்துக் ககிலதலத் துள்ளோர்கள்
வீரியத்தால் மிகப்பெரிய வீரனல்லால் வேறுமுண்டோ
காரொத்த கொடையானே கடல்வீர நாரணனே
சீரொத்த வான்நாடும் சென்றீரோ வெனவழுதான். 262



அழுதழுது நாவுலர்ந்து ஆறாத கண்ணீரும்
புழுதிபட மேனியெல்லாம் பொருமியுள்ளந் தடுமாறி
எழுதரிய மேனியனே எம்பியரே எண்ணமெல்லாம்
பழுதுபட்டு விட்டதுவோ பாவியேன் எனவழுதான். 263
பாவி எனக்காகப் படைகூட்டி வந்ததுவும்
ஆவியே யென்னை நம்பி அந்தரத்தே பட்டீரோ
காவிசேர் விழிமடவார் தன்கனவு கொடியதென்று
பூவணையிற் றுயிலாமற் புணரியிலே துயில்வீரோ. 264
துயிலுவதும் இப்படியோ தோழியர்கள் வஞ்சகமோ
அயிலெடுத்து எறிந்துகொல்ல அந்தரத்தே பட்டீரோ
சயிலமற்ற மனிதரைப்போல் தம்பியின்றி வாழுவதும்
கயலுற்ற கண்ணிழந்தார் காசியினில் வாழ்வதொக்கும். 265
காசினியில் வாழலாகும் காரிகையைத் தேடலாகும்
வீசுபுகழ் பொன்னும்முத்தும் மிகமிகவே தேடலாகும்
ஓசையுடன் மாற்றலரை ஒடவெற்றி கொள்ளலாகும்
தேசமெங்கும் தம்பியரைத் தேடவொண்ணு தெனவழுதான்.
தேடிவரு வேனுனும் திறல்வீர நாரணனே
கோடிழந்த யானைபோலும் கொம்பிழந்த மந்திபோலும்
வாடுகின்றேன் தம்பியரே மதியிழந்த வாழுனேன்
ஆடுகின்ற நெஞ்சுகொண்டு ஆறேன்நான் எனவழுதான். 267

இவ்வேளைதன் தலைவன் வீரமரணம் எய்தியதைக் கேள்வி
யுற்ற சந்திரவதனு போர்க்களம் ஓடி வந்து கணவன் உடலைத்
தன்மடிமீது எடுத்து என்கனவு மெய்யாகியதே எனக்கதறி
அழுது புலம்பி மன்னவன் மடிந்தபின்னும் நான் உயிர் வாழ்
வேனே எனக்கூறி அவ்விடத்திலேயே உயிர் துறந்தாள்.

---

கண்ணகிதேவியின் வரலாற்றை அறிந்த இளங்கோ சிலப்பதிகா
ரம் என்ற பெரும் காப்பிய நூல்மூலம் பாரத நாட்டிற்குச் சொந்
தமாக்கியதுபோன்று ஈழத்து யாழ்ப்பாண அரசனன ஜெகராச
சேகரன் என்னும் கவிராச பண்டிதன் (கிபி 1370—1417) கண்
ணகி வழக்குரைக்காவியம் செய்தான் இதனை ஈழத்தில் மட்டக்க
ளப்பில் கண்ணகி வழக்குரை என்றும், முல்லைத்தீவில் சிலம்புகூறல்
என்றும், யாழ்ப்பாணத்தில் கோவலனர் காதைஎன்றும் வைகாசி
மாதங்கள் தோறும்கண்ணகி ஆலயங்களில்பாடிக்கொண்டாடுவர்
இக்காவியத்தில்வரும் வெடியரசன்போரடங்கிய கடலோட்டு
காதை, அம்மன் பிறந்த காதை, துரியோட்டு காதை, கப்பல்
வைத்த காதை, மணி வாங்கியகாதை,மாதவி அரங்கேற்றுகாதை
வழிநடை காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை,
வழக்குரைத்தகாதை, குளிர்ச்சிக்காதையாவும் அடங்கும்.

# விளங்குதேவன் வரலாறு

முன்னவன் றனக்குப் பின்னவனானேன்
முடிந்தது கேட்டே யெழுந்து வந்தனனே
கண்டவரஞ்சிக் களைத்தவரிருக்கக்
கடிதினி லெழுந்து சபையில் வந்தனனே
மன்னவன் றனக்கு மன்னவனான
வாள் விளங் கென்னுந்துறை வீதிவந்தனனே.

"தேர்கொண்ட மகுடமுடிராசாதிராசர்கள் செயஞ் செயமெனச் செப்பவே செங்கோல் செலுத்தியே மங்காத வாழ்வுபெறு செயற்றினையறிந்திடாமல்...''பார் கொண்ட சோழனும்,

உலகத்தில் கல்நிலமெனக்கருவுற்று நின்ற மலைநிலம் கன்னியாற்று நீரொடு மண் நிறைந்த பூமியாயிற்று. இம்மண்ணில் மண்டியெழுந்த கருப்பொருள்களின் மன அறிவுப்பொருள் மாந்தனாவன். அந்த மாந்தன் தன்மன அறிவால் மொழிந்தமொழி அந்தக் கன்னியாற்று நிலமொழி என்றனர். அக்கன்னி நில மொழியின் சனிவால் அதனைக் கன்னித் தமிழ்மொழி என்று மேலும் அம்மொழிக்கு அடைகொடுத்து ஆனந்தமுற்றனர். அந்த ஆனந்தமான கன்னித் தமிழ் 0மாழி அந்நில மாந்தரிடையே மன்னித் தழைத்த தலைமாந்தர் நாகு என்றிடும் இளம்பசு வளர்ப்பதில் நலத்த நாகர் மாந்தராவர். இவர் முடியுடை மாந்தராதலின் முடிநாகர் என்று எண்ணப்பட்டனர். முடிநாகர் புலவராயும், புரவலராயும், விளங்கிய திறனில் தலைச்சங்கத்திலும் அதனைத் தொடர்ந்து திருப்பரங்குன்றத் தென்மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் (கி.மு 19151715) ஈழத்தூத்தென் தமிழாம் கன்னித்தமிழை வளங்கிய முன்னவர் ஈழத்து முரஞ்சியூர் முடிநாக ஆரையாவார். இந்த புலவர் நாகர் வழித்தோன்றலில் விளங்கியவனே''விளங்கு தேவன்'' என்றிடும் மாவீரன். இவன் வெடியரசன்கீழ் சுழிபுர வடபகுதியில் உள்ள ''திருவடிநிலை'' என்னும் திருவூரில் கடற்படைக் கோட்டைகளையும், பாழி வீடும் அமைத்து ஆண்டு வந்தான். இந்நிலப்பரப்பினைத் தேவர்களும் ரிஷிகளும், சிவன், இராமர், இந்திரன் விஷ்ணு, சந்தகுமாரன், அர்ச்சுணன் ஆகியோர் தரிசித்த வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியது.

திருவடிநிலை என்ற தெய்வ சம்பந்தமே காரணமாகும். அத்தோடு சிவனொளிபாதமலையிலும், திருஅடிநிலையத்திலும் சிவனின் திருஅடிச்சுவடுகள் உள என்ற கூற்றை யா.ச.எழுதிய ஆசிரியர் யோன் பக்.6ல் திருவடிநிலையில் ஒரு திருக்காலையும், மறுதிருக்



காலைச் சிவனொளிபாதமலையிலும் [1] சிவன் ஊன்றியதாய் விபரித்துள்ளார். இப்புண்ணிய பூமியூடாகவே சங்கமித்திரை பௌத்த சமயத்தைப் பரப்ப வெள்ளரசு மரத்தைக் கொண்டு வந்தாள் என்பதை இங்கே உள்ள வெள்ளரசுமரம் உணர்த்தும். இப்படியாக பௌத்தமதம் அறுதுபோல் தழைக்கும்கால் இவ்வரசமர அருகாமையில் இன்றும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பறளாய் விநாயகர் பள்ளுப் பிரபந்தமாய் விளங்கும் ஆலயத்தை உண்டாக்கியும் இராமபிரான் இலங்கை வந்தபோது கரையேறிய சம்புத்துறைக்கருகாமையில் அமைந்த திருத்தம்பலேஸ்வர ஆலயத்தில் சிவபூஜை செய்த அவ் ஆலயத்தையும் புணருத்தாரணம் செய்து சைவசமயத்தையும் அம்மக்களையும் காத்து வந்தான். இத்திருஅடிநிலையைத் தரிசிக்கச் சேர, சோழ, பாண்டி நாட்டில் இருந்துவரும்பக்தர்களுக்கெல்லாம் இருப்பிட வசதிகள் உணவு சத்திரங்களையும் அமைத்து ஆண்டுவந்தான்.

இவனின் திறனைத் திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கண்ணகி வழக்குரை நூலின் மதிப்புரையில்''முக்குகர்குல முதல்வனான வெடியரசனின் போர்த்திருவினையும், அரசியல் ஆதிக்கமும், அவனுடைய கோட்டை கொற்றளங்களின் அமைப்பினையும், அரசியல் அறிவினையும் நாம் தெரிந்து கொள்வதுடன் வெடியரசன் தம்பி விளங்குதேவனின் சமயோசித புத்தியையும் இராசதந்திரத்தையும், நிருவாகத் திறமையையும் அறியலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவன் ஓர் விஷ்ணு பக்தன் என்பதனால் அன்று இராமரின் திருவடியைத் தரிசிக்க அவாபிடர் பிடித்துந்தப்பெற்ற சோழிய குமாரித்தியர்களின் நாட்டங்கள் வரவுகளாலும், ''தனிப்புவி புன்னாலையாழ்வார் தனைத் தொழுது சரம்பார்த்து என்ற இதன் கீழ்வரும் 302 பாடல் அடிகள் மூலம் புன்னாலை வரதராசப் பெருமாளையே குலதெய்வமாக வணங்கினான் என்பது புலனாகின்றது. விளங்குதேவன் போர்ப்பாடல்களில் ''பாய் புலிபோல்'' என்ற பதங்கள் மூலம், இவன் வீரம் புலனாகின்றது.

1. Tiruvadinilai - Place of the Sacred Foot print of Siva, Another Foot print Being on Sivaroli patamalai [John's. H.J.p.6]

## போர்வீரகண்டன் வரலாறு

பார் வீர கண்டர் பணி விளங்கு தேவன்
படையுடனே வரவோலை பரிந்து விட்டான்
கார் வீர கண்ட ரிரு பதத்தை நாடிக்
கடிதுடனே யெழுபது வெள்ளத்தார் கூட்டி
ஏர் வீர கண்ட துரை தேரி லேறிப்
புறப்பட்டான் களரிதனிற் வெளிப் பட்டானே
(ந.பு.வ.இ)

கப்பல்எல்லாம் விட்டபின்பு கடலரசன் படையில்உள்ளோர்
தப்பாமல் பட்டவரில் தலைபிழைத்தோர் கரையேறி
மைப்பொழில்சேர் குகன்கிரி மலையதனைத் திசைநோக்கி
ஒப்பரிய தனம்கொடுத்தார் போல்ஓடி ஓடிவந்தார். 269

இமை கிரி இமையவன் மலை என்பது போல் குகன் கிரி என்ற பெயரில் குகன்மலை என்று அழைக்கப்பட்டது மேற் குறிப்பிட்ட பாடல் மூலம் புலனாகின்றது. இக் குகன்மலையானது மலைத்தேசம் போல அழகினையும், பொருள்வரு வழிகளையும், மலைவள, ஆற்று வளங்களோடு சேர்ந்த நாட்டுச் சிறப்பினைச் சுட்டும் இயல்பாக ஈழத்து வட நிலத்தையும் அழகு செய்து நிலை மலை என்ற பெயர் அழகுடன் சிறுத்திடரும் சமுத்திரத்தில் விழும் சிறு ஆறு போன்ற ஊற்றும் அருது அருமையானதே. இந்நிலப்பரப்பு ஆரம்பகாலத்தில் தம்பலப் பூச்சிகள் போன்ற சிவந்த கற்பூமியாதலின் 'தம்பலை' எனப்பட்டது. காலப்போக்கில் செந்தி, செங்குன்று,என்றுவழங்கி ஈற்றில் செம்பாடு ஆயிற்று. இத்தம்பலைப் பகுதியில் பூர்வகாலத்தில் சிவன் பார்வதி சமேதராய் தம்பலைப் பகுதியில் வாசம் பண்ணியதனால் திருத்தம்பலேசுவரன், ஈஸ்வரி ஆலயப் பகுதிக்குரிய இடப்பெயராயிற்று. அதனால்உமையவள்ஸ்நானம் செய்வதற்காக கண்டகிதீர்த்தத்தை இவ்விடம் சிவன் அழைத்தார் என்றும் அதனாலேயே தேவர்களும், இருஷிகளும், பிறரும் தீர்த்தமாடிப் புண்ணிய புரமானது இச்சக்கரவான பொறையின் அருகே உலோசப்பற்றுள்ள பாறைகள், மூலிகையான மரவேர்களின் ஊடாக வரும் நன்நீர் ஊற்றில் இம் மூலிகை மூலச் செறிவுடையதனால் அங்கே நீராடுவோர் சுபம் அடைவதாக விஞ்ஞானிகளும், நகுல முனிவரின் குஷ்ட முகம் மாறுபட்டதனால் கீரிமலையாகி நீராடும் பக்தர்கள் பக்குவம் எய்துவதுதாக மெய்ஞானங்களும் இயம்புகின்றன. இப்படியான புண்ணிய பூமியைக் குகன் வம்சத்தவனான வெடியரசன் தம்பி போர்வீரகண்டன் போர்ஞானம், போர்க்கலை போர்வீரம் நிறைந்த சிற்றரசனாய்க் கோட்டை கொத்தலங்களை அமைத்தும் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்து, வரும் யாத்திரிகர்க்கு அன்ன சத்திரங்களை அமைத்தும் நீதிவழுவாது இப்புண்ணிய பூமியை ஆண்டுவரலானான்.

## ஏரிளங்குருவன் வரலாறு

சுந்தர முடியிலங்கவே போர்வீரகண்டன்
சுறுக்குடனே வந்து தோற்றினனே
கஞ்சமலர் மாலைதுன்னவே போர்வீரகண்டன்
களரிதனிலே வந்து தோற்றினனே
ஏரிலங் குருபனுடனே யீரதமதில்
ராசாதிராசன் வந்து தோற்றினனே
தாரிலங்கு சேனைவரவே போர்வீரகண்டன்
றருக்குடனே வந்து தோற்றினனே. [ந.பு.வ.இ]

ஆதியில் காயங்கரை ஆறு உப்புக்கடல் வாய்க்கால் பகுதி வழியாக அனுமன் மைநாகத்தைச் சேர்ந்தான் என்றும், கி.மு 300ல்இ கிரேக்க அறிஞர் மெக்ஸ்தினிஸ் இலங்கை இந்தியாவைப் பிரிப்பது ஒருநதி (River) என்றார். கி.மு 500ல்இ கலிங்கப்பாண்டு வசு மகாகாந்தார நதிக்கரையில் இறங்கி இங்கு வாழ்ந்த தேவர்களின் உதவியோடு சிங்கள நகரம் சென்றான் என்று மகாவம்சம் (MAV.8,12) கூறுவதனாலும் மகாகாந்தாரநதிக் கரையும்,காயங்கரை ஆற்றுக்கரையும், கசாந்துறைக் கரையும், வட கரையாம் இன்றைய காங்கேசன்துறைக் கரையும் ஒரேபெயராகிலும், நிலப்பரப்பு நாளுக்குநாள் கடலினுள் விழுங்கப்பெற்று இன்று வடபாக்குநீரிணைச் சமுத்திரம் என்ற அளவிற்குப் பெருத்ததினால் அன்றைய இவ்அரச கோட்டைகள்கடலினுள் ஆழ்ந்திருக்கலாம்.

காயங்கரையான கயாக்கரை (காயா GAYA -புத்தகாயா) க்குப் போவதற்கு ஏறு இறங்கு துறைமுகமே கசாத்துறையாகும். சோழ அரசன் மகள் மாருதப்புரவீகவல்லி கீரிமலையில் நீராடிக் குதிரை முகம் மாறியதனால் மாவிட்டபுரமான கந்தசாமி ஆலயத்திற்கு வேண்டிய 'காங்கேயன்' விக்கிரகத்தைப் பிராமண பெரியமனத்துள்ளார் கொண்டு வந்து இறங்கிய துறை ஆனதால் அன்றுதொட்டு கசாத்துறையானது காங்கேயன்துறை ஆயிற்று.

இசை பெறும் இந்தி வேந்தரிருடிகள் சோழன் கன்னி
நசை யுற்றிந் நாடு வந்து நாள் சில கழித்துச் சென்றார்
குசையனுங் குகன் மற்றுள்ளார் குறுநிலத் தரசரானார்
அசைவறு வாலசிங்கன் அந்தகற் கீந்தானன்றே.

இப்பாடல்களில் இருந்து ஏரிளங்குருவன் அவ்விடப்பரப்புவம்சமானதும் தொடர்ந்து பின் குகன் குறுநிலத்தோர் கைக்கு இடம் மாறி வந்த நிலையும் புலனாகும். இத்தகு ஆதிச் செய்திவாய்ந்த துறை அருகே உள்ள 'மயிலை' என்ற இன்றைய மயிலிட்டிப் பகுதியில் மாட மாளிகை கோட்டை கொத்தலங்கள் அமைத்துமிகவும் அழகு பொருந்தியவனாகையால் ஏரிளங்குருவன் என்ற சிறப்புப் பெயருடன் வெடியரசன் கீழ் சிற்றரசனாய் ஆண்டு வந்தான்.

இப்படியாக இம் மூவரும் வெடியரசனின் கீழ் சிற்றரசர்களாக இவ்விடங்களை ஆட்சி புரியும் நாளில் வெடியரசன் சிறைப்பிடித்ததையும் வீரநாராயணன் போரில் வீரசொர்க்கம் எய்தியதையும் அறிந்து மூவரும் விளங்குதேவனின் தலைமையில் சினங்கொண்டவர்களாய் படைபலம் கொண்ட தமையன்மார் இருவரின் தோல்வியினால் பகைவனின் (மீகாமன்) வலிமையை உணர்ந்தவர்களாய்த் திருத்தம்பலேஸ்சுவரர் ஸ்சுவரி கதிரையாண்டான் கோயில்களிலும் பொன்னாலை விஷ்ணு ஆலயங்களிலும் விசேட பூசைகள் செய்து வழிபட்டு அவ்வூர் பிராமணர் மக்கள் போர் வீரர் குடும்பங்கட்கும் வேண்டிய பொன் பொருள் கொடுத்து நாவாய்களையும் ஏனைய இரத-கச-துர பாரதியர்களையும் கப்பலில் ஏற்றியும் ஓரிலக்க மேலான (1லட்சம்) படைவீரர்களையும் ஒன்று திரட்டினார்கள் மூவரும் தண்டிகைப் பல்லக்கில் ஏறித் தமது வீர சேனைகளுடன் முரசொலி, சங்குநாதம் முழங்க ஆவேசத்துடன் கடல் கரையை அடைந்தனர்.

மணிக்கவரி சேரரிட்ட வன்னமுத்தின் குடைநிழற்ற
அணிக்கணியே யாலவட்டம் ஆயிழைமார் பணிமாறப்
பணிப்பட்டுச் சிலரெடுப்பப் பாய்புலிபோல் எழுந்திருந்து
தனிப்புவிபுன் ஞலையாழ்வார் தனைத்தொழுது சரம்பார்த்து. 302

தரம்பிழையா வோடிடவே தண்டமிழ்க்கும் இரவலர்க்கும்
கரங்கள்சிந்தா மணியெனவே கடல்நிதியை மிகவழங்கி
அரங்கரசே சரணமென்று அணைத்துப்பிடித்தெல்லோரும்
இரங்கிநின்றார் மாதரெல்லாம் ஏறிவிட்டார் கப்பலின்மேல். 303

மீகாமனது படைகள் காவற்றுறையைக்கடந்து கடற் காரைதீவும் கடந்தோடி இனி நாங்கள் விடுபட்டோம் என்ற நிலையில் வீணை வல்லவர்கள் வீணை வாசிக்கத் தனது கடல் பயணத்தில் சென்றான். அவ்வேளை வெடியரசனும் அக்கப்பலில் தனது நாடு மனைவி, சகோதரர்கள், மக்கள் முதலானோரை நினைத்து அவ்வலையின் ஒலியைவிட மிகவழுது அவனது கண்ணீரே அவனது நாவின் வரட்சியைத் தீர்ப்பதற்கு நல்நீராகப் பயன்பட்டது.



இப்படிக் கப்பல் வருவதைக் கண்ட விளங்குதேவனின் போர் வீரர்கள் தண்டாயுதங்கள் (விஷ்ணுவின் கையில் இருப்பது போன்று) சக்கரங்கள், ஈட்டிகள், அம்புகள், வறுக்கும் மணல், காய்ச்சும் எண்ணெயுடனும் ஆயுதங்களுடனும் சங்குநாதம் போர் முரசு ஒலிக்க நாவாய்களில் ஏறி விளங்குதேவன் சாமரமிரட்டிரைச் சிங்கேறுபோல் காட்சியளித்து ஒருஇலட்சத்துக்குமேற்பட்ட போர்வீரர்கள் தங்கள் தங்கள் கப்பல்களில் ஏறி ஓவென்ற பேரிரைச்சலுடன் வரும் அலைகளையும் கிழித்தவாறு மீகாமன் கப்பல் வரும் திசையை நோக்கி வீராவேசத்துடன் கடற்போர் நடக்கும் எல்லையை அடைந்தனர். இருபக்கத்து நாவாய்களும் ஒன்றோடு ஒன்று முட்டிப் போர் செய்யத் தொடங்கின. போர் உக்கிரமாக நடைபெற்றது. இருபடைகளும் ஒன்றை ஒன்று வெல்ல முடியாத கடும்போர் நடந்தது. கட்டுமரங்களும். கப்பல்களும், முண்டங்களும், வெட்டுண்டகால், கை, தலைகளும் கடலெங்கும் மிதந்தன கடல்நீரும் ஒரே இரத்தமயமாகக் காட்சியளித்ததனால் ஆதவன் கதிர்கள் இச் செங்குருதிகளில் பட்டுத் திரும்ப ஆதவனை எதிர் நோக்கிச் சென்றுஆதவனின் கண்களையே கூசச்செய்ததனால் ஆதவனும்தனது கண்களை மூடி இப்போரைப் பார்க்க முடியாதவனாய் மறையலானான்.

இதனால் இருபகுதியினரும் இரவு ஆகையால் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து விடியும் வரை கடலிலே காத்துநின்றனர். வானத்திலே இருக்கின்ற நட்சத்திரங்கள் எல்லாம் ஒன்றிணைந்து இவர்களுடைய போர்ஒப்பந்தத்திற்குச் சாட்சிப் பார்வையாளராகக் காட்சிஅளித்த வண்ணம் இருந்தன. சிறந்த கடலோட்டிகளான இருபகுதியினரும் விடிவெள்ளியின் குறிகண்டு போருக்குத் தங்களை ஆயத்தம் செய்தனர். அப்போது கீழ்த்திசை வெளுக்கின்றது, காரிருள் கலைந்து கதிரவன் கதிரொளி படகின்றது, கடற்பறவைகள் இன்னொலி எழுப்புகின்றன, கடற்றாழைகள் மொட்டவிழ்ந்து மலர்களின் நறுமணம் வீசுகின்றன. எழில் கூட்டுகின்றன, மீனினங்கள் துள்ளிக்குதிக்கின்றன, பாடும் மீன்கள் நாதமிசைக்கின்றன, பனிப் புகார்கள் பரவி மறைகின்றன. உலகமே புத்தெழில் பெற்றுக்கண்விழிக்கின்றது. எத்தனை அழகு, எத்தனை இன்பம் இன்னும் கடலில் சொல்ல வேண்டுமா? நித்திரை கொண்ட அலைகளும் சிறு இரைச்சலுடன் பேரிரைச்சப் பெரு அலைகளாகமாற எத்தனித்தன. இந்நேரத்திற் கதிரவன் இவ் ஒய்ந்த போரைப் பார்த்துவிட வேண்டும் எனற ஆசையில் கிழக்கில் உதித்தான்.மறந்தனர் இயற்கை எழிலை, கொண்டனர் போர்க்கோலம் உடனே யுத்தம் ஆரம்பமானது.ஒன்றல்ல இரண்டல்ல ஆயிரம்,ஆயிரம்உயிர்கள் பிணமாய்க்கடலில் விழுந்து நீலநிறக் கடல் ஆதவனின் ஒளியிலுகூடியகரும் சிவப்பாய்க்கடல்காட்சியளித்தது.

போரில் போர் வீரர்கள் தண்டாயுதத்தால் அலைமோதுவது போல் வீரர்களை மோதியும், சக்கரத்தால் வீரர்களை அலைகளைக் கிழிப்பது போல் வீரர்கள் உடல்களைக் சிழித்தும், கொடிய பாணங்களைச் செலுத்தியும், ஈட்டிகளை வீசியும் கொதி மணலைப் போர் வீரரின் கண்களில் பட வீசியும் கடும்யுத்தம் நடந்தது இதனைப் பார்த்த வெடியரசன் தன்தம்பி வீரநாராயணன் இறந்தது போன்று இம்மூவரும் இறந்தால் தான் சகோதரர்கள் இன்றித் தனித்துவிடுவேன் என எண்ணி மீகாமனிடம் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்ய முற்பட்டான். இதையுணர்ந்த மீகாமன சிற்றரசர் மூவரையும் பார்த்து வீரநாராயணன் வீர சொர்க்கம் அடைந்தான். மேலும் நான் உங்களைச் சிறைப்பிடித்துஅனுமான் இந்திரசித்துவைக் கட்டிவைத்தது போல் உங்களையும் கட்டிவைத்து மாநாயகனிடம் கொண்டு போய்க் காட்ட நினைத்தேன் என்றான். அதனைக் கேட்ட விளங்குதேவனும், ஏனையவர்களும் "புலிக்கெதிரே மான் சென்றால் மான் நடுக்கமுறும்", ஆனால் "நாய் முன்னே நாய் சென்றால் அவற்றைக் கட்டியிருக்கும் சங்கிலி தான் நடுங்கும்" என்று மறுபடியும் யுத்த களத்திற்கு மீகாமனை அழைத்தனர். இதனையறிந்த மீகாமன் தனதுபடைபலம் குறைந்து இருப்பதை விளக்கிக் கூறி நாம் இருவரும் போர் வீரர்கள் இன்றித் தனித்தனியுத்தம் செய்வோம என்றும், நான் வென்றால் நாகமணியுடன் நம் நாடு செல்ல விடை தரவேண்டுமென்றும், அல்றேல் விளங்குதேவனாகிய நீர் வென்றால் நாகமணியையும், இறந்தோரின் நஷ்ட ஈட்டையும் நான் தருவேன் என்று கூறிப் போர் ஒப்பந்தப்படி இருவரின் போர் ஆரம்பமானது. இப்படியே மாறி மாறி இளையோரான ஏரிளங்குருவன் வாள்களில் இருந்தும், ஈட்டிகளில் இருந்தும் எழுந்த பொறிகளினாலும், சத்தத்தினாலும் பயம்கொண்ட வெடியரசன் பின்வாங்கும் மீகாமனை நோக்கி வயதில் குறைந்த இளையவனை எனது தம்பி உனக்கும் வயதில் அதிகம் குறைந்தவனையால் உனக்கும் அவன் தம்பியே நாம் இருவரும் கடல் அன்னையின் பிள்ளைகள் ஆதலால் நீ அவனுடன் பொருதுவது முறையன்று என்றான். இதைக் கேட்டதும் மீகாமனும் ஒருவாறு கேட்க வெடியரசன் தம்பிமாரைப் போரை நிறுத்தும்படி கூறுதவாறு எனதருமைத் தம்பிமார்களே! இவனே கடல் அன்னையின் புதல்வனின் தூதுவன். இவனைக் கொல்வதுபாவம். இவனை எம் சகோதரனாகக் கணித்து இவனிடம் இச்சிறு நாகமணியைக் கொடுத்து அனுப்பிவிடுங்கள் என்றதும் இளையவனை ஏரிளங்குருவன் அண்ணா! எட்டுத்திக்குப் பாலகர்களான இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர் அண்ணன் வீரநாராயணனுக்குப்பயந்து அடங்குவர். வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன் பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் ஆகிய நாக அரசர்களும் உங்கட்குத் தலைவணங்கி நாகமணி கொடுப்பர். அப்படி இருக்க என் அண்ணனைக் கொன்றவனை நான் உயிருடன் விடுவேனோ! என்று கோபாவேசத்துடன் காட்சி அளித்தான். கடைக்குட்டி காரமானதே என்று விளங்குதேவனும் ஏனையோரும் ஆறுதல் வார்த்தை கூறியதும் அண்ணனின் வார்த்தையை அமிர்தமென உணர்ந்து இராமருக்கு இலக்குமணன்கட்டுண்டது போல் மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம் எனது அண்ணன்மார்களாயிற்றே என் செய்வேன் ஏ மீகாமா! "நீவந்த வேளை நல்ல வேளையாயிற்று" இதுவரை அண்ணர்களின் சொல் மீறாத நான் இனி மீறுவதா என்று எண்ணிச்சினந்து தனது வீரவாளைக் குத்தி முறித்து வீராவேச தாகத்தில் நின்று விடுபட்டவனாய் பேரிரைச்சலுடன் திரண்டு உருண்டு ஓவென வந்தஅலை தணிவது போல்நாகமணியினைக் கையில் எடுத்து இவ் அற்பநாகமணிக்காக என்நாட்டைச் சின்னாபின்னமாக்கினாய் அதேபோல் இம்மணி உள்ள உமது நகரம் பத்தி எரியட்டும், இம்மணியை ஆபரணமாக அணிபவளின் கணவனும்என் அண்ணன் மடிந்தது போல் உயிர்துறப்பான் என்று சபதமுரைத்துத் திடீர் எனத் தனது காலைத் தூக்கிக் கீழால் அலட்சியமாக மணியை எறிந்து மீகாமா இதை எடுத்து உன்நாடு செல்வாயாக! என்முன் நின்று எட்டிப் போய் விடு மறுபடியும எனக்கு ஆத்திரத்தை மூட்டாதே என்றதும்மீகாமனும் வெடியரசனைச்சிறைமீட்டு நாகமணியைப்பெற்றுத் தன்நாடு சென்றான். இவர்கள் நாக வம்ச அரசர்கள் எனயோன் கூற்றாகும். [1]

---

*1* The author John in the History of Jaffna states that Arjuna visited Jaffna in the 15 th century B. C, and married the daughther of its king and a son was born,

The Kuhar [authors name for Arjuna] claimed to be the descendants of Krishna The Kuhans brothers also occupied and ruled Ponnalai, Thuruvadinilai, Keerimalai, Myliddy, and the islands of the northern Parts of Jaffna. Therefore it may be that these fortifications were originally Nagas.

Tholpuram an ancient Puram, the original name of which is Manipuram. The Nagas were in occupation of Mantai and this enabled the Kuhars to flourish at Tholpuram and its neighbourhood. The Kuhars had a powerful naval force and after the Mihama war they had to migrate to Malabar and various other parts of Ceylon.

வாங்கும் வாளது கண்டுமற் றவனும்
வாளெடுத்துப் பரிசையிற் கோர்த்துடன்
ஓங்கி நின்றன் கொழும்பட்டு வெட்டவே
ஓசைகளிடிந்தது போலுமாம்
ஏங்கி நின்றார் இருபடை வீரரும்
எந்த வாள்வெட்டினார் என்று கண்டிலார்
வேங்கை தான்நின் றெக்கப் பாய்கைபோல்
வெட்ட வாளது மின்கள் பறந்ததே. 362

வெட்டியங்கே யிருபேரும் வினைவிளைத் தவர்கள்நிற்க
மூட்டியுத்தம் செய்யவென் றழைபிடங்கே யிருப்பாளில்
செட்டிதூதன் தன்கையிலே சேர்ப்புண்ட வெடியரசன்
பட்டதும் பொருததுவும் பார்த்துநின் றவ்வ சாகிலுமான் 363

தம்பியென் றங்காணையிட்டுத் தன் தம்பி முகம்பார்த்து
அம்புவியில் என்னுணை அதிவீரர் தம்மானை
வெம்பூச லினிப்போதுக் மீகாமனு மெண்ணார்
பைம்பொன்னின் மணிமார்பப் பரிசையவள் வைப்பதென்றான் 365

என்றசொல்லைத் தான்கேட்டு இதுவானை பிழைத்தாக்கால்
நன்றல்ல நரகெய்தும் நன்மைசற்று மில்லையென்று
ஒன்றுபட ஆயுதத்தை ஒக்கவைத்தங் கிருபேரும்
சென்றுதான் உறவுசெய்தார் தொல்வீரர் ஆர்ப்பரித்தார் 366

ஆர்ப்பரித் ததுகண்டு அடப்புவைப மீகாமன்
போர்க்குமோ மிகவலியான் பொருததெல்லாம் உன்மனதில்
ஏற்கவே கொள்ளாதே என்றிருகை தனைப்பிடித்தான்
இருபேருஞ் சமதித்து ஏகாந்தக் கப்பலின்மேல். 367

கைபிடிக்கத் தலைசாய்த்தான் கடலரசன் தம்பியவன்
பையவிட்டு வெடியரசைப் பட்டமாலை கொடுத்து
வைவமொத்த மானாகர் மகளார்க்கு நாகமணி
உய்யவெட்டிக் கொன்றாய்காண் உன்னையாற் குருமென்றான். 368

தாருமென்ற மொழியதனைத் தருவதலைய லூக்கியர்கோன்
ஈரமுள்ள மனதுடையான் இனியிரண்டேன் றெண்ணாதே
தூரமிது காணுமினிச் சொன்னமொழி போதுமினி
ஊரையோடிப் போகவென் றே உருக்கனெல்லாம் பாயெடுத்தான்.



வெடியரசனையும்'தேசிய வீரனுக' இம்மண்ணில் கணிப்போமாக.

தேசவழமைச் சட்டம்:- இலங்கையில் உள்ளூர் மூன்று ஆட்சிப் பிரிவுகளாக யாழ்ப்பாணத்தில் தேசவழமையும், மட்டக்களப்பில் முற்குகர்சட்டமும், சிங்களப்பகுதியில் கண்டியன்சட்டமுமாகும். முதலாம்இரண்டாம் நூற்றுண்டு தொட்டு வடதேசவிஷ்ணுபுத்திரர்களின் வழமையில் வந்த நீதிநெறியுடன் (Travancore)துறவன்கூர், மலையாளக் குடியேற்ற ''மலாபாரும்'' மகமதியர்களின் ''மரமக்கத்தாயவும்'' (Marumakathaym)தென்கறுநத்தா (Karunatka) வின் அலை சந்தானுகவும் சேர்ந்த ஓர்வழமையேயாகுமென்பர். இவ்வழமைகளை நீதிபதி கிளாஸ் ஐசாக் (Class Isuks)டச்மொழியிலும், யொன்ஸைபறஸ் தமிழிலுமாய் 1705 கவணர்சைமன் துரையால் சட்டமாக்கப் பெற்று இன்றும் நடைமுறையில் உள்ளதாகும்.

1. 1811ம் ஆண்டு 9ம் ஒழுங்கின்படி பட்டங்கட்டித் தலைவர்கள் முதன் முதல் தங்கள் அடிமைகளைத் தம் சுய விருப்பத்தில் விட்டு ஆங்கிலேயரின் வரவேற்பைப்பெற்றனர். 2. 1656ல் அரச சார்பான படை வல்லமை பொருந்திய பட்டங்கட்டி முதலிகள் ஒல்லாந்தரை எதிர்த்தனர். Portuguese Era Paul Peries Volli, P 454. 3. யாழ் பட்டணம். பட்டங்கட்டி வீதி இன்று ஹரமல்வீதியாகியது [Caramal Road] 4. தம்பனை என்ற விஷ்ணு புத்திரர் பெயரினுல் ஒல்லாந்தர் ''பண்ணை என்றழைத்தனர். அல்லைப்பிட்டி, கொட்டடியில் இன்றும் இவ்வம்சாவழி வந்தோர்களாவர் உளர். ஆயக்குத்தகைகள் கப்பல்,தோணிவியாபாரி திரு. சங்கரப்பிள்ளை பண்ணைமுத்தமிழ்வீதியில் அண்மைக்காலம்வரைவசித்தது குறிப்பிடத்தக்கது. 5. நெய்தல் நிலமக்கள் சங்கு முத்துக் குளித்தல், உப்பு விளைவித்தல் போன்ற ஆதி நாகர் இனத்தவர். 6. யாழ்ப்பாணத்தில் பேசும் கிளை மொழியியல் சொல்லியல் ஆய்வுகள் (Lexical Study) மூலம் பழங்குடி மக்களின் கலாசாரப் பண்பாடுகள், சடங்குகள், தொழில் நுணுக்கங்களையும், சொற்றொகுதிகளையும் ஏனைய கிழக்கு மேற்கு மாகாணங்களுடன் சேர்த்து ஆராய்ந்தால் நன்மை பயக்கும். 7. கங்கை,யமுனை பாயும் இடங்களில் பரதவர்கள், கௌரவர்கள் அரச மரபினர்களாவர். சந்திர வம்சத்தில் இருகுடும்பங்களான பாண்டவர்கள், கௌரவர்கள் என்ற ஒரே ராஜ குடும்பத்தினரின் போர்பற்றியதாகும். cf Talyor 1—240) 8. குகன் குலத்தோரில் சிலர் முதலிகளாயிருந்தும் அவர்கள் அன்று முத்துக் குளிப்பாலும், கப்பல் ஓட்டிகளாயும் பெரும் செல்வம் பெற்றதனுல் அரச சேவையில் கைகட்டி நிற்க விரும்பவில்லை, முத்துக்கள் அற்றுப் போகவும் மோட்டார், கோச்சுகள் மூலம் இப்பொருள்கள் ஏற்றுமதியாலும்19ம் நூற்றுண்டில் வீழ்ச்சி கண்டு சிலர் ஏழையாகினர். (சுவாமி ஞானப்பிரகாசர் யா-பாதுகாவலன் எப்ரல் 1921)

# வெடிஅரசனும் குடிமக்களும்

போர்த்திருவினையும் அரசியல் ஆதிக்கத்தையும் சிறந்த கோட்டை, கொற்றளங்களின் அமைப்புக்களையும், இராசதந்திரங்களையும், நிர்வாகத் திறமைகளையும், யுத்த தர்மத்தையும் ஒருங்கே கொண்ட வெடியரசனும் அவன் சிற்றரசர்களும், குடிமக்களும் வெடியரசன் வழியேஇணங்கி வாழ்ந்து வரலாயினர். இவர்களுடைய நிர்வாகக் கோட்டைகள் நெடுந்தீவு, நயினாதீவு, காரைதீவு, தொல்புரம், ஆனைக்கோட்டை, திருவடிநிலை, கீரிமலை, மயிலிட்டி போன்ற இடங்களில் அமைந்து இருந்ததனை அறிந்தோம். புட்கரம் (கமலம்) நெடுந்தீவு ஆழமான கடல் மத்தியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்டுள்ள தீவுகளில் நெடுத்த. நிலப்பாம் 30 சதுரமைல் உடையதால் நெடுந்தீவு ஆகும். இதனாலே இப் பிரதேசத்தைப் பகைவர்கள் எளிதில் தாக்க முடியாததை உணர்ந்து அங்கேதனது கோட்டை கொத்தளங்களை அமைத்து ஆட்சி செய்தான் வெடியரசன். இன்றும் இவன் கோட்டை சான்றாய் உளது இங்கேயுள்ள சாரப்பிட்டிப் பகுதியில் மிகவும் சிறந்த நன்னீர்ச் சுனைகள் உள்ளதனால் இப்பகுதியிலேயே குதிரைகள் பெருகியுள்ளன. இக்குதிரைகளே வெடியரசன் காலத்துத் தொன்மை இனம ஆகும் என்பர். இன்னும் அம் மக்கள் சிறந்த உத்தியோகத்தர்களாகவும், கமம் செய்வோர்சளாகவும், கடல்வள வாணிபம செய்வதிலும் முன்னணியில் உள்ளனர். பெண்கள் வீபூதி, பணம் பண்ணை வேலைகள் புழுக்கொடியல் போன்ற பொருள்களைக் குடிசைக் கைத்தொழில்கள் மூலம் செய்து வருகின்றனர். இன்றும வெடியரசன் ஐக்கிய சங்கங்கள் என்று அவன் பெயரை ஆங்காங்கே வலுப்படுத்தி வருவருவதும் அதற்குச் சான்றாகும. இங்கே 'கமலம்' என்னும் ஓர் துறைமுகம் இருந்ததாகப் பெறிப்பிளஸ் நூலில் குறிப்பிட்டுள்ளது. [KAMALAM] அத்துறை. பாக்குநீரிணையின் தென்பாகத்தில் பூ தூக்கி மேற்க்குத் தெற்கேஉள்ளதென்பதும் மேரு சம்புத்தீவின் நடுவில் நின்றமையால் (அ கோ.ப 29) கமலம் நயினாதீவிற்குத் தெற்கே இருந்தது. புட்கரத்தில் ஓர் வட்ட அசலம் (அ.கோ.ப 57) இதனால் புட்கரம்-தாமரை-கமலம்-திரிபுற்று கமமும் ஆயிற்று. இது தீவின் மேற்குப் பகுதியில் அமைந்த அழகிய வெடியரசன் கோட்டையைத்தாமரைப் பூப்போல் வர்ணித்து 1ம் நூற்றாண்டில் கமலம் என இவ்வூர் அழைக்கப்பட்டது (க.ம.ப34) இதனாலேயே புட்கரம் எனப்பட்டது நெடுந்தீவு. 2ம் நூற்றாண்டில் கமலம் என்று வெடியரசனால் வழங்கலாயிற்று. அநேக ஆங்கில ஆராட்சியாளர்கள் இவ்வெடியரசன் கோட்டையையும் நெடுந்தீவு பற்றியும் தங்கள் ஆய்வுகளில் குறிப்பிட்டும் உள்ளனர்.



**நயினாதீவு:-** 3மைல் நீளம் ஒருமைல் அகலங்கொண்ட நீள் சதுரவடிவான தீவு. நாக நயினார்தீவு, நாகதீவு, நாகத்தீவு, நயினார்தீவு, நாகமணித்தீவு, மணிபல்லவத்தீவு. மணித்தீவு, பிராமணத்தீவு, ஹரர்வலம், நரித்தீவு, நாசரத்தீவு கூலம் உலத்தீவு, சம்புத்தீவு. எனக் காலத்திற்குக் காலம் மாறுபட்டு இன்று நயினாதீவு என நிலைத்து நிற்கிறது. வட நிலத்தை நாகதீப என்று ஆதியில் அழைத்த போதிலும் இன்று நயினாதீவென விளங்குவது இச்சிறிய சம்புத்தீவே. இத்தீவைச் சுற்றியோடும் நீருற்றை உப்புக் கடல் என்று அழைப்பர். அனுமார் சீதையைத் தேடி இலங்கை புகும்போது உப்புக் கடலில் இருந்த "மைநாக" மலையைத் தொட்டுப் போனார் என வால்மீகி இராமாயணத்தில் [D.T R.p880] உள. இவ் இடத்திலேயே வெடியரசன் தனது பொருட் செல்வமான முத்துக்கள், பவளங்கள், நாகமணிகளைக் களஞ்சியப் படுத்திவைத்தான் என்றும், அக்களஞ்சியத்திற்குத் தங்கள் குலதேவதையாகிய செம்பாம்பு, கரும்பாம்பு, நெடும்பாம்பு, புடையன். வழலை முதலாய நாகசாதிகள் காவல்புரிந்தன. இவற்றின் தலைவனான மாநாகம் வெடியரசன் பணிப்பில் மீகாமனுக்கு நாகமணியைக் கொடுத்ததனைக் க.வ. மணிகாதை 185ம் பாடலில் காணலாம். இப்படியாக நல்லபால்புகள் வெடியரசனுக்குக் கீழ் காவல் புரிந்ததனால் விஷ்ணு புத்திரர்களை இந் நல்லபாம்புகள் தீண்டுவதில்லை, தீண்டி இறந்ததும் இல்லை எனக் கர்ண பரம்பரைக் கதைகள் உள. இவர்கள் பாம்பு கடித்தவுடன் அப் பாம்பை வரவழைத்து நஞ்சைத் திரும்பப் பெறும் சக்தி வாய்ந்த வைத்தியர்களாக வாழ்ந்தனர், கி.மு.13ம் நூற்றாண்டிலே, நாகரீக வளர்ச்சியுற்ற தமிழ்மொழியாளர்களான நாகர்கள் நாகராஜேஸ்வரியை வழிபட்டு வந்தனர் என்பதை நாக பூஜணி அம்பாள் ஆலய வெளியீட்டு விழாமலரில் காணக் கூடியதாகவுள்ளது. இரண்டு நாக அரசர்கள் முத்துக்கட்டிலுக்குப் போட்டியிட்ட போது கௌதம புத்தர் நாகதீபத்தைத்தரிசித்துப் பஞ்சசீலத்தை உணர்த்திச் சமாதானம் செய்த பூமியும் இதுவே. மணிமேகலை தன்னை விரும்பிய அரசனுக்குப் பயந்து துறவி பூண்டு ஒழித்த இடமும் மணிபல்லவத்தீவே. இங்கேதான் அமுதசுரபி என்னும் பாத்திரத்தை மணிமேகலை இறைவனிடம் இருந்து பெற்றாள்.

> ஆங்கதன் பயனே யாருயிர் மருந்தா
> யீங் கிப்பாத்திர மென்கைப் புகுந்தது
> நாவலொடு பெயரிய மாபெருந் தீ வந்து.

மணி காதை 11, அடி 105 —7

நாக தீபத்துறையை ஐம்புகொல என்பர் [m h v x1x23] தொலமி இதை (Kourcula) கூழ் உதிகம் என்றும் பெறிப்ப்ளஸ்ஸ் [poudcuKe] பூதூக்கி என்றார். [க.பு.ம.ப 29] த்துறைமுகத்தின் திரைப் பெருக்கத்தால் கப்பல்கள் வருஷந்தோறும் அதிகம் சேதமடைந்தன. 2071 தெளிவு படுத்தும்.

கலங் கவிழ் மகளிரின் வந்திங்கெய்திய (மணி கா.8) மண்டைக் காலத்தில் இவ் நயினாதீவு பெரும் கடல் வியாபாரச் சந்தையாய் இருந்து சீன, வங்காளம், தமிழகம், எகிப்து ஆகிய நாடுகளுடன் பண்டைமாற்று வணிகம் செய்ததனைப் பெறிப்ளாஸ், பிளினியன் சரித்திர நூல்களில் காணக்கூடிய தாகையால் அக்கால இந்நாட்டு அரசனும் வெடியரசனின் வணிகம் எத்தகையது என்பதை நாம் உணரலாம்.

**ஊர்காவற்றுறை:-** வெடியரசனின் காரைநகர், நீலங்காடு மாளிகைக் கடற்கோட்டைஅருகே கால்வாயின் அக்கரையில் ஊர்காவல் கோட்டை அமைந்த இடமாகும். ஆதியில் இக்காவல் கோட்டையைச்சூரபன்மன் வென்றான். [அராவணை-சரவணையாயிற்று] என்பர். தொலமி கூழ்உலகத்தீவிற்கு-நயினாதீவு)க்குப் போகத் தோணி ஏறிய இடம் ஊலாத்துறை என்றும், ஊறு தோட்டம என்ற பன்றித் தோட்டத்தினைச் சிங்களவர் ஊறுத்துறை என்ற கட்டுக்கதைகளும் உள ஊர்காப்பு அன்றி என்பதே ஊர்காப்பன்றி என்றனர் போலும். இவ் ஊர்காவத்தீவில் நாரந்தனை (நாரம்-நீர் அந்தனை-முடிவு) வேலணை (வேலை-கடல், அணை-கரை) க்கிராமங்கள் உள. வேலணை என்ற கிராமத்தில் இன்றும் பெரும்பான்மையான விஷ்ணு புத்திரர்கள் சிறப்புடன் சிறந்த அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் வாழ்வதுடன் ஐயனார் அன்பர்களாக பெரும் ஐயனார் ஆலயத்தை அமைத்து வழிபட்டுச் சைவ சீலராகவும் உள்ளனர்.

**காரைநகர்:-** குஞ்சரகிரி, அசோதரம், சாகதீவு, காரைதீவு என்றும் இன்னும் அநேக பெயர்களைக் கொண்டும் அழைத்தனர். இலங்கையில் மூன்று காரைதீவுகள் இருந்தமையால் 12.9.1923 இல் காரைநகர் என்ற இப்புதிய பெயர் பெறலாயிற்று. அகத்திய முனிவர் இந்தியாவிலிருந்து வந்து தவம் செய்து இந்திரனிடம் வரம் பெற்றதுவும் இக்காரைதீவிலேயே. வெடியரசனும் தம்பி வீரநாராயணனும் ஆண்ட பாற்கடலும், ஊரும்இதுவே. கந்தபுராணத்தில் இந்திரனின் இராச்சியங்களாக இருந்த 7தீவு



களில் ஒவ்வோர் சேனாதிபதிகள் இருந்தனர் என்றும்; இதனைத் தொடர்ந்தே குபேரன் காரைதீவின் சேனாதிபதியாய் இருந்தார் இதனாலேயே இன்றும் காரைநகர் மக்கள் வரட்சியின் மத்தியிலும் குபேரராய் வாழ்கின்றார்கள் என்பது கர்ணபரம்பரைக் கதையாகும். கயாவில் செல்வந்த குடும்பத்திற் பிறந்தவரான பௌத்த அகத்தியர் துறவு பூண்டு கி.மு380 இல் யாழ்ப்பாணத்திலுள்ள காரைதீவில் வந்து ஆச்சிரமம்அமைத்து வாழ்ந்தாரென்று அகத்திய ஜாதகம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. புத்தசமயத்து2ஆம் குஞ்சரகிரி அகத்தியர்கி.பி4ஆம் நூற்றாண்டில் இங்கு புத்த பீடிகையை ஏற்படுத்தினார்: பாரத நாட்டுத் துருவாச முனிவர் வந்து தவம் செய்து மோட்சம் அடைந்த பூமியும் இதுவே. இன்னும் மார்க்கோபோலோ என்ற மேல் நாட்டு ஐரோப்பிய யாத்திரிகர் வந்து கோவளம் என்ற கரையில் இறங்கியே இலங்கையினுள் புகுந்தான் என்பர் முன்னோர். கந்தபுராணத்தில் வரும் கயிலை நாகதீவென்னும் ஏழுலகென்பது 7தீவென்றும் முன் அறிந்தோம். இக்கயிலைக்குச் செல்வதற்கு யாழ் குடாநாடு வந்து பொன்னகரின் அருகில் உள்ள சாகதீவின் வழியாலேயே செல்லவேண்டும். ஆதலால் கயிலைச் சொர்க்கத்தின் வாயிலாய் (வலந்தலை) அமைந்ததுவுமாகும்.

**சமயம்:** இப்படியான புண்ணிய பூமியில் வெடியரசனும் வீரநாராயணனும் வாழ்ந்ததும் அவர்களின் வியாவில் ஐயனார் ஆலயத்தைப் போர்த்துக்கேயர் இடிப்பதற்கு வந்தபோது அவர்கள் வாயால் இரத்தமாக வாந்தி எடுக்கவும் வந்த நோக்கத்தைக் கைவிட்டு ஓடினர். அதன்பின் கி.பி 1658இல் ஒல்லாந்தரும் அவ்வாறே முற்பட்டபோது, அவர்களுக்குக் கண் குருடானதும் திரும்பிச் சென்றனர். பின் அவ் ஆலய அர்ச்சகர் கோவிற் பொருட்களை கோவிற் கிணற்றினுள்ளும், ஐயனார் விக்கிரகத்தை ஆண்டி என்னும் விஷ்ணு புத்திரர் எடுத்துவந்து திண்ணைப்பிட்டியிலுள்ள கேணி (வெண்காயக் குன்று) க்குள் போட்டு அதனருகேயுள்ள அரச மரத்தடியில் காவல் காத்தும் நின்றனர். இவ்வாறு இருக்கும் காலத்தில், ஐயனார் கோவில் ஒல்லாந்தரால் உடைக்கப்பட்டு 'கமன்கில்' என்ற கடற்கோட்டை கட்டப்பட்டது இதன்பின் களபூமியிலுள்ள அம்பலவி முருகரிடம் இவ்விடயத்தைக் கூறி, இப்போதுள்ள ஈழத்துச் சிதம்பரத்தை அமைத்தனர், இம்முருகரும் ஆண்டியும் ஊர் மக்களிடம் பிடிஅரிசி வாங்கியே இவ்வாலயத்தைக் கட்டினர். இப்படியாகப் பிடியரிசி வாங்கும் சமயம் ஒரு அன்பர், இவர்களின் வயிற்று வளர்ப்பிற்கே இவ் அரிசி என்று பகிடியாகப் பேசியதும் அன்று தொட்டு இவர்கள் அன்னம் புசிக்காது முல்லை,முசுட்டைபோன்ற

மற்றும் இலைவகைகளையே உப்புக் கூடச் சேர்க்காது ஆக்கி உண்டு வந்தனர். இதனால் இவ் ஆலயத்தின் சுற்றுடலில் இன்றும்கூட முல்லை, முசுட்டை போன்ற செடிகொடிகளைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த ஐயப்பர் நடராஜப் பெருமானின் அற்புதங்கள் எண்ணிலடங்கா. ஒருமுறை ஆலய வளவில் புல்லுச் செருக்கிக்கொண்டிருந்த பாறு என்பவர் அங்கு விழுந்திருந்த தேங்காயை எடுத்து, தனது புல்லுக் கடகத்துள் வைத்து மறைத்துக் கொண்டு போக எத்தனித்தபோது, ஒரு பாம்பு வந்து புற் கடகத்தின் மீதேறி அதிக நேரமாகப் படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்ததால், வீடு செல்ல முடியாத நிலையில் அங்கு நின்ற மக்களிடம் தான் செய்த களவைக்கூறி, அத் தேங்காயை அவ்விடத்திலேயே போடுகின்றேன் என்று கூறியதும் பாம்பு அவ்விடத்தை விட்டுச் சென்றது. பின்னர் அவ்வாறே பாறு தேங்காயை ஆலயத்திற் போட்டுவிட்டு வீடு சென்றாள். 1954 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் (சோமவாரம்) அன்று. உபவாசமிருந்த ஆயிலியைச் சேர்ந்த விஷ்ணு புத்திர நடராஜப் பெருமானின் அடியார் முருகேசு சுப்பிரமணியம் என்பவர் ஆலய தரிசனம் செய்து மாலையில் (வெள்ளி கண்டு உண்பதற்காக) வீடு திரும்பும் போது ஆலய முன்றலிலே இலுப்பை மரத்தின் கீழ் சுப்பற்றை காத்தி என்பவன் தீராத நோயின் உக்கிரத்தால் அலறிக் கொண்டிருப்பதைப் பார்த்து – வேதனையடைந்து, தைரியசாலியான இவனுக்கே இப்படியான நிலையானால் எனக்கு எப்படியோ என்ற கவலையுடன் அவனுக்கு ஒரு கட்டி பிரசாதத்தைக் கொடுக்க அவனால் அதை வாங்கக் கூட முடியாத நிலையில் இருப்பதைக் கண்டு கவலை கொண்டு வீடு சென்று தனது விரதத்தை முடித்து நித்திரையானார். இரவு கனவில் தோன்றிய நடராஜப் பெருமான் "அடே பக்தா! நீ அவனைப் பார்த்துக் கவலைப்பட்டாய்! அவனே உன் போன்ற அன்பர்களால் எனக்குக் காணிக்கையாக விடப்பட்ட பசுக்களில் இரண்டை "அரைவயிறு தண்ணீருடன்" துரத்திப் பிடித்துத் துன்புறுத்தி, வாய்பேசாமிருகத்தைத் தீனியின்றிக் கட்டையில் கட்டி வைத்துள்ளான். இதை யார் பார்த்துப் பரிதாபப் படுவர்?" என்று கூறி மறைந்ததும், திடுக்கிட்டு எழுந்த சுப்பிரமணியம், அயலவர்களான தில்லைச்சி சுந்தரமலை, ஆ. தியாகராசா எம்.பி போன்ற அயலவர்களுடன் கோவிலையடைந்து, அங்கு, வைத்தியசாலையில் கூட மாற்ற இயலாது என்று வந்த ஆண்டவன் சந்நிதியில் இலுப்பை மரத்தின் கீழ் அலறிக்கொண்டிருந்த காத்தியை அணுகி அவனிடம் இக் கதைபற்றி வினவினார்கள். அவன், தான் "கோவிற்பசுக்கள் இரண்டினைக் களவாகப் பிடித்தது உண்மையென்றும், அதி

## இந்நூல் ஆக்கத்திற்கு

குருவாக முன்நின்றவர்க்கு எமது நல்லாசிகள்



இராமர்முதலி<br>அபிராமி } கோவிந்தர் - பரமாந்தியர்

**முருகேசு - சுப்பிரமணியம்**

[ காரைநகர் திண்ணைச் சட்டம்பியார் ]

லொன்றைச் சோனகனுக்கு 40 ரூபாவுக்கு விற்றேனென்றும். மற்றய பசுவை ஒருவன் வாங்க வருவதாகக் கூறியவன் இன்னும் வரவில்லை'' கட்டையில் நிற்கின்றது என்றும் கூறினன். கனவில் அரைவயிறு தண்ணீர் என்றது பற்றி அறிவதற்காக அவ்னிடம் ''இப்பசுக்களுக்குத் தண்ணீர்கூட வைப்பதில்லையா?'' என்று வினவியபோது, அவன் தான் ''இப்பசுக்களை வெண்காயக் குண்டில் தண்ணீர் குடிகுத்துக் கொண்டிருக்கும் போது ஒவ்வொன் கருப் பிடிகயிறு எறிந்தே பிடித்தேன் என்றும், உண்மையில் அவை போதியளவு தண்ணீர்குடிக்கவில்லை அரைவயிறு தண்ணீர் தான் குடித்தன'' என்றதிலிருந்து அதனையும் புரிந்து கொண்டனர். உடனே இவர்கள் அவன் வீடு சென்று, கட்டையில் இறைச்சிக்காகப் பசியுடன் நின்ற பசுவையும் அவிழ்த்துவிட்டு அவன் உறவினர்களிடம் நடந்தவற்றைக் கூறி ரூபா நாற்பது பெற்று வந்து ஆலய உண்டியலில் போட்டதும், அவன் உற்சாகமாக நடந்து ஆலயத்தை வலம் வந்து தான் செய்த தவறையெண்ணி மனம் நொந்து அழுது பின் தன் வீடுவரைச் சுயமாக நடந்து சென்ருன். இந்தக் காத்தி என்பவர் இன்றும், காரைநகர் வேரப்பிட்டியில் வாழ்கின்ருர். காரைநகர் மக்கள் இறந்தவர்களுக்குத் தானம் கொடுக்கும் போதும் தங்கள் மந்தைகளின் முதற் கன்றுகளையும் சிவன் கோவிலுக்குக் கொடுப்பது வழமை. இம் மந்தைகள் ஒன்று சேர்ந்து இனம் பெருகித் தேடுவாரற்று தூம்பிற்பிட்டியால் வந்து பொன்ஞலைக்கு அருகேயுள்ள பிட்டியில் மேய்வதும் வழமை. கன்று ஈன்றதும் பசுவின் பாலை ஆலய தேவைக்கு எடுப்பர். ஆயிலிபில் ஆ. தியாகராசா பா.உ வீட்டிற்கு அருகாமையில் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியாகிய பூரணம் இன்றும் வசிக்கின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மணற்காட்டு மாரியம்மன்:-** சேரநாட்டிலிருந்து 16ம் நூற்ருண்டில் காரைநகரில் குடியேறிய பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்த அபிராமி என்பவர் காரைநகரில் வாழ்ந்த விஷ்ணு புத்திரரான கிருஷ்ணர் முதலியின் மகன் இராமர் முதலியை மணந்து 'இராமாசி' என்ற நாமத்துடன் வாழந்து வருங்கால் அம்மை வைக்கரிய தொற்று நோய்களால் மக்கள் அல்லலுறுவதைக் கண்டு ஓர் கல்லை வைத்து அம்மனைப் பூசித்து ''இராமி வைத்த கல்'' என்று இன்றும் அழைக்கப்படுவதற்கு அத்திவாரமிட்டார். பின் இவ தன்ஞடு சென்று அழகான இன்றும் உள்ள விக்கிரகத்தினை வார்ப்பித்துக் கொண்டு வந்து வைத்துப் பூசித்து வந்தார். பின்பு சிவஸ்ரீ சு.கனகசபாபதிக் குருக்களின் கைக் குறிப்பின் சுருக்கம் ஒல்லாந்தர் ஊர்காவற்றுறை

யைப் பிடித்து ஒருமாதத்தினுள் பல கோவில்களை இடித்து, ஐயனார் கோவிலை இடிக்க வந்ததும் கண் தெரியாதுபோக எம்மைப் பூசை செய்ய வேண்டாம் என்று கூறி மறுபடியும் வந்து இடித்து ''கமன்கில்'' கோட்டை கட்டினர் கடலினுள். தேர் வாகனங்கள்யாவையும் கடலிலும் கிணற்றிலும்இட்டு வீரன் என்பவனை வெட்டியும் சென்றனர். எனக்கு ஓர் ஆண் பிள்ளை பிறந்ததும்அறிவித்தேன். ஒல்லாந்தரிடம்வந்து''தாமன்'' எனப்பெயரிட்டுக் குருஎமக்கே நீங்கள்அப்பெயர் வைக்கப்படாதுஎன்றதும் தாமோதரஐயர் எனக் களவாக மகனை அழைத்தேன். பூசை செய்ய முடியாமையால் வடகலை வைஷ்ணவப் பிராமணக்குடும்பங்கள் இந்தியா போயினர். நான் வியாவிலை விட்டு மணற்காடு மாரியம்மன் ஆலயத்திற்கு மாறிவந்தேன் அங்கேயும் இடிக்க வந்து நோய்வாய்ப்பட்டதும் இடியாது திரும்பினர். இதன் பின் இரகசியமாய் வீடுகள் தோறும் சூலம் வைத்து வழிபட்டனர். எனக் குறிக்கப்பட்டுள்ளது' [கா.சை.வ.ப.8] இப்படியான அற்புதநிகழ்வு நிகழ்ந்த இவ் ஆலயத்தின் விலைமதிப்பற்ற ஐம்பொன்னாலாகிய அற்புதச் சிலையை அவ்வூர்த் திருடர் திருடி யாழ்ப்பாணத்தில் கன்னனிடம் விற்றனர். உடனே அன்று அவன் வீட்டில் எல்லோர்க்கும் அம்மை நோயும், கஷ்டமும் ஏற்பட்டதும் கன்னன் விடயம் அறிந்து விக்கிரகத்தை உருக்காது பயக் கெடுதியில் தன்வீட்டில் இருந்த சாணகக் குவியலுக்குள் புதைத்து வைத்துப் பதைபதைத்தான். உடனே அன்றிரவு அம்மன் விஷ்ணுபுத்திரரான விக்காவில் குண்றிநாகர் என்பவரிடம் ராமீயின் [உறவினர்] கனவில் தோன்றி நடந்தவற்றையும், இருக்கும் இடத்தையும் கள்வர்களின் பட்டியல்களையும் மலர்ந்தருளியதும். உடனே நாகர் ஊரவர்களுக்கு உணர்த்திப் புன்னாலை உடுக்கன் என்பவருடன் யாழ் சென்று குறிப்பிட்ட இடத்தில் குறி தவறாது விக்கிரகத்தை எடுத்துப் பனை ஓலையால் (குடலை) கட்டித் தலையில் சுமந்தவாறு திருக்கோவிலை அடைந்து வைத்துப் பிரதிஷ்டை செய்து வழிபட்டனர். இவ்வாலயத்தைச் சுற்றி உள்ள காணிகள் யாவும் இவ் அபிராமியுடையதே. ஆலடி நிலம் தர்மசாதனம் செய்தவர்களும் இவர் சந்ததியினரே.

**ஸ்ரீசிதம்பரேஸ்வர சிவகாமி ஆலயம்:** இவ் ஆலயத்தில் வருடாவருடம் 5 தேர் ஓட்டம் வீதி வருவதுடன் நடேசர், சிவன், அம்மன், கணபதி, முருகன் உட்பட நவக்கிரக வழிபாடுகளும் சிறப்புடன் உள. விஷ்ணுபுத்திரத் தொல்புரத்தாற்றை கந்தர் என்பவர் பிள்ளை வரம் வேண்டிக் காசிக்குச் சென்று திரும்பி வந்ததும் அம்மாள் ஒரு கிழவி உருவில் வந்து வரம் கொடுத்து



தன்னை அடியார்கள் காசிக்கு வந்து வணங்க வேண்டாம். இங்கேயே ஆலயம் அமைத்து வழிபடுங்கள் என்று மறைந்தார். அவ்வூர் வெடியரசன் சந்ததியினர் அப்படியே எல்லோரும் சேர்ந்து ஆலயம் அமைத்ததும் கந்தருக்கும் ஆண்பிள்ளை பிறந்ததென்பர். இவ் ஆலயமோநேரம்தவறாது நித்திய பூசைகளும் திருவிழாக்களும் சிறப்புடன் நடக்கின்றன.

**வலந்தலை:-** வலம் வரும் தலை — ஆரம்ப இடம் — வெற்றியைப் பிரகடனப்படுத்தும் இடம் — கடற்பற்றில் வரும் எல்லைத் தலை முகப்பு. இந்த இடத்திலேயே கந்தகுமாரன் கைலாயமாகிய தீவுப்பகுதியில் நடந்த போரின் பின் சூரனை வென்று தேவரைச் சிறைமீட்டுத் தனது வெற்றியைப் பிரகடனப்படுத்தி, பொன்னகராம் பொன்னாலை சென்றதாகக் கந்தபுராண ஆய்வாளர் கூற்று. இவ் வலந்தலையிலேயே வெடியரசன் தனது சகாக்களோடு தனது வீரத்தையும் வெற்றியையும் பிரகடனப்படுத்தி வரலானான்.

**களபூமி:-** வெடியரசன் களம் செய்த பூமி — போர் செய்த பூமி — கற்பூமி. இவ் இடத்தில் வெடியரசன் போர் புரிந்ததால் களபூமி என்று அழைக்கப்படுகிறது. சேநாட்டுப் போர் வீரர்களும் வெடியரசனின் போர்வீரர்களாக இருந்ததால், அவர்கள் வசித்த இடமும் இதுவே (களநாடு — களபூமி — யா. கு 12) இப்பூமியில் பிற்காலத்தில் பொட்டன், வட்டன், சப்பட்டையன், சானேசன், ஏப்பன், ஏகன், இறுமி, என்ற குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் கூட்டம் குடியேறியதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன.

**தோப்புக்காடு:-** தென்னந்தோப்பு - தொப்பிக்காடு — சோனகர்காடு. இக் குறிச்சி தொப்பிக்காடாக இருந்து தோப்புக்காடாக மாறியதாகும். இவ்வூர் ஊர்காவற்றுறைத் துறைமுகத்துக்கு அருகாமையில் இருப்பதால் முத்துக்களையும், சங்குகளையும் வாங்கவந்த சோனகர் வியாபாரம் செய்த இடமும் இதுவாகும் இவர்கள் வியாபாரம் செய்து தங்கிய இடம் சோனத்தோம்பு ஆகும்.

**இராசாவின் தோட்டம்:-** இன்றும் இராசாவின் தோட்டம் என்ற பெயரிலேயே வழங்குவதால், வெடியரசனும் நீலகேசியும் ஓய்வு வேளைகளில் தங்கிய சுற்றுலாத் தோட்டமாகும். இன்றும் அரண்மனை சிதைந்த நிலையில் காணலாம்.

**நீலங்காடு:-** நீலகேசியின் அரண்மனையும், அந்தப்புரமும் அமைந்த இடமாகும். வெடியரசனின் மறைவுக்குப்பின், போர்த்துக்கேயர்கள் இங்கு வந்து கோட்டை அமைத்துச் சென்றபின் இவ்விடம் காடாயிற்று. இன்றும் துறைமுகம் பாவனையில் உண்டு. இத் துறைமுகத்தில் இருந்து கமன்கில் கோட்டை 200 யார் தூரத்தில் உள்ளது.

**நீலங்காட்டுத்துறை:-** இது நீலகேசியின் அரண்மனைக்கும் இராசாவின் தோட்டத்திற்கும் இடையில் அமைந்ததாகும். தீவுப் பகுதியை ஆண்டு வந்த வெடியரசன் துறைமுகத்திற்கு அருகாமையிலேயே தனது இராணிமாளிகையை அமைத்துத் தன் போக்குவரத்துக்குச் சுலபமாக்கினான் என்பது புலனாகிறது. பின்னர் ஆங்கிலேயரும் இலங்கை ஆட்சியாளரும் இத் துறைமுகத்தையே பாதுகாப்புத் துறைமுகமாகக் கருதி, கப்பல்கள் திருத்துமிடமாகவும், தற்போது 'கமன்கில்' கடற்கோட்டையும் இத் துறைமுகத்தையும் கடற்படைத் தளமாக அமைத்திருப்பது அன்று வெடியரசன் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்ததன் சிறப்பை விளக்கும். நீலகேசியின் அரண்மனைப்பகுதி காடானதும் நீலங்காடாயிற்று.

**பலிகாடு:-** வெடியரசன் குற்றவாளிகளையும், பகைவர்களையும் கொலைசெய்த இடமாகையால் அங்கேபலியான ஆவிக்கு வேள்வி உணவு அளித்த இடமாகும் என்பர்.

**செம்பாடு:-** செழுமை + பாடு = செம்பாடு. செழுமையான இடமென்றும், செம்மை நிறமண் உடைய இடமென்றும்அழைப்பர்.

**தங்கோடை:-** இவ் ஓடை வழியாக மழைநீர் வயலையும், கடலையும் அடைவதாலும், இதனை இன்றைய மக்கள் வீதியாகப் பாவிக்கின்ற போதிலும், மழைநீர் இன்றும் இவ் வழியால் ஓடுவதை (கோவிந்தி பாடசாலை) அவதானிக்கலாம். இவ் ஓடையின் நீர் வளத்தால், இருமருங்கிலுமுள்ள நிலப்பிரதேசம் செழிப்படைந்து செம்பாடாயிற்று. இச் செழுமை நிறைந்த பூங்காவில் வெடியரசன் தம்பதியினர் தங்கியதால் தங்கோடை ஆயிற்று.

**ஆலடி:-** வெடியரசன் பரம்பரையினரான, சேது நாட்டிலிருந்து வந்த அபிராமியின் வழிவந்தோர் நன்கொடை செய்த ஒரு பரப்பு புண்ணிய பூமியாகும். இந்த நிலத்தில் இளைப்பாற ஆலமரம் உற்பத்தியாக்கி ஆலடி ஆயிற்று.



**பாலாவோடை:-** சைவ நூல்களின் சாகத்தீவு (காரைதீவு) பாற்கடலில் இருப்பதால், இப்பாற்கடலுடன் இணையும் ஓடை பாலாவோடை ஆனது.

**சக்கலாவோடை;-** அசுத்தநீர் சென்ற வாய்க்கால் பின் சக்கலாவோடையாய் மாறியிருக்கலாம்.

**கோவளம்:-** கடலில் நீண்டிருக்கும் ஒரு முனைப்பகுதி கோல் என்ற கடலோட்டிகளினால் கோவளம் என்ற பெயர் இடப்பட்டதாம். இக் கோவம் வெளிச்சவீட்டை (கலங்கரை விளக்கத்தை) க் கொண்ட துறைமுகமாக அமைந்திருப்பதனால் மலையாள மக்கள் முதன்முதலில் இந்நாட்டிற்கு வந்த துறைமுகமாகும். இத் துறைமுகத்தில் அரிசி, ஓடு, வடக்கண்மாடு போன்றவற்றை அவர்கள் இறக்கியதாக முதியோர் கூறுரு. இத்துறைமுகத்திலேயே மார்க்கோபோலோ என்ற ஐரோப்பிய நாட்டுக் கடலோடி வந்திறங்கினான். அண்மையில் உணவுப் பொருட்களைக் கொண்டுவந்த இந்திய விமானகளும் இப்பகுதியாலேயே வந்தன. இவ்விடத்திலேயே சுவாமி முருகேசு [பேப்பர்ச்சாமி] இற்றைக்கு 25 வருடங்களுக்குமேல் ஆச்சிரமம் அமைத்தும், இந்நாட்டிற்கு வரும் பிறநாட்டவர்களுடன் பல மொழிகளிலும் பேசியும், இந்திய "இந்து'' பத்திரிகையின் நிருபராகவும் இருந்ததை நாமறிவோம். இத்துறைமுகத்தில் ஓர் மூடுசாந்து நன்னீர்க்கிணறு இருப்பதுவும் இதன்பெருமையே

**மூந்தல்:-** கோவளத்திற்கும் தாளையடிக்கும் இடையிலுள்ள துறைமுகம் மூந்தலாகும். இம் மூந்தல் ஒடைவழியாகத் துறைமுகச் சரக்குகள் ஆயிலிவரை எடுத்துச் செல்லப்பட்டன. புத்தளத்தில் இங்கிருந்து குடியேறியோரும் இப்பெயர் சூட்டியுளது.


**இருத்தலடி:-** பண்டங்கள் பண்டமாற்றுச் செய்யுமிடம். இங்கே விற்கும் பண்டங்களின் பத்து வீதத்தை அன்னிய ஆட்சியாளர்கள் கப்பமாகப் பெற்றனர் என்றும் நம்முன்னோர் கூறுவர். இன்றும் இவ்விடம் இருத்தலடி என்றே வழங்குவதை நாம் காணமுடிகிறது.

**வெடியரசன் வீதி:-** இவ், வீதி வெடியரசன் பரம்பரையினரான குகன்குலத்தவர்கள் அதிகம் வாழுகின்ற பிரதேசத்தில் அமைந்த பிரதான வீதியாகும் இப் பெயர் 1960 இல் கிராமசபையால் அங்கீகரிக்கப்பட்ட வீதியாகும்.


**ஈழம் வெடியரசன் கலாமன்றங்கள்:-** இந்த குகன்குலத்தவருடைய கலை, கலாச்சார வளர்ச்சிகளை நாடகம், கல்வி போன்றவற்றினால் பாதுகாத்து 1954 ஆம் ஆண்டிலிருந்து அரும்பணியாற்றுகின்றன. வீரநாராயணன் பிட்டி — வீரப்பிட்டி — நாளடைவில் வேரப்பிட்டியாகியது.

**அகில இலங்கை வெடியரசன் அறங்காவற் சபை:-**
இவ் அறங்காவற் சபையின் காரைநகர்ப் பிரிவு அங்கத்தவர்களாக அநேகர் இருப்பதுவும் விஷ்ணுபுத்திரர்களின் வரலாற்றுச் சிறப்பாகும். காரை — ஒரு செடி, ஒருசாதி மரம், ஒரு மீனின் பெயர், ஒருவகைச் சீலை, சுண்ணாம்புச் சாந்து, பல்லிலுள்ள ஒருவகைக்காவி, ஊமத்தைப் பாகல் வெள்ளாடு — சாகப் என்பதுவும் வெள்ளாட்டைக் குறிக்கும் தீவுப்பகுதியில் வெள்ளாட்டுப் பட்டி இருந்ததாக யாழ்ப்பாச் சரித்திரம் கூறுகின்றது.

**குகன்குலத்தவர்:** விஷ்ணுவின்பெயரான கண்ணன், கிருஷ்ணன், கோவிந்தன், கோபாலன், கோகுலன், இராமன், மாயவன், பார்த்தசாரதி, பெருமாள் என்ற நாமங்களைக் கொண்ட பெயர்களையே சூட்டியதுடன், பிற்காலத்தில் மலையாளத்தில் இருந்து வந்தவர்களும ஐயநாரின் பெயர்களையே கொண்டவர்களாய் இருக்கின்றனர். பெருங்கடலோட்டிகள் நடுக்கடலில் பலத்த காற்று வீசும்போது ''ஐயனாரே அபயம்'' என்று கூறுவது வழமையில் இன்றும் உள்ளது. இங்கிருந்து குடியேறியோர் மட்டக்களப்புப் பத்தைதிலும் இதே பெயரைச் சூட்டி வாழ்ந்தனர் என்பது புலனாகிறது. இவர்களின் பழக்கவழக்கங்களுடன் மலையாளப் பழக்கவழக்கமும் சேர்ந்து மருமக்காத்தாயம் அலியாசந்தானச் சட்டம்சேர்ந்து தேசவழமை என்னும்சட்டம்தோன்றிற்று. 1705 இல் சைமன்துரை ஆங்கிலத்தில் சட்டமாக்கினார் பெண் வழிப் பெயர்களான வள்ளிமேள், இராமிபேரன், இராமிமகன் என்ற பேச்சுக்களும் தாய்வழி உறவும் கொண்டதாயிற்று ஒவ்வோர் புதுவருடப்பிறப்பன்றும் பால்முட்டி, தயிர்முட்டிச் சாத்துப்படி ஊர் உலாவாக வலம்வந்து போர்அடிக்கும் நிகழ்வும் அனுமான் கரக, மேள தாள நடனங்களும் புத்தாண்டுகளில் பணம் முடிச்சு வீசி ஊக்கப்படுத்தும் கலைநிகழ்ச்சிகளாகும். இங்கு முத்துக் குளிப்பது அற்றுப்போனபின் உழவுத்தொழிலில் ஈடுபட்டனர் என்பதற்குச் சான்றாகப் பரம்பரையாக இன்றுவரை நெற்காணிச் சொந்தக்காரர்களாக இருந்து வருவதும் காரை மேற்கு நாகதம்பிரான் ஆலய புதிர்ப் பொங்கல்களும் அரிவுவெட்டு, உட்டட்டி கூட்டல் சூடுமிதித்தல் போன்ற நிகழ்வுகளில் களைப்புநீக்கி உற்சாகமூட்டும் ''பொலி பொலிய நாகதம் பிரான் பொலி'' என்பனவும் நினைவூட்டும்.



கோவளம்கலங்கரை விளக்கமும்பொறுப்பதிகாரி விஷ்ணுபுத்திர
உயர் திரு சி. கிருஷ்ணபிள்ளையும்
அவர் அரசினர் விடுதியும்



சொரூபபுத்துறை எமது கழக உறுப்பினரும் பெரும் கடலோட்டி
மாதாமியுமான அவுஸ்திரேலியாவில் அமரத்துவம் எய்திய
சின்னையா சிவலோகநாதனுக்கு
எமது அஞ்சலி

# தொல்புரம்

நாகதீபத்தை அடுத்து வடநிலத்தின் தலைநகராய்த் தொல்புரம் அமைந்ததனை நான்முகத்தில் அறிந்தோம். இத் தொல்புரமே வடநிலத்தின் தலைநகராய் இருந்தது என்பதனை, 1945 இல் பூமிசாஸ்திர நூல் எழுதிய ஆசிரியர் காரைநகர் திரு. சண்முகரத்தினம் தனது நூலில் உறுதிப்படுத்தியும் உள்ளார். இந்திரன்பொன்னகர்தொட்டு தீவுப்பகுதிகளில்ஆட்சி செய்தான் எனவும்; பொன்னகர் ஆகிய தொல்புரத்திலே இந் திரன்மகன் சயந்தன் ஆட்சிசெய்தான் என்றும், சூரபத்மன் மகன் பானுகோபன் இவனை வென்று. இந்நகருக்குத் தீமூட்டி மகேந்திரபுரம் சென்றான் எனவும் புராணக்கதைகள் உள்ளது. தொல்புரத்தை மையமாகக்கொண்டு வீரநாயணன் ஆட்சி செய்த காலத்தில், அங்கு சதுரங்கமணல், மாளிகையடைப்பு போன்ற பெயர்கள் வழங்கிவந்ததனைப் பழைய உறுதிகளிலும் கர்ணபரம்பரைக் கதைகளிலும் காணலாம். வீரநாராயணன் ஆட்சிக்காலம் முடிவடைந்தபின் தொல்புரத்திற் குடியேறிய மக்கள் இக்கிரமேத்தைப் "பழையபுரம்" என வழங்கினர் (தொன்மை — பழமை; புரம் — நகரம்) பேச்சுவழக்காலும், உண்மை அடிப்படையாலும் பழைமை — தொன்மையாக்கி காலப்போக்கில் "தொல்" என்ற அழகு எழுச்சிபெற்று தொல் + புரம் = தொல்புரம் ( Ancient — Puram ) என இன்றும் வழங்கப்படுகிறது.[1] ஆசிரியர் யோன் பழய — தொல் — முன் முன்குகர் என்றும் ஆராய்ந்துள்ளார்.

வீரநாராயணன், தொல்புரம், வட்டுக்கோட்டை, கோட்டையாவத்தை, ஆனைக்கோட்டை, பொன்னகர் போன்ற இடங்களையும்; அவன்தம்பி விளங்குதேவன் வடசுழிபுரம், திருவடிநிலை, புளியந்துறை ஆகிய சிற்றூர்களையும் வெடியரசனின் கீழ்ச் சிற்றரசர்களாகக் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சி புரிந்தது நாமறிந்ததே!. புவியியல் அமைப்பில் மற்றய இடங்களைவிடத் தொல்புரம் உயர்ந்ததாய் இருந்தமையால், அங்கு "அரசமுல்லையையும்," ஆனைக்கோட்டை, கோட்டையாவத்தை வட்டுக்கோட்டை, ஆகிய இடங்களில் "காவல்முல்லை" யையும், சங்கானையில் "பூத்தமுல்லை" யையும், கீழ்க்கரையாம் பொன்னாலையில் "சமயமுல்லை" யையும் வடமூலையான நெல்லியானில் " நெல்லியமுல்லை " யையும் அமைத்தனர்.

---

1 The prefix "Palaya" means that the days of glory had passed and should be taken in the same sense as " tol " in TolPuram and "mun" in mutkuhar of today

இத் தொல்புரமும் காரைதீவு முதல் பூநகரிவரை ஆதியில் ஒரே நிலப்பரப்பாய் இருந்தது. பின்னர் ஏற்பட்ட கடல்கோள்களினால் தற்போதுள்ள பரவைக்கடல் தோன்றியிருக்கவேண்டும். காரைநகரின் கிழக்குப்பகுதியிலும் பூநகரியிலும் பொன்னாலையம் என்ற கிராமம் உள்ளதனால் ஆதியில் இம்மூன்று பிரதேசமும் ஒரேநிலப்பரப்பாய் இருந்திருக்கலாம். இன்றும் பருவகாலத்திற்கேற்ப பொன்னாலைப்பகுதி மந்தைகள் காரைநகருக்கும் காரைநகர் சிவன்கோவில் மந்தைகள் பொன்னாலைக்கும் இப் பரைவைக்கடல் வழியாகவந்து புல்மேய்வதும் இதற்குச் சான்று பகரும். தொல்புர விஷ்ணுபுத்திரர்களால் பெரியம்மன், சின்னம்மன் என இரு அம்மன ஆலயங்கள் அன்றுதொட்டு வழிபடப்பட்டு வருகின்றன. பெரியம்மன் எனப்படும் வழக்கம்பரை அம்பாள் ஆலயம் ஆதியில் விஷ்ணுபுத்திரர்களால் கண்ணகை அம்மனக வழிபடப்பட்டு, காலப்போக்கில் ஆட்சியாளரின் கெடுபிடிகளால் அம்மன் ஆலயமென வழங்கப்படலாயிற்று என்பர். சின்னம்மன் எனப்பட்ட தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்பாள் ஆலயம் இன்றும் அப்பகுதி விஷ்ணு புத்திரர்களாலேயே பரிபாலிக்கப்பட்டு சகல சைவக்கிரியைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தொல்புரம் கிழக்கில் மறவர் தோட்டம் எனத் தோப்புகளும் உள.

மேலும் இக் கிராமத்து விஷ்ணுபுத்திரர்கள் பலதரப்பட்ட தொழில்களைச் செய்பவர்களாகவும் அரச ஊழியர்களாகவும் சிறந்துவிளங்குகிறார்கள். இந்நூல் வெளியீட்டாளர்களான "ஈழம் வெடியரசன் கலாமன்றமும்" தனது தலைமைச் செயலகத்தைத் தொல்புரத்திலேயே கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகு சிறப்புகளைக்கொண்ட தொல்புரத்தின் ஆதிகால அரசாட்சியின் சிறப்பின்கண்ணே, அதனைச் சூழவுள்ள கிராமங்களின் இடுகுறி, காரணப்பெயர்களைஇங்குநோக்குவோம்.

**பொன்னாலை:-** பொன்னினாடு புரந்திடுமன்னன்(பாயிரப்படலம்5) இப்பிரதேசத்தைப் பொன்னகர், பொன்னிநாடு, சுவர்க்கம் என ஆதியில் வழங்கினர். இமையவர் வசித்ததும், இந்திரன் பிறந்ததும் இந்நாடே என்றும், இதனால் சுவர்க்கத்தின் வாயில் பொன்னகர் என்றனர். கூராமை பொன்னாமையாகி ஆலயம் அமைத்த இடமாகையால் பொன்னாடு+ஆலயம்—பொன்னாலை ஆகியதென மூதாதையர் கூற்று. இதனாலேயே வீரநாராயணன் இவ்விடத்தைச் சமயமூல்லையாகத்தேர்ந்து அங்கு எழுநிலைமாடம் அமைத்தான். இவ் வீரநாராயணன் வழித்தோன்றலாகிய தொல்புரத்து விஷ்ணுபுத்திரர்களால் இவ்வாலயம் 17ஆம் நூற்



ஆண்டுவரை பரிபாலிக்கப்பட்டு வந்தது. இறுதியாகப் பரிபாலித்துவந்த "தாவீதிச் சட்டம்பியார்" என்பவர் கிறீஸ்தவ மதத்திற்சேர்ந்து நவாலியில் திருமணம்செய்து அங்கேவாழ்ந்து வந்ததனால், இவ்வாலயம் பரிபாலனமின்றிப் போகவே அவ்வூர் மக்கள் இவ்வாலயத்தைப் பரிபாலிக்கத் தொடங்கினர். இன்றும் இவ்வாலய கொடித்தம்பப் பொறுப்பையும், விஷேட உற்சவமாகிய வேட்டைத் திருவிழாவையும் விஷ்ணுபுத்திரர்களே நடாத்தி வருகின்றனர். மேலும் இவ்வாலயப் பூர்வீகவரலாறு சிற்பவடிவில் தற்போதுள்ள புதிய சித்திரத்தேரில் அமைக்கப்பட்டுள்ளது. வீரநாராயணன் தனதுசதுரங்கப்படைகளை அமர்த்திய இடமும் இதுவே. இதனால்இப்பகுதி சதுரங்கமணல் ஆயிற்று. இப்பொன்னகர் நாராயணனைத் தரிசித்து அனுக்கிரகம் பெறும் அடியார்கள் சொர்க்கத்தை அடைந்தவர்கள் என தஷ்ணகைலாயபுராணம் கூறுகிறது. இப்பொன்னகரையும் தன்னகத்தே கொண்ட தொல்புரம் வலிகாமம் மேற்கு — சங்கானை கோவிற்பற்று — தொல்புரம் இறை — பொன்னாலை என்றே 1987வரை வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**மூளாய்:-** மூளாய் என்பது சேரநாட்டுச்சொல். சேரநாட்டின் 14 இனத்தவர்களில் பத்து இனத்தவர்கள் இங்கு வந்து குடியேறினர் என யா. கு. -பக்கம் 11 இற் கூறப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே முதன்மையான கூட்டுறவு வைத்திய சாலையும் கூடவே வடஇலங்கை [தனியார்] மருத்துவக்கல்லூரியும் இங்கேயே அமைந்துள்ளது.

**கோட்டையாவத்தை:-** வீரநாராயணனின் கோட்டை அமைந்த இடமே இன்று கொட்டையாவத்தை எனலாயிற்று. வீரநாராயணன் உலாவிய தோட்டம் வீராவத்தை என இன்றும் அழைப்பதை நாம் காணமுடிகிறது.

**பத்தானைக்கேணி:-** வீரநாராயணனின் யானைப்படைகள் இவ்வழியால் வரும்போது, சுமார் பத்து யானைகள் ஒருங்கே நீர் குடிக்கக்கூடியதடாகம். பிற்காலத்தில் கவனிப்பாரற்றுத்தூர்ந்து போயிற்று. வீரநாராயணனின் யானைப்படை வலிமைபற்றி சேதுநாட்டு மன்னனும் பொறாமை கொண்டான் என யாழ்ப்பாணக் குடியேற்றம் பக்கம் 14 இற் கூறப்பட்டுள்ளது.

**பண்ணாகம்:-** இந்தியாவின் ஆலங்காட்டுப்பகுதிப்பள்ளத்தாக்கில் வசித்த அடியான், புடியான் ஆகிய இருவரும் திருவடிநிலை வந்து வசிக்க; அங்கு இருந்த விஷ்ணுபுத்திரர்கள் இவர்களைக்

கொண்டுவந்து குடியமர்த்த, தாம் புதிதாகக் குடியேறிய இடத்திற்கு அவர்கள் இட்ட பெயரே பண்ணாகம். அவ்விருவர்களினதும் சந்ததியினரே அங்கு இப்போ வாழ்கின்றனர் என்பது கர்ணபரம்பரைக் கதை. அடியான், புடியானைத் தொடர்ந்து மேலும்பலர் இங்குவந்து குடியேறி, விஷ்ணுபுத்திரர்களது காணிகளை வாங்கினார்கள். அண்மையிற்கூட, சங்கானையில் தற்போது வசித்துவரும் திரு. கோவிந்தர் என்பவருக்குச் சொந்தமாகப் பண்ணாகத்திலிருந்த (வைரவர் ஆலயமும், மாதர்சங்கமும் அமைந்த)காணியைஅவ்வூரவர்க்குவிற்றமை இதற்குச்சான்றாகும்

**வழக்கம்பரை:-** வீரநாராயணன் தன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்களின் வழக்குகளையும் பிரச்சினைகளையும் விசாரித்து நீதிவழங்கிய இடம். நீதிதேவதையாகிய கண்ணகியை (பெரியம்மனை) நினைந்து அம்பாள் சந்நிதானத்தில் இவ் விசாரணைகள் நடைபெற்றன. இவ்வாலயத்தைச் சூழவுள்ள காணிகளின் உறுதிகளில் ''முக்குவர் தோம்பு'' என்ற வாசகம் இருப்பதனை நோக்குக.

**சத்தியக்காடு:-** நீதி விசாரணையின்போது சத்தியம் செய்வதற்கென ஒதுக்கப்பட்ட இடம். இங்கு அமைந்த காளிதேவியை நினைந்து சத்தியம் செய்யப்படும்.

**காளாவிகாடு:-** ஆதியில் அரண்மனை காக்கும் காவலர் குடும்பங்கள் வசிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடமாகும்.

**சுழிபுரம்:-** சோழநாட்டுப் போர்வீரர்கள் வாழ்ந்த இடமும், திருவடிநிலை வந்திறங்கிய பக்தர்கள் தங்கவசதியும் நீராட ஏழு கிணறும், கேணிகளும் அமைக்கப்பட்ட இடமும் இதுவே. விஷ்ணுபுத்திரர்கள் ஆதியில் இங்கு பிள்ளையார், ஐயனார் ஆலயங்களைக் கட்டினர் என்றும், இவ் ஐயனார் ஆலயத்தின் பெயரில் அதிகவிளைநிலங்கள் இருந்ததாகவும், அன்னிய ஆட்சிக் காலத்தில் இவ்விளைநிலங்களின் தோம்புகளைச் சிலர் சூறையாடியதாயும் கர்ணபரம்பரைக் கதைகள் உள. இன்றும் இவ்விரு ஆலயங்களும் உள்ளன. இச் சுழிபுரத்தின்வடபகுதியையே வெடியரசனின் வீரத்தம்பியான விளங்குதேவன் ஆட்சிபுரிந்தான். இங்கு வாழ்ந்துவரும் விஷ்ணுபுத்திரர்கள், 1915 ஆம் ஆண்டிலேயே ''குகன்குல பஞ்சாயத்தை'' ஆரம்பித்து, அதன் நீதிவழுவாய சேவையினால் தமது பிணக்குகளைச் சுலபமாகத் தீர்ப்பதன் மூலம் ஒற்றுமையாய் வாழ்ந்துவருகிறார்கள். இங்கு வாழும் விஷ்ணுபுத்திரர்கள் அரச சேனாதிபதிகள் வழிவந்தோராயும்



சிறந்த கடலோட்டிகளாயும், கடல்வள ஏற்றுமதியாளர்களாயும் மற்றும் பலதுறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். இவ்வூர் மக்களின் சிறப்புப்பற்றி எம். டீ. ராகவன் தனது Cultural of Ceylon என்னும் நூலிற் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சுழிபுரப்பகுதியில் இருந்த 1000 பரப்புக்கு மேற்பட்ட தென்னை,பனைகளைக்கொண்ட நிலப்பரப்பை, ஆதியில் அது குகன் குலத்தவர்க்கே உரியதாகவிருந்தது என்பதனை விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்திய வைமன்துரை என்ற ஆங்கிலேய அதிகாரி 1905 ஆம் ஆண்டில், மீண்டும் அந்நிலத்தைச் சுழிபுரம் குகன் குலச் சங்கத்திடம் ஒப்படைத்தார். இவர்களால் புதிதாக அமைக்கப்பெற்ற பிரமாண்டமான ஐயனார் ஆலய கும்பாபிஷேக நன்னாள் வெகுவிரைவில் நடைபெறவுள்ளது.

**நெல்லியான்:-** இவ் ஈழம் கற்பூமியாய் இருந்தகாலங்களிலும் அது பண்படுத்தப்பட்ட பின்னரும், இறக்குமதி செய்யப்பட்ட நெல் மற்றும் தானியவகைகளைக் களஞ்சியப்படுத்திய இடம்.

**உசுமன்துறை; சேந்தான்குளம்**(சேந்தான்கரை சேந்தான்பிட்டி): இப்பகுதிகளின் சிற்றரசர்களாகவிருந்த ''உசுமன், சேந்தான்'' ஆகியோர், பாண்டுசுவின் விசாரணைபின்பின் தமது குடிமக்களுடன் ஒருபகுதியினர் தம்மினத்தவர்களான குகன்குலத்தவர் வாழ்ந்த தொல்புரம், சுழிபுரப்பகுதிக்கும் ஏனையோர் மட்டக்களப்பிற்கும் குடிபெயர்ந்தனர். பின்பு இங்கு குடியேறிய மக்கள் அவர்களின் பெயர்கொண்டு அவ்விடங்களை அழைக்கலாயினர். புளியந்துறையும் இது போன்ற நிகழ்வே!. புலியந்துறை — புளியந்துறை என மருவியது. இவ்வூர் மக்களே மட்டக்களப்பு சென்று தாமிருந்த இடத்தைப் புலியன்தீவென அழைத்தனர். இதுமட்டக்களப்பு நகரின் ஆதிப்பெயர். இவ்வூர்ப் பெயர் சேரநாட்டிலும் இருப்பதனையும் இதிலிருந்து மக்கள் கூட்டத்தின் பரவல்பற்றியும் ஆராய்ச்சியாளர்கருத்திற்கொள்க.

**சில்லாலை:-** அரசபடைகளுக்கு வேண்டிய படைக்கலன்கள் தயாரிக்கும் சிறு சிறு ஆலைகளைக்கொண்ட இடம்.

**பண்டத்தரிப்பு:-** ஆதிகாலந்தொட்டு மக்கள் தமது பொருட்களைப் பண்டமாற்றுச்செய்த இடம்.

**வடலியடைப்பு:-** ஆதியில் பண்ணாகத்திற் சீரும்சிறப்புடனும் வாழ்ந்த விஷ்ணுபுத்திரர்கள் சிலசமூகப்பிரச்சினை காரணமாய்த் தமது நிலபுலங்களை விற்று வடலிகள், பனைகள் நிறைந்த பகுதியிற் குடியேறினர். அவ்விடம் வடலியடைப்பு எனலாயிற்று.

**சித்தன்கேணி:-** படையானைகள், குதிரைகள் நீர்குடிப்பதற்காகச் சித்தன் என்பவனால் வெட்டப்பட்ட கேணி அமைந்த பகுதி. வையாபுரியின் சீடனான சித்தரும் வாழ்ந்த இடமென்பர் சிலர்.
**சங்கானை:-** வெடியரசனின் யானைகள், குதிரைகளுக்கு சங்குவளையல்களை அணிவித்துவிழாஎடுத்தஇடம் [சங்கு + யானை - சங்கானை].

**சங்கரத்தை:-** கடலிற் பெற்ற சங்குகளை சங்குவேலி, சங்குப்பிட்டி, சங்குவெளி ஆகிய இடங்களிற் காயவைத்தபின், இங்கு அமைந்த ஆலைகளில் அவற்றை அறுத்து அலங்காரப் பொருட்கள் செய்தனர். சங்கு அறுத்த இடமாதையால் சங்கரத்தை எனலாயிற்று வளையல் என்ற காப்பின் பெயர் சங்குவளையல் என்பதனால் ஏற்பட்ட பெயராகும் சங்கு வழயல் அணிந்தால் ஆரோக்கியம் உண்டாகும்.

**வட்டுக்கோட்டை:-** வட்டுடை அணிந்த போர்வீரர்களைக் கொண்ட கோட்டையை வீரநாராயணன் இங்கு அமைத்திருந்தமையால் வட்டுக்கோட்டை எனப் பெயர்பெற்றது. இங்கு விஷ்ணுபுத்திரர்கள் பெருமளவில் வாழ்துவருவதுடன் அருள்மிகு பிரமனாச்சி தோட்டத்துக் கற்பகவிநாயகர் ஆலயத்தையும் நேரந்தவறாது பூசைகள் நடத்திப் பரிபாலித்து வருகிறார்கள். அண்மையில் வெளியிடப்பட்ட இவ்வாலயக் கும்பாபிஷேகச் சிறப்புமலரில் இவ்வாலயத்தின் சிறப்புக்களையும் மகிமையையும் காணலாம். இங்கு வாசகவட்ட இளைஞர் சமூகசேவையாறுகின்றனர். மேட்டு நிலப் பயிர்களாக வெண்காயம், கொழுந்து முதலியன அதிகம் பயிரிடப்படுகிறது. இங்கு வாழ்மக்கள் மலையாளத்துச் சிற்பவல்லுனர்களிலும் பார்க்கச் சிறந்த சிற்பிகளாகவுளர். உதாரணமாக, சிற்பி ச. கணேசமூர்த்தி அவர்களைப்பற்றிய அண்மையில் சஞ்சீவியில் வெளிவந்த சிறப்புக்கட்டுரை இதனை வலுப்படுத்தும்.
**கோட்டைக்காடு:-** வீரநாராயணன் கோட்டைக்காடு மருவிக் கொட்டைக்காடு என வழங்கப்படுகிறது. வட்டுக்கோட்டைக்கு அருகே ஆதியிற்காடாக இருந்தஇடம். இது வீரநாராயணன் வேட்டையாடிய காடாகும்.

**அராலி:-** வேலணை, சரவணை, நாரந்தனை மக்கள் கடலருகில் அராவணையாக வந்து ஏறிய துறைமுகம் அராலித்துறைமுகமானது. இத்துறைமுகத்திற் தீவுப்பகுதிகளிலிருந்துசங்கரத்தைக்குக் கொண்டுசெல்லும் சங்குகள். பெருமளவில் இறக்கப்பட்டது. ஐரோப்பியரும் இத்துறையைப் பயன்படுத்தியதற்கு, அவர்களின் கட்டடங்கள் ஆதாரமாய் உள்ளன. இங்கு மலையாளன் காடு ஐயனார் அராலிகிழக்கில் இருப்பதுடன் மூலஸ்தானத்தில் சிலம்பும், பிரம்பும் உள்ள பழமை அம்மன் ஆலயமும் உள்ளது.



**நவாலி:-** வீரநாராயணனின் ஆனைக்கோட்டையை அண்மித்த ஒரு கி - மீ தூரத்தில் அமைந்த இடம் நவாலியாகும். இதனால் வெடியரசன் வழித்தோன்றல்கள் இன்றும் இப்பகுதியில் சிறப்புடன் வாழ்ந்து வருவது ஆராய்சியாளர் கவனத்திற்குரியதாகும். சங்கநாகர், முக்குளிநாகர் ஆதியில் சங்கும், முத்தும் குளித்தனர் என்பதற்கிணங்க அவர்களின் வழித்தோன்றல்கள் மன்னார் ஈறாகவுள்ள உலகளாவிய ஏற்றுமதி வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர். திருவாளர்கள் செல்வராசா, இராசையா, சுகந்தசீலன் ஆகியோர் ஜனாதிபதி விருதுபெற்ற ஏற்றுமதியாளர்களானதும் சிறப்புடையதொன்றே. 28-1-1988 இல் ஈழநாட்ப் பத்திரிகைச் செய்திப்படி வடமாகாணத்திலிருந்து பங்களாதேசத்திற்கு பலதரப்பட்ட சங்குப் பொதிகள் 300 ஏற்றுமதியானதென்பதனால் தொடர்ந்தும் சங்குகள் ஏற்றுமதியாகிறது என்பது உறுதியாயிற்று. இங்கு வை எம். சீ. ஏ ஸ்தாபனமும், சைவ மன்றங்களும் ஒன்றிணைந்து மக்கள் கலாச்சாரத்தில் அரும்சேவை செய்து வருகின்றன. மறைந்தஅமரர்சின்னப்பாக்கிழாக்கரின் சேவையை நிலைநிறுத்த அவர் பெயரில் ஒரு வீதி உள்ளது. இவ் வெடியரசன் நாடகத்தைப்பாடிய புலவர் வயிரவி இராமு அவர்களும் ''கல்லாதான் கற்றகவி'' என்ற மொழிக்கேற்ப அன்று பாடிய பாடல்கள் இன்றும் சிறப்புடையதாயும் எமக்கு ஆதாரமாயும் அமைந்துள்ளது. மேல்நாடுகளில் பெரும் ஆராட்ாளர்ளாகசியயும் அறிவாளிகளாயும் இவர்களில் அனேகர் விளங்குகின்றனர். 1981 ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சிகள் வெடியரசன் காலத்தை உறுதிப்படுத்துகின்றன.

**நாவாந்துறை:-** நாவாய்கள் நிறுத்திய இடம் நாவாந்துறையாயிற்று. பாட்டாளி மக்கள் சங்கு, முத்துக்களைப் பண்டமாற்றுச் செய்து வெடியரசனின் குடிமக்களுடன் ஒன்றிஇணைந்து ஏற்பட்ட மக்களே சோனகர் என்று எமது முன்னோர் கருத்தாகும். எங்கெங்கே வெடியரசன் கடல்வணிகர் இருந்தனரோ அங்கெல்லாம் இவர்களும் குழற்பிட்டுமாவும்; தேங்காய்ப்பூவும் போல ஒற்றுமையாய் அருகருகே வாழ்ந்தனர் என ஆதாரங்கள் உள.


**யாழ்ப்பாணம்:-** இராவணன் இறக்கச் சித்திராங்கனென்னும் கந்தருவன் இராவணன் வீணையுடன்வந்து கீரிமலைச்சாரலில் வீணகானம்பாடி நகராக்கி காந்தருவநகர், வீணகராக்கியநகர், வீணகானபுரம் ஆகத்திரேதாயுக காலத்திலும், நாகத்தீவு, எருமைத்தீவு எனக் கலியுகத்திலும் தமனியப்பார், பொற்பூமி, பொன்தரை சுவர்க்கலோகம், சுவர்க்கம் என்றனர் பண்டையோர். "றங்கியது தப்னியப்பா ரதனைச் சூழ்போய்த்

தடம்'' (அ. கோ. ப. பக்கம்- 58) ''நாகமேலிருந்து மாற்ருனண்ணனை குமரனேபோல்'' (திருவிளை 99) நாகர் -நாகம்-சுவர்க்கம்-நாகநாடு - யாழ்பாடிநாடாயிற்று. இறுதியில் நாகர்ஆட்சியின் பின் வாலசிங்கமகாராசன் [நரசிங்கமகாராசன்]கி. பி. 950வரை மாருதப்புரவல்லியின்பின் செங்கடகநகர் கதிரைமலை ஆட்சியில் சோழக்கவி வீரராகவன் [குருடர்] யாழ் இசைத்து பிரபந்தம் பாடி அரசனை மகிழ்வித்து யாழ்ப்பாணம் அமைத்தான். என்பர் சிலர். எல்லாளன் ஆட்சியில் [கி. மு. 205 இல்] அனுராதபுரத்தில் அந்தகர் முகத்தில் அரசர் விழிக்கலாகாதென்று திரைமறைவில் ''நரை கோட்டிளங்கன்று நல்வளநாடு நயந்தளிப்பான்''...... ''திரை போட்டிருந்தனை யேவேல் சிங்கசிராமணியே'' எனப்பாடி யாழ்ப்பாணம் அமைத்தான் என்பர்சிலர். இவ்விரு நிகழ்வுகட்கும் இடைக்காலம் சந்தேகத்துக்குரியதாகையால் யாழ்ப்பாணவரலாற்று ஆசிரியர் ப. 49-80 வரையில் யாழ் என்பது மனிதஉடம்பே. இவ் ஆன்மா யாழ் என்னும் உடம்பில் நூற்றுக்கணக்கான நரம்புகளுக்கூடாக இசை எழுப்பும் நாக்கு என்றும் உடம்பின் 96 தத்துவங்களையும் 32 ஆகவும் இவ் 32 நரம்புகளால் அமைந்த உருத்திர யாழே ஏலேலசிங்கன் முன் வாசித்தான் என்பர். இதனால் 32 வட்டமாக யாழ்ப்பாணத்தை பிரித்து ஆண்டான் என்றும், பறங்கியரும் 32 கோயிற்பற்றுக்களை வகுத்து 32 தேவாலயங்களையும் அமைத்தனர். இவ்32 வட்டங்களும் நாக்காகிய யாழுக்கு 32பற்கள் பாதுகாப்பதனால் ஞானிகள் யாழ்ப்பாணம் என்றனரென்றும் யாழ பாடிய கதை மகாபாரதத் திரிதராட்டிரன் சரித்திரப்போல் மாயையோடு ஆன்மா சேர்ந்தநிலை குருடனாகவும், ஞானவழியின்படி தன் பேற்றைச் (பரிசை) சுழிமுனைக் கதிரைமலையிற் பெற்றதும் அரண்மனைத் திரைச்சீலை நீக்கிய நிகழ்வு கிறிஸ்த்து சிலுவையிலிட்ட போதுதிரைச்சீலை இரண்டாகக் கிழிந்ததை ஒக்கும் திரைச்சீலை மாயை நீங்கி ஆன்மாஉடம்பாகிய யாழைவிட்டுச் சுழிமுனையை நோக்கிச் செல்லும் தத்துவக் கதையே என்றும், யாழ்ப்பாணர் மூவகைப்பாணருள் ஒருசாரார் என்றும் ''துடியன் பாணன் பறையன் கடம்பனென்றிந் நான்கல்லது குடியுமில்லை'' [325] என்னும் பாடலால் கடல்வளத்தை நம்பியிருந்த யாழ்ப்பாணர்கள் ஒருகாலங் குடியிருந்தவிடம் யாழ்ப்பாணம் என்பதே பொருந்தும் எனக்குறிப்பிட்டுள்ளார் பக்கம் 79 இல். எதுஎவ்வாறுயினும் சங்ககால நூல்களிலும் இப்பாணர்கள் மென்னில மக்கள் என்றும் அரசனின் ஆலோசகர்களாகவும், மெய்க்காவலாளராகவும் இருந்தனர் என்பதனை அறியக்கூடியதாகவுள்ளது மதுரையில் வெளியிடப்பட்ட க பு.ம பக்கம் 90இல் இலங்கையை யாழ்ப்பாணத்தினது பெயர்போன பகுதியாகிய தம்பலைப்ப

# மறைந்த மன்ற முன்னோடிகட்கு எமது அஞ்சலி



திரு. கோ. கிருஷ்ணர் (ஆசிரியர்)
தொல்புரம்



திரு. கா. சின்னத்துரை (ஆசிரியர்)
தொல்புரம்



திரு. நாகநாதர்-செல்லர்
(சாமியார்)
வேலணை



திரு. கி. சிவசுப்பிரமணியம்
(தச்சுத் தொழில் அதிபர்)
வட்டுக்கோட்டை

தியின் பெயராலும் இலங்கை வாசிகளை முற்குகரின் பெயராலும் கிரேக்கர் வழங்கினர். Taprobane தம்பழபனை - தம்பலபதி I — மு, palaeogoni பழைய உகன் — முன்உகன் முற்குகன் என்றும் ஆதாரங்காட்டியுள்ளார். யாப்பானே, யாப்பாபட்டுனே என்றும் சிங்களத்தில் வழங்கிய பெயர் மருவியிருக்கலாமென எஸ்.டபிள்யு.குமாரசுவாமியும், சுவாமிஞானப்பிரகாசரின் கருத்தாகும். சரியான முடிவுகாண வாசர் ஆராய்ச்சியாளர்கள் கவனத்திற்குரியதே எதுஎப்படியானாலும் போத்துக்கீசர் பண்ணையில் கோட்டையைக் கட்டியதும் யாராலும் காணமுடியாமற்போக அடர்ந்தகாட்டில் வேட்டைக்குப்போன சங்கிலியரசன் காட்டு மத்தியில் கோட்டையைக் கண்டதனால் அப்பகுதி ஆதியில் கானப்பகுதியாயிற்று என்பது புலனாகும். மீண்டும் விபரங்கட்கு வடஈழம் நோக்குக.

**பறங்கித்தெரு:-** யாழ்நகரில் பறங்கியர் வாழ்ந்த இடம் பறங்கித்தெரு ஆயிற்று குகன்குல மக்களான இவர்கள் இடையில் ஏற்பட்ட ஆட்சியாளர்களின் அழைப்பால் 1624 இல் புதுமை மாதா கோவிலில் மூன்று திருமுழுக்குச் சடங்கில் முதலிமார் தளபதிகள், ஆராச்சிகள், தலைவர்கள், கோவிற்பிராமணர்களுமாக 230 குடும்பங்களும் இன்னும் சில பிரமுகர்களிலே 9 கிராமங்களின் தலைவரான 9'பட்டங்கட்டிகளும்' ஞான முழுக்குப் பெற்றனர் எனச் சுவாமி சா. ஞானப்பிரகாசர் யா.க திசரித்திரச் சுருக்கம் ப. 10ல்க் குறிப்பிட்டுள்ளதனால் பட்டங்கட்டிகள் என்பதும் சுனசூரியசிங்கையாரியனால் குகன் குலத்தார்க்கு வழங்கிய கௌரவப் பட்டமென்பதை மீண்டு ஆராய்வோம். 17ம் நூற்றாண்டிலும் இவர்களே கிராமங்கள் தோறும் தலைவர்களாக இருந்தனர் என்பது புலனாகின்றது. இங்கே இவர்களின் சந்ததியினரில் சிலர் கிறிஸ்தவர்களாக உள்ளனர். இவர்களில் அதிகம் அரசாங்க உத்தியோகத்தர்களானாலும் ஏனைய சைவக் கிராமங்களில் தம்மக்களோடு கலாசாரப் பண்பாட்டை விட்டுக்கொடுக்காது உறவாடி வருகின்றனர்.

**கொழும்புத்துறை:-** கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளும் பொருட்களும் ஏற்றியிறக்கியதுறை கொழும்புத்துறையாயிற்று. இதனை 1987 அண்மை யுத்தக்காலத்தில் நடந்த போக்குவரத்து, அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாலும் இத்துறைமுகம் சிறப்புப் பெற்றதாயிற்று. இக்கொழும்புத்துறையில் காணப்படும் மணலியம்பதி ஐயனார் அம்மன் ஆலயம் மிகவும் பழமையானதாகவும் வீர நாராயணன் தன வெளிநாடு செல்லுங்கால் இவ்வாலயத்தைத் தரிசித்தே செல்வான் என்றும்

30-08-1986ல் ஈழநாட்டுப் பத்திரிகைச் செய்திமூலம் அறியக் கூடியதாயிற்று. கொழும்புத்துறை இடைக்காலப் பெயராகும் ஆதிப் பெயர் "மணலியம் துறை" என்பர் சிலர். இங்கு சிறந்த கப்பலோட்டிகள் வாழ்ந்ததுடன் சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகட்கு எமது சிறந்த மரங்களால் செய்பட்ட வத்தைகள் பெருமளவில் வர்த்தகம் செய்யப்பட்டது என்பதனைத் திரு. சங்கிலி வேலுப்பிள்ளை என்பவரும் 20ம் நூற்றுண்டு வரை இவ்வணிகம் செய்தமையால் புலனாகும். இவர் மகனே நடராசா. நீதிபதியாக இருந்தும் இவரது ஸ்தாபனத்தைக் கண்காணித்தும் வருகின்றார்.

**தச்சாய்தனங்களப்பு:-** சாவகச்சேரிப் பகுதியின் தென் பகுதியில் அமைந்த பிரதேசமாகும். பரவை ஆழமற்ற கடற்கரையைக் களப்பு என்று கூறும் வழக்கமாகையால் தனவழம் உள்ள களப்பு தனங்களப்பு என்றும் பெயர் பெற்றது. இங்கேயும் விஷ்ணுபுத்திரர்கள் உழவுத் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்கே விஷ்ணுவின் பெயரைப் பொது ஸ்தாபனங்கட்கு அமைத்து விஷ்ணு சனசமூக நிலையங்கள், விஷ்ணு நூலகங்கள் உண்டுபண்ணி விஷ்ணுபுத்திரர்கள் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர்வழியே சங்கிலியைச் சிறை செய்யப் போர்த்துக்கேயர் வந்தார்கள் எனச் சரித்திரம் கூறும். பிற்பகுதியில் இப்பிரதேசம் தென்மறவர் ஆட்சிக்குட்பட்டது.

**நாகர்கோயிற்பற்று:-** வல்லிபுரக கோவில் ஈருக முல்லைத்தீவு வரை பரந்திருந்த இப்பிரதேசத்தில் நாகர்கள் ஆதியில் வாழ்ந்தனர். என்பதனை நாகர் கோவில் வலுப்படுத்துகின்றன. ஆதி விஷ்ணுபுத்திரர்கள் எழுவான்கரையில் துள்ளு மீனாக அவதரித்த மகாவிஷ்ணுவை வல்லிபுக் கோவிலில் வழிபட்டு வந்தனர் என்பதும் புலனாகின்றது. சேர,சோழ, பாண்டிய ஆட்சிக் காலங்களில் 96 குடும்பங்களில் இருந்து காலிங்கராயன், பல்லவராயன், மழவராயன், சேண்டைப்பிரியான், இராசாளி ஆர்சுத்தி, புதுவிராயர், பூதராயர், பதிராயர், சாளுவர், சேனாதிராயர். கண்டியர், பாலியர் களப்பாடி, மெனேய்தர், திருவாட்சி, மாலாணன், மழுவன் ஆகிய குடும்பங்கள் இங்கே குடியேறியதனைத் தொடர்ந்து இவ் இடப் பெயர் தென்மராட்சி ஆனது. சமரபாகுதேவன், வதிரிபாகு தேவன், வென்றிபாகுதேவன், குருளிபாகுதேவன், மணிவீர பாகுதேவன், சேற்கொடிதேவன், சிங்கபாகுதேவன் ஆகியோர் கரையூர்களைவிடக் குடியேறிய இடங்கள் இன்றும்



அவர்கள் பெயரால் வழங்கப்படுவதுடன் வடமராட்சி எனப்பட்டது இங்குள்ள வல்லைவெளி, தாலவெளி முதலாம் இடங்களில் "கள்ளர்கள்" ஒழிந்திருந்து பிரயாணிகளுக்கு அதிகம் இடுக்கண்களைச் செய்துவந்தனர் இன்றும் "வல்லையிற் கள்ளர்" என்ற பேச்சு வழமையில் உள்ளது. ஸ்ரீடைக்துரை அவர்கள் காலம் வரை நீடித்ததினால் பிரயாணிகளுக்கு ஏழுமடம், குளம் கிணறு வசதிகளை ஏற்படுத்திச் சங்கரன், தினகரன் என்னும் இரு தலையாரிக் கள்ளர்களையும் விருந்தில் பிடித்து அம்பாந் தோட்டைக்கு அனுப்பியதுடன் கள்ளர் கூட்டம் அற்றுவிட்டது என்றும் யா.வ.பக்.9ல் உள.

**பருத்தித்துறை:-** வட கடல் ஆதியில் மகாகாந்தார நதி என்று விளங்கிற்று. குணகாமம் என்ற கிழக்கு ஊர்த்துறை, இது மகாகாந்தார நதியின் கழிமுகத்தில் இருந்ததாக மகாவம்சம் (ப.64) கூற்று. இதற்கு மேற்கே கசாத்துறை இருந்ததினாலும் குணகாமம், பருத்திவளர்ப்பின் பின் பருத்தித்துறையாயிற்றுப் போலும். அங்கே விஷ்ணுபுத்திரர் தண்டயர் காளியப்பர் மகன் வி. கே. குமாரசுவாமி [80 வயது] சரஸ்வதிதேவி, பரமேஸ்வரி தேவி, பாக்கியலட்சுமிதேவி, போன்றபல வத்தைச் சொந்தக்காறரையும் திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஈருக வத்தையில் வாணிபம் செய்பவரையும் சந்தித்தேன் (1967இல்) தான் பெரும் கப்பலோட்டி என்றும் தூத்துக்குடி ஈருக ஓடுகள் அடக்கன் மாடுகள் கொண்டுவருவதாகவும் கூறியதுடன் விஷ்ணு பக்தன் என்பதற்த வல்லிபுரக் கோவிற் தேர்க்கட்டை வருடாவருடம் தான் போடுவதாகவும் இங்கு குடியேறிய வன்னி மக்களின் ஆதிக்கத்தின்பின் விஷ்ணுபுத்திரர் அநேகர் மட்டக்களப்புக்கும் ஏனையபகுதிகட்கும் சென்றனர் என்றும் கூறினர்.

**பூநகரி:** இங்கே பொன்னுவெளி என்ற கிராமம் உள்ளதனால் பொன்நகராம் நாக நாட்டில் இருந்து நகர்வுற்ற (கடல் புகுந்த) எஞ்சிய நிலமே "பூநகரி" என்பது புலனாகும், நாக தேவன் என்பவன் இத்துறையை ஆண்டதனால் நாகதேவன் துறை என்பர். இவன் நண்பன் அன்னதேவன் பெற்ற வயல்கள் அவன் பெயராலும், மறவர் குடியேறிய குறிச்சி மறவர் குறிச்சி என்றும், விஷ்ணுபுத்திரச்சித்தர் வாழ்ந்த குறிச்சி சித்தன் குறிச்சியென்றும் இடைக்காலங்களில் வழங்கலாயிற்று. சித்தன்குறிச்சி, ஞானிமடம், கறுக்காய்த்தீவு, கள்ளிப்பிட்டிகளில் அநேக விஷ்ணு புத்திரர்கள் உளர்.) அங்கே பத்தினியாய் அமைந்துள்ள ஆலயம் ஆதிக் கண்ணகை அம்மன் கோவில் என்று எஸ். குமாரசாமி அவர்கள் இடப் பெயர் வரலாற்று

நூலில் பக் 15ல் எழுதியுள்ளார். எத்தனையோ சமூக அடிப்
படை மாற்றத்திலும் அவ்வூர் விஷ்ணு புத்திரர்கள் கடல்
அண்மித்தவர்களாயிருந்துங் கூடக் கடல் வளம் செய்பவர்கள்
ஒருவர் கூடஇன்றி உழுதுண்போராகவும் நூற்றுக்கு மேற்பட்ட
உழவுயந்திரங்களைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். அங்கே
பொ. கோபாலபிள்ளையைச் சந்தித்தபோது ஆதியில் இங்கு சங்
குகள் குவிக்கப்பெற்று மாந்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டத
ஞல் சங்குப்பிட்டி என்ற பெயர் ஏற்பட்டதென்றும் தாங்கள்
வெடியரசன் பரம்பரையினர் என்பதனையும், இம்மண்ணை
அன்றுதொட்டு ஆண்டு வந்தவர்கள்எம்மவர் என்ற ஆதாரக் கல்
வெட்டுப் பாடலையும் தந்துதவினர். மேலும் தாங்கள் கண்ணகி
தேவியை குளித்திகளும், பொங்கல்களும் வைத்துக் கொழும்புத்
துறை, கோயிலாக்கண்டி, தனங்களப்பு, கச்சாய்ப் பகுதி உறவி
னர்களுடன் சேர்ந்து விழாக் கொண்டாடுவதாகவும் கூறினர்.

கொண்டார் கொழும்புத்துறை கோயிலாக்கண்டி மறவன்புலோ
செல்வி கண்ணகித்தாயே தட்டாதே நட்டுந் தனங்கிளப்பு
அம்மானைத், தாபரித்து வைத்து செல்வியா தீவிலுறை
செல்வி கண்ணகைத் தாயே. என்று பழைய பாடலைப் பாடினர்.

முன்னை நாள் காலம் தன்னில் முதுபெரும் அரசைச் சார்ந்த
எல்லைக்கோர் இலக்கணமாய் இருந்ததாம் இந்தப் பூமி
இலங்கிடு மரபைச் சார்ந்த இரா குக வழியில் வந்த
பூம் சாகரன் ஆட்சி செய்தான் புனிதமாம் பூநகரை அன்று.
(பழம் திரட்டு)

**மன்னார்:** மந்தாகினி- கங்கை, ஆகாயகங்கையின் கரை
யில் அனுராதபுரமிருப்பதாக மகாவம்சம் [MHV. xxix.5]
கூறும். "மல்வத்த ஓயா, அருவி ஆறு இராட்சதக் குளத்தை
நிரப்பி மாந்தை அருகாமையிலுள்ள அரிப்பினில்பாய்வது இதனை
உணர்த்தும். பிளினி என்ற ரோம ஆசிரியர் (கி.பி 50) மாந்
தையை சீ-மாந்தா என்றும் அங்கு, "மெகிஸ்ப" [Megisba]
என்ற பெரும் குளம் இருந்ததாகவும் கூறியுள்ளார். இம்மகிஸ்
பக் குளம் அருகே அமைந்த ஈஸ்வரத்துடன் கேது சேர்ந்துமகீஸ்
வரம்—இறைவனின்திருச் சேர்ந்து திருக்கேதீஸ்வரம்என்பர்சிலர்
இவ்வாலயம் பூர்வம் கேதுநாகர்அரசனால் நிர்மாணிக்கப்பட்டது
(யா.ச.ப.55) ஆதியில் பெருங்கயிலை, வெள்ளிமலை, கயிலாசம் மாந்
தையிலிருந்ததென்பதனாலும் ஆலயச்சிறப்புப்புலனாகின்றது. இம்
மாந்தை நகர் அல்லிராணியின் கீழ் வெடியரசன் ஆதிக்கத்தில்
இருந்த தென்பதனை அறிந்திருந்தோம். இந்நாட்டை வெளிப்பு



நான் என்றதால் வெளிஅரசன் வெடிஅரசனானான்என்பர். இங்கே
முத்துக் குளிக்கும் மக்கள் அநேகர் கடல் கோளால் அழிந்தனர்
என்பதனை நூன்முகத்தில் குறித்தோம். இதனை இராச வழி
யும், சிலப்பதிகாரக் காதை 11அடி 18 20லும் காணலாம்.
மன்னார்ப்பிரிவு அன்றுதொட்டு யாழ்ப்பாண அரசுக்குட்பட்ட
தாயிற்று. இதனால் சேதுக்கரையில் ஓர் திசையான பகுதியை
ஆண்ட யாழ்ப்பாண அரசர்களையும் சேதுகாவலன், சேனாதி
ராசன் என்றழைத்தனர். சிலாபம் வரை முத்துக்குளித்த
விஷ்ணு புத்திரர்கள் முத்து முடிவுற்றதும் பல துறைகளிலும்
ஈடுபட்டபோதிலும் அரிப்பில் உள்ள அல்லிராணிக் கோட்டை
இன்றும் இவ் உண்மையை உணர்த்துவனவாம். " வங்கம் மலி
கின்ற கடல்'' என்று சுந்தரரும் பாலாவியை சம்மந்தரும் போற்
றிய புண்ணிய பூமியும் இதுவே.

**விடத்தல்தீவு:-** வெடியரசனும் அவன் நண்பனான பாட்டாணி
மீராவும் இவ்விடத்தில் தங்கியிருந்து கடல் ஏற்றுமதியை மாந்
தைத் துறைமுகத்தில் கவனித்தனர் எனக் கர்ண பரம்பரைக்
கதைகள் உள. இதனால் இன்றும் இங்கே விஷ்ணுபுத்திரர்களும்
சோனகர்களும் ஒன்றாக இணைந்து நண்பர்களாக வாழ்கின்ற
னர். இங்கே ஆதிப்பிள்ளையார் ஆலயமும், முகமதியார் பள்ளி
வாசலும், விடத்தல் அம்பதி அடைக்கல மாதா ஆலயமும்
சிறப்புடன் அருள்பாலிக்கின்றனவாகும். அங்கே சௌக்கியத்
திணைக்களச்செல்வியோசெப் பிலோமினாவைச் சந்தித்தேன்அவர்
வெடியரசன்சந்ததியினர் என்பதனை அறிந்ததும் ஆனந்தம்கொண்
டாடிஅல்லிராணியின் எல்லையில் களவாக முத்துக் குளிப்போர்
களைக்கண்ட ''அல்லிஆழிக் கடலிலும் அஞ்சாதுபோய் அழியாத
கம்பமாடா நான், பாலிச்சூறாவளி வந்து அள்ளிக் கொண்டு
போகட்டும் உங்களை'' என்றதும் கடல் கொந்தளித்து அவர்
களை அள்ளிச் சென்றது என்ற பெருமைகளையும் நூறு வயது
ஆபிரகாமுக்கும் எண்பத்தைந்து வயது சாராளினும் மகனும்
ஈசாக்கின் மகன் பதினாறும் வயதில் வெட்டுண்டதும், ஆகா
யத்தில் நட்சத்திரம் போலவும். சமுத்திரத்தில் மச்சம் போல
வும், கடற்கரை மணல் போலவும் உன்சந்ததியினரைப்பெருக்
கப் பண்ணுவேன் என்று அசரீரி கேட்டதாகவும் அதேபோன்று
நீதியும், நெறியும் தவறாத வெடியரசன் குகன் குலம் இனிது
தழைத்தோங்குமென்ற ஆசியைக்கூறி வழியனுப்பி வைத்தார்.
மேலும் மன்னார், திருகோணமலை. மட்டக்களப்பு, யாழ்ப்பாண
விஷ்ணு புத்திரர்களான குகன் குலத்தோர் அன்று தொட்டு
ஊருக்கு ஊர் திருமணம், மரணச் சடங்கு, விழாக்களில் உறவு
கொண்டாடுபவர்களாக இன்று வரை வாழ்ந்து ஐக்கியப்பட்ட
வர்களாவர்.

# அம்மனும் வெடியரசனும்

கண்ணகி தேவி தன் கணவன் கோவலன் பாண்டியனால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியைக் கேட்டுணர்ந்ததும் துடிதுடித்து, சூரிய பகவானைத் தோத்திரம் செய்தாள். அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டும் பொருட்டுத் தேவ அம்சமான கண்ணகிக்குச் சூரிய பகவானால் ஆதி உன்னத சக்தி வழங்கப்பட்டது. இதனால் நீதிகேட்டு மதுரையை கி. பி. 144 இல் எரித்த கண்ணகி இறந்த கோவலனைத் தன் மடிமேற் சேர்த்து எடுத்துவைத்து உயிர் கொடுத்தாள்.

'மாதகியோ கண்ணகியோ வந்தவர்கள் படுகளத்தில் மாதகியாள் வந்தாளே வாடியென் மடிமேல் [தி. தி. ம பக்115] என்று உயிர்பெற்ற கோவலன் முதலில் மாதவியின் பெயரைக் கூறியதால்; மனமுடைந்த கண்ணகி கோபங்கொண்டு ஐந்து தலைநாகமாக மாறி மதுரை மாநகர் துறந்து; தெற்குநோக்கி ஈழத்தின் நயினாதீவில் தங்கினாள். பின்னர் வட்டுக்கோட்டையில், உள்ள சுருட்டுப்பனை வழியாகச் சீரணி, அங்கணாமக்கடவை அளவெட்டி, சுருவில், களையோடை,[1] கோப்பாய், மட்டுவில் வேலம்பிராய், கச்சாய் வழியாகச் சென்று நாகர்கோவிலை அடைந்தாள். பின்னர் கரைச்சியில் உள்ள புளியம்பொக்கனை ஊடாக முல்லைத்தீவு, வற்றாப்பளையை அடைந்தாள் என்பர்.

இப்படியாக ஐந்துதலை நாகம் அசைந்து நகர்ந்து சென்ற வழி வழுக்கையாற்றுப் பள்ளமாக மாறியதென்பர்.[2] இப்படியாக நாகவடிவில் வந்ததால் இவ்வாலயங்களை ஆதி முதன் மக்கள் நாகர்கள் நாகதம்பிரான் என்று அழைத்தனர் போலும் இப்படியாகக் கண்ணகியின் சக்தி வட இலங்கையில் வசப்பெற்று இருந்தபோது, கண்ணகியின் காற்சிலம்புக்கு நாகமணியை மீகாமனிடம் கொடுக்காது போர்புரிந்து அலட்சியம் செய்ததனையும், நாகமணியை அணியும் கண்ணகியின் கணவனும் அநியாயமாக இறப்பான். அச் சாம்பிராட்சியமே பற்றி எரியும் என்று இட்டசாபம் பலித்து விட்டதனையும் நினைந்தும்; கண்ணகி உண்மையான தெய்வசக்தி பொருந்திய தெய்வம் என்பதனையும் உணர்ந்ததாலும், வெடியரசனும் ஏனைய தம்பிமார்

1. களையோடை:- களைப்போடு வந்த கண்ணகியின் ஆலயம், அமைந்த இடம். (நவாலி)
2. திரு. எம். சற்குணம் பீ. ஏ [கொன்ஸ்]



களும் தங்கைகளுக்கும் ஏதும் இன்னல் வருமோ எனஅஞ்சி வட ஈழத்தை விட்டு ஏனைய பகுதிகளுக்குப் பரவ முற்பட்டனர். இந்நிகழ்ச்சியைக் கண்ணகி வழிபாட்டின் சிறப்புக்களையும், மதுரையை எரித்து அரசன் இறந்த செய்தியையும் போரிலே மீகாமனுக்கு கண்ணகியைத் தெய்வம் என ஏற்கமறுத்து சூழ் உரைத்ததனையும் அறிந்து அரசனும். விஷ்ணு புத்திரர்களும் கண்ணகிக்குக் கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைத்தனர். அத்துடன் இவ் ஆதிமக்கள் நாகர்கள் ஆகையால் நாகதம்பிரான் என அவர்கள் வழிபட்டுவந்த ஆதி ஆலயங்கள் தோறும் கண்ணகிக்கு "நாகமங்கலையம்மன்" எனச் சிலை எடுத்தனர். இவர்கள் ஐந்து தலை நாகத்தை வழிபட்டு வந்தமையால் இடையே வந்த கண்ணகி வழிபாடும் நாகதம்பிரான் வழிபாட்டுடன் ஒன்றியது. கண்ணகி அம்மன் முடியிலும் ஐந்துதலை நாகக் கிரிடங்களை வைத்து அழகு செய்தனர். சேரன் செங்குட்டுவன் மலைவளங்காண கோப் பெருந் தேவியோடு சேரநாட்டின் பேராற்றங்கரை சென்ற சமயம் அக்குன்றக் குறவர்களும் வேடர்களும் தாம் கண்ணகி தேவியை உயிருடன் கண்டதாகக் கூறினர். இதனால் இமயத்திற் கல்லெடுத்துக் கண்ணகிக்குச் சிலை செய்து, தோழ நாம கடல் சூழ்இலங்கைக் கஜபாகு மன்னனைய் அழைத்து, சோழன் பெருங்கிள்ளியும் பத்தினிக்குப் பெருவிழா எடுத்தனர். இக்கஜபாகு மன்னனே தமிழ் நாட்டிலிருந்து பத்தினித் தெய்வத்தின் அணிபூண்ட சிலம்புகளையும், நாலகு தேவ விக்கிரகங்களையும் வலகம்பா மன்னன் காலத்தில் இலங்கைக்கு எடுத்து வந்தான் எனச்சரித்திரங்கள் உள. இக்கஜபாகுமன்னன் காலமே வெடியரசன் ஆண்ட காலமாகும். இதனால ஈழத்தில தெற்கிலும் வடக்கிலும் கண்ணகி வழிபாடு வளர்ச்சியடைந்தது. கண்ணகித் தெய்வத்தை ஆங்கிலேயர் "மேரி" என்றும்; தமிழர் "மாரி" என்றும்; பௌத்தர்கள் "பத்தினித் தெய்யோ" என்றும்; முஸ்லிம்கள் "ஆமினா" என்றும் வழங்கும் உலக மாதாவானாள். வட இலங்கையில் வெடியரசனும், தென் இலங்கையில் கஜபாகு மன்னனுமாய் முழு இலங்கையிலும் கண்ணகிக்குக் கோவில் அமைத்தனர்.

ஆனால் ஆதியில் கண்ணகை அம்மன் என்ற பெயருடன் தமிழ் நாட்டில் ஒரு வழிபாடும் நிகழவில்லை. இருந்தும் ஒருமுலைச்சி அம்மன் கோவில் ஒன்றே கண்ணகியின் கோவிலாகக் கருதுவர். இந்தியாவில் கண்ணகிக்கு ஆதியில் கோவிலோ, வழிபாடோ இருந்ததாக அறிவதற்கு இல்லாத போதும், ஆதியில் சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியம் சேர, சோழ, பாண்டிய நாட்டிற்குச் சொந்தமாக இருந்தது வகையில் ஈழத்தில் கண்ணகி

வழக்குரை வைகாசி மாதத்தில் ஆலயங்களில் சிறப்பு விழாவாகக் கொண்டாடி வருகின்றனர். மேலும் விஷ்ணு புத்திரர்கள் வாழுகின்ற பிரதேசங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு சிலாபம், உடப்புவ போன்ற பகுதிகளில் மிகவும் சிறப்பாக வழிபடப்படுகின்றது. இதற்கு உதாரணமாக உடப்புக் கண்ணகை அம்மன் கோவிலுக்கு முன்பாக இன்றும் வெடியரசன் சிலை உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளதனால் வெடியரசனுக்கும் கண்ணகிக்கும் உள்ள உறவினை அம்மக்கள் ஒரே இடத்தில் சிலை எடுத்து உறவை வலுப்படுத்தி வணங்கி வருகின்றனர்.

இதேபோன்று சிங்களவர்களும் கண்ணகியைப் பத்தினித் தெய்வமெனக் கருதி வணங்கலானார்கள். இதனாலேயே கடல்சூழ் இலங்கைக் கஜபாகுமன்னன் பத்தினிவழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு சென்றான் என்று இளங்கோவும் பாடினார். கண்ணகித் தலதாமாளிகையில் இன்று 'கண்டிப் பெரகரா' என்று பெருமையுடன் நடைபெறும் பெருவிழாவில் அன்று கண்ணகியின் உருவச் சிலையே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது என்பது பழைய சிங்கள நூல்களின் கருத்தாகும். அங்கு பாவிக்கப்படும் பெரை வாத்தியங்களைத் தமிழ்ச் சங்க இலக்கிய நூல்களிலும் காணலாம். இன்றும் கண்ணகி சிலையைத் தலதா மாளிகையில் காணலாம். இதேபோன்று ஏனைய சிங்களக் கிராமங்களிலும் உள்ள விகாரைகளின் அருகாமையில் கண்ணகி ஆலயங்கள் 'பத்தினித் தெய்யோ'' என்ற நாமத்துடன் வழிபாடு செய்யப்படுவது நாம் அறிந்ததே. மட்டக்களப்பிற்கும் கண்ணகியின் ஏழு சிலையைக் கந்தப்பரால் கடல்மார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்ட சரித்திரங்களும் உள. இப்படியாக விஷ்ணு புத்திரர்களால் அனுசரித்து வந்த கண்ணகை அம்மன் வழிபாடுகள் யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இன்றும் கண்ணகி தேவிக்குச் சிறந்த விழாக்கோலம் நடக்கின்றன. குறிப்பாக வைகாசிப்பூரணையைச் சேர்ந்த கிழமைகளில் மட்டுமா நகரம் எங்கும் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்துக் குளுத்திப் பாடல், கொம்பு விளையாட்டு, வசந்தன் கவிகள், உடுக்குச் சிந்து போன்ற நிகழ்ச்சிகள் இன்றும் நடைபெறுகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் கண்ணகி ஆலயங்கள் போர்த்துக்கேயர் காலம் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் மாதா, மேரி என்ற வேற்றுப் பெயர்களில் வழிபாடு செய்யப்பட்டது. அதன் பின் போர்த்துக்கேயர் காலம் போகத் தற்போது வாழும் மக்கள் கூட்டம் அவர்களால் அழிக்கப்பட்ட அரைகுறை ஆலயங்களையும் புனருத்தாரணம் செய்து அம்மன் என்றும்



முத்துமாரி என்றும், மனோன்மணி என்றும், இன்னும் கிறிஸ்தவர்கள் மாதா கோவில் என்றும் அச்சக்தி வழிபடலாயினர். ஈழத்தில் கண்ணகி வழிபாடு அழியாது நிலைத்துவிட்டாலும் இவ்வழிபாட்டை யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலரும் அவரது சகாக்களும் ஆதரிக்கவில்லை என்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் பிரபந்தத்திரட்டு பக். 65ல் 3ம் பதிப்பு நூலில் முகவுரையகத்தில் காணக்கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் கண்ணகி வழிபாடு குன்றியதற்கு இதுவும் விஷ்ணு புத்திரர்கள் மட்டுநகர் சென்றதுவும் முக்கிய காரணிகள் ஆகும். மடுத்திருப்பதியில் உள்ள புனிதமேரி அம்மனும் பத்தினி அம்மனாக வழிபட்டுவந்தது என்று கூறப்பட்டுள்ளது.[1]

சிங்கள நூற்காவியங்களான பத்தினிவரல்ல, பானங்கவியஹல்ல பத்தினிகத்தாவ, பத்தினி விலாபய, கஜபாககத்தாவ, வயந்தி மாலா, அம்பாபத்தினி உபத, அம்பவிதுமன, மல்பத்தினி உபத, மாதேவிகத்தாவ, பத்தினியாதின்ன, பத்தினி பிளிம, பத்தினி கோள்முற, பாளங்க மறுவீமே சிந்துவ, பண்டி நெத்த மெகு உபத்த அங்கெலி உபத்த, சவம்ப கத்தாவ போன்ற நூல்கள் சான்றாகும்.

---

சிலப்பதிகாரத்தில் கண்ணகி தன் கணவன் கள்வன் என்று கேள்வியுற்றதும் சூரியனிடம் ''காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்?'' என்றதும் 'கள்வனோ அல்லன் கருங்கயற் கண் மாதராய் ஒர் எரி உண்ணும் இவ்வூர்' என்றும் அவள் விரைந்தாள் வீதியால் 'பெண்டிரும் உண்டுகொல் சான்றோருண்டு தெய்வமுண்டு கொல் என்றிவ்வாறு சொல்லியழுதவளாய் என்று பொங் உறு நறு மேணி பொடியாகிக் கிடப்பதைக் கண்டாள். சங்க இலக்கியங்களில் மதுரை எரிந்தது 144ம் ஆடித் திங்கள என்ற போதிலும் சரித்திர ஆய்வுகள் காலம் சிறிது முன்னதாகும்.

1. Lvers . R . W . the manual of the norte central Province p. 110, colombo, 1899

இன்று ஓர் மேல்நாட்டுப் பெண்ணின் உடல் எல்லாம் மின்சாரம் இருந்து அவ தொடுவதெல்லாம் பற்றுகின்றது என வானொலிச் செய்தி வாசகர் அறிந்ததே. ஆகவே அன்றைய கண்ணகியின் நிலை ஆச்சரியப்பட வேண்டியதல்ல.

# வெடியரசனின் பின் வடஈழ நிலம்

ஈழ வடநிலத்துஒப்பாரும்மிக்காருமில்லாத தனிவேந்தனாகிய நீடுபுகழ் வெடியரசன் நீள்கரை நெடுந்திவிலும் தனதுதம்பி யர்களை அரச பிரதிநிதிகளாகச் சேர, சோழ, பாண்டிய மண்ட லங்களுக்கு ஒப்பாக வடஈழ மண்டலமாக அமையும் ஏற் றத்தில் நிலைக்க அரசாண்டான். இவனிடம் திறைகூடப் பெற முடியாது தனித்தாண்டத் தலைவனாக விளங்கியபோது தென் இலங்கை அரசர்களும், இந்திய அரசர்களும் மனம்புழுங்கி இவ னின் தனிநிலையை எப்படியும் தளர்த்த வேண்டும் என்று துணி புடையராய் இருந்தனர். கரிகால் வளச்சோழனும் முதலாம் சயபாகு மன்னனும் மீகாமன் தலைமையில் பெரும்படைனுப் பியும் வெடியரசன் நிலையைவீழ்த்தவில்லை. இதன்பின் 1ம் சஜ பாகு (கி.பி 113—135) சோழ நாட்டிலிருந்து கொண்டுவரப் பட்ட 24000 பேர்களின் ஆக்கிரமிப்பாலும் சேர சோழ பாண் டிய குடியேற்ற விளைவுகளினாலும் கண்ணகி தேவியின் சாபம் பலிக்கும் என்ற அச்சத்தினாலும், மீகாமன் போரில் ஏற்பட்ட இரத்தக்கறை மிகுதியாலும், வலம்புரி எடுத்த போது மகா விஷ்ணுவால் வழங்கிய வரத்தினாலும் மூதாதைகள் புதிதாகக் கண்டுபிடித்ததன் பேரில் வெடியரசன்குடி சனமற்ற மட்டகளப்பை நகராக்கி ஆளவும் நாட்டங் கொண்டான். இதனால் தனக்கு வேண்டிய படைபலன் குடிகளின் ஆளு நர்களைத் தெரிந்தெடுத்து வட நிலக் கிராமங்கள் தோறும் சிற்றரசர்களை நியமித்தும் ஏனையோர்களைத் தாம் விரும்பிய வாறு இலங்கையின் புத்தளம் பகுதிகட்கும் மலையாளத்திற்கும் அனுப்பிவைத்து மட்டக்களப்பிற்குச் சென்றான். கூர்வலன் தேவி (பக் 12)

நூன் முகத்திற் கூறியதுபோல் பொன், பளிங்கு, முருகைக் கற் பார் சிதைவுற்றுச் சிறுசிறு மணற்றுவடாவாகவும், ஆழமற்ற நீர்ப்பரவையாகவும் ஆழ்கடல் முத்துச் சங்குகளாகவும் மலர்ந்த வடநிலத்தைச் சேர,சோழ,பாண்டி நாட்டுவீரர்களும், 'மாவிலங்

---

இன்றைய கல்வி அறிவுடன் நவீன ஆயுதங்களைக் கொண்ட வீரர் (Army) அனுகும் முறை நாமறிந்ததுடன் அகதிக ளானினர் 3 39 000 பேர்கள் (15-07-1987 முரசொலி) அன்று கல்வி அற்று வாள் கத்தி கோடரி மழு ஈட்டி அம்பு போன்ற வற்றால் வெட்டியும் குத்தியும் கொலை செய்த போர்வீரர்களின் அணுகுமுறையால் ஆதிக்குடிகள் எப்படி அகதிகளாயினர் என் பது புலனாகும்.



கை'யாம் ஈழநாகர்களும்படிப்படியாக வடநிலத்தில்குடியேறவும் ஆட்சிநடத்தவும் தொடங்கினர். 6ம்நூற்றாண்டில் குகன்குலத் தலைவனான சேந்தன் சிற்றரசனாகக் கீரிமலைப் பிரதேசத்தை ஆண்டு வந்தான். இவன் காலந்நிலேயே அனேக குகன் குலத் தோர் மட்டக்களப்பு,தொல்புரம்,சுழிபுரப் பகுதிகளில் குடியேறி னர். இப்படியான மக்கள் இருப்பால் வடநிலம்பெருமை உலக ளாவியது. கி.பி 795 சிங்கத்தை ஒத்த முகத்தையுடைய உக்கிர சிங்கன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி வளவர் கோன் பள்ளம் என்னும் இடத்தில் பாசறையிட்டான். தொண்டைமான் இந் நாளில் தொண்டைமானாற்றை வெட்டுவித்து வேண்டியோரைக் குடியமர்த்தினான். இதன் எட்டாம் வருடம் திசையுக்கிர சோழன் மகள் மாருதப்பிரவல்லி குன்ம வியாதியைத் தீர்க்கக் கீரிமலையை அடைந்து குமாரத்தி பள்ளத்தில் பாசறை இட் டாள். இப்படியாக மாறிமாறிக் குடியேறியதனால் அக்காலத் தில் குகன் குலச் சிற்றரசர்களின் ஆட்சியும் வீழ்ச்சி கண்டது.

"குசையனுங் குகன் மற்றுள்ளார் குறுநிலத்தரசரானார்
அசைவறு வாலசிங்கன் அந்தகற்கீந்தானன்றே". [ய ச.ப.16]

'எருக்கத்தம்பூலூர்' என்ற பகுதியை யாழ்பாடி யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு வடதிசைக் குடிகளைக் குடியமர்த்தி இறந்து போயினன் என்பர். சிறிதுகாலம் ஆட்சியின்றி அல்லற்பட்ட இம்மக்களின் வேண்டுகோளால் திசையுக்கிரசிங்கசோழன் மகன் சிங்கையாரியன் நீலகண்ட ஐயர் என்னும் புவனேகவாகு மந்திரி யுடன்வந்துநல்லூர்ப் பகுதியில் அரண்மனை அந்தப்புரம்,சபாமண் டபம் கொலுமண்டபம்யானைப்பந்தி போன்றவைகளை அமைத்து முப்படைக்குரிய கூபமும்யமுனாஏரியும்வெட்டி கிழக்கில்பிள்ளையா ரும் மேற்கில் வீரமாகாளியும் தெற்கே கயிலை விநாயகரும் வடக் கில் சட்டநாதரும் மத்தியில் கந்தசுவாமி ஆலயமும் ஒருங்கே அமைத்துச் சேதுபதி மகாராஜாவை அழைத்துப் பிரதிட்டை செய்து கெங்காதர ஐயரை பூசைக்கு அமர்த்தி ஆண்டான். இலக்கிய சகாத்த மெண்ணூற்றெழுப தாமாண்டினெல்லை.
(யா ச ப 18)

தொடர்ந்து குலசேகர, குலோத்துங்கவும்,பின் விக்கிரமசிங்கன் காலத்தில் தமிழர் சிங்களவர் கலகத்தில் நீதிநெறி நின்று கலகம் செய்த புஞ்சிபண்டாவையும் 17 பேரையும் கொன்று எஞ்சியோரைச் சிறையில் இட்டு அரசாண்டான். பின்பு வரோ தய சிங்கனும் அவன்பின் மாத்தாண்டசிங்கனும் வன்னியரை இங்கு அழைத்துவேளாண்மையைப்பெருக்கிய சிறப்புடையவனா னான். இவன் மகன் குணபூஷணனும், மகன் விரோதய சிங்க

னும் இவன் மகன் செயல்வீர குணவீரசிங்கனும் 1278ஆம்வருடம் முத்துச் சலாபத்தைப் பற்றிக் கண்டி புவனேகவாகுவுடன் சண்டையிட்டு 12 வருடம் யாழ் அரசின் கீழ் முழு ஈழத்தையும் ஆண்டான். இவன்பின் மகன் கனக சூரிய சிங்கன் ஆட்சியில் சிங்களவர் வன்னிப் போர் வீரர்களின் உதவியுடன் வட ஈழத்தைக் கைப்பற்றிய விஜயவாகு 17வருடம் தமிழ்க் குடிகளை ஒடுக்கி ஆண்டான். உயிருக்கு அஞ்சிக் குடும்பத்தாருடன் இரவோடிரவாய் குகன்குலத்தோர் உதவியோடு கப்பலில் தொண்டை நாட்டை அடைந்து திருக்கோவலூரில் இருந்து சிறிது காலம் செல்ல மேலைவாயில் வழியால் இலங்கை வந்து தமிழ்க் குடிகளின் உதவியுடன் விஜயவாகுவைக் கொன்ற கனக சூரிய சிங்கையாரியச்சக்கரவர்த்தி தான் மீளவும் பட்டம் பெற்றதற்கு உதவியாய் இருந்த முற்குகத் தலைவனுக்குப் 'பட்டங்கட்டி' என்று கௌரவப் பட்டம்சூட்டிவரி சைப்பெயரிட்டான். இக்காலத்தில் ஆண்ட குகன் குலத்தோர் கடற்படை வீரர்களாகவும் மாலுமி சாஸ்திரமும் யுத்த சாஸ்த்திரமும் கற்று வல்லவராய் அரசன் மெய்க்காப்பாளராகவும் இருந்தனர். புவனேகவாகுவின் 12வருடத்தினுள் இங்கே குடியேறிய சிங்களக் குடும்பங்கள் கண்டிக்குச் சென்றனர். இவனுக்குப் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகிய இருபுதல்வர்களில் பரராசசேகரன் முடிதரித்து சோழ இராஜ வம்ச இராசலட்சுமியம்மாளை மணந்து சிங்கவாகு, பண்டாரம் என்ற இரு குமாரர்களையும், வள்ளியம்மை என்ற பெண்ணை இரண்டாந்தாரமாக மணந்து பரநிருபசிங்கத்தோடு நால்வரையும். மங்கத்தம்மாள் என்ற பெண்ணை வைப்பாட்டிச்சியாகக் கொண்டு அவளுக்குச் சங்கிலி என்ற பிள்ளையும் பெற்றான். இவர்கட்குச் சிங்கையாரியன் என்ற விருதிட்டுச் சேதுக்கரையிலிருந்து எழுதுவோர்க்குப் படிகொடுத்து இங்கு கொண்டுவந்து கல்வியூட்டினான். ஆனால் சங்கிலியன் மட்டும் மிக விவேகியும், துட்டனாயும் இருந்தபடியால் ஒரே மனையில் வாழும் வாய்ப்பைக்கொண்டு மூத்த சிங்கவாகுவுக்கு நஞ்சூட்டிக் கொன்றான். இதனால் இரண்டாம் பண்டாரம் முடி சூடி இதன் நிமித்தம் எல்லோரும் தீர்த்தயாத்திரை கும்பகோணத்திற்குச் சென்றனர். சோழன் சங்கிலியின் குற்றத்திற்காக எல்லோரையும் சிறையிலடைத்தான். இதனால் பரநிருபசிங்கம் கேள்விப்பட்டு சோழனோடு யுத்தம் செய்து சிறைமீட்டு மூன்று மாதம் இருந்து ஆண்டு சோழனிடம் திறைபெறும் நிலைக்கு இணங்கித் தனது உறவினருடன் யாழ்ப்பாணம் வந்தான். இதனால் பரநிருமனின் தந்தை ஏழு கிராமத்தை கள்ளியங்காடு ஈறாக பரநிருபசிங்கத்திற்கு வழங்கியதும் சங்கிலி பொறாமை கொண்டு இளவரசன் பண்டாரத்தை வெட்டிக்கொன்று இராச்



சிய உரிமைகோரினான். இந்நாளில் வாணிபத்திற்கு வந்த பறங்கியர் படிப்படியாய்த்தமது றோமன் சமயத்தை மன்னாரிற் பரப்பினர். உடனே சங்கிலி கி.பி 1554 இல் மதம் மாறிய குழந்தைகள் உட்பட 500 பேரைக் கொன்றும் ஏனைய மதத்தவர்களை நாட்டை விட்டும் துரத்தினான். இதனால் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வுடையோனாகித் தன் தென்னாட்டிலிருந்து 49 வன்னியக் குடும்பங்களைத் தருவிக்கையில் அவர்களின் வள்ளம் நெடுந்தீவில் நீரில் மூழ்கவே அதில் கரைப்பிட்டி வன்னியனும் அம்மைச்சிநாச்சியும் பணிவிடைக்காரரும் எஞ்சினார்கள். கரைப்பிட்டி வன்னியன் காலப்போக்கில் கந்தரோடையில் தன்சேவகன் நம்பி மகளைக் கற்பழித்ததாற் கொலையுண்டான். இந்நம்பிகள் வேறுகதியின்றி சானாரக்கும்பம் என்னும் கிராமத்தில் சீவல்த் தொழிலைப் பழகினர். வடநாடு, தென்நாடு பஞ்சப்பட்டதனால் இங்கு வந்த மக்கள் மறவன் புலத்தில்குடியேறினர். இவர்களின் சச்சரவைத் தீர்த்துச் சங்கிலி திரும்பும்போது இருபாலைப் பகுதியில் இவன் வாத்தியம் நின்றதும் இப்பகுதியையும் தனதாக்க எண்ணினான். இதையறிந்த பரநிருபசிங்கன் பொறாமையால் இவனின் ஆட்சியையும் கைப்பற்ற எண்ணினான். சங்கிலி தந்திரமாய்த் தனது ஆட்சி பறிபடுமோ என்று 500 கிராமங்களுக்குப் பொறுப்பு முதலியாகப் பரநிருபசிங்கத்தை நியமிக்க அவன் வலிமை இழந்த நிலையில் ஒருவாறு பெற்றான். இந்நாளில் சங்கிலி மந்திரி அப்பாவன் மகள் சௌந்தரத்தை அணுக எண்ணியதால் மந்திரியும், பரநிருபசிங்கமும் எதிரிகளால் சவோரியரின் நண்பன் காக்கைவன்னியனின் உதவியை நாடினர். பறங்கியரும் உள்ளாளும் கையாளுமாய் நின்ற பரநிருபசிங்கமும் மந்திரியின் உதவியுடனும் சங்கிலியின் அனுமதி பெற்று வியாபாரம் செய்து பண்ணையிற் கோட்டையும் அமைத்தனர். வேட்டையாடச் சென்ற சங்கிலி பறங்கியரின் கோட்டையைக் கண்டதும் போர் மூண்டது. வென்றான் சங்கிலி, தளர்த்தான் தவிடுபொடியாய்ப் பறங்கிக் கோட்டையை. 11ம் நாள் 2400 பேரைக்கொன்று வெற்றி வாகை சூடினான். மறுபடியும் காக்கை வன்னியன் சொற்படி திடீர் எனத் தாக்கினர். வெல்லமுடியாது போகவே மாறுவேடத்தில் காக்கைவன்னியன் உட்புகுந்து தமிழில் பேசி சமாதானம் செய்து முத்தமிடுவதுபோற் பாசாங்கு செய்து திடீரெனச் சங்கிலியைக் கட்டிப்பிடித்தான் காக்கைவன்னியன். எதிர்த்த தமிழ்ப் படை வீரர்களை மந்திரியும், பரநிருபசிங்கமும் தடுத்ததும் பறங்கிகள் சங்கிலிக்கு விலங்கிட்டனர். இதை அறிந்த பரராச

சேசரன் வன்னிக் காட்டினுள் ஓடி ஒழித்தான். [இவனைப் பிடிதால் 25000 இறைசால் என்றதும்] மந்திரிகளில் ஒருவன் ஒரு இளநீரும் தேசிக்காயுடனும் மறைவிடம் சென்று அன்பு வார்த்தைபேசி வாளைவாங்கி இளநீரை வெட்டிக் கொடுத்ததும் தாகத்தில் அவசர அவசரமாய்க் குனிந்து குடிக்கும் போது வாளால் தலையை வெட்டிப் பறங்கியரிடம் பணம் கேட்டான். உயிருடன் பிடித்தவர்க்கே பணம், நீ கொலை செய்தமையால் உன்சிரசைக் கொய்கின்றோம் என்று அவன்தலையை வெட்டினர். சங்கிலியைப் பிதாவின் அனுமதியின்றி முடி சூடியதற்கும் கொலைக் குற்றத்திற்காவும் கொன்றனர். ஐரோப்பியர் தனித்து ஆளவேண்டியதனால் குடிமக்களாம் இந்நாட்ட வரைக் குல விருதினால் இவர்கட்குள் பகைமையை வளர்த்த ஐரோப்பியர் இப்படியாக ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்தும் கொன்றும் ஆண்டனர். ஆனால் இவர்களுக்கு பிறந்த தாய்நாட்டுப்பற்று இருந்திருக்கவில்லை என்பதும் புலனாகின்றது. இப்படியே சமுதாய மாற்றத்தில் ஈடுபட்டனர்.

**உழவர்:** 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'' என்பதற்கு இணங்க உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்குப் பசியாற்றும் சிறப்பைச் செய்பவன் உழவன். அவன் தான் வியர்வை சிந்தி நிலத்தைக் கொத்தி, ஏர் பிடித்து உழுது, பண்படுத்தி விதை நிலமாக்கி அதில் மலரும் மணிகளை ஏனைய ஜீவன்கட்கு வழங்குவதனால் அவனை தெய்வம்போல் மதித்தனர் நம் முன்னோர். இவர்களை உழவர் என்றும் இவர்கள் பதின் எண்வகை மக்களுக்குத் தலைமை தாங்குவோர் என்றும்சாந்தம்,பொறை உட்படப் பத்து நற்குணங்களையும் உடையோர்கள் என்றும், உழவுத் தொழிலால் உலகைக் காப்பவர்கள் என்றும், வேளாளர் புராணம், பசுமை எழுபது, மாபரளசூழாமணி, ஏர் எழுபது திருக்கை விளக்கம் தொல்காப்பியம், தேவாரம், திருவந்தாதி மொழிவிளக்கம், காணிநூல், கொங்கு மண்டல சர்க்கம், புறநானூறு, மொழி எழுபது போன்ற நூல்களில் வேளாண்மை செய்தோரின் பெருமையை விளக்கியதுடன் அவர்கள் அரசன் ஆணைப்படி ஓதுதல்,ஈதல்,பசுக்காத்தல்,பயிரிடல்,பொருமீட்டல், வேட்டல், என்னும் அறுதொழில் செய்யும் கட்டுப்பாடு உடையவர்கள என்றும்' கிரேக்க ஆசிரியர் 'மெக்ஸ் தெனிஸ்' இது மேலும் விபரமாக எழுதியுள்ளார். இதனால் இத்தனை அழகும் பண்பும் ஒருங்கே கொண்ட உழவர்கள சிலப்பதிகாரத்தின் படி பட்டினத்துக்சேனும் போகாமல் தமது, தமது கிராமத்திலேயே தமது வாழ்க்கையை நடத்தினார்கள் என்பது புலனாகின்றது. இத்தகு டண்புடைய நீர்வளம், நிலவளம் படைத்த



ஆதி உழவர்கள் பிறந்த நாட்டைவிட்டு 'நீரற்ற, வறண்ட கற்பூமியாம் வடநிலத்திற்கு (யாழ்ப்பாணம்) அதுவும் பெரிய அலைகடல் ஊடாக இப்பெரும் கடலைக் கடந்து கடல்மார்க்கமாகக் கப்பல்களில் இங்கு வந்தார்கள் என்பதில் எவ்வித உண்மையும் இல்லைஎன்கிறார் திரு. இராசநாயகம் முதலியார் இதனை அவர் 'ஆகாயகங்கையில் மலர்த்த தாமரையோடு ஒக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் உழவர்கள் ஒருபோதும் போர் வீரர்களாக மாறவேண்டிய அவசியம இருக்கவில்லை என்பதும் உறுதியாகின்றது போர் வீரர்களாக இருந்தவர்கள் வன்னியர்கள் என்பது புலனாகின்றது என்றும் ஏலேலசிங்கன் என்ற ஞானமும் நீதியும் உள்ள இலங்கையை ஆண்ட அரசன் சிங்களவர்கட்கும், தமிழர்கட்கும் இடையில் அடிக்கடி யுத்தம் நடைபெற்றதனால் வடநிலத்தில் மணற்றி என்று ஞானநூலிற் கூறப்பட்டிருக்கும் இடத்திற்கு இந்தியாவில் இருந்து அஞ்சா நெஞ்சராயும், தையிரியமாயும், துணிகரமாயும், வீரத் தன்மையாயும் போர்புரியக் கூடிய சேனைக்குரிய மக்களை இந்திய அரசுக்கு அடக்க முடியாத இவர்களை ஊருக்கு ஊர் தேடிப்பிடித்து ஏராளமாய்க் கொண்டுவந்து நம்தேசத்தில் குடியேற்றி யாழ்ப்பாணம் என்னும் பெயரைச்சூட்டி இச்சிறிய இராச்சியத்துக்கு பாதுகாப்பிற்காக இவர்களைக் குடியமர்த்தினார் என்று யாழ்ப்பாண வரலாறு பக்.17ல் கூறியதுடன் இவர்களே மெல்ல மெல்ல உழவர் ஆயினர் என்பதையும் குறித்துள்ளார். மேலும் விபரங்கட்கு எம் டி. ராகவனின் ஆராய்ச்சிநூலின் பக் 132 லும், யா. வரலாற்றுநூலிலும், யாழ்ப்பாணக் குடியேற்றநூலிலும் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை நோக்குக.

---

ஒல்லாந்தர் மன்னார்ப் பகுதியைப் பறங்கியரிடமிருந்து பிடித்ததனை அறிந்த திரு டொன் பிலிப்சங்கரப்பிள்ளை அவர்கள் இரகசியமாய்த் தான் பறங்கியருக்குத் திறை அரசனாய் இருந்தது போல் ஒல்லாந்தருக்கும் அப்படியே இருப்பதாகவும்,சமய சுயாதீன மிருந்து வரவும் இரு ஒப்பந்த உடன்படிக்கை செய்து ஒல்லாந்தரை மன்னாரில் இருந்து பூநகரி ஊடாக இரகசியமாக யாழ்ப்பாணம் வருவதற்கேற்ப விபரத்தையும் இங்கிருந்து அறிவித்தார். இக்காலத்தில் சண்டைக்குப் பயந்த கோப்பாய் வாசியாகிய வேலர் ஆனையிறவில் பறங்கிப் பட்டாளம் இருப்பதனால் கச்சாய் வழியாக பூநகரி சென்று வன்னிப் பகுதியில் பதுங்க ஒல்லாந்தரிடம் அகப்பட்டுத் தாங்கள் யாழ்ப்பாணம் செல்வதாகவும் நாட்டை வென்றால் கேட்பன கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணிச் சங்கரப்பிள்ளையின் வரைபடத்திற்கேற்றவாறு யாழ்ப்பாணத்தினுள் நுழைந்தனர். வரும்போது தயங்கிய இடங்களில் வேலன் இராவில் பட்டிகளில் புகுந்து

இப்படியாக அன்னியரின் ஆட்சியில் அவர்கட்கு வேண்டுவன செய்து காக்கா பிடித்தவர்கள் முதன்மையானவர்களாகவும். நிலபுலத்தவர்களாகவும் மாறினர். உதாரணம் அடிக்குறிப்பில் உள. ஆனால் உண்மையில் 'பள்ளம் பார்த்துப் படிவெட்டிப் பண்படுத்திப் பணிபுரிந்து பலன் தந்து உலகஜீவராசிகளைக் காத்த உத்தமத் தொழிலாளர் உதாசீனம் செய்யப்பட்டனர் நம் முன்னோரால். இதனால் வெட்கமும் மனவிரக்தியும் கொண்ட இவர்கள் தடுமாறித் தாமாகவே ஒதுங்கியும் கொண்டனர். இப்படியாக அடிக்கடி மாறிய சமூக மாற்றங்களிலும் விஷ்ணுபுத்திரர்கள் மாறாது, தாம் உண்மையில் ஆதிக்குடி முதல் மனித முதன்மையான முற்குகர் என்ற வரம்பிலிருந்து சற்றும் மாறாது; உழவர்களாக நெற்காணிகளைச் சொந்தமாக வைத்திருந்து உழுதபோதிலும் தன்மானம் இழந்து வந்தானுக்குக் கைகட்டி மண்டியிடாது தன்நாட்டுப் பற்றுடன் இருண்ட காலமாகிய ஆட்சியிலும் நிறைந்து நிமிர்ந்து வாழ்ந்தனர். இன்னும் நூலாசிரியர்களும், பிசுக்கால் மணியகாறன் போன்றோரும் தங்கள் அரச ஏஜென்சிகளுக்குச் சார்பாக உண்மைகளை மறைத்தும் பொய்மையை எழுதியும் செய்தும் வந்த

---

கொழுத்த ஆடு,மாடுகளைக் கலைத்துவந்து கா 'பில்உணவுகொடுத்தான். சங்கரப்பிள்ளையினதும் ஏனையோரினதும் உதவியுடன் யாழ்ப்பாணம்அவர்கள்கையிற் பிடிபட்டது. சங்கரப்பிள்ளைமுதல்வராய்த் தம் உறவினர்க்கு மட்டும் இராசஜதொழில் வழங்கிய செய்தி கொழும்புக்கு எட்ட 16-08-1687ல் இவரையும் உறவினரையும் விலங்கிலிட்டுமாறு தேசாதிபதி கட்டளை பிறப்பித்தான். பின் ஒருவாறு களவாய் நாகபட்டணம்ஓடி 'பாபா போர்பூ' என்ற வர்த்தகரின் உதவியால் சினேகமானார்சங்கரப்பிள்ளை. இவ்வாறு சங்கரப்பிள்ளையின் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டு வேலன் முதன் மந்திரியாக்கப்பட்டு இராச கந்தோர்ச் சாவியையும் கொடுத்து விருப்பிய காணி பூமிகளை எழுதிக் சொள்ளும்படி கூற அவனும் இப்படியே செய்து தனது இனத்தவர்களை வேளாளர் இடாப்பில் பதிந்து முதலிப் பட்டங்களும் பெற்றான். இதனால் கோபங் கொண்ட சங்கரப்பிள்ளை ஊரில் கலகம் எழுப்பினர். உடனே சேனைக்குரியவர்களைத் தன் வசப்படுத்தி உழவர் என்று பதிந்தான் வேலன். 1695ல்சங்கரப்பிள்ளை இறந்துவிட 1697ல் 'தொமஸ்வன்றீ'' கொமாண்டோ புதிதாக 40 வகை இன விபர இடாப்பைக் கச்சேரியில் பதிந்து பழம் டாப்புக்களை எரித்து மாற்றிவிட்டான். (யா.வை.கௌமுதி 107, யா.வ.ப) இப்படியாகக் காலத்துக்குக் காலம் அடிப் டைச் சமூக மாற்றம ஏற்பட்டது புலனாகும்.



னர் என்பதனை அவ்வப்போது வெளிவந்த பத்திரிகை விமர்சனச் செய்திகள் விளக்கும். மேலும் கோபாலச் செட்டியார் மகன் வயித்திலிங்கச் செட்டியார் (வயது 12)கடையில் மாதுளங்கனியைக் கொடுக்கத் தேசாதிபதியின் மனைவி புத்திரரின்மையால் செட்டியாரைத் தனது வீட்டில் வளர்த்து ஒல்லாந்துப் பாஷையும் பயிற்றி வயதானதும் முத்துச் சலாபக் குத்தகையைக் கொடுத்தாள். கிராமங்கள் தோறும் குத்தகை நடத்தி ஒருலட்ச ரூபாவுக்கு மேல் லாபம் பெற்று யாழ் வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம் அமைத்தார். 1784இல் முத்துக் குளிப்பு இப்பகுதிகளில் வாய்ப்பாகவில்லை ஆதலால் ஒல்லாந்தத் தேசாதிபதி சுழிபுரம் செல்வநாயகம் முதலி போன்றவர்களுடன் ஆலோசித்துக் கனசராயனாற்றை யாழ்ப்பாண நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சி விளைநிலமாக்கத் தீர்மானித்தனர். 1795ல் ஆங்கிலேயர் (Gen . STWARD) ஸ்ரீவாட் சேனாதிபதி பருத்தித்துறை வழியால் வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 1776ல் மாசி மாதத்துடன் கொடிய ஒல்லாந்தர் ஆட்சி முடிவுற்றது. 1800ல் முத்துக் குளிப்போரை நீருக்குள் அமிழ்ந்து முழுகும் போது சுறுமீன் தாக்கியதனால் வருவாய் குன்றிற்று. அரசினர் குருமாரைத் தண்டித்து இம்முத்துக் குளிக்கும் விஷ்ணுபுத்திர வல்லுனர்களான மந்திரவாதிகளைக் கொண்டு சுறுமீன் வாய்கட்டு மந்திரத்தால் சுறுவாய் கட்டுவித்து அவ்வருடம் இரண்டு லட்சம் ரூபா லாபமும் பெற்றதுடன் இப்பட்டங்கட்டிகள் மந்திரவல்லுநர் என்று ஆங்கிலேயரால் போற்றப்பட்டனர். இதனால் இக்காலம் 19ம் நூற்றாண்டு வரை விஷ்ணுபுத்திரர்கள் முத்துக் குளித்தனர் என்பதும் பெரும் செல்வம் கொழிக்கும் தொழிலாய் இருந்ததும் புலனாகின்றது. 1806 இல் ஆடிமாதம் ஊர்கள்தோறும் விதானைமார் நியமிக்கப்பட்டு தலைவரி நீக்கிக் குடிவகை வரியிட்டு இலைமறைவில் இருந்ததும் இடிபட்ட கோவில்களையும் திருத்திக் குடிமக்கள் தத்தம் வருணச் சாரத்தையும், சமயாசாரத்தையும் சுயேட்சையாகக் கொண்டொழுகுஞ் சுவாதீனம் மறுபடி ஏற்படுத்தினர். (Sir Thomas Maitland ) தோமஸ் மேயிற்லண்ட் இதனால் ஆங்கில ஆட்சி தர்மராச்சியம் என்ற பெயர் பெற்றது. சைவ ஆலய அர்ச்சகர்களும் அரசினால் நியமிக்கப்பட்டனர். 1812ல் பிரவுன்றிக்குப் பிரபு தேசாதிபதியாகிக் கண்டியரசனை 1815 மாசி 18ம் திகதி சிறை செய்தான். 1824ல் பான்ஸ் பிரபு தேசாதிபதியாகி நிலாவரை நீரை 8 நாள் இறைத்தும் வற்றாது கீழ்க்கந்தக ஊற்றுப் பயிருக்கு உதவாததாயிற்று. இதன் ஆழம் 144அடி அகலம் 30 அடியுமாய் இடிவிழுந்த குண்டு என்று பால்டியாஸ் ( Baldeus ) கூற்று. இராமர்வச்சிராஸ்

திரம் விட்டு இந்நீர் நிலையை உண்டாக்கினர் என்பர் சிலர், 1829ல் டைக்துரை [ P. A. DYKE ] ஏஜன்ரராக வந்தார். இவரே வீதிகள், வீதியோரம் மரம் நடுதல், வறியோர்சம்பளம். தர்ம ஆஸ்பத்திரிகளையும் உண்டாக்கினர். சுதேசிகளாகத், தமிழர் பெரும் உத்தியோகம் ஆற்ற அனுமதித்தார். இவர் காலத்திலே முதல் பி.ஏ.பட்டத்தை விசுவநாதபிள்ளைபெற்றார். புகையிலையை மலையாளத்திற்குப் பெருந் தொகையில் அனுப்பி வைத்தார் மறைந்த சைவ ஆலயங்கள் பிரகாசித்தன. விஷ்ணு புத்திரர்களான மட்டுநகர் சென்றேரின் ஆதிக்க ஆலயங்களும் ஆட்சி உறுதிகள் மூலம் கைமாறிய காலமும் இதுவேயாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் தமிழ்த் தொண்டாற்ற இடமுண்டாயிற்று. 1848ல் தலைவரிச் சட்டம் ஏற்பட்டது. 1833 சட்ட நிருபணசபை, சட்ட நிறைவேற்றுச்சபை ஏற்பட்டு 1835ல்தமிழர் பிரதிநிதியாகக் கௌரவ பொன்னம்பலமுதலியார் பிரதிநிதியானர். 1869இல் துவைனந்துரை காரைநகர்ப் பாலத்தை அமைத்தார். பின் பிஸர் துரையால்1902 ல் உள்ளூரும் 1905ல் கொழும்புப்புகையிரதச்சேவையும்உண்டாயிற்று. இப்படியாகப் பிறிமன்துரையும் மக்கலம் தேசாதிபதியுமாகப் பிரதிநிதிகளைக் கூட்டித் தெரிவுப் பிரதிநிதியாக கௌரவ பொ. இராமநாதன் தெரிந்தெடுக்க வழிகோலியவர்களாவர். இப்படியாகச் சுதந்திரப் புருசர்களாகி எங்களை நாம் ஆளும் நிலையடைந்துள்ளோம்.

ஆகவே இத்தனை செய்திகளாலும் ஆட்சித்திற முனைப்பின் வழியாக ஆண்ட ஆதி அரசர்களும், ஆரியச் சக்கரவர்த்திகளும் ஆதிக்க பூனை இம்மண்ணில் வெடியரசனும் அவன் சகோதரர்களின் தேசிய இயல்புக்கு இம்மியும் ஒப்பாகாது தளர்ந்து வீழ்ந்த உண்மையை வட ஈழச் சுதந்திர மண்வாசனை அற்ற வடநில அரசச் சக்கரவர்த்திகள் வழிவந்தோரின் கொலை, கொள்ளை,சதிமுறைச் சூழ்ச்சிகளாலும் நாம் தேர்ந்து கொள்ளலாம். இப்படியான அரசவாதிகளின் சம்பவங்கள் இன்றும் நாடகமாகவும் கதை காவியங்களாயும் மிகப் பரவலாய் நிகழ்வதுபோல் ஒழுக்கமும்,ஒழுங்கும் தன் இனப்பற்றும், தன்தேசிய பண்டற்றும், செல்வம், செல்வாக்கு, அதிகாரம், அறிவியல், அறக்குணங்களையும் ஒருங்கே கொண்ட இணையாக மற்றொருவர் இம்மாநிலத்தில் இல்லாத மாட்சித்திறனுன மன்னவன் ஆன வெடியரசனின் உண்மை நிலை விளக்கமாக இல்லாது மறைந்துவிட்டது. ஆறுமுகநாவலர் போன்றவர்களைத் தேசிய வீரராகக் கணித்தது போன்று பௌத்த சமயம் தீ போல் பரவி வந்த காலமான 1ம்,2ம் நூற்றாண்டில் சைவத்தையும், தமிழையும், எம்மண்ணையும் காத்துத் தாய்நாட்டுப் பற்றுடன் ஆண்ட




வீரமிக வெடியரசனையும் தேசிய வீரராகக் கணிப்போமாக.

போடியார்:- "போடி" என்ற குகன் குல விருதுடன் உழவர் தலைவனுகப் போஷிப்பவர் என்றும் "ஆர்" என்ற கௌரவச் சிறப்பு விகுதியும் சேர்ந்து போடியார் ஆயிற்று போடியார் வயல் செலவைப் போடுபவர், மாகாணக் கிராமத் தலை அதிகாரியைக் குறிக்கும் தமிழ்ச்சொல் ஆகும். H W. கொட்றிங்டன்துரை (CLOSSARY OF NATIVEE FOREIGN ANGLOSISED WORDS 'பற்று' என்ற உட்பிரிவின் தலைமைக்காரர் 'போடியார்" என்றும் இவர்களை வயல் "நிலச் சொந்தக்காரர் என்று குறிப்பிட்டுள்ளார். இதனைப் "போடியார் வீட்டுக்குப் புதிர் காவியே போனேம்
போடியார் முன்னேபோக முல்லைக்காரன் பின்னேவர"
என்று நிலக்கிழவனைக் குறிப்பதே போடியார் என்ற நாட்டுப்பாடல்களாகும் இப் போடியார் என்னும் சொல் தமிழில் கௌரவப் பெயராகும். போடிநாயக்கனூர் என்ற கிராமம் மதுரையில் உண்டு. போடி நாயக்கனூரில் உள்ள கணிகை ஒருத்தி வேதியன் தோள்மேலேறி மலர் பறித்தமை, இராமசாமிக் கவிராயர் பாடலில் இடம்பெற்றுள்ளதனுலும் தமிழ்ச் சொல் என்பது புலனுகும். இவர்களே பெரும் நிலபுலங்களுக்கு அதிபதியாய் இருந்தமையால் இவர்கள் பிள்ளைகளும் இந்நில உரிமை பெற்றுப் போடியாயினர். இதனல்'வேலிக்கட்டைக்குப்பிறந்தாலும்போடிப்பட்டம்போகாது என்பர். வரிசை, வன்னியம், போடிபாளையக்காரர், போடிகள், படையாட்சி மானிய முறையில் ஏற்பட்ட தலைமைப்பட்டங்களாகும். இவர்களே சிறப்புத் தேரினையுடைய தான்தோன்றீஸ்வரர் கோவில் "வண்ணக்தமார்" தலைமை மணியகாரராகவும் நிர்வாகிக்கின்றனர்.

TAMIL CULTURE IN CEYLON by M. D. RAGHAVAN P152-161

The legends of the Mukkuvar go back to the far off ages of the mahabharata and Rumayana epics. Vyasa author of mahabharata Son bf Brahmin Saint Parasara Their mode of life Varies under the Varying environment in the different Parts of Ceylon In general in the Eastern Province. Puttalam with its dry hot Climate. Supports large Plantations of the tobacco, a major industry in Kalpitiya. Mannar tivu has business in Cattle rearing and finds milk. In the northern and Estern Provinces they are largely Hindus, North - Western Province Roman catholics, with a Strong minority of the Muslim Mukkuvar in the Village of Kottantivu The bridegroom wears a series of earrings :muttukadukan Periakuppikadukan, sinnakuppikadukan and Kayikadukan There is no Community without Petty quarrels they worship Mari Amman and Sea God Ayyanar. There are those who memorise Poems from Tirukkural and tevaram

# மட்டக்களப்பிற் குகன்



சீர்தங்கு வில்லவரும் பணிக்கனும் சிறந்த சட்டிலான் தனஞ்ச
யன்றன்
கார் தங்கு மாளவன் சங்கு பயத்தன் கச்சிலாகுடி முற்குகரினமே
மேழகான்
வார்தங்கு குகன் வாளரசகண்டன் வளர் மாசுகரத்தவன் போர்
வீரகண்டன்
பார் தங்கு தண்டவாண முண்டன் பழமை செறி
(முற்குகர் வன்னிமை)



இலங்கைச் சரித்திறப்புவாயிலாகப் பொருந்தித் திகழும் இராவணன், தன் அரண்மனை மாளிகைகளைக் கீழ்ப்பதிமட்டக் களப்பில் அமைத்தனன். இந்த அரண்மனை நகரம், திருக்கோயிலுக்கு எதிரே தென்பகுதியில் ஆங்கிலேயரால் கலங்கரை விளக்கம் அமைந்த இடத்தின் அடித்தளம் என்பர் ஆராய்ச்சியாளர். இவன் சிறந்த நாயன்மாராற் பாடப்பட்டும், திருக்கோயிலைத் தினம் தரிசித்த சிவபக்தனுயிருந்தும், ஆறிய கற்பினளாகிய சீதையைக் களங்கப்படுத்த நினைந்ததால் கொடுங்கோலனுகி அரண்மனைகளையும், இராச்சியத்தையும் கடல்கோளினுல் இழந்த இடமே இன்றைய கலங்கரை அமைந்த இடம் என்பர் விபீஷணனின் ஆட்சியின்பின் இவ்விடம் காடாயிற்று. [கலி பிறந்தது 800ல் இருந்து 1400 வரை] நாகர்கள் ஆண்டனர். பின் வட நிலப்பரப்பில் வாழ்ந்த முத்துக்குளிக்கும் முக்குளிநாகர் குடும்பங்கள் கடல்கோளில் மூழ்கியதுடன் சிலர் இந்தியா சென்றனர் என நான்முகத்தில் அறிந்தோம் இப்படிச் சென்ற கப்பலில் மூன்று இலங்கையின் கீழ்த்திசையால் ஓடித் தாம் தங்குவதற்கு ஏற்ற வளமான நிலத்தைத் தேடிச் செல்லுங்கால் ஒருசதுர்ப் பேரியைக் கண்டு மனம் மகிழ்ந்து மேலும் அதனூடாகச் செல்லுங்கால் "மண்முனையை" அவர்கள் கண்டதும் கற்பூமியில் வாழ்ந்த மக்கள் கூட்டம் பேரானந்தம் கொண்டு புதுமை அடைந்து "மண்முனை" எனப் பெயரிட்டனர். பின்தென்திசை நோக்கிச் செல்லும்போது அங்கே பரவைக் கடலையும், மட்டான நீரில் நிலம் தெரிவதனையும், ஓடங்கள் ஆங்காங்கே நீர்த்தரையில் உராஞ்சுவதனையும், நீர்மட்டம் குறைந்ததனையும் உணர்ந்த முதற்கப்பலில் நின்றவன் பின்வருவோரைப் பார்த்து ஆனந்தங்கொண்டவனாய், "மட்டு நீரடா- மட்டு- மட்டடா- இக்களப்பு மட்டக்களப்படா" என்றவாறு கப்பலில் இருந்து இறங்கினர். கையாற் கப்பலைத் தள்ளியவாறு கரையடைந்தனர். இப்படியே ஏனையோரும் அப்பாற் செல்ல முடியாததை உணர்ந்து இது மட்டும் மட்டடா-மட்டக்களப்புத் தானடா என்று கூறி மணலில் துள்ளி ஆனந்தம் கொண்டனர். (வெடியரசன் நாடகத்திலும் கர்ணபரம்பரைக் கதைகளிலும் இன்றும்பேச்சில் உள) இங்கே இவர்கள் பாளையமிடவேண்டிய பகுதியைத் தெரிவு செய்து அக்கிராமத்தை வாழ்வு நில நகர அரணுக்கினர். வட நிலப் புலியன் தலைமையிற் சென்ற இக்கூட்டத்தினர் அங்கே அவன்பெயராற் புலியத்தீவு என்று பெயரிட்டனர். இவன் வாழந்த வடநிலப் பகுதியை இன்றும் புலியந்துறை என அழைக்கின்றனர்.

இவர்கள் தாம் கண்ட வளப்பநிலப் பாங்கரையைத் தமது வட ஈழ மக்களுக்குத் தெரிவித்து இப்பகுதியை ஈர்த்துக்கொண்டனர் இப்படியாக இவர்கள் வடநிலத்திலிருந்து தமக்குவேண்டியவற்றைக் கொண்டுசென்று வாழ்ந்து வரும் காலங்களில் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் [கலி 3180]. இராம மரபில் வந்த ''ஆடகசவுந்தரி'' உன்னரசு கிரியை ஆண்டாள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த 'எயினன்' என்ற ஊர்த் தலைவன் ஊடாக ஒருகற்குகையில் யானையைப் போன்ற அரக்கபூதத்தைக் கண்டதாக அறிந்து கவலை கொண்டாள். அவள் கனவில் இராமபிரான் தோன்றி எனது தியானத்தினால் பூதங்கள் உனக்கடிமையாகும் என்றபடி அவைகள் அடிமையாயின. அவ்விடத்தை இராச்சதக் கல்' எனப் பெயரிட்டனர். இதனைக்கண்ட முற்குகர்கள் தங்கட்கு நல்லதோர் தக்க தலைவன் தேவை என்பதை உணர்ந்து, வல்லோனை தம் தலைவனும் வெடியரசனிடம் வடநிலத்திற்கு வந்து முறையிட்டனர். வடநிலத்தை விட்டேக வேண்டும் என்று நினைவு முதிர்வில் முனைந்து நின்ற வெடியரசனுக்கு, மட்டக்களப்பு மண்ணின் மக்களோடு கலந்து ஒன்றிய வடநில மக்களின் மனக் கருத்துச் ''சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போல'' அமையவே தம்பிமார்களுடனும், படைபலங்களுடனும், சேனைவீரர்களுடனும் நாற்பது - ஐம்பது குடும்பத்தவர்களுடன் சூழச் சென்று ஆங்கும் வன்னிமைப் பட்டத்துடன் நிலை பெற்றுத் திட்டமாய் அரசு செய்தனன்.

---

அசுரர்-அரக்கர்-இராவணன் இருக்குவேதத்தில் காணலாம். யா.ச.யோன் பக் 6, யா.வை.மா பக் 10, யா.கு பக் 14 ஆகியவற்றில் யாழ் முற்குகர் வலையிறவு பாணகையில் குடியேறினர் என்று குறிப்பிட்டுள்ளதுடன், யா.கு ஆசிரியர் முத்துக்குமார சுவாமிப்பிள்ளை பக் 14இல் தரைப்படை கடற்படைகளைக் கொண்ட வெடியரசனைப் பொறாமையால் போர் தொடுத்ததனால் அவன் மட்டக்களப்பு பாணகை வலையிறவில் குடியேறினான் என்றும் குறிப்பிட்டுள்ளார். நான்முகக் கர்ண பரம்பரைப் பாடலும் மட்டக்களப்புக் கல்வெட்டுப் பாடல்களும் ஒத்த அமைப்பினை உடையதனாலும் மாகாவிஷ்ணுவின் வழிவந்த குகன் என்பதனாலும், கண்ணகியின் மதுரை எரித்த காலம் கிட்டத்தட்ட கி.பி 144 ஆடித்திங்கள் என்பதனாலும் ஆடகசுந்தரியின் காலமும் க உ 3180 கி.பி 150 மட்டிலாகும். இவற்றை வாசகர்களும் ஆராச்சியாளர்களும் கவனத்திற் கொள்க.

திருக்கோவிலின் ஆதிப்பெயர்-நாகர்முனை,

குமரிக்கண்டம் (லெமூரியா) ஏழ் தெங்கநாடு, ஏழ்பனை நாடு போன்றும் 49பழந்தமிழ் நாட்டில் இலங்கையும் ஒன்றாகும். இங்கு நாகர் என்ற பழங்குடியினர் ஆண்டனர்.



ஐபுவியோர்கள் அனைவரும் போற்ற
தம்பி தமயன் மார் சத்தியஞ் செய்து
ஓடமதேறி நீடியே சென்று
உடும்புறும் இராட்சதர் நிறைந்திடும்
இலங்கையின் மட்டுமா நன் நகரில்
மட்டைக் கொழும்பில் (மட்டக்களப்பு)
மனம் நிறைவாட வன்னிமைப்பட்டமும்
வழமைபோல் தரித்து
திட்டமாய் அரசு அங்கும் செலுத்திடும் நாளையில்
என்னிலத்தில் உள்ள எச்சாதிகளும்
வந்து அடிபணிய மாநிலம் புரக்க
திட்டமாய் அரசும் செலுத்தினரே!

(கல்வெட்டு கர்ணபரம்பரைகுலப்பாடல்)

இப்படியாக நிலை பெற்று உண்ணுங்கால் கும்பகர்ணனின் வழித்தோன்றலான இராட்சதர்கள் மேற்பகுதி மலையோரங்களில் வாழ்ந்த 'உடும்பிறு இராட்சதர்களை வென்று தான் புகுந்த நாடாம் சேதுபதியிலும், மலையாளப் பகுதிகளிலும் வட ஈழ நிலத்திலும் தனது குலத்தவர்களை வரவழைத்துக் காடாக இருந்த இடங்களை நாடுநகராக்கினன். தன் மூதாதையினர் முதவில் தேர்ந்த இடமாம் புலியந்தீவில் அரண்மனை, கோட்டை கொத்தளங்களை அமைத்து அழகுபடுத்தினன்.

இப்படியாகக் கீழ் நிலத்தை ஆளுங்கால் வன்னிமைகளாக விளங்குதேவனையும், ஏரிலங்குருவனையும் இலங்கையின் மேற்பால் (புத்தளம்) அனுப்பி வடக்குக் கிழக்கு மேற்குமாய் அரசன் நாடு என்ற ஆதிப் [பிகிற்றி- இராசரட்டை- அரசன் நாடு-மாயரட்டை- வேந்தர் நாடு (மகயா,மாபா) எனப்பட்ட] பிரதேசத்தையாண்ட செல்வாக்கில் இருத்தினன் சிலாபத்தெதுறு ஓயாவிலிருந்து தெற்குக் களுகங்கையும் கிழக்கில் மட்டக்களப்பும் வடக்கில் யாழ்ப்பாணமுமாய் உள்ள மென்னிலப் பகுதிகளின் அதிபதியாகி ஆங்காங்கே பல துறைமுகங்களை அமைத்து ஈழ மண்டல அரசாகினன் என்பதை நாம் உணரக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பில் பலதீவுகள் சிறிதாய்இருந்தபோதிலும் புலியன்தீவு மருதவயல் வாவிகள் யாவும் ஒருங்கேஅமையப்பெற்ற மூன்று மைல் சுற்றளவைக் கொண்டதும் 30 மைல் நீண்ட வாவியிலே நடுவில் மொட்டு உதிரும் தாமரைபோலக் காட்சியளிக்கும்

---

மட்டக்களப்பை அண்மித்த சீதவாக்கையில் ஒருநாளைக்கு 2000 சிற்பிகள்வீதம் 20வருடங்கள் கட்டிய பிரமாண்டமான கருங்கற் சிவாலயத்தை கி.பி1552இல் பறங்கியர் தரைமட்டமாக்கினர்.

இயற்கை அழகு எத்தகைவுடையதாகும். இவ்வாவியின் கீழ்க் கரையில் 27 மைல் தொலைவில் மருத நிலக் காரைதீவும் மேற் திசையில் முல்லை நிலத் தயிர்மிகு ஏருவூரும் இதன் இடையே காணும் வயல்வளக் காட்சிகளும் நானில வளங்களும் ஒருங்கே விளங்கும் இயற்கை எழில் எத்தகையது. மேற்குமண்டூர்ப் புண்ணியப் பழம்பதியும் வடக்கில் தேனீக்களின் அமிர்தமான தேனுடன் பால் கலந்தோடும் ஆற்றில் நீரரமகளிர்'' (Singing Fish) ஊரிகளான பாடுமீனினிம் பாடி ஆட வண்டுகள் கீதமிசைக்க மந்தைகள் ஆடிப் பால் சுரக்க தேனீக்கள் இரைந்து இசையுடன் தேன்சொரிய அலைஅலையாய்த் தென்றற் காற்றுக்கிசைவாய் நடனமிடும் அலைகளில் வந்து குவிந்திடும் இரத்தினக் கற்களுடன் தேனாடு, மீனாடு, நென்னாடு, பாலாடு என்று பண்ணப்படும் களப்புசூழ் இந்நகரமாம் மட்டைக் கொழும்பில் மீனுண்டுஇங்குநல்லதேனுண்டு பாலுண்டு இங்குஎமக்காகவரும் நன்தயிர் உண்டு, விதப்விதமான பொடி நெல்லுண்டு. மண்ணகமும் விண்ணகமும் வேந்தன் குகன் நெறிகண்டு விண் அதிர்ந்து மும்மாரி பொழிந்து நன்னீர் சுரந்து தேவ அம்ச குகனின் சிறப்பு ஆற்றல்வலிமையை உணர்த்தி இக்களப்பை நீர்நிரப்பும் இதனால் இதன் கரைக்கடலும் காடும் காவுஞ் செறிந்த இந் நன்னாடு நகராகி இயற்கை எழிலோடு கூடிய புலியந்தீவை அன்றே தேர்ந்தெடுத்தான் எனின் அவர்கள் விவேகம் எத்தகையதாகும். இதன்பின்பிற்காலத்தில் பேக்ர்த்துக்கீசரால் கி.பி 1684இல் வடபகுதியில் நகரம் அமைக்கப்பட்டதென்பர்.

**இடுகுறிப்பெயர்கள்:-** நீரோட்டங்களும் மலைப்பாங்குகளும்கடல்படு திரவியங்களும் காடுபடு திரவியங்களும் நகர்படு திரவியங்களும் கதிந்த பேரிடமாகையால் மலையாளர், வங்கர், கலிங்கர், சிங்கர், ஒருஸா, நாட்டவர்கள் உட்படச் செட்டிகளும், பாட்டாணி இஸ்லாமியரும், நாளுக்குநாள்குடியேறினர். இப்படியாக இவர்கள் குடியேறிய இடங்களில் அவ்வப் பெயரிட்டு அழைத்தனர். மேலும் குகன்குலத்தோர் ஆளுங் காலங்களில் ஏற்பட்ட உள்ளூர்க் கலகங்களில் சண்டையிட்டு எதிரிகளைத் துரத்திச் சென்று வெருகல் (மகாவலிகங்கை ஓரம்) பகுதிக்கு அப்பால் உள்ள வாகரைக்களப்பில் ஓர் எல்லைக்கல் நட்டு ஆண்டனர். இவ் எல்லையைத் தாண்டிய குற்றத்திற்காகத் தூக்கிலிட்ட இடத்தை (பாலைமரத்தடி) அப்பெயராலும் போர் வீரர் ஒன்று சேர்ந்து சந்தித்த சந்தி 'சந்திவெளி' என்றும் அவர்கள் களைப்பாறிய இடம் 'வந்தாறுமூலை' என்றும் ஒளித்திருந்து பகைவரைப் பார்வையிட்ட இடம் 'சத்துருக் கொண்டான்' என்றும் போருக்கு உதவிய வியா[illegible]தான் பாட்டாணியரை



குடியேற்றிய ஊர் 'ஏறுவூர்' என்றும் செட்டிகள் வந்த இடம் 'செட்டியாபாளையம்' என்றும் வடநிலக்காரைதீவு, பொன்னாலை, புலியந்துறை, தனங்களப்பு, முந்தல் ஆகிய இடங்களில் இருந்து சென்று குடியேறிய கூட்டத்தினர் அவ்வப் பெயர்களினாலும் இடப்பெயர் பெசருந்தின என்பர். மேலும் நாதன்குடி, குறவன் குடி, செட்டிகுடி, ஆராய்ச்சிகுடி, போடிகுடிகளும் அவர்கள் வாழ்ந்த பெயராற் குறிக்கப்பட்டுள்ளன.

வங்கர்-கப்பல்-கடலோட்டிகள். இதனால் அண்மித்த கடல் நிலம் வங்காள விரிகுடா ஆயிற்று. வங்கர் கலிங்கர் சிங்கர்கள் சேர்ந்து கலிங்கராயினர் என்பர். இக்கலிங்கரையே அரசர் என்கின்றது மகாவம்சம். கந்தளை மலையாள முற்குகர்.

வீரர்கள் பாளையமிட்ட இடம் ''வீர முனை''மண்கற் பூயிலை மலுக்கம்புட்டி'' வாகூர்அரண் வாகூரவெளி நாகன் அரண் பகுதி நாகன் சாலை நாதன் அணை நாதனணை என்றவாறும் அமரசேனன் (கலி 3466) காலத்தில் இராமநாதபுரப் பெண்களான கலைவஞ்சி, செட்டிச்சி, மகிழரசி, மங்கி அம்மை இராசம்மை, வீரமுத்து, பாலம்மை ஆகிய ஏழுபெண்கள் குடியேறிய, பகுதி அவர்கள் பெயரினாலும் அழைக்கப்பட்டது. குகன் குலத்தோர் வந்திறங்கிய கண்டுமுனை பின் அரசனால் ''கல்லேறு முனைத்துறை (கல்முனை)'' என்றும் அழகிய ஆடகசவுந்தரி தீர்த்தமாடிய நதி ''மாமங்கைநதி'' எனவும் இடப்பெயர்களைக் கொண்டதாயிற்று.

இப்படியாகக் குடியேறிய மக்களுடன் கி.பி 8ம் நூற்றாண்டிலும் அராபியச் சோனகரும் குடியேறினர். 16ம் நூற்றாண்டிற் குகன் குலத்தோர் மகமதியர் ஆட்சியின் எழுச்சிக் காலத்தில் திருவாங்கூரிலும், இலங்கையிலும் மகமதியராக்கப்பட்டனர். யான் ஒருமுறை முன்னாள் கல்முனைப் பா.உ காரியப்பரைச் சந்தித்தபோது அவர் தேங்காய்ப்பூவும் குழற்பிட்டுமாவும் போல இரு இனத்தவர்களும் கிராமங்களில் ஒற்றுமையாய் வாழ்கின்றோம் என என்னிடம் விபரித்தார். மேலும்பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்தில் இன்றும் வருடாவருடம் கல்யாணக்கால் வெட்டிநடும் வைபவமும் பாண்டவர்தீக் குளிப்புக்குமுன் பட்டாணி மேடை (சோனக மேடை) மடை இட்டுச் சோனகர்க்கு இவ்வுணவைக் கொடுத்த பின்பே தீக் குளித்துத் தாமும் உண்பர், இதனால் குகன் குலத்தோர் எங்கெங்கே வாழ்கின்றனரோ அங்கெல்லாம் சோனகர் அருகாமையில் வாழ்கின்றனர் என்றதனையும் உணர்ந்து கொண்டேன்.

மேலும் இஸ்லாமியரைச் சோனகர் என்று அழைப்பதை இலங்கையில் மட்டுமே காணக்கூடியதாக உள்ளதறுலும் முதலியார் எஸ். ஓ கனகரத்தினம் அவர்களின் ஆங்கில நூலில் ஆதி இஸ்லாமியக் குடிகள் இராசாம்பிள்ளைக்குடி, வடக்கனுக்குடி, வெள்ளரசங்குடி, பணியட்டுக்குடி, வட்டுக்கத்தறகுடி, மூத்தநாச்சிக்குடி, ஓடவிகுடி, ஆலங்குடிகளாகப் பிரித்து தமிழப் பெயரை ஒத்த வகையிலும் மருமக்கள் காய முறையும் தாய்வழிப் பாரம்பரியமும் பெண்கட்கு முதன்மையும் சில பழக்க வழக்கங்கள் கலாச்சார இணைப்புக்களாலும் கடல்படுதிரவியம் வாங்க வந்த இஸ்லாமியா எமது பெண்களை மணந்து இங்கு தங்கிச் சோனகராயினர் என்ற கர்ண பரம்பரைக் கதையும் வலுப்படுத்துகின்றது.

13ம் நூற்றுண்டிலும் மாகன் ஆட்சியிலும் சோழ, பாண்டிய நாட்டுத் தமிழ்ப்படை வீரர்கள் இவனுடன் வந்து இங்கு குடியேறியதாகவும் பட்டிருப்புச் சித்திரவேலாயுத சுவாமி ஆலயதைப் புனருத்தாரணம் செய்து பழுகாமத்தில் பாளயமிட்டு ஆண்டான். இப்படியாக வாழுங்கால் இலம்பித்துறை என்ற ஈழத் துறை, கற்குடா, மட்டக்களப்பு கண்டபாணந்துறை, கோமரித்துறை போன்ற துறைகளில் குகனின் கடல் வணிகர்களான கிரேக்கர் அரேபியர்கள் வந்துபோய் பெரும் பெயர்பெற்ற துறைமுகங்களாகத் திகழ்ந்ததனுல் மேலும் அநேக வியாபாரிகளும் மேலைநாட்டவர்களும் குடியேறினர். இப்படியாகப் பலபகுதிகளிலும் இருந்து குடியேறிய ஒவ்வொரு மக்கள் கூட்டத்தினரும் ஏழு பெரும்பகுதிகளாகஇங்கேபிரிக்கப்பட்டனர் இதனுல் குகன்வம்சத்தவர்கள்உலகிப்போடிகுடி,காலிங்கக்குடி,படையாண்டார்போடிக்குடி,பனிக்கனுர்போடிக்குடி கற்சிலா போடிக்குடி பெத்தாண்ட படையாண்ட போடிக்குடி என்று ஏழுபெரும் போடிக்குடிகளாக நிலபுலஅதிபதிகளாகவும் தலைமைக் காரர்களாகவும் குகன்குலத்தைப் பெருமைப்படுத்தி வாழ்ந்து வரலாயினர். இப்போடிக்குடிக் குகன் குலத்தோர்க்கு நன்மை தீமைகளில் 17 குடிகளும் காலிங்கக்குடிக்கு 18குடிகளும் ஊழியஞ் செய்யக் கடமைப்பட்டுள்ளனர் என்பதனைப் பூவாள வன்னிமை மலையமான் தீர்ப்பாகும்.

**சுகதிரன் சரித்திரம்:-**

இப்படியாகக் குகன் வழித்தோன்றல்கள் மாறிமாறி ஆட்சி செய்துவருங் காலங்களில் கி.பி 1148 (கலி 4250)சுகதிரன் மண்முனை வடபகுதியில் அரண்மனைப் பகுதியை வகித்துத் தோப்பாவின் மாகோனின் நட்புடன் ஆண்டான் 40வருடம் சுகதிரனும் பரதசுந்தரன் 60வருடமும், யாகசேனன் 50வருடமும், குசசந்திரன் 10வருடமுமாய் சந்ததி சந்ததியாய் ஆண்டனர்.



இவர்கள் இப்படிச் சந்தானம் பெருகியதனுல் மட்டக்களப்புப் பகுதி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் படையாட்சி மண்முனைவடக்கும், காலிங்கர் மண்முனையும், வங்கர் மட்டக்களப்பும், சிங்கன் குலத்தோர்க்கு உன்னரசுகிரியுமாக 70 வருடம் ஆண்டனர். பின் சிங்கன் குலத்தோர் வங்கரின் துணையுடன் விசயதுவிபத்தை முழு இலங்கையின் மத்தியதலமாக்கி மண்முனைக்களப்பு வடக்கே கோறளை நகராக்கி வங்கர், சிங்கர், படையாட்சிஆகிய மூன்று முக்குலத்தோரும் குகன் குலத்தவர்களெனத் திட்டஞ் செய்து ஆண்டனர். இங்கே இலங்கை முற்றிலும் உள்ள குற்றம் செய்தவர்களையும் விசாரிக்கும்படி மட்டக்களப்பு, அனுரதன்புரம், வதுளா, மண்ணுறு, காளி, அம்மான்தோடை, இரத்தினவல்லிநாடு, முள்ளுத்தீவு, தட்சணுபதி, கொட்டியநூர், தோப்பாவை, நூரெலியாப், பகுதியினர் விரும்பிக் கையொப்பம் இட்டனர். சிங்கர் கண்டியைத் தலைநகராக்கி சிங்கதுவீபத்தை 38 வருடம் ஆண்டனர் இவ்வாறுக மருதசேனனின் மகன் எதிர்மன்னஸ் ஆட்சியில் நெல் விளைவித்தும் பாடசாலை ஆலயங்கள் அமைத்தும் வரும்நாளில் கொங்குநாட்டுத் தாதன் மட்டக்களப்பின் நாகர் முனைத் திருக்கோவிலை அடைந்தான். இவன் பாண்டவர்களின் நீதிநெறியை விளக்கித் தீக்குளித்துக் காட்டி அரசனிடம் பாண்டிருப்பு முனையைப் பெற்றுன். மட்டக்களப்புக்குக் கீழ்ப் பகுதி திருகோணமலையும், வடக்கு உறவுப் பெற்றுனையும், தெற்கு மந்தனங் கடவத்தனநாடும், மேற்கு வடாவை மன்னம்பிட்டி மகாவலிக் கரையுமாய் அமைவுற்று இருந்தது. இவன் 44 வருடம் ஆண்டு இறந்ததும் மத்திய நாட்டின் அரசன் இராசசிங்கனின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் போது கலி4680ல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பை ஆதீனப்படுத்திக் கோட்டை கட்டினர். கலிங்கர் வங்கர் நிலமையாகினர். இலங்கைத் தீவு எங்கும் கிறிஸ்து மதம் அறுகுபோல் பரவிற்று. இக்காலத்தில் சுந்தப்பர் தனது சகோதரி குடும்பங்களுடன் ஏழு கண்ணகி விக்கிரகங்களுடன் கடல் வழியால் மண்முனையில் இறங்கிச் சகோதரியை வில்லவனுக்குத் திருமணம் செய்வித்தார்.

**பஸ்கோல்முதலி:-** கலி 4830ல் 30 கிறிஸ்தவர்களுடனும் பண்ணையிலிருந்து குருமார்களுடனும் மட்டக்களப்புச் சென்று கிறிஸ்தவ கோவில் கட்டி 10 வருடமாகத் தன் சமயத்தை வளர்த்தான். இதைக்கண்ட குகன் குலத்தோர் பஸ்கோல்முதலியை எதிர்த்தனர். இதற்குப் பஸ்கோல் தந்திரமாகக் குகன் குலத்தோர் எழுதிய பெட்டிசம் போல் தான் எழுதி விசாரணை செய்வித்து முடிவில் அநியாயமாக இருநிலமைப் போடிகளையும் 80 குகன் குலத்தோரையும் சிரச்சேதம் செய்வித்தான். இதன்

பின் இவனே மட்டக்களப்பிற்கு அதிபதியாகி குகன் குலத்தோரை அச்சப்படுத்தி யானைக்கொம்பு, தங்கம், முத்துமாலைகள் போன்ற வெகுமதிப் பொருட்களை வஞ்சமாகப் பெற்று வந்தான். இதனால் கவலை கொண்ட அவ்வூர் மக்கள் பாஸ்கோல் முதலிக்கு அரசனிடம் முறையிட்டனர். அரசன் இவனின் செயல்களையும், பெட்டிசக் கையொப்பத்தையும் சோதித்து இவனின் சூழ்ச்சிக் குற்றத்திற்காக இவனின் உறவினரையும் இராச சேவையால் நீக்கிக்காரைநகர்க்கமன்கில் கடற்கோட்டையில் பஸ்கோல் முதலியை அடைத்து வைத்தனர். மட்டக்களப்பு மாநகரில் இவர்களின் சூழ்ச்சிகளும், களவுகளும் அம்பலமானதும் ஆண்ட பரம்பரையான இந்நாட்டவர்கள் முக்குவர்கள் என்பதை உணர்ந்து இதன்பின் குகன்குலத்தோர் இந்நாட்டுப் புராதன இராச அதிகாரிகள் என்றும், இவர்களே முற்குக வன்னிமைகளாக இம்மண்ணை ஆண்டுவந்தவர்கள் என்பதனையும் விசாரணைகளின்பின் உணர்ந்து "புராதன இராச அதிகாரரெனத் தீர்ப்பிட்டு" இராச பட்டயத்தில் வரைந்து அதிகாரச் சட்டமாக்கினர். இக்குகன் குலப் பிரஜைகளின் சிறப்பியல்புகளை உணர்ந்து இவர்களை மாதாபிதாப் போல் ஆசீர்வதித்து ஒல்லாந்தர் சங்கத்திலும் விசுவாசமுள்ள முற்குகர்களை அங்கத்தவர்களாக்கினர். இக்காலத்தில் கண்டி அரசனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (1741-1782) ஆட்சிபுரியும் கால் மட்டக்களப்புக்கும் "நிலமைகளை" உண்டாக்க எண்ணி "கந்தப்போடியாரை" தென்பகுதிக்கும் அறுமக்குட்டிப் போடியாரை "வடபகுதிக்கும் நிலைமைப் போடிகளாக மட்டக்களப்பிற்கு நியமித்துச் சக்கரவர்த்தி கொலாண்தொர், உட்பட மெஸ்தர்குமான், லெல்லம்பல்க், அர்நகோராத பயன, அங்கலவெக் அதிரியானிஸ், யுவானிஸ், பிருன்ஸ்கே, ஆகிய உத்தியோகத்தர்களும் கையொப்பமிட்டு 'ஆக்கோத்து ஆணையைக்'' கையளித்தனர். அறுமக்குட்டிப் போடியார் எழுவில் போரமுனைநாடு மண்முனை, கோறளை ஆகிய நான்கு கிராமங்களையும் கந்தப்போடியார் கரவாகு, சம்மாந்துறை, பாணகை, உன்னரசுகிரி ஆகிய நான்கு கிராமங்கட்குமாய் 'நிலமைப்போடி அதிகாரிகளாகினர். மட்டக்களப்பில் வாழ்ந்த கலிங்க, வங்க, சிங்க முக்குலத்தோர்க்கும் தங்கள் பாரம்பரியமாக வந்த பழக்க வழக்க கலாசாரங்கட்கு ஏற்ற முற்குகச் சட்டத்தை ஏற்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்தது தோம்பு ( TOMBO ) இடாப்பு உத்தியோகங்களையும் உருவாக்கி மட்டக்களப்பு முற்றும் முதன்மை பெற்றுவந்தனர்.

---

இக்கட்டுரையில் வரும் அநேக குறிப்புக்கள் வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசாவின் மட்டக்களப்பு மான்மியத்திலிருந்து திரட்டியவையாகும்.



இப்படியாக அன்னியன் ஆட்சியில் இருந்த போதினிலும் அறுமக்குட்டிப் போடியார் செட்டிப்பாளையத்தில் குல தெய்வமாம் கண்ணகை அம்மன் ஆலயத்தை நிறுவி அன்றும்சைவத்தை வளர்த்தார். இவர் ஏழுபெண்களை மணந்த போதிலும் தர்ம புருஷனும் கல்வியில் சிறப்புற்றவராகவும், பராக்கிரமசாலியாகவும், பூரண ஆயுள் உடையவராயும், அரசனுக்கேற்ற முகபாவனைகளையும் எழிலுடன் பல்லக்கில் ஊர்கள் தோறும் பிரஜைகளை அடிக்கடி சென்று பார்வையிட்டு மக்களுள் மக்களாய் திகழ்ந்தார். கலி பி 4880ல் கண்டியரசன் இராசாதி இராசசிங்கனின் (1782 1798) முடிதரிப்பு விழாவுக்குச் சென்று அறுமக்குட்டிப்போடியார் வயிரமாலையையும், கந்தப்போடியார் வராகன் மாலையையும் அரசனுக்குப் போட்டதுடன். ஏனைய குகன்குல நிதிய அதிபர்களும் புவராகன். பொன்னரிசி போன்ற முத்துக்களையும், தங்கத் தட்டங்களையும் முடிசூட்டு விழாவிற்குப் பரிசாகக் கொடுத்தனர். இப்படியாக ஒல்லாந்தர் ஆட்சியின் பின் கண்டி அரசனின்நிலைமைப் போடியாகவும் அதிகாரத்தல் நிர்ணயித்தனர். இப்படியாகச்சந்ததி சந்ததியினராக ஆண்டனர் என்பதனைத் தேசாதிபதி "பான்கூன் சிங்கின்" அறிக்கையில் கி.பி 17ம் நூற்றுண்டில் "முற்குக இளஞ்சிங்கன்" என்றசிற்றரசன் ஏறுவூரில் இருந்தான் என்றும் இவன் முற்குக வன்னிமைகளின் வழித்தோன்றல் என்பதனையும் உறுதிப்படுத்தியுள்ளார். இதனல் 17ம் நூற்றுண்டுவரை குகன்குலத்தோர் ஆண்டனர் என்பது புலனுகின்றது.

ஒல்லாந்தரால் எழுதப்பட்ட 'ஆக்கொந்துத் தமிழ்ப் பிரதியை இங்கு அப்படியே பிரசுரிக்கின்றேம்.

"அறுமக்குட்டி சாதிமுக்குவன் எங்களிடத்திலே மண்முனைப் பகுதிக்கு பெடியாய் இருக்கக் கெட்டபடியால் அதற்கு நாங்கள் நிர்ணயித்துப் பார்த்து தன்னுடைய நல்ல நடவடிக்கையை கெட்டுத் தீர்மானித்து முன்சொல்லப்பட்ட மண்முனைப்பகுதிக்குப் பெடியாக கற்பிக்கிறேம். அதுகூடக்கொடுக்கப்பட்டது. தமது தொழிலுக்கடுத்த சங்கையும், புரோசனமும் பெரியவர்களுக்கு நடக்கும் பூச்சியமும் பொது கிடைத்திருந்தபடிக்கு இப்பொவும் அந்தப் பிரகாரந்தான் இதிற் கட்டளை பண்ணுகிறேன். இதில் அடங்கிய சகலமான பேரும் இந்த அறுமக்குட்டியை பெடியாக அறிந்து உண்டான படிக்குக்சங்கிக்கவெனும். இதற்கு அடையாளம் திட்டப்படுத்தி வளமையான முத்திரையும் வைத்துக் கையொப்பம் பொட்டுக் கொடுத்தோம்.

இப்படிக்கு
இலங்கைத்தீவிற் கொழும்புக்கோட்டை.

| | | |
|---|---|---|
| மேலான த்தன மகாராசா மெஸ்தர் அவர்கள் கட்டளை | இலங்கையில் முத்திரை சிவத்த லாகிரிய லேவை த்தது. | சங்கைபோந்தயுத்தமக கிய கொலண் தொர் இமான் வெல்லம் பல்க் ப்படிக்கு |

கிழே கையொப்பம் வைத்தது யோகன் கொஸ்தன் அங்கலவெக் சக்கடத்தார் சரிவரக்கண்டது. அதிரிமானிஸ் யுவானிஸ் பிருன்ஸ்கெ தொலுக்கரித்தது.

கணக்கன்

1766ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6யிலே கையொப்பம் வைத்தது. இமாம் வெல்லம் பல்க்

முற்குர் சட்டம்:- [Ordinance No 15 of 1876]

கண்டியை கிர்த்தி ஸ்ரீ ராசசிங்கன் அரசாகை இருக்கும் காலத்தில் மட்டக்களப்பை இருபெரும் பகுதியாகப் பிரித்து கந்தப் பொடியையும், அருமைக்குட்டியையும் நிர்ணயித்து ஒல்லாந்தர் அரசினர் சட்டத்தில் அவர்களின் வழமையில் வழிவந்த ஏற்பாடான முற்குகர் சட்டத்தை தலைமைச் சட்டமாக்கி அருமைக் குட்டிக்கு சிறைந்தளதாபர அதிகாரம் அளித்தனர். இதனை ஆங்கிலத்தில் 1876ல் 'பிறிற்ரோன்'' என்பவர் மொழிபெயர்த்து முற்குகச் சட்டம் (15ம் கட்டளைச் சட்டம்) என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உருமையின் வகை (அன்றைய ஆங்கில மொழி பெயர்ப்பு)

ஒரு தலைமைக்காரனுக்கு இராசாக்களாலே கிடைத்திருக்கிற உறுதி ஒப்பந்தங்களும் முதுசோமான ஊர்க்காணி உடமைகளும் அந்தத் தலைமைக்காரனுக்குப் பிற்காலம் அவன் சகோதரங்களுக்கும், மருமக்களுக்கும் அவன் தாய்வழிச் சனத்துக்குச்சேரும் அவன் தானகத் தேடியசோம்கள் அவன் பெற்ற பிள்ளைகளுக்குச் சேரும்அவன் பிள்ளையில்லாமல் இருந்தால் அவன்முதுசோமாகக் கொண்டுவரப்பட்ட சோம்கள் அவன் சகோதரங்களுக்கும் மருமக்களுக்கும் சேரும். அவன் பெற்றிருந்த சீதனமான சோம்கள் அவன் பெண்சாதி வழிச் சனத்துக்குச் சேரும். அவனாற் தேடப்பட்ட சோம்களிலிருந்தால் அவன் வழிச் சனமும் அவன் பெண்சாதி வழிச்சனமும் சரிபங்காகப் பிரித்தெடுத்துக் கொள்ளுகிறது.

2. சீதனம் கொடுக்கிற வகை

அவனாற் தேடப்பட்ட துகளிலும் அவன் சீதனம் கொண்டுவந்த துகளிலும் அவன் சம்மதித்த மட்டும் ஒரு உடன்படிக்கையீற் சகலதுங் கண்டெழுதிச் சீதனம் கொடுக்கிற வழமையாம். அவனாற் பிற்காலம் சீதனம் கொடுத்தது போக அதிகமாக விடு



க்கப்பட்ட சோம்கள் சீதனம் பெற்றிருந்த பிள்ளையும் இருக்கப்பட்ட பிள்ளைகளும் சரிபங்காகப் பிரித்துக் கொள்ளுகிறதுமுண்டு. அவன் கடன்பட்டிருந்தால் அவன் சீதனம் கொண்டு வந்தசோம்கள் விற்கக்கூடாது. அவனாற் தேடப்பட்ட சோம்கள் விற்கலாம்.

முதுசமாயிருக்கிற சோம்கள் அவன் சீவனோடிருந்தால் விற்கலாம். அவன் செத்தால் அவன் சகோதிரி மருமக்கள் விற்கக் கொடுக்கமாட்டார்கள். மஞ்சள் நீர்ப்பிள்ளை ஆணாகினும்பெண்ணாகிலும் ஒரு பிள்ளையை எடுத்து வளர்த்தால் வளர்த்தவன்சம்மதிக்க அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுத்த சோம்களுக்கு உறுதி கொடுத்து அதன் உறுதிப்படி ஆட்சிபண்ணிவரும், உறுதிகொடாது போனால் அந்தப் பிள்ளைக்குப் பிற்காலம் வளர்த்தவன் கொடுத்த சோம்கள் அந்தப் பிள்ளையின் வயிற்றுவார்களுக்குச் சேரும். வளர்த்த பிள்ளைக்குப் பிள்ளையில்லாமல் மரணிக்கச் சம்பவித்தால் பிள்ளை வளர்த்தவரது அல்லது அவனது பிறர் வழிக்குச் சேரும்.

3. காணி, பூமி, தோட்டம் முதலானதுகள் ஆட்சிப்படுவிதங்கள்:

காணியுள்ளவனிடத்திற் காணியில்லாதவன் வந்து காணி கேட்டுத்தன் செலவாகக் காணி வெட்டிச் செய்கை பண்ணினதே ஆனால் அவன் செய்த செய்கையிற் காணி உள்ளவனுக்கு ஒரு பங்கும் செய்கை பண்ணினவனுக்கு இருபங்குமாகக் கையாடி ஆட்சிபண்ணுவான்.

காணியுள்ளவன் தன்செலவாக காடு வெட்டி வேலியும் அடைத்து ஒரு காணியில்லாதவனுக்குச் செய்கை பண்ணக் கொடுத்ததேயானால் அவன் செய்த செய்கையை விலை வைத்துக் கொடுக்கிறது. இருவிதமும் செய்கை பண்ணினவன் மேற் புரோசனமேற்றுக் கொள்ளுகிறது காணி அவனுக்குச் சோமாக மாட்டாது. அவன் செய்த செய்கை உள்ள மட்டும் மாறாமல் புரோசனம் கையாடி வருவான்.

4. நன்கொடை வகை:

ஒருகாணியை ஒருவனுக்கு நன்கொடையாக அவன் பிரியத்தின்படி ஆட்சிபண்ணிக் கொள்ளவும், விற்கவும், நன்கொடை கொடுக்கவும், உறுதியுங் கொடுத்துக் காணியுங் கொடுப்பானே யானால் நன்கொடை பெற்றவன் பிரியத்தின்படி அவனும், அவன் வயிற்றுவார்களும் ஆட்சிபண்ணியும் விற்றுங் கொள்வார்கள். அந்தக்காணியை விற்காமல் அவனும் அவன்பிற்கிளமும் ஆட்சி பண்ணி அவர்கள் சகரும் அடியற்றுப் போனால் அந்தக் காணி நன்கொடை கொடுத்தவன் அல்லது அவன் பிற்கிளங்களுக்குடையது.

**5. காணி ஒற்றி பிடிக்கிற வகை:**

தென்னந் தோட்டத்தை ஒருதனுக்கு ஒற்றிக்கு கொடுத்து பணம் வாங்கினல் பணத்திற்கு வட்டியில்லை. அதற்குச் சரியாக அதின் புரோசனத்தை கையாடிக் கொள்ளுகிறது. தவணைப் படிக்கு வட்டியில்லாமல் முதல் கொடுத்து ஒற்றி மீண்டு கொள்ளலாம். தவணை தப்பினல் வாங்கினவன் சம்மதித்தவேளை பணம் கொடுத்தும் மீண்டு கொள்ளலாம்.

வயல் நிலத்தை ஒற்றி பிடித்தால் தவணைப்படிப் பணம் கொடாமற் பின்னிட்டால் அந்தக் காணியில் வேளாண்மை செய்கின்ற வேலை தொடக்கம் வேலை முடியும் வரைக்கும் பணம் வாங்கியவன் பணம் கொடுத்தலை எடுக்கக் கூடாது. அந்தப் புரோசனம் கையாடிக்கொண்டு பணத்தை வாங்கிக் கொண்டு காணியை கொடுத்து விடுகிறது. இதுவிதமாகப் புரோசனப்படு கிற காணிகளுக்கு இதுவே வளமை.

**6. ஆண் சிறை பெண் சிறைகளின் வகைகள்:**

ஒருதர் ஆண்சிறை, பெண்சிறை கொண்டிருந்தாற் கொண்டவன் சீவனுள்ளபோது இட்டம் பண்ணி அவர்களுக்கு கொடுக்க வேண்டிய காணி ஆதனங்களுக்கு அந்த எசமானுடைய உறுதி கிடைத்திருந்தால் அந்த உறுதிப்படி கிடைக்கும்.

அப்படியிட்டம் பண்ணுதிருந்தால் அந்தக் கொண்டவனுடைய பிள்ளைகளுக்கும் அந்த உரிமைக்காரரும் சிறை.

**7. வட்டிக்கு பணம் கொடுக்கிற வகை:**

வட்டிக்கு பணம் கொடுக்கிறது நூற்றிற்கு ஒன்று வளமை.

**8. கொள்வனவு விற்பனவு வகை:**

கொள்வனவு விற்பனவு தங்கள் பிரியத்திற்குக் கொள்ளவும் விற்கவும் கூடும். தோட்டம், வீடு, மாடு ஏதாகிலும் இவருடைய ராசிப்படிக்கு கொடுக்கலாம்.

**பெரியகல்வெட்டின் ஒருசிலவற்றை கீழ்த் தருகின்றேன்:-**

திருவளர் தேவசெனனமே பெரிதாய்
அரியயன் மாலில் அழகொடு உதித்து
மனுவெனுஞ் சக்கரவர்த்தியா லுலகில்
கணமென நராணன் காட்சியும் புகழும்......
ஆதியும் அந்தணன் அரசன் சத்திரியன்
வைசியன் வணிகன் வளர் திலகரன்.........
இலங்கையைப் பன்னிரண்டிடமாய்ப் பிரித்து
கலிங்கனுஞ் சிங்கமரபனு மொத்து நுவரை கழனி
நுவரெலி மாத்தளை பகரனுரதமொடு காலி
வதுளை விந்தனை வளர்பதி யெட்டும்
பதிபுகழ் சிங்கமரபனுக் கமைத்து
அன்னவரிருவர் படையாட்சியை யழைத்து
கன்னல் சூழ் மட்டக்களப்பு முக்கென்னும்



திருகோணைப் பதியைத் திருமலருக்கமைத்து
திருகுலவம்மிசக் கொடியினர் தமக்கு
மணற்றிடர் மண்ணுறு மாநகரமைத்து
கனத்தொடு மனுவெனுங் கட்டளைப்படிக்கு
ஆளுவீரெங்களரச துவென்றும்
வாழு வீருங்கள் வரிசைகளோடு
திறைமு றையகற்றி னேம் தேவரில்லங்கள்......
சென்றனன் மட்டத்திகழ்தரு களப்பில்
கலியுகவாண்டு கண்ட மூவாயிரத்து முப்பதாமாண்டில்
வலியனுய் மட்டக்களப்பது பெற்று
செங்கோல் செலுத்தினன் சிறைகுடியேற்றி
எங்கும் குகன் குலமென வியற்றினன்.......

**பங்கு கூறும் கல்வெட்டில் ஒருசிலவற்றைக் காண்க:-**

குருவளர் கலிங்கன் செகதலம் புகழ......
அறமுயர் வேதம் நம்பியரி திருப்பாட்டுச் சரிகை சன்னுசம் தார்வளர்
தேசம் வன்னிமை வரிசையாயுலகுறு வருகுரு நாதா
பூபாலன் கோத்திரம் பூவசியன்
பாவலர் புகழும் பகுதி புன்னலை
மண்முனை மட்ட வாழ்வுறு களப்பு
பெண் பெறுநாடு பேர்பெறு நகரம்
கண்டி கதிரை கந்நாளை மாவலி
பண்டு முன்னயோத்தி பங்குகள் முதலாய்
கூறெனக் கொற்றவன் கூறிய உழவர்
ஆறிய பின்பு அரசனை வணங்கி
கலிங்கனே உனது கட்டளைப் படியே
இலங்கை மாநகரில் ஈசராலயத்தில்
வீதி துலக்கும் வேளாளர்க் கடிமைகள்
மாதுலை கோயிலார் வரிசைப் பண்டாரம்
குசவர் கொல்லர் கோனேர் தொழுவர்
இசைபுகழ் முதலி செக்கன் சாணுன்
யீரங்கொல்லி யீட்டியன் பாணு
வாரந்தட்டி மாலை தொடுப்பேன்
கடையன் துரும்பர்க்குக் காராளனீந்து
படையாட்சி கலிங்கன பணிக்கன் சிங்கன்
அவர்களோடுழவர் அன்றுமின்றுக
அவனியிருந்து அடியார்க் கெல்லாம்
வேண்டிய தளித்து விருதுகள் பறக்கத்
தோன்றிய ஐங்குலமும் சூழ வீற்றிருந்து
தேரொடு கோபுரம் தீர்த்தக் குளமும்
ஏறுயர் தொழிலே ஏற்றமிருந்து

பண்டுபண்டாகப் பகர்ந்தனரு லகில்
மட்டக்களப்பில் வருமுறை யீதெனச்
செட்டிகளுடனே செப்பினன் குகனும்......

**போடிகல்வெட்டிலிருந்து ஒருஇலவற்றைக் காண்க:-**

திங்கள் நேரு லாவுஞ் செகதல மனைத்தும்......
குகன் குலவரிசை குவலயம் வழங்க
மகம் பெரிதான மட்டக்களப்பினில்
செந்நெல் முன் தானியம் சேர்பதினெட்டும்
கன்னல் கதலி கமுகொடு தேங்கு
செழித்து இலங்கத் தேனினங் கூட்டி
தெளித்ததென வெங்கும் சிறந்திடு மாநகர்
அறமே துலங்க அதர்மங்கள் கலங்கத்
திறமேயிலங்சத் தீதே மலங்க
தேவராலயங்கள் சிறந்து விளங்க
மூவர் வேதங்கள் முற்றுமுணர்ந்து
மதுரமனதால் மட்டக்களப்பைச்
சதுர மதிலாய்த் தரித்து முன்னுண்டு
அன்னக் கொடையும் அண்டர்கள் மகிழ
மன்னர்க் கதிபன் மட்டக்களப்பில்
இருந்தனர் குடிமுறை யன்றோ டென்றும்
வரிந்தனர் வாவி ஏரிகள் சூழ
வாழ்வுறு நாளில் மதிகுலா சென்று
சூழ்படு குகன் நகர் சூட்டென முடியை......

**நன்மைக்கும் தீமைக்கும் கும்ப வரிசையிலிருந்து சில:-**

பார்பெற்ற பரிதிகுல கலிங்க மரபினோர் பதின்மூன்று கும்பமும்
தேங்கினுயர்பாளைதனிப்பாவாடைமேற்கட்டி தாரைதவில்குழல்
வீணை பவனிபெறுபந்தலுள்ளிரண்டுநிறைகுடமுயரவும்டஞ்சமலர்
தூவவுங் சஞ்சமலர் மேவவும் பாவாணர்பாடிவரவும் பட்டாடை
பதின்மூன்று கொய்து மனைமேலெறிதல் பலகிரண தீபமிடுதல்
ஏற்பெற்றிலங்கு நவதானியங்கொட்டுதல் பதினெட்டுவரிசை
யெழுதல்

எதிருழவர் தங்களுக்கீந்த சிறை பதினெட்டு மியல் தொண்டு
செய்து வரவும்


இலகு வெண்குடை தவள மேவு பூபாலனென வேற்று நரர் துதி
புரியவும்

எத்திருப்பதியிலும் முகமனெமுன்னீடிட்டு நன்முறைகள் முதலாய்
ஏற்றவர்முன் தேசமென்று பணிசெய்து வரவும் .........

---

Ryk Lop Van Gones, Governor of Ceylon, 1695, The Inhabitants of Batticaloa both in Customs and Religion resemble the Jaffnese and are Still Malabars. Mutkuhar Migrate to Batticaloa from Jaffna Mr Hete J.H.p-6 சுவாமி ஞானப ... சரும் 1933ல் வீரகேசரியில் ஆராய்ச்சிக் கட்டுரையில் ... துப்படுத்தியுள்ளார்.

# திருகோணமலையிற் குகன்




பின்போவார் பெருமை கொண்டு வருவாருண்டோ
பேசரியவங்கமாக சேனன்றனும்
தன்செயலை நிலைநாட்டவெண்ணி முன்னுட்
சதுரங்க சேனையொடு இலங்கை சேர்ந்து
அன்போடு முக்கோண லயத்தைய
ருளொக்கச் செய்தேதான டகத்தை
இன்பமொடு மணந்த மங்கை வங்கர்குலம்
நானுமக்குலத்தான் வரிசைகேட்டேன்.

(கந்தளை முற்குகர் வன்னிமை)

---

மட்டக்களப்பு, திரிகோணமலை, புத்தளம் (புளொக்) வரைப் படங்களை இலவசமாகத் தந்துதவிய யாழ் - இலக்கியவட்டம் செங்கைஆழியான் திரு க. குணராசா அவர்களுக்கு எமது நன்றி.

யாழ்ப்பாணப் பெரும் பரப்பாம் வடதரையைச் சொர்ணத் தரை என்றது போற் திருகோணமலைப் பெரும்பரப்பாம் கீழ்த் தரையைத் தென்கயிலாயம் என்று கணித்தனர். மூன்று மூக் கோணமான மலை சூழ்ந்த பகுதியைத் திரிகோணமலை என்றனர். இதனாலேயே அஃது இயற்கைத் துறைமுகமாக அமையும் வாய்ப்பு ஏற்பட்டது. இமயக் கொடுமுடியில் கைலாய சிகரத்தில் கயிலைநாதன் போல் ஈழத்தின் கயிலை மலையில் கோணேசரும் அமைந்தார். இது ஒரே அட்சரரேகையில் அதன் நடுவே தில்லையும் அமைவதனால் திருமூலநாயனார் "மேரு நடு நாடி" (திருமூ.2701) உடம்பின் நடுநரம்பு என்றும், தெட்சணகைலாயப் புராணம் மகாமேரு மலையின் சிகரமென்றும் விளக்கியது இந்தக் கைலையின் இராவணன் "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்" என்பதனால் தென் கயிலையாம் திரிகோணமலைக்கும் இலங்கை அரசன் இராவணனுக்குமுள்ள சம்பந்தம் கி.மு 6000 ஆண்டுக்கு முன்பே உண்டு என்பதில் ஐயமில்லை. இதனால் இங்கு சைவத்தின் தொன்மை முதிர்வின் நிலைக்களமாயிற்று என்பர். கரைகெழு சந்துங் (சந்தனம்) காரகிற்பிளவும் (அகிலக்கட்டை) அளப்பருகனமணி (இரத்தினம்) தரளம் செம்பொனுமிப்பியும் (முத்து, செபபொன், சிப்பி) அழவிலா நித்திலம் (முத்தும்) கொளிக்கும் கோணமாமலை என்ற சம்பந்தர் தேவாரச் சிறப்பின் படி இங்கே அக்காலங்களிலும் (கி. பி. 634-650) முத்துக்களும் சிப்பிகளும் பெருமளவில் மிக எளிதாகக் கிடைப்பது புலனாகும். "நித்திலம் சுமந்து குடிகளை நெருக்கிப் பெருக்கமாய்" என்னும் வரிகளில் முத்துடை முத்துக் குளிக்கும் மக்கள் கூட்டம் மிக நெருக்கமாகப் பெருகி அங்கே வாழ்ந்தனர் என்ற உண்மையை உணர்த்துகின்றது. இவர்களின் வழிவழியான முத்துக்குளி மக்கள் அங்கே வாழ்ந்து வருவதும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துவனவாகும்.

இலங்கையில் வாழ்ந்த வங்கர் குலமகாசேனன் (கலி3340) கலிங்கநாடு சென்று ஞானி சங்க மிகுந்தனிடம் முழு இலங்கையையும் ஆள வினவியபோது அவர் தட்சணகைலையில் [திருமலை] தசகண்ட ராவணன் முக்கோணமுள்ள ஒரு லிங்கத்தை ஸ்தாபித்துக் "கன்னியாகுமரி" என்ற ஏழு நதிகளை [கன்னியா] ஏற்படுத்திப் "பாவநாசச்சுனை" என்று பெயரிட்டுவரும் நாளில் குகன் நண்டனும் இராமரால் இறந்த பின்னர் சிதைவுற்றுள்ள அந்த ஆலயத்தைத் திருத்தி அமைத்தால் உன் எண்ணம் நிறைவுறும் என்றார். அப்படியே மகாசேனன் இலங்கை வந்து தீசனைத் துணைகொண்டு ஆலயங்களைத் திருத்தியும், மின்னேரியை வெட்டியும், ஆறுங்கால் பூதப்படைத் தலைவி ஆடகசவுந்தரியை மணந்து உன்னரசுகிரி தட்ஷணபதி, மட்டுநகர்களை ஆளுங்கால் அரசியில் அப்பூதங்களே "கந்தளே" ஏரியையும்கட்டினர் என்பர்.



இத்தகு சிறப்புமிகு ஆலயங்கள் கடல்கோளில் சமுத்திரத்தில் மூழ்கிய தென்பதனை ஆழ்கடல் அறிஞர்கள் திரு. மைக்வில்சங், திரு. ஆதர்கிளாக் வலியுறுத்தி உள்ளனர். சமுத்திரத்தினுள் மலையின்கீழ் மூன்று ஆலயங்கள் இருந்தபோதிலும் கி. மு1300 இல் கட்டிய ஆலயத்தைப் போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்ரன்டீனா கி. பி 1624ல் வருடப்பிறப்பன்று இடிப்பித்தான். அத்தோடு பறங்கிகளின் காலமான 1612ல் ஒல்லாந்தர் திருகோணமலை மட்டக்களப்புப் பகுதிகளில் கோட்டை கட்டி ஆள முற்பட்டனர் என்றும், இதுகண்ட கண்டி இராசசிங்க அரசன் கொலை கொள்ளை, கற்பளித்து வந்த 2,13,000 பறங்கிப் படைகளையும் 6000 காப்பிரிகளையும் கொன்று அவர்களின் தலைகளைத் தந்தைக்குக் காண்பித்தான் என யா. ச கூறும். இப்படியாக ஆதிக்குடி மக்களுக்குச் சேர, சோழ, பாண்டிய, ஐரோப்பிய, கண்டியர்களின் மாறி மாறியேற்பட்ட ஆதிக்கங்களால் தடுமாறினர் பின் பிரித்தானியரின் கப்பற்றளம் அமைந்ததனாலும் எண்ணெய் டாங்கிகளினாலும்,சைனபே(சீனன்துறை) ஆகாய விமான இறங்கு துறையினாலும், இயற்கைத் துறைமுகம், வென்னீர்க் கிணறுகள் எழில்மிகு அழகு தோற்றங்களாலும் ஏனையோர்களைக் கவர்ந்த இத்திருமலை மாவட்டத்தில் அனேகர் வந்து குடியேறினர். அன்னியரின் ஆட்சியில் தமது கலாசாரங்களை மறந்து அரைகுறையாகி அவர்களுடன் கலப்புற்றவராயினர் சிலர். இம்மாவட்டம் 1048 ச.ம. பரப்பையும்.82௦ ப வெப்பநிலையையும், 68 அங்குலச் சராசரி மழை வீழ்ச்சியையும் கொண்டு கொக்கிளாய், கொட்டியார், சிறு வாவிகளையும், கடல் ஏரிகளையும் தன்னகத்தேகொண்ட இயற்கை எழில் நாடாகும். இங்கு அண்மையில் 54,000 தமிழர்களும்,41000 முஸ்லிம்களும், 40,000 சிங்களவருமாக வாழ்கின்றனர் என்பர்.

அறியாதா ளிச்சபைக்கு அகல நிற்பான்
பரன்றேழும்பேர் பழிப்புரைப்பாரறைவேலனங்கள்
நெறிதவறுர் சுயநாடு காணிகட்டம் நீர்க்குலமே
படையாட்சி யுழுதா ளுண்டோர்
வெறிகமழு மகாலிங்க வாசனெங்கள் திறத்தோரைப்
படைத்துணைக்குத் தலைவனாக்கி
குறியறிந்து வணிபங்கள் குலமே என்றும்
குகப்பட்டத்தரசு நொண்டோனே.

(முற்குக வன்னிமைகள் பக். 44)

எங்கும் குகன் குலமென விபற்றினன்
மதிநுநல் ஒல்லாந்த மன்னனை கேளும்
இதுவே குகன் குகன் குலமெனவறிவாய்
கன்னியன் மகிழ்ந்து காவலன்றனை
வன்னிமைக் குலமாய் வைத்தவனண்டான். [பெகல்]

இது இவ்வாறு இருக்க இவ்வாலயத்தைக் கி. பி 5ம் நூற்றுண்டில் குளக்கோட்டன் புனருத்தாரணம் செய்தான் என்பதனை இந்நூல் பழமைச் செய்தியில் சுட்டியுள்ளோம். வடநிலத்தின் நின்று கிழ்த் திசை சென்ற வெடியரசனின் யுத்த மாலுமி சாஸ்த்திரம் கற்று முத்துக்குளித்த பெரும் தலைவர்களையும், வீரர்களையும் இவன் தனது தானைபதிகளாக்கி 'வன்னியம்' என்ற பட்டங்களை வழங்கிப் பட்டங்கட்டி ஆளப் பணித்துத் தன்னுடு சென்றான் என்றும் இதனாலேயே கீழ் மாகாணக் குகன் வெடியரசன் வழித்தோன்றல்களை ஆதியில் பட்டங்கட்டி என்று அழைத்தனர் எனக் கர்ண பரம்பரைக் கதைகள் உள. புத்தளத்து முற்குக வன்னிமைகள் திருகோணமலைவரை பரவியிருந்தனர் என்று பேராசிரியர் பத்மநாதனின் ஆதாரத்தை உறுதிப்படுத்துகின்றது அத்துடன் திருமலை வில்லூன்றிக் கந்தசாமி ஆலய வரலாற்றில் கடலில் மிதந்த பேழையைக் கண்ட மூவர் அங்கே ஆதிக்கத்தில் (தலைவனாக) இருந்த 'பட்டங்கட்டி ஆறுமுகத்திடம் முறையிட்டதும் அவர் அப்பேழையை வந்து எடுத்து அதனுள் சண்முகப் பெருமானைக் கண்டு ஆனந்தங் கொண்டு முடமாண்டானிலும் பின் தம்பலகாமத்திலும் அதன்பின் வில்லூண்டியிலுமாய் ஆலயம் அமைந்திருப்பது இதற்கு ஆதாரமாய் உள்ளது. மேலும் இவ்வெடியரசன் வாரிசுகள் வடநிலத்திலிருந்து மட்டுநகர்வரை தன் ஆதிக்கத்தில் இருந்தனர் என்பதனைச் சரித்திர ஆசிரியர்கள் மறைத்த போதிலும் பல ஆலயங்களின் புராணம் வழிவழியே இவர்களின் பழமை ஆட்சியை வலுப்படுத்துவனவாகும்.

**மூதூர்:-** கொட்டையாபுரப் பகுதியில் மூதூரில்இருந்து 16கி. மீற்றர் தொலைவிலுள்ள கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயம் குகன் குலப் 'படையாண்ட' குடிமக்கள் அமைத்து வழிபடுவதும், முத்துப்போன்ற நெற்கதிர்களைக் கொண்ட மூதூரில் கடலோட்டிகள் இடையே தங்கி வீரமரத்தடியில் கல்வைத்துக் கணபதி என்று வழிபட்ட இடத்தில் புது ஆலயம் அமைந்த வரலாறுகளும், மூதூருக்கு 8 கி. மீ உள்ள பள்ளிக்குடியிருப்பில் அன்று கோணேஸ்வரருக்கு நெல்மான்யம் குளக்கோட்டன் கட்டளைப்படி செலுத்தி வந்த சைவத் தமிழ்க் கிராமப் பிள்ளையார்ஆலயத்தைக் குகன் குலப் ''படையாண்டகுடி'' வழித்தோன்றல் திரு-க. மாரிமுத்து என்பவரால் புனருத்தாரனம் செய்யப்பட்டதாகும்.

## இலங்கத்துறை:-

ஈச்சிலம்பத்தைக்கு அருகாமையில் மூதூரில் இருந்து 28 கி. மீ தொலைவில் ஆதிக்குகன் குலத்தவர்களும், சேர,சோழ,பாண்டிய நாட்டவர்களோடு கிரேக்க, ஐரோப்பியர்களாலும் போற்றப்பட்ட பிரதான பழந்தமிழ்த் துறைமுகங்களில் ஒன்றே,



அங்கே செம்பகப் பூப்போல் அழகினைச் சொரிகின்ற செம்பக நாச்சி அம்மன் கோவில் உள்ள திருப்பணி வேலைகளில் திருக்கேணிகளில் குகன் குலப்படையாண்ட குடிமக்கள் கட்டிய தென்ற நினைவுக்கல் இப்பகுதியின் குகன் குலத் தொன்மையை உறுதி செய்வனவாம். மேலும் கிளிவெட்டியின் மேற்குப் பகுதியில் 6கி.மீ தூரத்தில் மகாவலிகங்கையின் கரையில் கங்கை வேலி என்று கங்கு வெளியாகிய சிவன் ஆலயமும், குகன் குலத்தாரின் அனேக நிலபுலங்களும் கங்கையில் மூழ்கின. புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் அன்றைய நீரில் மூழ்கிய ஆலயப் பெரும் அசையாமணி மட்டும் எஞ்சியுள்ளதனால் அம்மணியில் ''திருமங்களாய் கோவிலுக்கு அவ்வூரில் இருக்கும் பத்திப் போடிமகன் பத்தனுடைய உபயம் என்று பொறித்திருப்பதனால் இந்நாட்டில் சைவத்தையும் தமிழையும் எப்படி அன்று குகன் குலத்தவர்கள் வளர்த்தனர் என்பது புலனாகும். இப்படியாக மூதூரில் பல அன்பர்களைச் சந்தித்து நான் உரையாடியபின் திருமலை நகரை அடைந்தேன்.

## திருமலை நகர்,-

நகர ஆட்சி அங்கத்தவரும் ஆர் டி.எஸ் தலைவரும், சமூக சேவையாளரும், அருட்கழல்நூல் ஆசிரியருமான திரு. இ. சோமசுந்தரம் அவர்களை சந்தித்தபோது தான் வெடியரசனும் குகன் வம்சாவழியினர் என்றும் மேல்வடநில யாழ்ப்பாணத்திலும், கீழ்த் திசை மட்டக்களப்பிலும் தமது உறவினர் இருப்பதாகவும் ஆதியில் திருகோணமலைத் துறைமுகத்தில் பெரும் தண்டயர்களாகவும், பெரும் கப்பலோட்டிகளாகவும். இவர்களின் ஆதிக்கத்திலேயே இருந்ததென்றும் பிரித்தானியக் கடல்தளம் ஏற்பட்ட பின்பே பலரும் வந்து நவீன படகோட்டிகள் ஆரம்பமாகினர் என்றும் இவர்கள் முத்துச் சங்கு பெருமளவில் குளித்து இன்றைய மத்திய வீதியை அண்மைக்காலம் வரை முன்பக்கம் முக்குளி தெருவென்றும், பின்பகுதி சங்குகுளி தெருவாகச் சோனக மக்களும் நாமுமே ஆதியில் இங்கு வாழ்ந்தோம் என்றும் எம்மவர் நீரினுள் மூழ்கி மூச்சடக்கி வருவதனால் பெரும் மார்பகன்ற பலசாலிகளாகவும், உயர்ந்த 6 அடி உயர்ந்தோராகவும் இந்நாட்டுமுதன்மனிதர்களாக முற்குகராய் வாழ்ந்தனர் என்றும் குளக்கோட்டன் காலந்தொட்டு இப்பிரதேச வன்னிமைகளாக வாழ்ந்ததனையும், பிரித்தானிய ஆட்சியின் பின் ஏற்பட்ட குடியேற்றங்களால் எம்மக்களில் அனேகர் காணி பூமிகளை நல்ல விலைக்கு விற்றதினால் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர் என்றார். மேலும் வீரன் வெடியரசன் வழித்தோன்றலுடன் அயோத்தி குஜராத், மலையாள வைஷ்ணவ பகுதி பெண்கள் திருமணமானபின் பொன்னகரில் விஷ்ணு ஆல

யம் பிரசித்தமானதுபோல் இங்கும் வைஷ்ணவ பக்தராயினர் என்றும் அத்துடன் கண்ணகி தேவியையும் வணங்கினர் என்றும் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் சிதைவுற்ற இவ்வாலயங்கள் மீண்டும் ஆங்காங்கே மாரியம்மன், பத்திரகாளி என வணங்கப்படுவதையும் ஸ்ரீபத்திரகாளி அம்மன், உப்புவெளிக் காளி கோவில், ப.குளம் காளிகோவில், படுங்கைப் பத்திரகாளி சம்பூர்ப் பத்திரகாளி, பாலம்பொட்டுப் பத்திரகாளி மாரியம்மன், தம்பலகாமம் முத்துமாரி, நிலாவௌி முத்துமாரி, மாங்கிணாய் ஸ்ரீ மாரியம்மன், சல்லி முத்துமாரி, கிளிவெட்டி முத்துமாரி, இதுறை செம்பகநாச்சியார் போன்ற ஆலயங்களையும் அங்கே பாடும் கண்ணகி பாடல்களையும்' தாண்டி மரத்தடி விஷ்ணு ஆலயம் (தாண்டிக் காட்க்குள் சனியன் போனதுபோல்) விஷ்ணு வழிபாட்டையும் உறுதிப்படுத்தி குகன் குல கலாசாரச் சிறப்பினையும் விபரித்தார்.

**கந்தளை -**

கன்தலை கந்தளாய் ஆயிற்று, அல்லைக்குளம், வெண்டரசன் குளம் நீர் போதாமையால் குளக்கோட்டன் கந்தளாய்க்குளம் வெட்டி கடலில் பாயும் மகாவலி நீரைச் சேமித்தான். இங்கு விளை நெல் கோணேசர் ஆலயத்திற்கு மானியமாயிற்று. குளக் கட்டு ஐயப்பன், காளி, பொங்கல்களும், சிவன்கோவிலை கி.பி. 1010ல் இராசேந்திரச்சோழன் அமைத்ததனாலும், 1977ல்சந்தளாய்க் கான் வெட்டும்போது எடுத்த தெய்வச் சிலைகளும்,ஏனைய புதைபொருள்களும் சைவத் தமிழ்நாடு என்பதைப் புலப்படுத்தும் என்கின்றார் பேராசிரியர் செ. குணசிங்கம் தனது ஆய்வில்

**திருமலை வன்னிமைகள்:-**

திருமலைக் கோட்டையில் ஒரு வடமொழிக் கல்வெட்டு கி.பி 1123ல் ஈழத்திற்கு வந்த ஒரு சோடசங்கனைப்பற்றிக் (குளக் கோட்டன்) குறிப்பிட்டுள்ளது என்பர் சிலர். இவனே 21 தலைமைக் குடிகளை ஆலயத தொண்டிற்கு நியமித்துப் பள்ளவெளியில் நிலங்களையும் கொடுத்தான். தனியுண்ணாப் பூபாலனுக்குத் திருமலை நகரின் ஆட்சி அதிகாரங்களையும் கொடுத்து வழமையில் வந்த வன்னிபம் என்ற பட்டத்தினையும் சூட்டினான். இப் பூபாலவன்னிபனுக்கும்.மட்டக்களப்புக் குகன்குல வன்னிபங்களுக்கும், 2ம் நூற்றாண்டில் வெடியரசன் கொண்ட ''வழமைபோல் வன்னியம் தரித்து'' என்பதற்கும், காலிங்க மன்னன் (மாகன்) காளிகட்டத்திலிருந்து முற்குகர்களை அழைத்து வந்து அவர்களின் படைத் தலைவர்களுக்கு ''வன்னிபம்'' என்னும் பட்டத்தைக் கொடுத்தான் என்பதனாலும், புத்தளத்துக்கு முற்குக வன்னிமைகள் திருகோணமலை வரை பரவியிருந்தது என்பதினாலும் திருமலையில் வன்னிமைகள் குகன் குலத்தவர்களிடம் இருந்த



தென்பது புலனாகின்றபடியால் ஆராய்ச்சியாளர் கவனத்திற்குள்ளாதே. மேலும் குளக்கோட்டன் சோழகங்கன் என்ற பெயரைப் பெற்றிருந்தான் என்று தட்ஷண கைலாயபுராணம் கூறுவதனாலும், இவன் சேதுபதி மகாராசாவின் வழித் தோன்றல் என்றசில கருத்துக்களினாலும் வெடியரசனின் நீலகேசியின் உறவினராகவும் எண்ண இடமுண்டு. இச்சேதுபதிகள் குகன் குலத்தவரென முன் அறிந்தோம். கொட்டியாரம்வத்தை சேர்ந்த வெருகல் என்னும் ஊரில் உள்ள ஒருகல்வெட்டு ஒரு கோவிலின் தெற்கு மதிலைக் கைலாயவன்னியர் 16ம் நூற்றாண்டில் கட்டினர் என்பர். கஜவாகு மன்னனின் திருப்பணி காலத்தில் வன்னிமை திருமலையில் இருந்தது என்றும் இவன் வன்னிபம் தானம். வரிப்பத்து, நாட்டவர்களை அழைத்து விசாரணை செய்து வெளிநாட்டில் இருந்து கொண்டுவந்து குளக்கோட்டனின் முன் (கி. பி 2) பூசை செய்வித்தான் என்பர் சிலர். இக் காலம் வெடியரசன் காலமும் அவன் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று பழமை போல் வன்னிமை பெற்றகாலமும் என்பது நான்முகக் கல்வெட்டில் காணலாம். 14ம் நூற்றாண்டிலும் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தி திருமலை வன்னிமை மேல் ஆதிக்கம் பெற்றிருந்தான் என்று ''தம்புத்த''என்ற சிங்கள நூலில் ''தெமில பட்டினத்தில்'' திருமலை அடங்கியிருந்தது எனக் கூறப்பட்டுள்ளது. சங்கிலியின் ஆட்சிக்காலத்திலும் திருமலை வன்னியனார் யாழ்ப்பாணத்துடன் துணையாக இருந்து போர்த்துக்கேசரை எதிர்த்தனர். இதனால் சங்கிலி இறந்தபின் கண்டியரசன் திருமலை வன்னியிலே தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினான் என்பர்.


ஆதி இடைக்காலங்களில் பாண்டியர் ஆண்டதனை நுழைவாயிலில் இரு மீன் சின்னங்கள் பதித்துள்ளது பாண்டிய சின்னத்தை ஒத்ததென்பர். தென்னன் என்ற பாண்டியச் சொல் தென்னன்-மரபு-அடி: தென்னமரவாடி என்றும், 1905ல் பதவியாவில் எடுத்த தங்கப்பட்டயமும், மொறக்காவ, தித்தக்கொனாவ, காட்டுக்கொல்லாவ, ஏராமடுப் பிள்ளையார் ஆலயங்களும் செம்பியன் தலைவன் வாழ்ந்த செம்பியன்பற்றும், ப.குளம் எல்லைக்காளி உப்புவெளிக் காளிதேவியும் வலது காலைத் தொங்கவிட்டு இடதுகாலை மடக்கிய தோற்றத்தினையும் முனீஸ்வர அம்மனின் தோற்றங்களிலுமுள்ள ஒற்றுமைகளையும் ஆராய்ச்சியாளர்கள் கவனத்திற் கொள்வார்களாக. நுழைவாயிலின் கீழ்ப் புறமாக:

னே குள கோட மூட்டு ருப் பணியை னனே
பறங்கி கக்கவே மன்னன் ண்போ னஞ் ணை யய றற தேவைத
ரை கள இக்கல்வெட்டைப்பலவாருகப்பாடுவர்

முன்னுட் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னுட் பறங்கி பிடிப்பானே - பொன்ளுரும்
பூனைக் கண் செங்கண் புகைக் கண்ணர் போய் மாற
மனே வடுகாய் விடும். (வையாபுரிப் பாடல்)

பூனைக்கண் - போர்த்துக்கேசர், செங்கண் - இடச்சுக்காரர், புகைக்கண் ஆங்கிலேயர், மான்கண்-முதல் பெண் பிரதமமந்திரி ஸ்ரீமா என்பர். வடுகாய்-? இது யாரோ? எதிர்காலச் சோதிடம் எமக்குத் தெரியாது பொறுத்திருந்து பார்ப்போம்.

இத்தனைச் சிறப்புக் கொண்ட திருமலையிலும், தம்பலகமம் பகுதியிலும் இன்னும் பெரு நெல் விளைநிலத்தவர்களாகவும் பெரும் நெல் ஆலை உரிமையாளர்களாகவும் குகன் குலத்தோர் உளர். ஸ்ரீ ஆதிகோணநாயகர், முத்துமாரியம்மன், தில்லையம் பலப்பிள்ளையார் ஆலயங்கள் தம்பலகாமப்பதியை அழகுறுத்து வனவாம். போர்த்துக்கீசர்க்குப் பயந்து ஆதிக்கோணநாயகர் விக்கிரகம் இங்கு வைத்து வணங்கப்பட்டதென்பதனுல் ஆதி என்ற பெயர் பெற்றதென்பர். சோழப்பராந்தகன் மதுரையைக் கைப்பற்றிப் பாண்டி நாட்டையும் சோழசாம்ராச்சியமாக்கிய தும் பாண்டிய இரண்டாம் இராஜசிங்கன் இலங்கையில் 5ம் காசியப்பனின் உதவியுடன் (கி பி 907 - 956) வந்து ஒளித்திருந்து தம்பலகமம் சிவன் கோவில் திருப்பணியைச் செய்வித்தான். அண்மை ஊர்களான பாண்டியூற்று, திருநகரி (தினேரி)ல் வாழ்ந் தான். [தி. பு] இங்கே இன்றும் குளக்கோட்டன் ஆணைப்படிக் கோவில்த் திருமுறைகள் வருவதுடன், மகாவிஷ்ணுவின் ஆணைப் படி கந்தளாய்க்குளக் காவலாக விநாயகர், காளமாமுனி, புலத்தியர், மங்கலர், வீரபத்திரர், வதன்மார், வைரவர், அண்ணமார், ஐயனர், கன்னிமார், பத்தினி, காளி ஆகிய தெய்வப்பொங்கல் வேள்விகளில் பச்சைப்பட்டுக் கட்டியதும் மழை பெய்வதும், சிவப்பாளுல் வெயில் எறிப்பதும் அற்புத நிகழ்ச்சிகளாகும். இங்கே பூசைக்குமுன் அனுமன், கருடன், மகாவிஷ்ணுவின் பூசை முறைகளும் ஆதிக்குகன் வன்னிமைகளான விஷ்ணுபுத்திரர் வாழ்ந்தனர் என்பது புலனுகும். அத்துடன் இவர்களும் ஆதியில் கண்ணகியை வணங்கினர் என்பதற்கு மாகமம் என்ற குடியேற்றத் திட்டத்தில் இஸ்லாமியர் ஒருவர் ஓர் கல்லில் மிளகாய் நெரித்தார் அன்று கனவில் அம்மன் தோன்றி என் முதுகு எரிகின்றது என்றதன்பேரில் அக்கல்லைப் பிரட்டிப்பார்த்ததும் அது அம்மன் சிலை என உணர்ந்து ஆலயம்அமைத்து அங்கே முத்துமாரிஅம்மன் என்று இன்றும் வணங்குகின்றனர். இதனுல் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வதன் மூலம் தொன்மைத் தமிழ்ச்சான்று பல இங்கே கிடைக்கப்படுவதுடன் மறைந்துபோன உண்மைமீள இச்செய்திகள் நன்மை பயக்கும்.




புத்தளத்தில் குகன்

வன்னிபங்கள் குலவரிசை முட்டிகூற மகிழ்ச்சி கொண்டுளழுந்திடுன் மரபும் நாடுமெந்த
மன்னருன்னை வன்னிபமாய் வகுத்ததென்றும் மானிலத்திலுங்கள் முன்னோர் வாழ்ந்தவூரும்
துன்னுபுகழ் கோத்திரமும் தொன்று தொட்டுத் துணையரசன் பேருநுஞ் சொன்னுலிந்த
பன்னுபுகழ் சபையோர்கள் மகிழக்கூறிப் பங்குபெறு மறியாயாளுற் பாவமாமே. (முற்குகவன்னிமைகள்ப.44)

இளவரசன் விசயனுடைய நடத்தைக் குறைவினால் அரசன் சிங்கவாகு சுக்கான், பாய்மரம், தெண்டுகோல் யாதும் அற்ற கப்பலில் தோழருடன் நடுச் சமுத்திரத்தில் அலையவிட்டதும் காற்றில் அகப்பட்டுத் தென் சமுத்திரமாம் தம்பண்ணை (புத்தளம்) யை மேட மாதம் புந்திவாரம் பரிதியின் சாய்வு நேரத்தில் கரை ஒதுங்கினர். இதனைக் கண்ணுற்ற வந்தாரை வரவேற்கும் அவ்வூர் நாகர்கள் அவர்களுக்குக் கனிவகைகளைக் கொடுத்துப் பசியாற்றி முள்ளுத்தீவில் உள்ள தம் "சிற்றரசனி"டத்தில் ஒப்படைத்தனர். அங்கே விருந்துண்டு தென் இலங்கை அரசன் காளிசேனனிடம் நாகர்கள் படகில் ஏற்றிக்கொண்டுகாளிதேசம் சென்றனர் (ம. மா. ப. 14) இதனால் வந்தாரை வரவேற்கும் ஆதித் தொன்மை நாகர்கள் வாழ்ந்த "பட்டாளநகரே" புத்தளம் என்பது புலனாகும்.

வெடியரசனும் தம்பிமார்களும் கிழ்க்கரைவழியாக முல்லைத் தீவு, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகட்குப் புகுந்து தங்கள் ஆதிக்கங்களைச் செலுத்திவரும் நாட்களில் மேற்கு நாடாம் புத்தளப் பகுதியில் (அல்லிராணியின் பிரதேசத்தில்) ஏனையோர் களவாக முத்துக்குளிப்பதனைக் கேள்வியுற்ற வெடியரசன் வீரமும் சமயோசித புத்தியும் ஒருங்கேகொண்ட விளங்கு தேவனையும், வீரவேங்கை ஏரிளங்குருவனையும் வட நிலம் சென்று வேண்டிய படைபலங்களுடன் மேற்திசைக்குச்சென்று நாட்டைக் காக்கும்படி கேட்டதற்கிணங்க இவ் இருவன்னிபங்களும் வட நிலம் சென்று தமக்கு வேண்டிய படைபலங்களுடன் இன்றைய கொழும்புத்துறை, கல்முனை, கௌதாரிமுனை, கறுக்காய்த்தீவு பூநகரி, பள்ளிக்குடா, பொன்னாவெளி, வலைப்பாடு, நாச்சிக்குடா, தேவன்பிட்டி, மூன்றும்பிட்டி, இலுப்பைக்கடவை, விடத்தற்த்தீவு, மாந்தை பாலம்பிட்டி,கற்பிட்டி, அரிப்பு,கொண்டச்சி குதிரைமலை, புத்தளம், கொட்டாந்தீவு. முந்தல்,பனையடி,வடலிப் பனையடி, உடப்புவ சிலாபம் ஈறாகத் தங்கள் முத்துக் குளிக்கும் மக்கள் கூட்டங்களில் தங்கியும் ஆங்காங்கே பாசறை இட்டும் சிலாபத்துறை ஈறாக அரச செல்வாக்கை நிலைப்பித்து அரச ஆதிக்கம் செலுத்தினர் அவர்கள் அவ்வாறு சென்றசெலவில் முதல்தங்கியஇடம் முந்தலாகும். முந்தல்-முற்றமாகும். முற்றம் சிறுவெற்றிடமாகும். வடநிலக்காரை தீவின் முந்தலில் இருந்து சென்றோர்கள் இப்பெயரினால் இடக்குறி இட்டனர் போலும். இவர்களின் ஆதிக்கம்உள் நாட்டிற்குள்ளும் இருந்ததென்பதற்குக்கெக்கிறாவில் உள்ள சிங்களக் கிராமத்தில் கிடைத்த தொன்மைக் கடலோட்டுக் காதைப்பாடல் மருதங்கடவ பி. டபிள்யு டி உத்தியோகத்தர் அம்பலவாணர் மூலம் பெற்றதனால் யாழ்ப்பாணச்சரித்



திர நூலை எழுதுவதற்கு உதவியாயிற்றுஎன திரு. முத்துத்தம்பிப் பிள்ளையின் கூற்றுப் புலப்படுத்தும். 1939 ஏப்பிரலில் புதைபொருள் ஆராச்சி நிறுவனத்தலைவர் Dr பரணவித்தான அனுராதபுரப் பகுதியில் ஓர் கட்டிடத்தின் படிக்கல்லில் "இல்லு பாரதிகை தாமிடசாபனே காசிற்றி தாமிடகக பதிகார "பாசாடே" என்ற பிராமிய எழுத்துக்கள் மூலம்(Stone Terrace) அனுராதபுரத் தமிழ்க் குடிகளில் "கடற்தலைவன்" (Navika) பற்றிக் குறிப்பிட்டுள்ளதென்ற கருத்தை வெளியிட்டும் உள்ளார். 1965 ம் ஆண்டு மாதம்பை அந்தோனியார் ஆலய அருகாமையில் உள்ள எனது உத்தியோகத்தர் றூபன் பெர்னாந்து வீட்டிற்குச் சென்றபோது வயது முதிர்ந்த அவர் தந்தை பிரனாந்து (Fernando) வீட்டில் எல்லோருடனும் தமிழிலேயேபேசினார். நாம் வியப்புற்று அதனை வினவியபோது தமிழில் எழுதியுங்காட்டித் தாம் தமிழர் என்றும் விஷ்ணு புத்திர வழித்தோன்றல் என்றும் சந்தோசம் கொண்டாடி வெடியரசன் சிலாபம் வந்த கதைகளைக் கூறினார். அடுத்தநாள் மாதம்பைக் குதிரையுடைய வீதி ஒர ஐயனாரும், ஆதியில் விஷ்ணு புத்திரர் வழிபட்ட ஸ்தலமே என்றார் பின் அவர் என்னை உடப்புவப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கே சிறிய சிற்றம்பலம்,பெரிய சிற்றம்பலம் ஆகியோரைச் சந்தித்தோம் அவர்கள் எமது ஆய்வினை அறிந்து மகிழ்ந்து தம் மூதாதையர் யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்குத் திசையாக மட்டக்களப்பு ஒருபகுதியும் மேற்குப் புறமாகக் கற்பிட்டி, முந்தல் உடப்புவப் பகுதியில் தாம் வெடியரசன் சந்ததியாக வந்து குடியேறிய குகன் குலத்தவர்கள் எனவும், மிகவும் செல்வந்தர்களாக நாலாபக்கமும் ஏனைய சமூகச் சமயக்கலாசாரங்களுக்கும்இடையில் சைவசமயப்பண்பாட்டுடன் கண்ணகி அம்மன்ஆலயமும் அதன்முன்பாகப்பாயும் குதிரையில் வெடியரசன் சிலையை அமைதது தெய்வமாக எமது எழில்மிகு வீர அரசனை மதிப்பது பற்றியும் எடுத்துரைத்தனர். இங்கு இறுதிநாளில் நடக்கும் திரௌபதி அம்மன் தீக்குளிப்பில் பிரதமமந்திரி தொட்டு மந்திரிமார்கள் பார்வையாளர்களாகச் சென்று சிறப்பித்து வருடாவருடம் விழா நாம் எடுத்து வருகின்றோம் என்றனர், சிங்கள மக்களும் 'பத்தினித் தெய்யோ' என்று தினம் வழிபடுகின்றனர். அயல்க் கிராமங்களில் கிறிஸ்தவர்கள் இருந்தபோதிலும் இவர்கள் ஐயனார் பக்தர்களாகவும் முனீஸ்வரரின் வேட்டைத் திருவிழா செய்வதுடன் அனேக உபயங்களும் செய்து வருகின்றனர். இது யாழ்ப்பாணப் பகுதியில் குகன் குலத்தோர் அனேக ஆலயங்களில் வேட்டைத் திருவிழாவில் தைரியமாகத் தெய்வத்தைத் தூக்கி ஓடும் வளப்பத்தை ஒத்ததாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு எல்லாவற்றையும் பார்த்து

வீடு திரும்பும் போது திரு. டர்ஞந்து அவர்கள் பாலம்பிட்டி மடு ரோட்டில் எமது அனேக உறவினர் இருந்ததாகவும் மடுமாதா ஆதியில் விஷ்ணுபுத்திரர்களின் 'கண்ணகி அம்மனே' என்றும் பறங்கியர் காலத்தில் மாதா என்று பயபக்தியுடன் வழிபட்டனர் என்ற உண்மையையும் கூறி வன்னிமைகள் என்ற பெயருடன் கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஈறாக ஆட்சி செய்தவற்றையும் கூறினார்.

இது இவ்வாறு இருக்க இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி திரு. சி. பத்மநாதனின் வன்னியர் என்ற தலைப்பிலானவன்னியமுற்குகர்பற்றியவிபரங்களில் சிலவும் இப்பகுதியிற் காணலாம். இரண்டாம் பராக்கிரமபாகு இராஜரட்டையிலும் ரோகணத்திலுமுள்ள வன்னி மன்னன் மேலே தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தான். அக்காலத்தில் இளவரசனான நான்காம் விஜயபாகு அனுராதபுரத்திற்குச் சென்று இராஜரட்டையில் இருந்த வன்னி மன்னர் அவனைக் கௌரவித்தனர். வன்னிராசர் வென்கொற்றக்குடை, சாமரம், ஆசனம் முதலியவற்றைத் தம் பதவிச் சின்னங்களாக இளவரசனிடம் இருந்து பெற்றனரென்றும், படைகளை வைத்தனரென்றும் சூளவம்சம் கூறும். இதனால் இக்காலத்தில் வன்னிமை என்ற குறுநிலவரசுகள் வளர்ச்சியடைந்தது என்பது தெளிவு. அரசனுக்குத் திறை செலுத்திய போதிலும் தத்தம் பிரதேசங்களை வன்னி மன்னர் ஆள உரிமை பெற்றிருந்தனர். 13ம் நூற்றாண்டுக்கு முன்பே வன்னிமை இருந்தது புலனாகின்றது. மாகன் பொலநறுவையைப்[1] படையாட்சி வன்னியருக்குக் கொடுத்தான் அத்தோடு மட்டக்களப்பிலுள்ள முற்குக வன்னிமையை மாகன் அமைத்தான் என்றும் கூறுவதுடன் ஆசிரியர் முற்குகயே முதன் முதலாக வன்னியராய் இருந்திருக்க முடியாது சேரநாட்டில் இருந்து வந்த முற்குகர் வன்னியரில் இருந்து வேறுபட்ட ஒரு சமூகப் பிரிவினரே? வன்னிமைகள் என்று வழங்கிய குறுநில மன்னர்களோ வன்னியர் என்ற சமூகத்தினரோ சேரநாட்டில் இருந்ததற்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை.[2] மாகனும் விஜயபாகுவும் ஆட்சி செய்த பிரதேசங்களில் வன்னிமைகள் பெற்றிருந்தமையால் முன்னரே ஈழத்தில் வன்னிமைகள் உருவாகி இருக்க வேண்டும். ஆகவே இவ்வாசிரியர் கூற்றுப்படி வன்னிமைகள் ஆரம்பத்தில் இருந்தது என்பது புலனாகின்றது குடியேறிய வன்னியரை ஆண்டவர்கள் வன்னிமையாயினர் போலும். ஆதியில்

1 சரித்திர ஆராய்ச்சி நூல் ப. 98 ( ஆசிரியர் இராசரட்ணம் )
2 வன்னியர் ப. 36



வன்னியர் காடு நிறைந்த முல்லைநிலத்தில் வாழ்ந்தனர். தென் இந்திய வரலாற்றில் வன்னியர் தொண்டை மண்டலத்தில் ஆதியில் வாழ்ந்தார் என்பது ஆசிரியரின் கருத்து. சோழப் பெருமன்னனின் ஆவணங்களில் வன்னி காணப்படுகின்றது. ஈழத்தில் வன்னியர்களை நாலு இயல்புகளில் அமைத்துள்ளனர். இவற்றை இவர்களின் தோற்றம், இலக்கியம், தென்னிந்திய வரலாறு கொண்டும் ஆராய்வதாகும் முதலாம் இயல், கல்லாடம், வன்னியர் புராணம், சிலையெழுபது, வன்னியர் குல நாடகம், வன்னியர் குலக் கல்யாணக் கொத்து என்னும் நூல்களில் காணலாம். ஈழத்து வன்னியருடன் தொண்டைநாட்டு வன்னியரும் வந்து சோழப் பேரரசன் காலத்தில் குடியேறினர். விஜய நகர மன்னர் காலத்தில் வன்னியரால் சிறப்புறுத அரசன் கன்னட, தெலுங்குப் படைகளைக் கூடுதலாய் அழைப்பித்ததனால் வன்னியர்விவசாயத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தேசாதிபதி ''பான் கூன்சிலின்'' அறிக்கையில் 1679ல் பனங்காமம் பத்து வன்னியம் நல்ல மாப்பாணன் பற்றிக் குறிப்பு உண்டு என்ற கட்டுரையில் இதுபற்றி அதிகம் அறியலாம்.

தென்னகத்து வன்னிமை, ஈழத்து வன்னிமை என இருபகுதிகளில் ஈழத்து வன்னிமை தமிழ் சிங்களமாக ஏற்பட்ட பிரிவில் தமிழ் வன்னிமையில் முற்குக வன்னிமை இடம்பெறுகின்றது இம்முற்குக வன்னிமை புத்தளத்து வன்னிமை பற்றியும், மட்டக்களப்பு வன்னிமை பற்றியும் பொலநறுவை வன்னிமை பற்றியும் குறிப்பிடுகின்றது.

நல்ல மாப்பாண வன்னியனின் ஓலையில் பணிக்கமார் போதிய கமக்காற(ர)ர், மற்றும் குடியானவர்கள், வரத்தர், போக்கர் கச்சவடகாற(ர)ர், இனிமேல் வரப்பட்ட குடியானவர்கள், தலையர் பட்டங்கட்டிமார் ச(கலரும்) இதனால் இம்முற்குகக் குலப் பணிக்கனார் தவிர்ந்த ஏனையோரை வரத்துப் போக்கர் என்று குறிக்கப்பட்டுள்ளதனால் வன்னியில் ஆதிக் குலம் பணிக்கர் குலத்தவரான முற்குகரே. தலையர் (தலையாரி) என், போர் ஊர்த் தலைவர்களாய் இருந்தவர்கள் இதனால் பட்டம கட்டிமார் தலைவர்களாக இருந்தார்கள் என்பது புலனாகின்றது. இன்றும் ஈழத்து முற்குகரை பட்டம் கட்டி என்று அழைப்பது பற்றி நாம் முன்பு கூறியுள்ளோம்.

## முற்குக வன்னிமைகள்:-

13ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு வன்னிமையில் கலிங்க மாகன் தினசிங்கன் என்னும் சிற்றரசனைக் கொன்றுவிட்டுச் சுகதிரனுக்குப் பட்டம் கட்டி மண்முனையிற் கோட்டை அமைத்ததால் மாகனே வன்னிமையை மட்டக்களப்பில் அமைத்தான் என்பது ஆசிரியரின் கூற்று. இவன் காளி(காளிநாடு)யில்

இருந்து முற்குகரை அழைத்து வந்து அவர்களின் படைத் தலைவர்களுக்கு வன்னிபம் என்னும் பட்டத்தைக் கொடுத்தான் என்றும் கூறுகின்றது. இவனே கேரளத்தில் உள்ளபோர்வீரர்களையும் அழைத்து உள்ளூர்ப் போர் வீரர்களுடன் இராஜரட்டையை [அனுராதபுரத்தை] வென்று கைப்பத்றியபின் கேரளப் போர் வீரர்களுக்கு இந்நாட்டிலே நிலங்களையும், சன்மானங்களையும் வழங்கிக் குடியமர்த்தினன். மட்டக்களப்பிலும், புத்தளத்திலும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் வரை முற்குக வன்னிமையே இருந்ததென்றும், இவர்கள் எப்போது புத்தளம் வந்தார்கள் என்றும் தெரியாதென்றும் ஆனல் வாட்டிகஅபயன் காலத்தில் முற்குகர் வந்திருக்கலாமென "வன்னி உட்பட" என்ற நூல் கூறுகின்றது. 6ம் பராக்கிரமபாகுவின் காலந்தொட்டு புத்தளத்து முற்குகர் வன்னிமை இருந்தது என்று சிலகுறிப்புகள் உள.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களே சிலாபம் வரை பரந்திருந்தனர் என்று "குவேறோஸ்" 1 கூறியுள்ளார். ஆகவே யாழ்ப்பாண மன்னரின் ஆதிக்கமே சிலாபம் வரை உள்ளது. இதில் இருந்தது இந்திய வன்னியர்கள் ஈழத்திற்கு வரமுன்னரே இவ் வெடியரசன் வாரிசுகள் கி.பி 2ம் நூற்றுண்டில் இருந்து புத்தளப் பகுதி ஆளப்பட்டது புலனாகிறது. கி.பி 1341 இல் ஈழத்திற்கு வந்த அராபிய அறிஞர் "இவுன் பற்றுற்ரு" பட்டாள நகரிலே கறுவா பெருமளவில் குவிந்து இருந்ததென்றும் இப்பட்டாள நகரே புத்தளத்தின் ஆதிகாலப் பெயர் எனவும் அறிஞர் கூற்ருகும்.

ஆசிரியர் நெவிலின் முக்கரகத்தாவ என்ற சிங்கள நூலில் புத்தளத்து முற்குகர்க்கும், 6ம் பராக்கிரமபாகுவிற்கும் (1415-1447) இடையில் நடந்த போரினைக் குறிப்பதாகவும் புத்தளத்து முற்குகர் புன்னவ, நாகபட்டின ஆகிய இடங்களில் இருந்து பாளையம் இட்டுப் படை திரட்டி வந்து பராக்கிரமபாகுவை வென்றனர் என்றும், அதன்பின் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினமாகிய இடங்களில் இருந்து 7746 போர் வீரர்களைக் கொண்ட குருகுல தேசத்தோரை அழைத்து வந்து மறுபடியும் முற்குகர்களுடன் தொடர்ந்து 3 மாதம் போர் புரிந்து முற்குக அரசனை நிர்மூலப்படுத்தினன் பராக்கிரமாகு என்றும் பரக்கும் பசரித என்னும் நூலிலும் கூறுகின்றது. இப்போரின் திறமைப் பற்றியே முக்கரகத்தாவை (முற்குகரின் கதை) என்னும் நூல் விரித்துரைக்கின்றது. இவ் 6ம் பராக்கிரமபாகு நீர்கொழும்பில்

---

ஈழத்து வன்னிமைகள் பக்கம் 45

1. The Temporal and spiritual conqust of Ceylcn, Fer nao De Queyroz, translated by S. G. Perena Colobol 1930 P. 47



இவர்களுடன் போரிட்ட போர் வீரர்களுக்கு வசிப்பிடம் வீதிகள் அமைத்துப் பதினெட்டுத் துறைமுகங்களையும்வரியின்றிக்கொடுத்துக் குடியமர்த்தியும். சூரிய, சந்திர மகரக் கொடிகளைக்கொடுப்பித்தான். வச்சநாட்டுத்தேவர், குருநாட்டுத்தேவர், மாணிக்கத் தலைவன், ஆதிஅரச ஆதப்ப உன்னசே, வர்ணசூரிய ஆதப்பஉன்னசேகுருகுலசூரியமுதியான்ச. அரசகுலசூரிய முதியான்சே, அரச நிலையிட்ட முதியான்சேஎன்ற பெயர்களே இவர்களின் மூதாதையர்களைச் சூட்டுவனவாகும். இவர்கள் கண்டி அரசனின் முக்கிய பதவிகளையும் குருகுலக்கடற்படை அதிகாரிகளாகவும், அம்பன, பவித்ததம்பன்கடுவப்பகுதியில் கௌரவிக்கப்பட்டுக் குடியேற்றப் பட்டனர். டீ.டபிள்யு. பெரேரா சிங்களக் குடிகளும் தகுதியும் நூலில்இவர்களின்பண்டைய கொடிகள் பற்றி விவரித்துள்ளார். எது எப்படியாயினும் அங்கே முற்குக வன்னிய ஆட்சி அதிகாரம் மறைவு பெறவில்லை என்றும், சிங்கள ஆட்சி ஏற்பட்டும் வழமைகளும், ஏனையவகைகளும்முற்குகரின் பொறுப்பினிலேயேஇருந்ததனல் போர்த்துக்கேயர் வரும்வரை முற்குகர்களின் ஆட்சி நடந்தது என்பதும் வன்னிமை ஆசிரியர் பத்மநாதனின் கூற்ருகும். 13ம் நூற்றுண்டில் கிடைத்த இருசெப்பேடுகள் மூலம் 7ம் புவனேகபாகு நவரத்தின வன்னிக்குக் கொடுத்த செப்பேடுகளிலும் லுனுவிலில் அரண்மனையையும். "முத்திரை கூடம் நீதி மன்ற நீதி நிர்வாகத் திறன்" பற்றியும் 18 உறுப்பினரும் அவர்களின் சிறப்புப் பற்றியும் கூறுவதாகும். கூனையாழி, கவசம், சாமரம், பவளக்குடை, வெள்ளிவாள் என்பனவற்றைத் தம் சமக்கட்டாகப் புத்தள முற்குக வன்னியர் பெற்றனர் என்பதனை மாதம்பையில் இருந்த பெரிய வல்லவன் வழங்கிய செப்பேட்டில் உள்ளனவென்றும் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். அததுடன் யாழ்ப்பாணச் சிற்றரசர்கள் சிலாபம் வரை பரவியிருந்தனர் என்றும் இவர்கள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட விஷ்ணுபுத்திரரின் வழித்தோன்றல்கள் என்றுபுலப்படுவதுடன் இவர்கள் மேற்குப் பகுதியாகச் சிலாபம் நீர்கொழும்பு வரை பரவியிருந்ததையும் அறிகின்ருேம். இன்னும் இம் முற்குக வன்னியர்கள் வன்னி நாடான தென்னைமரவாடி, முல்லைத்தீவு, தாழையடி, செம்பியன்பற்று, குச்சவெளி, நிலாவெளி, சாம்பல்தீவு, திருகோணமலை போன்ற பகுதிகளை ஆட்சி செய்தும் அவர்கள் வம்சாவழியினர் இன்றும் அவ்விடங்களில் வாழ்கின்றனர் என்பது புலனுகின்றது. இவர்களும் தங்கள் பெயர்களை அதிகமானேர் விஷ்ணுவின் பெயர்கொண்டு கோவிந்தன், கிருட்டினன், பெருமாள் என்று பலவாருக வழங்கி வருவதையும், பிராந்தியத் திருமண உறவுகள் ஒன்றுபடுத்துவதையும் காணலாம்.

இன்றுவரை இக்குகன்குலத்தோர் இங்கு வெற்றிலைத்தோட்டங்கள் பாற்பண்ணைகளில் மிகச் சிறந்து விளங்குவதாக எம். டி. ராகவன் புத்தளப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இன்றும் எல்லைப் பகுதிகளில் பெரும்பாண்மை மக்கள் மத்தியில் வாழந்து எம்மக்களுக்கு காவல் அரண்போல் வாழ்கின்றனர்.

## கல்கமுவைக் காட்டினிலே;-

இப்புத்தள முற்குகரில் ஒருபெரும் பகுதியினர் இன்றும் கல்கமுவையில் வாழ்ந்து வருவதை நாம் அறியலாம். கல்கமுவ புகையிரத ஸ்தானத்தில் இருந்து 3 கல் தொலைவில் அடர்ந்த காட்டினுள் மகாகல்கமுவ எனப் பெயருடைய ஒரு ஊர் உண்டு. அப்பெரிய கிராமம் நீர்ப்பாசனப் பெருங்குளங்களையும் வயல் சூழ்ந்த பெரு நிலங்களையும் கொண்டு காட்டு விலங்குகளின் இடையூறுகளின் மத்தியில் வாழ்கின்றார்கள். இந்நீர்த் தேக்கத்தைப் பூதங்களும் மனிதர்களும் சேர்ந்து வெட்டினார்கள் என்பது புராணக்கதை. இதனால் இந்நீர்த் தேக்கத்தின் விஸ்த்திரணம் புலப்படுகின்றது ஏழுதச்சுமுழத்தண்ணீர் வற்றுவதின்றி அங்கே எப்போதும் காணக்கூடியதாய் உள்ளது. சூழ உள்ள கிராமங்களில் எல்லாம் பௌத்த சிங்கள மக்கள் வசித்தாலும், மகாகல்கமுவ மக்கள் பார்வையில் சிங்களவர்களாகவும், பேச்சில் தமிழர்களாகவும், சாதியில் முற்குகர்களாகவும், சமயத்தில் கத்தோலிக்கர்களாகவும் இன்றும் எமது பழக்க வழக்கங்களையும் தமிழ்க்கலாசாரத்தையும் அங்கு பரப்பிய வண்ணம் வாழ்கின்றனர். அங்கே அந்தோனிப்பிள்ளை என்பவரைச் சந்தித்த பொழுது இவர்கள் குகனின் வம்சத்தார் என்றும் கி. பி 5ம் நூற்றாண்டில் வேதியரசன் என்னும் தலைவனோடு குதிரைமலையில் இறங்கி அங்கு ஒரு முற்குகத் தலைவனின் அழகிய மகள் காரணமாக மாணிக்கத் தலைவன் படைகளுடன் சண்டைசெய்து பின்பு கற்பிட்டிக்குடா நாடு முற்குகரின் இருப்பிடமாகப் பலகாலம் இருந்து வந்தது என்றார் மேலும் இது "சித்தவாக்கை" அரசனால் பரம்பரைபரம்பரை ஆதனமாகப்18 பேர் கொண்ட மன்றம் ஆண்டுவந்ததாம். இவர்கள் ஆதியில் அனேகர் அயோத்தியிலும், ஈழக்கிரிமலைப் பகுதியிலும் இருந்து வந்தனர் என்பர் என்றும், தலைவர் 'தேசாவை' சாக்கயுகம் 1733 (கி. பி 1811), எசல (ஆடி) மாதம் கிவி (வெள்ளி) தினம் 15ல் எழுதிய கல்கமுவைக் கோயில் ஆதனத்தில் ஓலை உறுதியொன்று அந்தோனிப்பிள்ளை, பிறஞ்சிப்பிள்ளை, அதிராம் பிள்ளை என்னும் கல்கமுவைக் கந்தோலிக்கர் குமாரசிங்க வண்ண உண்ணாகேயின் பிதிர் வழியார் ஆகும் என்றும் ஒல்லாந்தரின் வெற்றியின் பின்பே புத்தளத்து இம் மூத்தோர்



மன்றங்கள் கலைக்கப்பட்டு "லொன்ருட்" ஸ்தாபிக்கப்பட்டு 16ம் நூற்றாண்டில் மட்டும் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த முற்குகர் மகமதியரின் ஆட்சியின் எழுச்சியால் அச்சமயத்தை அனேகர் தழுவியிருக்கலாம். 'திருவாங்கூடருக்குச் சேர்ந்த முற்குகர் 10000 பேர் மட்டில் 1544ம் ஆண்டில் புனித பிரான்சிஸ் சவேரியார் மூலம் கிறிஸ்து வேதத்திற்கு மாறினர். புனித சவேரியர் மான்சிலர்சுக்கு 18.12.1544ல் கடிதம் 3ம் யோன்மன்னன் 3ம் போல் பாப்பாவுக்கு எழுதிய 19-02-1546 அறிக்கைப்படி கற்பிட்டிக்குடாவிலும்' புத்தளத்திலும் வாழ்ந்த முற்குகர்களின் உறவினர் 17ம் நூற்றாண்டு தென்னிந்தியாவில் இருந்து வந்து போயினர். 1644ல் அவர்களுக்கு இருபெரும் தேவாலயங்கள் நாக்கழியிலும், நாவற்குடாவிலும் இருந்தன. புத்தளத்து திருச்சபையிலும் பிரதான பகுதியாக முற்குகர் இருந்தனர். 1667ல் ஒல்லாந்தர் கற்பிட்டியை முற்குக அரசனிடம் இருந்து கைப்பற்றியதும் 2ம் இராஜசிங்கன் ஆட்சிப் பிரதேசமான வன்னியில் இவர்கள் குடியேறினர் என்றும் எஞ்சியோர் இன்னும் முற்குகராக கல்கமுவையில் வாழ்கின்றனர் என்று கூறிம் ஆதாரமாகக் 'கல்கமுவைக் காட்டினிலே சிலுவையின் சின்னம்" என்ற நூலையும் வாசித்துக் காட்டினார்.

அந்நூலில் 2ம் பக்கத்தின்படி 16ம் நூற்றாண்டில் இவர்களில் அனேகர் மகமதியராயினர் என்றும் 1706ல் நாவற்காடு, தேற்றுப்பனை, குருவிக்குளம், கட்டைக்காடு, ஈருக இவர்கள் வாழ்ந்து வந்தனர். போதகர் இமானுவலின் உதவியுடன் சமயப்பற்றுள்ளவர்களாயினர். மதுரை நாயக்க குடும்ப சைவ அரசனான ஸ்ரீவிசயராசசிங்கன் (1739-47) பிக்குகளைத் திருப்திப்படுத்திக் கத்தோலிக்கரைத் துன்புறுத்தினான். பின் கீர்த்தி ஸ்ரீ காலம் சிறிது மாறுபட்டு 1799 புரட்டாதி 23ல் பிரித்தானியரின் சமய சுயாதீனத்தினாலும் 1823ல் 200 பேரும், 1929ல் 400 கிறிஸ்தவர்களும் வாழ்ந்தனர். அங்கே ஓர் தமிழ்ப்பாடசாலையும் உண்டு. ஆண்கள் உடுப்புச் சிங்களவர் போன்றும் பெண்கள் மகமதியர் போல் ஆடை அணிந்தும் வேளாண்மை செய்து தமிழ்க் கலாசாரச் சிறப்புடன் வாழ்கின்றனர் எனக் கூறுகின்றது.

## சிலாபம்:-

புத்தளத்து விஷ்ணு புத்திரர்களான முற்குகரில் ஒரு பகுதியினர் சிலாபப் பகுதியிலும் வாழ்ந்தனர். இவர்கள் ஆங்காங்கே சைவ ஆலயங்களையும் அமைத்தனர். சரித்திரப் பிரசித்திபெற்ற முனீஸ்வர ஆலயத்திலும் இவர்கள் ஆலயங்களை அமைத்தனர் என்பதை தஷ்ணகைலாய புராணங்களில் காணலாம் அங்கே இன்றும் பட்டங்கட்டிகள் வயல்நிலங்கள் கோவில் விளைநிலமாக உள்ளவை இதை உறுதிப்படுத்துகின்றது.

முன்னீஸ்வர அந்தாதி 1924 ப.4ல் முனீஸ்வரத்திலே முத்துக் குளிக்கும் பெண்ணான "அல்லி" என்றபெண் அரசி மன்னாரில் இருந்து நீர்கொழும்பு வரை ஆட்சி புரிந்ததாகவும் இப்பெண் அரசியின் காலத்திலேயே அனேக தேவஸ்தானங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அது இவ்வாறு இருக்க அல்லிராணியின் உறவினர் ஒருவர் கரையோரமாக நடந்து சென்ற பொழுது சிறுவன் ஒருவன் அழகான சிறுமி ஒருத்தியுடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டவுடனேயே வியப்புற்று அழகை ரசித்துப் பற்றை மறைவில் மறுநாள்வரை ஒளிந்திருந்து சிறுமியை மட்டும் பிடித்தான். சிறுவனோ கடலில் மாயமாக மறைந்துவிட்டான். சிறுமி உடனே விக்கிரகமாக மாறிவிட்டாள். இதை அறிந்த மக்களும் அரசனும் ஆச்சரியத்தினால் இவ்விக்கிரகத்தைக் கைப்பற்றி அதே போன்று அனேக விக்கிரகங்களைப் புதிதாகச் செய்வித்து அவ்அல்லி உறவினரைத் தனதுவிக் கிரகத்தை மகாராஜ சபையில் அடையாளம் காட்டும்படி அரசன் கட்டளையிட்டான். பயபக்தியுடன் நித்திரையில் இருந்த அவருக்கு அம்மன் கனவிலே தோன்றி எந்த விக்கிரகம் வலது கால் சிறிது அசைந்து காட்டுகின்றதோ அதுவே நீகாட்டும் விக்கிரகம் என்று கூறியதும் ஆனந்தத்துடன் எழுந்து அடுத்தநாள் அரச சபையை அடைந்து கால் அசைந்த விக்கிரகத்தை அடையாளம் காட்டியதும் எல்லாம் ஒரேமாதிரி வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களில் அடையாளம் காட்டியதனால் அரசனும் ஏனையோரும் வியப்புற்றதும் தனது கனவின் மகிமையைக் கூறலானான். இதைக் கேட்ட அரசன் அவரையும் விக்கிரகத்தையும் அரச தேவ மரியாதைகளுடன் ஊர்வலம் எடுத்து மகிழ்வித்தான். இவ்விக்கிரகம் இன்னும் கற்பகக்கிருகத்தில் வைத்து பூசை செய்வதைக் காணலாம். எனவே இவ்விக்கிரகத்திற்கு ஆதி உரிமைக்காரர்கள் விஷ்ணுபுத்திரரின் வழித்தோன்றல்களே. இன்னும் முனீஸ்வரத்தில் வேட்டைத் திருவிழாவை உடப்புவில் வாழும் விஷ்ணு புத்திரர்கள் வெகு விவரிசையாகத் தங்கள் தெய்வமாகிய ஐயனார் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று வேட்டைத் திருவிழா உபயம் செய்து மகிழ்வதை நாமறிவோம். இவர்கள் முத்துக் குளிக்க நீரில் மூழ்கி எடுக்கும் பலம் உள்ளவர்களாகையால் ஓடி வேட்டையாடும் விழாக்கள் யாழ்ப்பாணப் பகுதிகளிலும் அனேகமாக இவர்களே நடத்துவர். இராமபிரான் இவ்வாலயத்தில் வந்து இராவணனை சங்காரம் செய்ததனால் ஏற்பட்ட "பிரம்ப ஹத்தி தோஷம்" நீங்கும் பொருட்டு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசைகளை நடத்தினர் என்று தட்ஷண கைலாய புராணமும், இராமபிரான் இராவணனைச் சங்காரம் செய்யப் போகும் போது வழிபட்டுச் சென்றார் என்றும் கூறுவர்.



புத்தளம், நீர்கொழும்பு, பூநகரி வரைகுகன்குலத்தோர்வாழ்வதுடன் சாராப்பிட்டி நன்னீர் ஊர் உடப்புவப்பகுதிகளில்அண்மைக் காலம்வரை ஆண்டனர். என்பர் இவர்கள் தங்கள் தலைவனைத் தெய்வமாகக் கருதுவதனால் உடப்புவ கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் வெடியரசனுக்கு ஒருபெரும் சிலைஎழுப்பித் தமதுவழித்தோன்றல் அரசன் குகனைக்கடவுளாய் மதித்து வழிபட்டும் பூசைகள் செய்தும் இன்றுவரை வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களும் ஏனையபகுதிக் குகன்குலத்தோருடன் திருமணகலைகலாசார ஒற்றுமைப்பாட்டுடன்வாழ்கின்றார்கள். இப்பகுதிவிஷ்ணுபுத்திரர்களின் சிறப்பினை எம். டி. ராகவன் தனது நூலில் எழுதியும் உள்ளார். 6ம் பராக்கிரமபாகுவால் இவர்களுடன் போருக்கு அமர்த்தப்பட்டவர்கள் இன்று அங்கே அதிகாரமுள்ள கிறிஸ்தவ சிங்களவர்களாக உள்ளதனால் இவர்களின் எழுச்சி வீழ்ச்சி கண்ட போதினிலும் சைவத் தமிழ்ச்சிறப்புடன் அங்கே வாழ்வது சிறப்பாகும்.

---

இப்படியாகத் தொன்மைத் தமிழ் மக்களுடன் சேர்ந்த ஏனைய மதத்தவர்களும் எங்கள் கலாசாரப் பண்பாடுகள், நடனங்கள், தாளம், மேளம், புதுவருட நிகழ்ச்சி, குறிஞ்சி நடனம் போன்ற சகலவற்றையும் கற்றுக் கொண்டனர் எனலாம். முகமதி நபிகள், யேசுக்கிறிஸ்து, புத்தபிரான் போன்றோர் எந்த நடனமும் செய்ததில்லை அப்படிக் காவியங்களும் சித்தரிக்கவில்லை ஆனால் சைவசமயத்தில் மட்டும் தில்லை நடராஜப் பெருமான் ஆன்மாவாகிய மக்களை என்றும் ஆனந்த நடனத்தில் ஏற்படுத்துவதற்கு எடுத்த தோற்றமாம். ஆதலால் என்றும் ஆனந்தக் கூத்தாடி நடனத்தில் ஆழ்பவனிற்குச் சிந்தை சிதறாது இன்பமாய் இனிது இன்புறச் செய்வதே ஆண்டவனின் நோக்காகும். மேலும் நகுதல் ஆனபசுவை ஆதியில் மேய்த்த நாகர் கையில் உள்ள மேய்க்கும் கோலை மந்தைகள் மத்திப் புல்வெளியில் ஊன்றி ஒருகாலை அதனுள்ப்பின்னி ஒருகையை மேற்க் கோலில்பிடித்துக் களைப்பாறி நித்திரையானநிலைஎன்றும் அவனே வேட்டையாடிய ஆதிமனிதர்களுக்குஉணவானபாலைக்கொடுத்தமையால்அவனைத் தேவன், கடவுள் என்று அவன் சயன நிலையைச் சித்தரித்த முதல் நிலையாதலால் நடராஜப் பெருமான் முளுமுதல் தெய்வம் என்றும் நாகர் வழி வந்தோர் ஐயப்பன் என்று வணங்கும் உருவ நிலை என்பர்.

**அல்லி மகாராணி:-** முத்துச்சலாபத்தில் முத்துக் குளிக்கும் காலங்களில் மகாராணி ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாளுக்கும், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவம்பிகைக்கும் தனக்குமாக மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொடுத்ததாகவும் முத்துப்பந்தர், முத்துக்கொண்டு போன்ற ஊர்ப்பெயர்கள் உணர்த்துகின்றன என்று முனீஸ்வர ஆலய வெளியீட்டு நூலில்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# நிறைவுரை

பாரத கண்டத்திலிருந்து ஈழம் தனி நாடாகக் கடற்கோள்களால் பிரிவுற்ற போது ஈழத்தில் மிஞ்சியிருந்த ஆதிமக்கள் திராவிடரே ஆவர். இவர்களே விஷ்ணுபுத்திரர்களான ஆதித்திராவிடர்கள். இவர்கள் பாரத இராமாயன காலத்திற்கு முன்பே ஈழத்தில் நிலைபெற்றிருந்தனர். பண்டை நாளில் நெய்தல் நிலப்பகுதியில் வாழ்ந்தோர் முத்துக்குளிப்பதிலும் சங்குகுளிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். விஷ்ணு புத்திரர்களான ஆதிக்குடிகளின் குலதெய்வம் விஷ்ணுவாக இருந்தமையால் சங்கும் சக்கரமும் இம்மக்களது குறியாகவும், இன்றும் மந்தைகளுக்கு இடும் குறிகளாகவும் அமைந்தன. வீரமிகு வெடியரசன் விஷ்ணுவின வலதுகால் தொடையின்று பிறந்தோனுவான் என்பது வாய்மொழி மரபாகும். இதனாலேயே இவர்களது வரலாற்றைக் கூறும் இந்நூலிற்கும் 'விஷ்ணுபுத்திர வெடியரசன்' என்று வியந்து நூற்பெயரககக் கொண்டோம். வெடியரசனின் மூதாதையரான 'கேது' என்ற நாக அரசன் திருக்கேதீஸ்வரத்தை அமைத்தது போன்று ஈழத்தின் வடக்கு, கிழக்கு, மேற்குப்பகுதிகளில் சைவ ஆலயங்களை வெடியரசனும் அவனது சந்ததியினரும் அமைத்து தமிழ்ப்பண்பாட்டை ஈழத்தில் போற்றினர். வெடியரசனும் அவன் வழிவந்தோரும் முத்து குளித்தலும், முத்து வணிகத்திலும் சிறந்து விளங்கினர். வெடியரசன்-அவனது தோற்றம்-அவனது குலம்-குடிகள் ஆட்சிபுரிந்த இடம், அவனது சகோதரர் பற்றிய பல வேறுபட்ட செய்திகள் இந்நூலிலே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்குச் செய்திகளைத்தரும் தரவுகளாகக் கொண்டதாகும். ஆதலால வெடியரசனதும், அவனது தம்பிமாரதும் வரலாற்றுண்மைகளை வரலாற்றாசிரியர்கள் விரிவாக ஆராய வேண்டுமென்பதே எமது முதல் நோக்கம். இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாட்டார் வழக்கியல் துறையில் ஆய்வு நடாத்தும் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் விரைவில் வெளியிடவுள்ள வெடியரசன நாடக ஆய்வுநூல் நல்ல பயனை அளிக்குமென எதிர்பார்க்கின்றோம்.

இடைக்காலத்தில் தாய் நாட்டுப்பற்றற்ற சுயநலமிகள் தம் சுயலாபத்திற்காக தமிழ் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளையும் பிராந்திய பேதங்களையும் ஏற்படுத்தி எம்மைப் பிள்வுபடுத்திப் பலவீனமடையச் செய்துவிட்டனர். இதனாலேயே அந்தணரான மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஹரிஜனத்தைச் சேர்ந்த கனகலிங்கத்திற்கும் வள்ளுவப் பண்டாரத்திற்கும் பூணூல் அணிவித்து; பூசகராக்கி, சமூக சமத்துவம் கண்டமை பாரதநாட்டு மக்களின் சமூக சுதந்திரத்தின்-சமூக விடுதலையின் முதற்படி எனலாம். எனவே இனியாவது காலம் கழிக்காது இன்று நம் சமுதாயம் பலவித உயிர் ஆபத்துக்களிலிருந்து தப்பி பெருமூச்சுவிட்டு நிற்கும் இச்சந்தர்ப்பத்திலாவது இனி நாம் யாவரும் 'அறிவுள்ள மனிதர்கள்' என்ற ஒரே மகுடத்தின்கீழ் ஓர் குடி-சமநீதி மக்களாவோம். எனவே இந்நாட்டில் அதர்மம் நீங்கி, தர்மம் தலைதூக்கி, சுதந்திர மனிதர்களாக நாம் விடுதலை பெறுவோம் என எல்லாம் வல்ல விஷ்ணுபிரானைப் பிரார்த்தித்து நிறைவுபெறுகின்றேன்.

History Repeats Itself பழமைச் சரித்திரம் புதுப்படையும்.

'கோகிலம்', தொல்புரம், சுழிபுரம்.

மு. சு. சிவப்பிரகாசம்


ஓம்

**Ganeshananda Stores**

DEALERS IN ALL KINDS OF TIMBERS HOUSEHOLD OTENSILS, FURNITURE, & SAW MILLERS

**கணேஷானந்தா ஸ்ரோஸ்**

உரிமையாளர்கள்:-
வே. சுந்தரம்பிள்ளை, சு. மகேஸ்வரி, சு. கணேஸ்வரி, சு. புவனேஸ்வரி.

**மரங்கள், தளபாடங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் விற்பனையாளரும், மர அரிவு ஆலையாளரும்**



**இவ்ஆய்வுநூலிற்கு**
**எமது நல்லாசிகள்**

**கணேஷானந்தா ஸ்ரோஸ்**
**244 (262) ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 22427**

# நம் நாட்டுக் கலைகளை ஆதரிப்போம்!

புறத் தூய்மைக்கு மில்க்வைற் சோப் போல்
அகத் தூய்மைக்கு மில்க்வைற் செய் செயல்
இவ்இனிமை நூலுக்கு இனிமைசேர் வாழ்த்துக்கள்

## நாம் செய்ய வேண்டியவை

1 நல்லதையே நினைப்போம்.
2 நல்லதையே செய்வோம்
3 சுற்றுடலைத் தூய்மை செய்வோம்
4 குளங்களைத் தோண்டி ஆழமாக்குவோம்
5 போதியளவு மழைநீரைத் தேக்குவோம்
6 இயன்றளவு பலவகை மரங்களை நடுவோம்
7 பனையபிவிருத்தியில் ஊக்கம் எடுப்போம்
8 பனம் பண்டங்களை உபயோகிப்போம்
9 உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்
10 வயல்களில் மாற்றுப்பயிர்களை உண்டாக்குவோம்
11 நல்லதமிழ் பேசவும் எழுதவும் பயில்வோம்
12 பெரியவர்களை வணங்கி நல்லாசி பெறுவோம்
13 எல்லோரும் தினமும் யோகாசனம் செய்வோம்
14 கடமையை எல்லோரும் சரிவரச் செய்வோம்
15 எல்லோரும் வீட்டுத்தோட்டம் செய்வோம்

## நாளும் நற்பணி செய்ய உங்கள் ஆதரவை நாடும் மில்க்வைற்




# Silva Watch Works

10, PEOPLES MODEL MARKET,
HOSPITAL ROAD, JAFFNA.
T. Phone - 23862

## சில்வா வோச் வேக்ஸ்

10, மக்கள் நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## இவ் அரிய வரலாற்று நூலிற்கு எமது நல்லாசிகள்




RESIDENCE:
"ANNAI VELANKANNI"
15, 1st LANE, POWER HOUSE ROAD,
JAFFNA. (SRI LANKA)
T. Phone - 23706

# A, K, R & CO.

IMPORTERS & EXPORTERS OF SRI LANKA PRODUCE
& GENERAL MERCHANTS
79, SEA STREET, COLOMBO-11, SRI LANKA

Exporters of:-
DESICCATED COCONUT, FRESH COCONUTS COCONUT SHELL CHARCOAL, EKELS BETELNUTS, SESAME, COCOA COFFEE, PEPPER, MUSTARD SEEDS, CLOVES, CINNAMON, TEA & RUBBER, CASTOR SEEDS, FRESH VEGETABLES GROUND NUTS, MASHROOMS MEDICINAL HERBS, FRESH FRUITS.

Bankers:-
HATTON NATIONAL BANK LTD, PEOPLES BANK.
Telephone: 28991, 33712, 549864
Telex: 22336, 22337, 22627 INDIKA CEATTN: AKCO


தரமான தங்க வைர நகைகள் மட்டுமன்றி, எமது ஒடியல்மா புழுக்கொடியல்மா, புழுக்கொடியல், பனங்கட்டிப்பனை ஓலைப்பெட்டி, சுழகு, இடியப்பத்தட்டு, எள்ளு, எள்ளுஉருண்டை, நல்லெண்ணை, குரக்கன்மா, சுத்தமான உழுந்து, பப்படம், வேப்பம்பூ வடகம், நெல்லிக்கிறஸ், சுத்தமானபுளி, சம்பா, சிவத்தப்பச்சை அரிசி, ரேஸ் அரிசிமா, கறணைக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, பிட்டுக்குழல், அம்மி, குழவி, ஊர் மண்வெட்டி, சைமுள்ளு, வகைப் பொருட்களைப் பல நாடுகட்கும் ஏற்றுமதியாளர்களும், பழந்தமிழனின் பண்பாட்டுப் பண்டங்களின் அருசுவைகளை மேல் நாட்டாரும் ருசிப்பதற்கு ஏற்றுமதி செய்பவர்களான

**A K R & Co, A K கோல்ட் கவுசாரின்**
**உள்ளம் உவந்த நல்லாசிகள்**



# Maha Luxmi Jewellery Mart

213A, Kasthuriar Road,
JAFFNA.



அசல் 22ct (கரட்) தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

**மஹாலக்ஷ்மி ஜுவல்லறிமாட்**
**213A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி எண்: 23733

# AMBIGA Jewellers (PTE) Ltd.

77, SEA STREET, COLOMBO 11
Tel: 22839, 34238.





அசல் 22CT [கரட்] தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்



இவ் வித்தக நூலிற்கு
எமது வாழ்த்துக்கள்

**அம்பிகா ஜுவலேஸ்**


77, செட்டியார் தெரு கொழும்பு. தொலைபேசி 22839, 34238



# Jeyalalitha Jewellery Mart

65, Sea Street,
COLOMBO.

இந்நூலிற்கு எமது நல்லாசிகள்



அசல் 22 ct (கரட்) தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

ஜெயலலிதா ஜுவல்லறி மாட்
65, செட்டியார் தெரு,
கொழும்பு.

தொலைபேசி எண்கள்: 22548 – 549177

தொன்மை ஆய்வு நூலிற்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

# THURAI & CO

23 / 3 Stanley Road,
JAFFNA.

AGENTS FOR:-

"Dagenite Batteries"
SALES - SERVICE - REPAIRS

Branch:-
KANDY ROAD, PARANTHAN.


துரை அன் கோ
23 / 3 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

---

வரலாற்று நூலிற்கு எமது நல்லாசிகள்

# லலிதா நகைமாளிகை


60. செட்டியார் தெரு,
(நூறிஸ்றறவல்ஸ்)
கொழும்பு.



அசல் 22CT [கரட்] தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

LALLITHA JEWELLERRS & TOURIST-TRAVELS
60, SEA STREET,
COLOMBO 11
T. P No. 22300, 546886

# நூலாசிரியர் அறிமுகம்



நூலாசிரியரான திரு. மு. சு. சிவப்பிரகாசம் அவர்கள் 20-11-1942 இல் காரைநகர் திரு ப.மு சுப்பிரமணியத்திற்கும் பூரணத்திற்கும் மகனாய்ப்பிறந்து சைவசீல நியமப்படி வளர்ந்து உயர்கல்வி பயின்றவர். இவர் புகுந்தஊர் தொல்புரம். தொழில் முறை உயர்கல்வியில் புனர்வாழ்வு [REHABILITATE] குற்றத்தத்துவம் [THEORIES OF CRIME] சட்டம் [LAW], நல்லொழுக்க விசாரணை [DISCIPLINARY INQUIRIES], பொறுப்பு வகித்தல் [MANAGEMENT] தலைமை ஆற்றும்வழி [LEADERSHIP], பாதுகாத்தலும் திருத்தலும் [DEFENCE AND CORRECTIONS], பூசற்கருவிகள் ஆளுதல் [MAINTAINCE OF FIREARMS] புதுப்பித்தல் குற்றத்தாக்கல் [FRAMINGCHARGES], முதலான துறைப்பகுதிகளில் தனித் தனி புலமைக்கல்வியிற் தேர்வுற்றார். இந்தக் கல்விப்பயனால் பல தொழில்களில் ஈடுபட்டு ஈற்றில் சிறைச்சாலை ஜெயிலர்[JAILOR] ஆக நிலைபெற்றார். 1965 தொடக்கம் 1978 ஆம் ஆண்டுவரை மல்யுத்தம், குத்துச்சண்டையில் [WRESTLING & BOXING] வீரனாகவும் நிலைபெற்று 1978 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது தேசிய மல்யுத்த வீரனாக நிலை கொண்டார். இவ்வாறு உடற் துறையில் இனிதுற்ற இவர் கருத்துப் பொதிந்த பேச்சுக் கலைக்கும் நிலைக்களனாக நிற்கும் திறத்தினராவர். இங்ஙனமே எழுத்துக் கலைக்கும் ஏற்றவரானார் என்பதற்கு இந்த வரலாற்று நூலே நிலைப்படுத்தும். இவரின் செயற்றிறனுக்குப் புனர் அமைப்புப் பணி நிமிர்த்தம் இராமகிருஷ்ணமிசன், விவேகானந்தசபை, முதலாம் சமயநிறுவனப் பணிப்பாளராகவும் அமைந்தவர். அத்துடன் பொதுச்சபைத் தொடர்பான நிகழ்வு, சமாதானசபை முதலானவற்றில் பகைவர்கள், நண்பர்கள் திறன் நோக்காது நியாயம்தெளிந்து வழங்கித் தனது நேர்மையையும், துணிவையும் வெளிப்படுத்திய திண்மையர். இம்மட்டோ! சுவாமி குருமகரிசியின்சீடனாக அமைந்து தியானம் [MEDITATION] முறைதெறியாளராகவும் பொருந்திய பெருமையர். இத்தகையர் கருத்தும் கருமமும் இனிதுறுவதாக.

தொல்புரம்
3.3. 1988

தொல்புரக்கிழார்
பொருணூல்விற்பன்னர்—தமிழ்மாமணி
புலவர். நா. சிவபாதசுந்தரனார்

கற்பகவிநாயகர் அச்சகம் வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.